மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)
தொலைநிலைக் கல்வி
DEC அங்கீகாரம் பெற்றது

# எம்.ஏ. இரண்டாம் ஆண்டு

## பொதுத்துறை ஆட்சியியல்

### தாள் - VIII

# தமிழக உள்ளாட்சி நிர்வாகம்



www.mkudde.org

R169



# மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

**(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)**

**தொலைநிலைக் கல்வி**

**DEC அங்கீகாரம் பெற்றது**

# எம்.ஏ. இரண்டாம் ஆண்டு

## பொதுத்துறை ஆட்சியியல்

**தாள் - VIII**

# தமிழக உள்ளாட்சி நிர்வாகம்

www.mkudde.org

**R169**

பதிப்புரிமை : தொலைநிலைக் கல்வி

Reprinted at VIJ - Year 2010-2011 - Copies 10000

அன்புடைய மாணவர்களே!

இரண்டாம் ஆண்டில் நுழையும் உங்களை வரவேற்கிறோம். இந்த ஆண்டு தமிழக உள்ளாட்சி நிர்வாகம் என்று ஒரு தாள் உங்களுக்காக வைத்திருக்கிறோம். மக்களாட்சி சிறப்பாக அமைய வேண்டுமாயின், நாட்டில் நல்லாட்சி நிரந்தரமாக அமைய வேண்டுமாயின், நல்ல உள்ளாட்சி அரசாங்கம் அவசியமானது. மக்களாட்சியின் பயிற்சிக்களம் உள்ளாட்சி அரசாங்கம். எனவே இந்தத் தாள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்தத்தாள் 20 பாடங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மேலும் தொடர் வகுப்புகளில் கலந்து கொண்டு, பாட சம்பந்தமான விஷயங்களில் கலந்தாய்வு செய்து, பயனடைய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

பொதுத்துறை ஆட்சியியல் துறை

## Syllabus

## PAPER - VIII

## LOCAL GOVERNMENT IN TAMILNADU

Meaning - Scope - importance of Local Government - Evolution of Local Government in Tamilnadu - Position of Local Government in Madras Presidency before and after Independence - Balwantra Ra i Mehta Committee Report - 73rd Constitutional Amendment and New Panchayti Raj.

Organisation - Structure of Local Government - Municipal Corporation - Municipalities - Panchayats - Functions of Local bodies - Community Development schemes - Political Parties and Local Government. Elections - Castes - Leadership in Local Government.

Personnel System of Local Government in Tamilnadu - Financial Administration of Local Government in Tamilnadu - State control over Local bodies in Tamilnadu.

Books Recommended

1. Dharambal - The Madras Panchayat System Vo l, Impex India, New Delhi.
2. Gnanapragasam C. - Local Government in Tamilnadu (Tamil) Madurai Kamaraj University.
3. Maheswari S.R. - Local Government in India, Laxmi Naran Agarwal, Agra.
4. Saraswathi - The Madras Panchayat System, Vol II, Impex India, New Delhi.
5. Venkatarangiah S. Pattabhiram. M - Local Government in India - Select Readings, Allied Publishers, New Delhi.

# பாட வரிசை


| | | |
|---|---|---|
| 1. | உள்ளாட்சி அரசாங்கத்தின் இயல்பும் நோக்கமும் | 1 |
| 2. | உள்ளாட்சி அரசாங்க வளர்ச்சி | 4 |
| 3. | உள்ளாட்சி வாரியங்களின் வளர்ச்சி | 9 |
| 4. | தமிழக ஊராட்சிகளின் வளர்ச்சி | 20 |
| 5. | சென்னை மாகாண நகராட்சிகளின் வரலாறு | 25 |
| 6. | பல்வேந்தராய் மேத்தாகுழு | 31 |
| 7. | உள்ளாட்சிகள் அமைப்பு – ஊராட்சிகள் | 36 |
| 8. | ஊராட்சி ஒன்றியங்கள் | 55 |
| 9. | மாவட்ட ஊராட்சி | 72 |
| 10. | நகராட்சி அமைப்பு | 76 |
| 11. | மாநகராட்சி | 86 |
| 12. | சமுதாய வளர்ச்சித் திட்டம் | 96 |
| 13. | உள்ளாட்சியில் குழுக்களின் பங்கு | 100 |
| 14. | உள்ளாட்சியில் மாவட்ட ஆட்சித் தலைவரின் பங்கு | 105 |
| 15. | உள்ளாட்சித் தேர்தல்கள் | 109 |
| 16. | உள்ளாட்சியில் அரசியல் கட்சிகள் | 115 |
| 17. | தமிழக ஊராட்சித் தேர்தல் சீர்திருத்தங்கள் | 122 |
| 18. | உள்ளாட்சிப் பணியாளர் குழாம் நிர்வாகம் | 130 |
| 19. | உள்ளாட்சி நிதி நிர்வாகம் | 148 |
| 20. | உள்ளாட்சி மீதான மாநில அரசாங்கக் கட்டுப்பாடுகள் | 162 |



இப்பாடங்களை தொகுத்து எழுதியவர்

## டாக்டர் சி. ஞானப்பிரகாசம்

பேராசிரியர் & தலைவர் தலைவர், தொலை நிலைக் கல்வி இயக்கம்,

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

# பாடம் – 1

## உள்ளாட்சி அரசாங்கத்தின் இயல்பும் நோக்கமும்

ஒரு குறிப்பிட்ட பகுதியில் இயங்கும் அரசாங்கம் உள்ளாட்சி அரசாங்கம் எனப்படுகிறது. தங்களுடைய பிரச்சனைகளைக் கவனிப்பதற்கு அப்பகுதியில் வாழும் மக்கள் தங்களுக்கென அரசாங்க அமைப்புகளைத் தோற்றுவிக்கின்றனர். இப்பிரச்சனைகளை தங்களுடைய சொந்த நிதியையும். இதர வளங்களையும் பயன்படுத்தித் தீர்வு செய்கின்றனர். ஆகையால், உள்ளாட்சி அரசாங்கம் தன்னிச்சையாக சுதந்திரத்துடன் செயல்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் உள்ளாட்சி அரசாங்க அமைப்புக்கள் மத்திய, மாநில சட்டமன்றங்கள் இயற்றிய சட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகையால், உள்ளாட்சி அரசாங்கங்கள் சட்டமன்றங்கள் இயற்றிய சட்டங்களுக்கு உட்பட்டு தங்களது சுதந்திரத்தை முழுஅளவில் அனுபவிக்கிறது. இவ்வகையில் உருவாக்கப்பட்ட உள்ளாட்சி அரசாங்கங்கள் முதலாவது, மத்திய மாநில அரசாங்கங்களின் வேலைப்பளுவைக் குறைக்கிறது. இரண்டாவது, ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்கள் தங்கள் பகுதியில் ஏற்படும் பிரச்சனைகளைத் தாங்களே கவனித்துக் கொள்கின்றனர். மூன்றாவது, உள்ளாட்சி அமைப்புக்கள் வருங்கால நிர்வாகிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் ஒரு பயிற்சிக் களமாக காட்சியளிக்கிறது. இது மக்களாட்சிக்கான பயிற்சிப் பள்ளியாக உள்ளாட்சி அமைப்புக்கள் காணப்படுகிறது. நான்காவது, ஒரு குறிப்பிட்ட பகுதியின் தேவைகளின் அடிப்படையில் அப்பகுதியில் அமைந்த உள்ளாட்சி அமைப்புக்களுக்கு பணிகள் வழங்கப்படுகிறது. எனவே உள்ளாட்சி அமைப்புக்களின் பணிசம்பந்தமாக ஒரே சீரான விதிகளை கடைப்பிடிக்க இயலாது. இவ்வமைப்புக்கள் அப்பகுதி மக்களின் ஆர்வம், தேவை, நிதி ஆகியவற்றின் அடிப்படையில் இயங்குகிறது.

உள்ளாட்சி அரசாங்கத்தின் தேவை கோட்பாட்டளவிலானவையல்ல. மத்திய அரசாங்கம் நேரடியாக கவனிக்க முடியாத பிரச்சனைகளை உள்ளாட்சி அரசாங்கம் கவனித்துத் தீர்வு செய்கிறது. உள்ளாட்சி அமைப்பு மக்களாட்சி அடிப்படையிலான சமூகத்திற்கு தேவையான அதிகாரத்தை வழங்குகிறது. அவ்வமைப்பில் பணியாற்றும் பிரதிநிதிகளை தமக்குள்ளிருந்து அப்பகுதி மக்கள் தேர்ந்தெடுக்கின்றனர். இப்பிரதிநிதிகள் உள்ளாட்சி குழுக்களுக்கும் மக்களுக்கும் இடையே ஒருதொடர்பினை ஏற்படுத்துகின்றனர். பொதுவாக பாராளுமன்றமும் அரசாங்கமும் மக்களிடமிருந்து வெகு தொலைவிற்கு அப்பால் இருந்து செயல்படும் அமைப்புக்களாகக் காணப்படுகிறது.

ஆர்தர் மாஸ் என்ற அறிஞர் கூறிய தற்கால மக்களாட்சி சமுதாயத்தில் நிலவும் மதிப்பீடுகளாகக் கருதப்படும் உரிமை,சமத்துவம்,பொது நலன் ஆகியவற்றின்அடிப்படையில் இங்கிலாந்திலும், பிற மக்களாட்சி நாடுகளிலும் அதிகாரம் பல்வேறு பகுதிகளுக்கிடையேயும், நிறுவனங்களுக்கிடையேயும் பிரிக்கப்பட்டுள்ளது. சட்டவிரோதச் செயல்கள், அதிகாரக் குவியல் போன்றவற்றிலிருந்து குடிமக்களை பாதுகாக்கும் அரசாங்கத்தின் பல்வேறு அடுக்கு நிலை அமைப்புக்கள் உரிமை சார்ந்த மதிப்பீடுகளை வளர்க்கிறது. குடிமக்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்குவதன் மூலமும், பொது அமைப்புக்களில் குடிமக்களை அதிக அளவில் பங்கேற்கச் செய்வதன் மூலமும் சமத்துவம் நிலைநாட்டப்படுகிறது. அதிக அதிகாரத்தை பரவலாய் வழங்கி, அதன் மூலம் சமுதாயத்தின் சமூக, பொருளாதார தேவைகளை அரசாங்க அமைப்புகளின் மூலம் சந்திப்பதில் பொதுநலன் சார்ந்த குறிக்கோள் நிறைவேறுகிறது.

அறிஞர்கள் உள்ளாட்சி அரசாங்கத்தின் தத்துவங்களையும் மதிப்பீடுகளையும் அவைகளின் செயல்பாட்டை அடிப்படையாக வைத்து திறனாய்வு செய்தனர். இவ்வாய்வினால் இருவித எண்ணங்கள் வெளிப்பட்டன. முதவாவது தனிநபரை கவனிக்கும் வழிமுறைகளாகும். அவற்றில் சமமாய்ப் பாவித்தல், நீதியைநிலைநாட்டுதல், முறையாய்ச் செயல்படுதல், சாதாரண மக்களின் அனுபவங்கள், அவர்களின் எதிர்பார்ப்புக்கள் போன்றவற்றின் மூலம் பரிசோதித்தல் போன்றவைகளாகும். இரண்டாவது எண்ணம்

உள்ளாட்சி அதிகாரங்கள் நாட்டின் நீதி நிர்வாகத்தோடும், மக்களாட்சி அமைப்புகளோடும் கருத்து வேறுபாடு கொண்டு திகழ்வதால் எழும் பிரச்சனைகள் சம்பந்தப்பட்டதாகும். பொதுவாக குடிமக்கள் நாட்டின் எப்பகுதியில் வாழ்ந்தாலும் ஒரேவிதமான பணிநிலைகளை எதிர்பார்க்கின்றனர். அதே நேரத்தில் உள்ளாட்சி பகுதியில் வாழ்வோரின் பங்கேற்பும், சூழலுக்கு ஏற்ப மாறும் நிலையும் முடிவுகளை உள்ளாட்சி அமைப்பு கட்டுப்படுத்தும் தன்மையும் நிலை நிறுத்தப்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றனர். பிளெடின் டேவிஸ் என்பார் நாட்டின் நீதியும், நல்முறையில் திடமாய் அமைக்கப்பட்ட உள்ளாட்சி அரசாங்கமும் ஒன்றையொன்று எதிர்க்கும் அளவில் அமைந்துள்ளது என்கிறார்.

இவ்வகை எண்ணங்கள் உள்ளாட்சி அரசாங்கத்தின் பிரச்சனையும் மக்களாட்சியும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவை என்பதனை வெளிப்படுத்துகின்றது. ஜான்ஸ்டுவர்ட் மில்லின் காலத்திலிருந்தே உள்ளாட்சி அரசாங்கம் மக்களாட்சியிலிருந்து பிரிக்கப்பட முடியாத ஒரு பகுதி என்பதனை அனைவரும் ஒப்புக்கொண்டுள்ளனர். சாதாரண மனிதன் தனது சமுதாயத்தின் மூலம் ஜனநாயக குடியுரிமையை கற்கிறான். அதன் மூலம் அதிகாரத்தில் பங்கேற்கிறான். மேலும் செல்வாக்குடன் திகழ்கிறான். இவ்வகையான சுயமாக ஆளுகை புரியும் அமைப்பில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் தத்துவங்கள் உண்மையாய் நிலவுகிறது.

உள்ளாட்சி பகுதிகளிலுள்ள செயல்களில அப்பகுதி மக்கள் ஈடுபாடு கொள்வதோடு, செல்வாக்கும் பெற்றுத் திகழ்ந்தனர். எதிர்ப்பு தெரிவிக்கவும், மாற்றங்களைக் கொண்டு வரவும், புதுக்கருத்துக்களையும் சேவைகளையும் வழங்கவும் அம்மக்கள் ஒருங்கிணைந்தனர். திட்டமிடல், கல்வி, நலிவுற்றோர், வயது முதிர்ந்தோர், ஊனமுற்றோர் ஆகியோருக்கு சேவைபுரிதல் ஆகியவற்றை கடுமையாக அம்மக்கள் விவாதித்தனர். எனவே, உள்ளாட்சி அரசாங்கம் மக்களாட்சி நாட்டில் வாழும் குடிமகனை சமூக வாழ்வில் முழு அளவில் பங்கேற்க வைக்கத் தேவையானஒரு அமைப்பாகும்.

உள்ளாட்சி மற்றும் தேசீய மக்களாட்சிஎன்பது ஒரு முறையமைவைக் குறிப்பதாகும். மக்களாட்சியில் உள்ளாட்சி என்ற தனிப்பட்ட முறையமைவு கிடையாது. அரசாங்கம் மற்றும் சமூகம் சார்ந்த ஒரு ஜனநாயக கோட்பாடு உண்டு. அக்கோட்பாடு அடிப்படையிலான சமூகம் பல்வேறு பொது மற்றும் தனியார் அமைப்புக்களையும், பல்வேறு நிலைகளையும், செயற்பாடுகளையும், எதிர்பார்ப்புகளையும் கொண்டுள்ளது. அச்சமூகத்தின் ஒரு பகுதியாக உள்ளாட்சி அரசாங்கம் காணப்படுகிறது.

## மக்களாட்சியும் உள்ளாட்சி அரசாங்கமும்

ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் சட்டபூர்வமாய் இயங்கிவரும் ஒரு நிறுவன அமைப்பை உள்ளாட்சி அரசாங்கம் குறிக்கிறது. அவ்வமைப்பிற்குரியஅதிகாரங்கள் சட்டமன்றத்தால் வரையறை செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட அளவு தன்னிச்சையாய் இயங்கும் நிதி அதிகாரம் அவ்வமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது. குடிமக்கள் ஈடுபாடு, பெரும்பான்மை ஆட்சி, தலைவர்களைக்கலந்தாலோசித்து அவர்களுக்கு தலைமைப் பொறுப்பளித்தல் போன்றவைகளின் அடிப்படையில் அமைந்த தேசிய அரசியல் முறையமைவை மக்களாட்சி கொண்டுள்ளது.

மக்களாட்சியில் உள்ளாட்சி அரசாங்கம் மிகவும் முக்கியமானதாகும். உள்ளாட்சி நிறுவனங்கள் மூலமாக மக்களே தங்களுடைய செயல்களை கவனித்துக் கொள்ளும் வாய்ப்பில்லை என்றால் மக்களாட்சி என்பதற்குப் பொருள் இல்லாமலேயே போய்விடும். மக்களாட்சியின் சிறப்பான பள்ளியாக உள்ளாட்சி அரசாங்கம் நிலவுகிறது. மக்களாட்சியின் வெற்றி உள்ளாட்சி அரசாங்கங்களை செயல்முறை படுத்துவதில் தான் இருக்கிறது என்று பிறைஸ் பிரபு கூறுகின்றார். மக்களாட்சி உள்ள நாடுகளில் தான் உள்ளாட்சி அரசாங்கங்கள் சிறப்புடன் இருக்கும்.

உள்ளாட்சி அரசாங்கம் வெற்றிகரமாகச் செயல்பட சில அடிப்படைத் தேவைகள் அவசியம். அவை:

1. அரசாங்கம் பெருமளவில், உள்ளாட்சி அமைப்புக்களை ஊக்குவித்து, வழிகாட்டிநடத்திச் செல்ல வேண்டும்.

2. உள்ளாட்சி அரசாங்கம் திருப்பதிகரமாய் செயல்படவும், நிதியினை முறையாகச் செலவிடவும் உகந்த வண்ணம் அரசாங்கம் அவற்றின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் வேண்டும்.

3. உள்ளாட்சி பணிகளில் அப்பகுதி மக்கள் முழு அளவில் ஆர்வம் காட்டுவதோடு, ஈடுபாடு கொள்ள வேண்டும்.

4. நிதி மற்றொரு முக்கிய தேவையாகும், உள்ளாட்சி அமைப்புக்களுக்கு தேவையான நிதி வசதிகளை போதுமான அளவு உருவாக்கி வழங்க வேண்டும்.

## மாதிரி வினா:

உள்ளாட்சி அரசாங்கத்தின் முக்கியத்துவத்தை எழுதுக.

# பாடம் – 2

## உள்ளாட்சி அரசாங்க வளர்ச்சி

இந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கத்தின் வரலாறு பண்டைய காலத்திலிருந்தே தொடங்குகிறது. பண்டைய இந்தியாவில் சிறப்பான முறையில் அமையப்பெற்ற உள்ளாட்சி அரசாங்கங்கள் இருந்தன என்ற உண்மையை இந்திய வரலாற்று நிபுணர்களின் ஆராய்ச்சி நமக்கு தெளிவு படுத்துகின்றது. பழங்கால கிராம சமுதாயத்தில், 'சபா', 'சமிதி' என்ற இரண்டு மக்கள் மன்றங்களும் , இடைக்கால மற்றும் மொகலாயர் ஆட்சிக் காலத்தில் கிராம பஞ்சாயத்துக்களும் ஓரளவு சுயாட்சி பெற்று இருந்து வந்தன. பண்டைய காலத்தினின்று உள்ளாட்சி அரசாங்கம் இந்தியாவில் இருந்த போதிலும், ஆங்கிலேயர்இந்தியாவிற்கு வருவதற்கு முன் இவ்வுள்ளாட்சி அரசாங்கங்கள் இன்றைய நாளில் இருப்பது போன்று இல்லை. உள்ளாட்சி அரசாங்கங்கள் பிரதிநிதித்துவ பண்புடைய நிறுவனங்களாக ஆங்கிலேயருடைய ஆட்சிக் காலத்தில்தான் மாறின.

உள்ளாட்சி அரசாங்கத்தின் வளர்ச்சியைப் பல கட்டங்களாகப் பிரித்து நாம் பார்ப்போம். 1687–ஆம் ஆண்டு முதல் 1881 –ஆம் ஆண்டு முடிய உள்ள காலத்தை முதல்கட்டமாகவும், 1882–ஆம் ஆண்டு முதல் 1919 – ஆம் ஆண்டு முடிய உள்ள காலத்தை இரண்டாம் கட்டமாகவும், இரட்டை ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சியை மூன்றாவது கட்டமாகவும், சமஸ்தான சுயாட்சி நிலவிய காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சியை நான்காவது கட்டமாகவும் 1950 – ஆம் ஆண்டு அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த பின்னர் ஏற்பட்ட வளர்ச்சியை ஐந்தாவது கட்டமாகவும் பிரித்து நாம் பார்ப்போம்.

### முதல் கட்டம் (1687–1881)

இங்கிலாந்தில் உள்ள Portsmouth corporation வைப் போன்ற அமைப்பில் சென்னையின் மாநகராட்சி 1688 – இல் நிறுவப்பட்டதிலிருந்துதான் தற்கால உள்ளாட்சி நிறுவனங்கள் துவக்கம் பெற்றன. இம்மாநகராட்சி மேயர், அல்டர்மேன் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்தது; வரிவிதிக்கும் அதிகாரம் கொண்டிருந்தது. இவ்வரிவிதிக்கும் அதிகாரத்தை மக்கள் எதிர்த்தார்கள். ஆகையால், 1726–ஆம் ஆண்டு மாநகராட்சி கலைக்கப்பட்டு அதற்குப் பதிலாக மேயர் நீதிமன்றம் ஒன்று நீதித்துறைப் பணிகளோடு நிறுவப்பட்டது. இச்சட்டம் முக்கிய நகரங்களாகிய பம்பாய்,கல்கத்தா ஆகிய இடங்களிலும் மேயர் நீதிமன்ற நிர்வாகத்தை நிறுவியது. இதனைத் தொடர்ந்து 1793–ஆம் ஆண்டு சாஸனச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

உள்ளாட்சி அரசாங்கத்தின் உண்மையான முன்னேற்றமானது மாயோ பிரபுவின் காலத்தில்தான் நடந்தது. மாயோ பிரபுவின் 1870 –ஆம் ஆண்டைய தீர்மானம் உள்ளாட்சி அரசாங்கத்திற்கான திட்டத்திற்கு வழி செய்திருந்தது. இத்தீர்மானத்தின் அடிப்படையில் நகராட்சி சட்டங்கள் தொடர்ச்சியாகப் பல பகுதிகளுக்கென நிறைவேற்றப்பட்டது. நகராட்சி நிறுவனங்கள் அதிகரித்தன. அவைகளுடைய அதிகாரங்களும் அதிகரித்தன. இந்தியர்களை உள்ளாட்சி அரசாங்கத்தில் ஈடுபாடுகொள்வதற்கென எடுக்கப்பட்ட ஒருமுயற்சியே என்று கூறினாலும், இத்தீர்மானமானது முழுமையாக ஒரு நிதி நடவடிக்கையேஆகும். உள்ளூர் பிரச்சனைகளின் செலவினங்களினால் ஏற்படுகின்ற நிதிச்சுமையிலிருந்து பேரரசை விடுவிக்கவே அவர் விரும்பினார். உள்ளாட்சிஅரசாங்கத்தின் வளர்ச்சி, மற்றும் அதில் இந்தியர்களை ஈடுபாடு கொள்ளச் செய்தல்போன்ற அவருடைய திட்டங்கள் அவர் எதிர்பார்த்த முடிவுகளை அடைய வில்லை. மத்திய அரசாங்கத்தை நிதிச்சுமையிலிருந்து விடுவிக்கும் வகையில் உள்ளாட்சி அரசாங்கங்களை பிரிட்டிஷ் அரசாங்கம் நிறுவியது. இது உள்ளாட்சி அரசாங்க வளர்ச்சியின் முதல் கட்டத்தில் குறிப்பிடத்தக்கவையாகும்.

## இரண்டாவது கட்டம் ( 1882–1919)

உள்ளாட்சி அரசாங்க வளர்ச்சியின் இரண்டாவது கட்டம் ரிப்பன்பிரபு பதவியேற்ற 1882–ஆம் ஆண்டு துவங்கியது. மிகவும் பிரபலமான உள்ளாட்சி அரசாங்க தீர்மானத்தை ரிப்பன் பிரபு 1882 –ஆம் ஆண்டில் வெளியிட்டார். குறிப்பிட்ட அதிகாரங்களுடன் போதுமான அளவு நிதிவசதியுடன் மாவட்ட தாலுகா வாரியங்களை மாநில அரசுகள் உருவாக்க இத்தீர்மானம் வழிவகுத்தது. கிராமப்புற உள்ளாட்சி அரசாங்க வளர்ச்சிக்கு இத்தீர்மானம் மிகவும் உதவியாக இருந்தது. இப்புதிய திட்டத்தின்படி உள்ளாட்சி நிறுவனங்கள் கல்வி, சாலை, சுகாதாரம் ஆகியவற்றின் மீது நிர்வாகக் கட்டுப்பாடு செலுத்தும் அதிகாரம் பெற்றன. நகராட்சிகளின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டன. நகராட்சிகள் சுகாதாரம், குடிநீர் விநியோகம், அடிப்படைக் கல்வி போன்றவைகளை கவனிக்கும் பொறுப்பேற்றன. தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கு இத்தீர்மானம் வழிவகுத்தது. மக்களுடைய அரசியல் அறிவை வளர்க்கும் ஒரு கருவியாக உள்ளாட்சி அரசாங்கம் கருதப்பட்டு அதில் இத்தயை சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன.

இந்தியர்கள் தங்களுடைய பிரச்சனைகளைத் தாமாகவே, தம்முடைய உள்ளாட்சி நிறுவனங்கள் மூலமாக நல்ல முறையிலும், திறமையாகவும் செயல்படுத்துவதற்குண்டான பயிற்சி அளிக்கப்படவேண்டும் என்பதுதான் ரிப்பன் பிரபுவின் தீர்மானத்தின் குறிக்கோளாகும். இத்தீர்மானத்தை உள்ளாட்சி அரசாங்கத்தின் மகா சாஸனம் என்றும் அழைக்கலாம். இத்தீர்மானத்திலும் குறைபாடுகள் உண்டு. உதாரணமாக, அதிகாரிகளின் கட்டுப்பாடு முன்னால்இருந்தது போலவே தொடர்ந்து இருந்தது. வாரியங்களும் நகராட்சிகளும் தங்களுடைய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு தேவையான நிதியின்றியே இருந்தன. குறைகள் இருப்பினும், இத்தீர்மானம் உள்ளாட்சி அரசாங்க வளர்ச்சியின் வரலாற்றில் முக்கியமானதொரு நிகழ்ச்சியாகும். ரிப்பன் பிரபு உள்ளாட்சி அரசாங்கத்தின் தந்தை என்று அழைக்கப்பட்டார்.

உள்ளாட்சி அரசாங்கத்தின் வளர்ச்சியைப் பற்றி ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க சர் சார்லஸ் ஹாப்ஹவுஸ் என்பவர் தலைமையில் 1907 –ஆம் ஆண்டு அரசுரிமை ஆணையம் நியமிக்கப்பட்டது. 1909 – ஆம் ஆண்டு அரசுரிமை ஆணையம் தன்னுடைய அறிக்கையை சமர்ப்பித்தது.

## 1909–ஆம் ஆண்டு அரசுரிமை ஆணையத்தின் பரிந்துரைகள்

கிராம நிர்வாக மறுமலர்ச்சிக்கென அரசுரிமை ஆணையம் தான் முதன் முதலாக முயற்சி எடுத்தது இவ்வரசுரிமை ஆணையத்தின் பரிந்துரைகளுக்கு உடனடியாக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஆனால் கிராம நிர்வாக அமைப்புக்களை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வரசுரிமை ஆணையத்தின்பரிந்துரைகள், கிராம அமைப்பு, கிராமப்புற வாரியங்கள், நகராட்சிகள் சம்பந்தப்பட்டவை என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

### I. கிராம அமைப்பு சம்பந்தப்பட்ட பரிந்துரைகள்

1. கிராமத்திலுள்ள உள்ளூர் பிரச்சனைகளை நிர்வகிப்பதற்கென கிராம ஊராட்சிகள் உருவாக்கப்படவேண்டும்.

2. சுமார் ஐந்து பேர்கள் கொண்ட ஒரு சிறு குழுவாக ஊராட்சி அமைய வேண்டும். கிராமத்தின் தலைவர் ஊராட்சியின் பதவி வழித்தலைவராக இருத்தல் வேண்டும்.

3. கிராமத்தில் நிலவும் சூழ்நிலைகள், அனுபவங்கள் ஆகியவற்றிற்கேற்ப ஊராட்சியின் பணிகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

4. புதிய வரிகள்ஏதுமின்றி நிலவரியில் ஒரு பங்கினைப் பெறும்படி அது அமைய வேண்டும்.

5. செயற்கையான நிறுவனங்களாகத் தோன்றும் கிராமக் குழுக்கள், சுகாதாரக் குழுக்கள் போன்றவை நீடிக்க அவசியமில்லை.

6. மாவட்ட மற்றும் துணை மாவட்ட வாரியங்களின் கட்டுப்பாட்டிற்குள் ஊராட்சிகள் இருத்தல் கூடாது.

## II. கிராமப்புற வாரியங்கள் சம்பந்தப்பட்ட பரிந்துரைகள்

1. துணை மாவட்ட வாரியங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். கிராமப்புற வாரியங்கள் நிர்வாகத்தில் தலைமைப் பங்கு ஏற்றல் வேண்டும்.

2. ஒவ்வொரு வட்டத்திற்கும் மாவட்ட துணை வாரியங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

3. மாவட்ட வாரியங்களைக் கலைக்கத் தேவை இல்லை.

4. துணை மாவட்ட வாரியங்கள் சிறிய அளவிலான பணிகளுக்கு பொறுப்பேற்க வேண்டும்.

5. பெரிய அளவிலான பணிகள்மாவட்ட வாரியங்களின் பொறுப்பில் விடப்படலாம்.

6. அரசாங்கமானது கிராமப்புற வாரியங்களுக்கு நல்ல நிதிவசதி அளித்திடல் வேண்டும்.

7. துணைமாவட்ட வாரியங்களும், மாவட்டவாரியங்களும் பெருமளவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டஉறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

8. மாவட்ட வாரியங்களின் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும், துணைமாவட்ட வாரியங்களின் தலைவராக வட்டாட்சியரும் இருத்தல் வேண்டும்.

9. கிராமப்புற வாரியங்கள் தங்களுடைய நிர்வாகப் பணிகளை குழுக்களிடம் ஒப்படைக்கக்கூடிய அதிகாரம் பெற்றிருக்க வேண்டும்.

10. துணை மாவட்ட வாரியங்களின் நடவடிக்கைகள் உள்ளூர் மொழிகளிலேயே நடைபெற வேண்டும். எல்லா கிராமப்புற வாரியங்களின் நடவடிக்கைகளும் உள்ளூர் மொழிகளிலேயே பிரசுரிக்கப்பட வேண்டும்.

11. சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு பணியைச் செய்யுமாறு ஒரு வாரியத்தைப் பணிக்கும் அதிகாரம் ஆணையாளருக்கு இருத்தல் வேண்டும்.

12. கிராமப்புற வாரியங்களின் வேலைகளையும், சொத்துக்களையும் மேற்பார்வையிடும் அதிகாரமானது இப்பொழுது போலவே ஆணையாளரிடமும், மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் இருத்தல்வேண்டும்.

## III. நகராட்சி சம்பந்தப்பட்ட பரிந்துரைகள்

1. கிராமப்புற பரிந்துரைகளைப் போலவே நகராட்சிகளும் நிறையஅதிகாரங்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

2. அவை இயங்கக்கூடிய சட்ட வரையறைக்குட்பட்டு, நகராட்சிகள் வரி விதிக்கும் அதிகாரத்தை முழுமையாய்ப் பெற்றிருக்க வேண்டும்.

3. நகராட்சிகள் கடன் வாங்குவதன் மீதான அரசாங்கக் கட்டுப்பாடு நீடிக்க வேண்டும்

4. நகராட்சி மன்றங்கள்சாதாரணமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைப் போதுமான அளவில் கொண்டிருத்தல் வேண்டும். தங்களுடைய தலைவர்களைத் தாங்களே தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

5. நகராட்சிக் குழுத்தலைவரில்லாமல் ஒரு நியமிக்கப்பட்ட முழுநேர அலுவலரிடம் நிர்வாகப் பொறுப்பை வழங்க வேண்டும் . இது சில பெரிய நகரங்களைப் பொறுத்தமட்டில் விரும்பத்தக்கது.

6. நகராட்சி மன்றங்கள் தங்களுடைய எந்தவொரு பணியினையும் குழுக்களிடம் ஒப்படைக்கக்கூடிய அதிகாரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

7. கிராமப்புற வாரியங்களைப் போன்றே உள்ளாட்சியின் மீதான பொது வெளிக்கட்டுப்பாடு, மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், ஆணையாளர் ஆகியோர்களது கட்டுப்பாடு அமைய வேண்டும்.

முதலாவது உலகப்போர் 1914 – ஆம் ஆண்டு ஏற்பட்டதன் விளைவாக இந்த பரிந்துரைகள் நிறைவேற்றப்படவில்லை.

போருக்குப் பின்னர் ஏற்பட்ட மாறிய சூழ்நிலையில் இந்திய அரசாங்கம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இத்தீர்மானம் ஏறத்தாழ அரசுரிமை ஆணையத்தின் பரிந்துரைகளை ஒத்திருந்தது. இத் தீர்மானத்தில் கீழ்க்கண்ட பரிந்துரைகள் இடம் பெற்றிருந்தன.

1. நகராட்சிக் குழுக்கள் அல்லது கிராமப்புற வாரியங்களில் தேர்ந்தெடுக்கபட்டவர்கள் பெரும்பான்மையாக இருக்கவேண்டும். சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டி நியமனம் செய்யும் கோட்பாட்டையும் வைத்துக்கொள்ள வேண்டும்.

2. உள்ளாட்சி நிறுவனங்களின் தலைவர்கள் அதிகாரி அல்லாத தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருக்கவேண்டும்.

3. பிரதிநிதித்துவப் பண்பைப் பிரதிபலிக்கும் நோக்கோடு வாக்குரிமையை விரிவுபடுத்த வேண்டும்.

4. மாவட்டவாரியங்களிலும் பெரிய நகராட்சிகளிலும் விசேட அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும்.

5. சட்டத்திற்குட்பட்டு உள்ளாட்சி நிறுவனங்கள் சுதந்திரமாக வரிகள் விதிக்கவும் வசூலிக்கவும் உரிமை வழங்க வேண்டும்.

6. உள்ளாட்சி நிறுவனங்களின் நிரந்தர அதிகாரிகளின் ஊதியம் போன்றவை இந்திய அரசாங்கத்தினால் தான்தீர்மானிக்கப்பட வேண்டும்.

7. நாடு முழுவதும் கிராமப்புற ஊராட்சிகள் நிறுவப்படவேண்டும். உள்ளாட்சி அரசாங்க வளர்ச்சியின் இரண்டாவது கட்டம் இத்தீர்மானத்தோடு 1919– ஆம் ஆண்டு முடிவடைந்தது.

## மூன்றாவது கட்டம் (இரட்டை ஆட்சியின் கீழ் உள்ளாட்சி அரசாங்கம்)

1919–ஆம் ஆண்டைய இந்திய அரசுச் சட்டம் உள்ளாட்சி அரசாங்கத்தின் திருப்புமுனையாக அமைந்தது. இச்சட்டம் இரட்டை ஆட்சியை உருவாக்கியது. இரட்டை ஆட்சியின் கீழ் உள்ளாட்சி அரசாங்கம் மாற்றப்பட்ட அதிகாரத்தின் கீழ் வந்தது. ஆளுநரும், அவருடைய குழுவும் ஒதுக்கப்பட்ட அதிகாரங்களையும், ஆளுநரும் இந்திய அமைச்சர்களும் மாற்றப்பட்ட அதிகாரங்களையும் நிர்வகித்தார்கள். ஆளுநரும் அவருடைய குழுவும் மத்தியபாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையவர்கள். அமைச்சர்கள் தங்கள் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நிதிப்பற்றாக்குறை பெரியதொரு தடங்கலாக இருந்தது. இதற்குக் காரணம் நிதி சம்பந்தப்பட்ட அதிகாரம் ஒதுக்கப்பட்ட அதிகாரப் பட்டியலில் இருந்தது. அமைச்சர்கள் முழுமையாக நிதித்துறையையே எதிர்பார்த்திருக்க வேண்டி இருந்தது. பெரிய தொகையைக் கேட்டால் சிறிய தொகைதான் கொடுக்கப்பட்டது. இம்முறை 1935–ஆம் ஆண்டைய இந்திய அரசுச் சட்டத்தின் மாநில சுயாட்சிப் பகுதி நடைமுறைக்கு வரும் வரை நிலவி இருந்தது.

## நான்காவது கட்டம் (மாநில சுயாட்சியின் கீழ் உள்ளாட்சி அரசாங்கம்)

1935–ஆம் ஆண்டைய இந்திய அரசுச் சட்டம் மாநில சுயாட்சியை ஏற்படுத்தியது. இப் புதிய அமைப்பில் உள்ளாட்சி நிறுவனங்களின் அமைப்பு, பணிகள் ஆகியவற்றை மேம்பாடு அடையச் செய்யும்

பணி நடந்தது. பல மாநிலங்களின் நியமனம் செய்யும் முறை முழுவதுமாக நீக்கப்பட்டுவிட்டது. இப் புதிய அமைப்பில் ஆளுநர் தன்னுடைய நிர்வாகத்தை அமைச்சர்களின் ஆலோசனைப்படி நடத்த வேண்டும். ஆளுநர், ஆளுநர் ஜெனரால் இவர்களுக்கு மேலாக இங்கிலாந்து பாராளுமன்றம் கொண்டிருந்த அபரிமிதமான, அதிகாரங்கள் மாநில சுயாட்சி என்பது ஒரு மாயை என்று தெளிவாகக் காட்டுகிறது. எனவே, எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி மிகவும் மெதுவாகவே இருந்தது. 1937–ஆம் ஆண்டு காங்கிரஸ் மந்திரி சபை அமைந்த போதிலும் எவ்விதமான முன்னேற்றமும் இல்லை. 1939–ஆம் ஆண்டு காங்கிரஸ் மந்திரிசபை ராஜினாமா செய்து விட்டது. மேலும், இரண்டாவது உலக மகா யுத்தம் தொடங்கிவிட்டது. இவற்றிற்கெல்லாம் மேலாக நாடு முழுவதும் தேசிய விடுதலை இயக்கத்தில் மூழ்கியிருந்தது.

## ஐந்தாவது கட்டம் (அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த பின்னர்)

உள்ளாட்சி அரசாங்க வளர்ச்சியின் ஐந்தாவது கட்டம் இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த பின்னர் 1950–ஆம் ஆண்டு துவங்கியது. அரசியலமைப்பு உள்ளாட்சி அரசாங்கத்தை மாநில அதிகாரப் பட்டியலில் சேர்ந்திருக்கிறது. ஏழ்மை, அறியாமை, படிப்பின்மை மற்றும் பிணி ஆகியவற்றை முழுமையாக களைந்தெறியும் பொருட்டு இந்திய அரசாங்கம் சமுதாய வளர்ச்சித் திட்டத்தை துவங்கியது. ஆரம்பத்தில் இத்திட்டம் 55 வட்டங்களில் துவங்கப்பட்டது. பின்னர், இத்திட்டம் படிப்படியாக விரிவுப்படுத்தப்பட்டது. கிராமப்புறவாழ்வு எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டம் எதிர்பார்த்த பலனை அளிக்காததால், இந்திய அரசாங்கம் சமுதாய வளர்ச்சித்திட்டத்தையும், தேசிய விஸ்தரிப்புப் பணியையும் பற்றி ஆராய்வதற்கென திரு. பல்வேந்திராய் மேத்தா அவர்கள் தலைமையில் ஒரு குழுவை 1957–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நியமித்தது. இக்குழு தன்னுடைய அறிக்கையை 1957 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சமர்ப்பித்தது. இவ்வறிக்கை வாயிலாக இக்குழு கிராமப்பகுதிகளுக்கென ஒரு மூன்றடுக்கு முறையிலான உள்ளாட்சி அரசாங்கத்தை பரிந்துரை செய்திருந்தது. கிராம ஊராட்சி அடிமட்டத்திலும், ஊராட்சி சமிதி வட்டார நிலையிலும், ஜில்லா பரிசத் உயர்மட்டத்திலுமாக அமையப் பெற்ற மூன்றடுக்கு உள்ளாட்சி அரசாங்கமாகும். இக்குழுவின் பரிந்துரைகளை தேசிய வளர்ச்சிக்குழு 1959–ஆம் ஆண்டு ஏற்றுக் கொண்டது.

1959–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் –2ஆம் தேதி இத்திட்டத்தை ராஜஸ்தான் மாநிலம் முதன் முதலாக நடைமுறைப்படுத்தியது. காலம் சென்ற முன்னாள் பிரதமர் ஜவகர்லால் நேரு இத்திட்டத்தை துவக்கி வைத்து இத்திட்டத்திற்கு ‘பஞ்சாயத்தி ராஜ்’ என்று பெயரிட்டார். இவ்வாறாக, இது ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆந்திரப் பிரதேசம், பஞ்சாப் மற்றும் பல மாநிலங்களில் இத்திட்டம் துவங்கப்பட்டது.

பம்பாய் மாநில அரசு இக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. பம்பாய் அரசு, தன்னுடைய மாநில சூழ்நிலைக்கேற்ப இத்திட்ட பரிந்துரைகள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது. இதற்கிடையில் பம்பாய் மாநிலம் மஹாராஷ்டிரம், குஜராத் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இவ்விரு மாநிலங்களும் இப்பரிந்துரைகளை பரிசீலனைச் செய்வதற்காக தனித்தனியே தங்களுடைய குழுக்களை நியமித்தன. மஹாராஷ்டிரா அரசு நியமித்த நாயக் குழு நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட வலிமை வாய்ந்த ஜில்லா பரிசத் இருக்க வேண்டும் என்றும், இரண்டாந்தர நிலையில் தான் ஊராட்சி சமிதி இருக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்தது. குஜராத் மாநிலமானது, பல்வந்திராய் மேத்தா குழுவின் பரிந்துரைகளுக்கும், நாயக்குழுவின் பரிந்துரைகளுக்கும் இடைப்பட்ட ஒரு நிலையைப் பின்பற்றியது. இரண்டு மாநில அரசுகளும் தங்களுடைய குழுக்களின் பரிந்துரைகளை முழுமையாக ஏற்றுக் கொண்டு அதனை நடைமுறைப்படுத்தின. இந்திய மாநிலங்கள் அனைத்திலும் இன்று பஞ்சாயத்திராஜ் ஊராட்சி அரசு முறை நடைமுறையில் செயல்பட்டு வருகிறது.

மாதிரி வினா:

இந்தியாவில் உள்ளாட்சி வளர்ச்சியினைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

# பாடம் – 3

## தமிழக உள்ளாட்சி வாரியங்களின் வளர்ச்சி

உள்ளாட்சி வாரியங்கள் தமிழகத்தில் குறிப்பிடத்தக்க பணிகளைச் செய்துள்ளன. இன்றைய நாளில் செயல்பட்டு வருகின்ற வாரியங்களிலிருந்து உள்ளாட்சி வாரியங்கள் வித்தியாசமானவையாகும். உள்ளாட்சி நிருவாக அமைப்புக்கள்தான் இவ்வாரிபங்களாகும். வரிகள் விதித்து அவற்றை வசூலித்து உள்ளாட்சிப் பணிகளைச் செய்த அமைப்புக்கள்தான் இந்த வாரியங்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை, அதாவது சென்னை மாகாணத்தில், 1871–ஆம் ஆண்டுக்கு முன்னரே இரண்டு விதமான வரிகள் வசூலிக்கப்பட்டன. அவை, ஒன்று கல்வி வரி; மற்றொன்று சாலை வரி (செஸ்). 1863–ஆம் ஆண்டுக் கல்விச்சட்டமும், 1866–ஆம் ஆண்டு மாவட்டச் சாலைகளில் செஸ் சட்டமும் கல்வி வரியை வசூலித்துப் பள்ளிகளை நிருவகிப்பதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டு இருந்தது. இக்குழுவில் பள்ளி ஆய்வாளர், துணை ஆய்வாளர் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் இடம் பெற்றனர். உள்ளூர் பிரமுகர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் பொது மக்களுடன் கலந்து ஆலோசித்து நியமனம் செய்தார். இக்குழுவில் முதன்முதலாக அதிகாரிகளும், அதிகாரிகளல்லாத பொதுமக்களும் இடம் பெற்றனர். ஆனால் பள்ளிகளையும் கல்வியையும் நிருவகிப்பதற்கு கிராம மக்கள் அதிகமாக முன்வரவில்லை, ஆகவே அதிகாரிகளல்லாத பொது மக்கள் பிரதிநிதிகளை நியமிக்கத் தகுதியுள்ள நபர்கள் கிடைக்கவில்லை. மேலும் கல்வி கற்பது அதிகச் செலவு பிடித்ததாக அன்று இருந்ததால், மக்களும் கல்வியில் அதிக ஆர்வம் காட்டவில்லை. இதனால் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஐந்தாண்டிற்கு ஒருமுறை பள்ளிகள் தேவையா? இல்லையா? என்ற பொது வாக்கெடுப்பில் பள்ளிகள் தேவையில்லை என்றுகூட ஏராளமான இடங்களில் பொதுமக்கள் வாக்களித்தனர். எனவேதான் கல்வியானது 1871–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட உள்ளாட்சி வாரியத்தில் சேர்க்கப்பட்டது.

சாலை செஸ்ஸை நிருவகித்த முறையானது கல்வி முறையை நிருவகித்ததிலிருந்து வேறுபட்ட முறையாகும். சாலை செஸ்ஸை நிருவகிக்கத் தனி அமைப்பு உருவாக்கப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரே சாலை செஸ்ஸை நிர்வகித்து வந்தார். இவர் பொறியியலரின் ஆலோசனையோடு சாலை செஸ்ஸை நிருவகித்து வந்தார். இவர் எந்தப் பகுதிகளில் சாலை போடவேண்டுமென்பதையும், ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு நிதி ஒதுக்கவேண்டும் என்பதையும் முடிவு செய்தார். சாலைகள் போடுவதற்கென செஸ் வசூலிக்கப்பட்டதால் சாலைகள் உள்ளாட்சிக்குட் பட்டதாக அமைந்தன. ஆனால் இதனை நிருவகிக்கும் நிருவாகத்தில் மக்கள் பிரதிநிதிகள் இடம்பெறவே இல்லை. அரசாங்கம் சாலை நிருவாகத்தைக் கவனிக்க ஒரு பிரதிநிதியை நியமனம் செய்தது. இந்த நியமனப் பிரதிநிதிதான் சாலைகளுக்கு முழுப்பொறுப்பு வாய்ந்தவர். உள்ளாட்சியில் வெளிமனிதர் அதாவது அரசாங்கப் பிரதிநிதிதான் முழுப்பொறுப்பு வாய்ந்தவராக இருந்ததாலும், மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சியில் பங்கு பெறாமல் இருந்ததாலும் உள்ளாட்சிப் பணிகள் செம்மையாகச் செய்யப்படவில்லை.

கல்வி வளர்ச்சிக்கு மக்கள் முழு ஒத்துழைப்புத் தராததாலும், சாலை செஸ்ஸை மத்திய அரசாங்க அதிகாரியின் மூலம் செயல்படுத்துவதில் சிக்கல்கள் ஏற்பட்டதாலும் இவ்விரு அமைப்புக்களிலிருந்து வித்தியாசமான ஓர் அமைப்பை உருவாக்கி நிருவகிக்க அரசாங்கம் எண்ணியது. இந்த அமைப்புத்தான் உள்ளாட்சி வாரியமாகும். இதில் அதிகாரிகளும், பொதுமக்கள் பிரதிநிதிகளும் இடம் பெற்று இருந்தனர். இந்த அமைப்பு கொள்கைகளை உருவாக்கித் தீர்மானங்களை நிறைவேற்றியது. இத்தீர்மானங்களை ஒரு செயலாக்க அதிகாரி செயல்படுத்தினார்.

தமிழகத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் 1871–ஆம் ஆண்டு உள்ளாட்சி நிதிச்சட்டத்தின் கீழ் ஒரு வாரியம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாரியத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் பதவி அடிப்படையில் (ex-officio) உறுப்பினர். தவிர, பிற அதிகாரிகள், அதிகாரிகளல்லாத பொதுமக்கள் ஆகியோரும் பிரதிநிதித்துவம் பெற்றனர். அதிகாரிகளல்லாத பொதுமக்கள் பிரதிநிதிகளை ஆளுநர் குழு (Governor-in-Council)

நியமனம் செய்தது. வாரியங்களில் பிரதிநிதித்துவம் பெறும் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையையும் ஆளுநர் குழுவே முடிவு செய்தது. வாரியங்கள் ஒவ்வொன்றிலும் மூன்றுக்குக் குறையாது அல்லது 50 விழுக்காட்டிற்குக் குறையாது, அதிகாரிகளல்லாத மக்கள் பிரதிநிதிகள் இடம் பெற்றனர். இப்பொதுமக்கள் பிரதிநிதிகள் பெரும்பாலும் நிலக்கிழார்களாக, பெரிய தனவந்தர்களாக, வியாபாரிகளாக இருந்தனர். ஆகவே அந்தந்த வட்டாரங்களில் உள்ள செல்வாக்குப் பெற்ற நபர்கள் வாரியங்களில் நியமிக்கப்பட்டனர். மாவட்ட ஆட்சித் தலைவர் வாரியத்தின் தலைவராக இருந்தார். வாரியத்தின் உதவித் தலைவராக ஆளுநர் குழு வாரிய உறுப்பினர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்தது. இச்சட்டம் 13 ஆண்டுகள் செயலில் இருந்தது. இதன் விளைவாக, மாகாணம் 30 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டது. இந்த 30 வட்டாரங்களின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 774. இதில் 408 உறுப்பினர்கள் அதாவது 52.9 விழுக்காடு அதிகாரிகளல்லாத பொது மக்கள் பிரதிநிதிகள் வாரியங்களில் இடம் பெற்றனர்.

உள்ளாட்சி வாரியங்களில் 47.1 விழுக்காடு அதிகாரிகள் உறுப்பினர்களாக இருந்தனர். அதிகாரிகள் அன்று ஓரிடம் விட்டு ஓரிடம் சென்று பணிகளாற்றிய காரணத்தால், வாரியக் கூட்டங்களில் சரிவரக் கலந்து கொள்ள முடியவில்லை. இதே போல், மக்கள் பிரதிநிதிகளும் மிகுதியான தூரம் பயணம் செய்து கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. இதனால் மக்களுக்கும் செலவுகள் மிகுதியானது. இவ்வாறு அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் கூட்டங்களில் கலந்து கொள்ள இயலவில்லை. ஆகவே அரசாங்கம் உறுப்பினர்களுக்கு பயணப்படி கொடுக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தது. இதன் மூலம் உறுப்பினர்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளவும் அவர்களின் செலவுகளைக் குறைக்கவும் அரசாங்கம் துணை செய்தது.

இந்நிலையில் அரசாங்கம் கவனமாகச் சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதிருந்தது. தலைமை ஆளுநர் மன்றம் மாநில அரசாங்கங்களுக்குச் சில பொதுவழிகாட்டல்களைத் தெரிவித்தது. இவ் வழிகாட்டல்கள் உண்மையான உள்ளாட்சி அரசாங்கங்களை உருவாக்க வழியமைத்தன. இந்த வழிகாட்டல்கள் இரண்டு பாகங்களைக் கொண்டவை. முதல் பாகத்தில், உள்ளாட்சி வாரியங்கள் அமைப்பது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவது பாகமானது, அரசாங்கம் உள்ளாட்சிகள் மீது எவ்வளவு தூரம் கட்டுப்பாடு விதிக்க வேண்டும் என்பதைப் பற்றிக் கூறியுள்ளது. எந்தெந்தக் கட்டுப்பாட்டு அதிகாரங்களை அரசாங்கம் தன்னிடத்தே கொண்டிருந்தால், திறமையாகச் செயல்பட முடியும் என்பது குறித்து இரண்டாவது பாகம் விளக்கியுள்ளது. அப்போது உள்ளாட்சி வாரியங்கள் அமைப்பதில் சில சிரமங்கள் தோன்றின. இந்தியா முழுமைக்கும் ஒரே வகைத்தான ஒழுங்கு முறையின் மூலமாக வாரியங்கள் அமைப்பதில் சிக்கல்கள் இருந்தன. ஏனெனில் இந்தியா பல்வேறு வித்தியாசங்கள் கொண்ட பல பாகங்களைக் கொண்டுள்ளது. குறிப்பாக, பஞ்சாப் மாநிலம், சென்னை, வங்காளம் மற்றும் பர்மா ஆகியவற்றைக் காட்டிலும் வித்தியாசமானதாகும். எனவே சூழ்நிலைக்கேற்றவாறு உள்ளாட்சிகளை அமைத்தால்தான் வெற்றிகரமாகச் செயல்படமுடியும் என்பது உணரப்பட்டது. மேலும் உள்ளாட்சி அரசாங்க வளர்ச்சியானது அரும்புகின்ற பருவத்தில் இருந்ததால், பல்வேறுபட்ட நடைமுறைகளைப் பயன்படுத்தி, எது சிறந்த முறையெனத் தெரிந்து கொள்வது அவசியமாயிற்று. ஏனெனில் வெறுமனே வழிகாட்டல்களுக்குத் தக்கவாறு உள்ளாட்சி அமையவேண்டுமென்பது கட்டாயமில்லை. மக்களின் பழக்கவழக்கங்கள், சிந்தனை, எண்ணங்கள் போன்றவை இடத்திற்கு இடம் மாறுபட்டு உள்ளன. அம் மக்களுக்கேற்ற உள்ளாட்சியை அமைக்க வேண்டும். இதற்காகப் பல்வேறு செயல்முறைகளைச் சோதனைகளாக நடத்திய பின்னர். சிறந்த முறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். இருப்பினும் சில அடிப்படைக் கொள்கைகள் எல்லா உள்ளாட்சிகளுக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்பதும் கருத்தில் கொள்ளப்பட்டது. ஓரிடத்தில் ஒரு முறைமையானது சிறப்பாகவும் நன்றாகவும் செயல்படுகிறதென்றால், அது மற்ற இடங்களுக்கும் பொருத்தமாக இருந்தால் அதை ஏற்றுக் கொள்வதில் தவறு ஒன்றுமில்லை. அரசாங்க வழிகாட்டலில் மாநிலத்தின் ஒவ்வொரு நகரிலும் நகராட்சி அரசாங்கங்கள் ஏற்படுத்துவதை இந்திய அரசாங்கம் விரும்பியது. இதே போல், உள்ளாட்சி அமைப்புகள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அமைக்க மாநில

அரசாங்கங்கள் தீவிர அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டுமெனவும் இந்திய அரசாங்கம் கேட்டுக் கொண்டது. வரிசைக் கிரமமான உள்ளாட்சி வாரியங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் சூழ்நிலைக்கேற்றவாறு அமைத்து, மக்கள் பிரதிநிதிகள் குறிப்பிட்ட பணிகளைச் செய்ய வரையறுக்கப்பட்டுள்ளன. நிதியின் மூலமாகச் செய்ய வேண்டும் என விளக்கியது. ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் பரந்த அளவு வரையறை எல்லை கொண்டதாக இல்லாமல், மேலாண்மை செய்யக்கூடிய வகையில் அளவாக இருக்கவேண்டுமென்பதிலும் தலைமை ஆளுநர் மன்றம் கவனம் செலுத்தியது. மேலும் இவ்வழிகாட்டல் வெற்றி பெற உள்ளூர் மக்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும், அவர்களது அறிவைப் பயன்படுத்தி அனைவரது ஒத்துழைப்பையும் பெற வேண்டியது அவசியமெனவும் வலியுறுத்தியது. ஏனெனில் அன்று மாவட்டக் குழுக்களின் கூட்டத்திற்குத் தலைமை நிலையங்களில் வசிக்கும் உறுப்பினர்கள் கூடக் கலந்து கொள்ளாத ஒரு நிலைதான் இருந்ததென்பதை அனுபவங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. மேலும் கலந்துகொண்ட உறுப்பினர்கள் கூட, மாவட்டத்தின் புறப்பகுதி விஷயங்களில் ஆர்வமில்லாதவர்களாக இருந்தனர். இதன் விளைவாக, மாவட்டத் தலைமையிடங்களுக்கு அதிகமான முக்கியத்துவம் வழங்கப்பட்டது. தலைமையிடத் தேவைகள் எளிதாகக் கவனிக்கப்பட்டன. உள்ளாட்சி அதிகாரம் முழுவதும் மாவட்ட அதிகாரிகளிடமே உறைந்தது. மாவட்டக் குழு வெறுமனே மாவட்ட அதிகாரியின் பிரேரணைகளை மட்டுமே ஏற்றுக் கொள்ளக்கூடிய அமைப்பாக மாறியது. எனவே உள்ளாட்சியில் நிருவாக அமைப்பின் சிறிய அமைப்பானது தாலுகா அல்லது வட்டமாக இருக்க வேண்டும் என்றும் இந்த எல்லையானது உச்ச உயர் எல்லையாக ஒவ்வொரு உள்ளாட்சிக்கும் இருக்க வேண்டும் எனவும் கூறியது. இதை விடக் குறைந்த அளவில் சிறு சிறு உள்ளாட்சி வாரியங்கள் அமைப்பதில் தவறோ எதிர்ப்போ ஏதுமில்லை எனவும், வட்டத்தை விடக் குறைந்த அளவு வரையறை எல்லையைக் கொண்ட உள்ளாட்சி வாரியங்கள் தேவையானால் அமைக்கலாம் என்றும் கூறியது. இது சில மாநிலங்களில் தன்னிச்சையாகச் செயல்படுகின்ற மாவட்ட மன்றங்களிடம் இத்துணை வாரியங்கள் விடப்பட்டன. ஒவ்வொரு வாரியத்தின் பிரதிநிதியும் மாவட்ட மன்றங்களுக்குத் தங்களது பிரதிநிதிகளை அனுப்பின. மாவட்ட மன்றங்களில் பொதுவான விஷயங்கள், மாவட்ட நிதி ஒதுக்கீடு, நிலவரி (cess) விதித்தல் ஆகிய விஷயங்கள் விவாதிக்கப்பட்டன. சில மாநிலங்களில் உள்ளாட்சி வாரியங்களை மாவட்ட வாரியங்கள் கட்டுப்படுத்தின. ஆனால் எந்த மாதிரியான முறைமை செயல்பட்டு வந்தாலும், உள்ளாட்சி அரசாங்கங்கள் குறுகிய அதிகார எல்லையுடன், அரசாங்கக் கட்டுப்பாட்டிற்குள் செயல்படவேண்டுமென்ற அடிப்படைக் கொள்கையுடன் இருக்க வேண்டுமெனத் தலைமை ஆளுநர் மன்றம் விரும்பியது. நகராட்சிக் குழுக்கள் நகர் எல்லைக்குள்ளாக அமைந்து, உள்ளாட்சி வாரியங்களில் இடம் பெற்றதென்பது உண்மை, மாவட்ட வாரியங்களுக்கும் நகராட்சி வாரியங்களுக்குமிடையே உள்ள தொடர்புகள், நகரத்தில் அமைவதற்கேற்றவாறு பொருத்தமாக எல்லைகள் நிர்ணயிக்கப்படவேண்டும். இன்னும் சில மாநிலங்கள் பொதுச் சிக்கல்களை விவாதிக்கக் கிராமப்புற வாரியங்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கியுள்ளது. மேலும் சில மாநிலங்களில் நகர வாரியங்கள் தங்களுடைய பிரதிநிதிகளை மாவட்ட வாரியம், மாவட்ட மன்றம் ஆகியவற்றிற்கும் அனுப்பி வைத்தன.

எனவே உள்ளாட்சி வாரியங்கள், நகர்ப்புற மற்றும் கிராமப்புற வாரியங்கள் இரண்டுமே, ஏராளமான மக்கள் பிரதிநிதிகள் மூலம் எல்லா இடங்களிலும் செயல்பட்டு வந்துள்ளன. அலுவலக உறுப்பினர்கள் மூன்றில் ஒரு பங்குக்கு மிகாமல் இருக்க வேண்டுமெனவும் வரையறுக்கப்பட்டது. தேர்தல் முறை பின்பற்றப்படாத இடங்களில் மட்டும் அலுவலக உறுப்பினர்கள் உள்ளூர் எதிர்ப்புக்கள் இல்லையேல், மிகுதியாக இருக்கலாமெனவும் வரையறுக்கப்பட்டது. மக்கள் பிரதிநிதிகளின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகளெனத் தலைமை ஆளுநர் மன்றம் முடிவு செய்தது. இவர்கள் நியமனம் செய்யப்பட்டாலும், நியமனம் செய்யப்படாமல் தேர்ந்து எடுக்கப்பட்டாலும் இவர்களது பதிவிக்காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும். ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டில் உறுப்பினர்கள் பதவி விலகி உடனே

அக்காலியிடங்கள் நிரப்பப்படவேண்டும். உறுப்பினர்கள் தங்களது பதவிக்காலத்திற்குப் பின்னர் மறுபடியும் உறுப்பினராக வரத் தகுதி படைத்திருந்தனர். இதற்கிடையே உள்ளாட்சியில் சுழற்சி முறை நலமென ஆளுநர் மன்றம் விவாதித்தது. மேலும் இம்முறையைக் கொண்டு வருவதற்கு உரிய அதிகாரங்களனைத்தையும் உள்ளாட்சியிடமே விட்டது.

வாரிய உறுப்பினர்களைக் கூடிய மட்டும் தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்க அரசாங்கம் விரும்பியது. எல்லா இடங்களிலும் இம்முறையைக் கொண்டுவரக் கட்டாயப்படுத்தவில்லை. எனினும் உள்ளூர் சூழ்நிலைகள் தேர்தல் முறையைக் கொண்டுவர உகந்ததாயிருந்தால் தேர்தல் முறையைக் கொண்டுவரலாம் என அரசாங்கம் கூறியது. முதலில் பெரிய நகரங்களில் தேர்தல் முறையைச் செயல்படுத்தி படிப்படியாகச் சிறிய நகராட்சிகள், பின்தங்கிய கிராமப்புறங்கள் ஆகியவற்றிற்கும் கொண்டுவர வேண்டுமென அரசாங்கம் கருத்துரைத்தது. இம்முறைக்கு அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கினால், இம்முறையை எவ்வித இடையூறுமின்றிச் செயல்படுத்தலாமென அரசாங்கம் நம்பியது. இம்முறையைச் செயல்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் அம்மாவட்ட சூழ்நிலைக்கேற்ப தேர்தல் தகுதிகளை நிர்ணயிக்க அம்மாவட்ட துணைக் கோட்ட அதிகாரிகள் அதிகாரம் பெற்றனர். இவர்கள் உள்ளாட்சி அரசாங்கத்திடமிருந்து அறிவுறுத்தல்கள் பெற்று, உள்ளாட்சி வாரியங்களின் தேர்தலில் நிற்கத் தகுதியானவர்களின் பட்டியலைத் தயாரிக்க வேண்டும். துணைக்கோட்ட அதிகாரி அவரது காவல்வரையறைக்குட்பட்ட எல்லைக்குள் வசிக்கும் எல்லா மக்களையும் ஓரிடத்தில், குறிப்பிட்ட தேதியில், குறித்த நேரத்தில் கூடச் செய்து, அவர்களிடம் அரசாங்கத்தின் நோக்கங்கள், கடமைகள் ஆகியவற்றை விளக்க வேண்டும். பின்னர் அரசாங்கத்தின் நோக்கங்களை மக்கள் ஏற்றுக்கொள்கின்றனரா என்பதையும், தேர்ந்தெடுக்கப்படவேண்டிய பிரதிநிதிகளின் எண்ணிக்கை, அதிகார வரையறை ஆகியவற்றைக் மக்களுக்கு உணர்த்த வேண்டும். பின்னர் மக்கள் சில காலங்களில் உள்ளாட்சி வாரியங்களை ஆட்சி செலுத்தும் அறிவினைப் பெற்று, பொறுப்புக்களை உணர்ந்து ஆட்சி செலுத்தும் நிலையில், அரசாங்கம் உள்ளாட்சி விஷயங்களில் குறுக்கீடு செய்யாது என்பதும் கூறப்பட்டது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பயமின்றி, வரையறுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்படி ஆட்சியை நடத்த வழி செய்யப்பட்டது. தேர்தல் முறையை நடைமுறைப்படுத்த ஏராளமான விருப்ப அதிகாரங்களைத் தலைமை ஆளுநர் மன்றம் உள்ளாட்சிகளுக்குக் கொடுக்கவும் எண்ணியது. ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்தல் முறையை வகுக்கப் பல சோதனைகள் நடத்தவேண்டுமெனவும் கூறியது. சாதாரணவாக்கு, திரள்வாக்கு (Cumulative Vote) வார்டுகளிலிருந்து தேர்ந்து எடுக்கும் முறை, மொத்தமாக நகரத்திலிருந்து தேர்ந்து எடுத்தல், இனங்களின் மூலமாகத் தேர்ந்தெடுத்தல் போன்ற பல்வேறு சோதனைகள் நடத்தலாம் எனவும், ஐரோப்பாவில் இல்லாத சில புதிய முறைகள் இந்தியாவிற்குப் பொருத்தமாகத் திகழலாம் எனவும் வழி காட்டியது. ஆகவே வேறுபட்ட மக்கள் தொகைக்கு ஏற்ப, உள்ளூர் சிறப்புத்தன்மை, சூழ்நிலை ஆகியவற்றிற்கு ஏற்றவாறு தேர்வுமுறையை உள்ளாட்சிகள் அமைத்துக் கொள்ள வேண்டும் என விளக்கியது. மாநில அரசாங்கங்கள் தங்களுடைய மாவட்ட அதிகாரிகளின் மூலமாக, தேர்தல் முறையை கொண்டு வர பிரமுகர்களின் கருத்தறிய முயன்றன.

பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள மக்களுக்கு உள்ளாட்சி பற்றிய பயிற்சி கொடுக்க வேண்டுமென்ற பிரச்சனை அரசாங்கத்திற்குப் பெரிய சிக்கலாக இருந்து வந்துள்ளது. இதுவரையிலும் பயிற்சி கொடுக்கும் முயற்சிகளனைத்தும் தோல்வியைத்தான் தழுவியுள்ளது. மேலும் இதுவரையிலும் வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கையானது தேர்தல்களில் பதிவான வாக்காளர்களை வைத்துப் பார்த்தால் மிக மிகக் குறைவானதாகவே இருந்தது. இருப்பினும் உள்ளாட்சியில் மக்களது ஆதரவும், பங்கேற்பும் ஏற்படும் வண்ணம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனத் தலைமை ஆளுநர் மன்றம் கருத்துத் தெரிவித்தது. மக்கள் உள்ளாட்சி வாரியங்களில் பணியாற்ற ஊக்குவிக்கும் வண்ணம் கௌரவப் பட்டங்கள்

கொடுக்கவேண்டுமெனவும், இப்பட்டங்களை உறுப்பினர்கள் அஞ்சல் தொடர்புகளில் போட்டுக் கொள்ளலாம் எனவும் கூறியது. உதாரணமாக இராய் பகதூர், இராவ் பகதூர், கான் பகதூர் போன்றவை சில கௌரவப் பட்டங்களாகும் இது வரையிலும் கூறப்பட்டவை உள்ளாட்சிகள் அமைப்பது குறித்த வழிகாட்டல்கள் ஆகும்.

அரசாங்கம் உள்ளாட்சி வாரியங்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது அவசியமானது. ஆனால் எந்த மாதிரியான கட்டுப்பாடுகளை விதிப்பது என்பது சிக்கலான ஒன்று. உள்ளாட்சிகளை வெளிப்படையாகக் கட்டுப்பாடு செய்யலாமே தவிர, அவற்றின் அன்றாட நடைமுறைகளில் குறுக்கீடு செய்து, கட்டுப்பாடு விதிக்கக் கூடாது என்பது தலைமை ஆளுநர் மன்றத்தின் கருத்தாகும். அரசாங்கம் உள்ளாட்சிகளின் சட்டங்களை மாற்றி கட்டுப்பாடு விதிக்கலாமெனினும், அவற்றை அதிகாரத்தனப் படுத்தக்கூடாது. அரசாங்கம் இரண்டு கட்டுப்பாடு அதிகாரங்களை வைத்திருக்க வேண்டும். அரசாங்கத்தின் அனுமதியைச் சில குறிப்பிட்ட செயல்களுக்குக் கட்டாயம் பெற்றாக வேண்டும். ஏனெனில் அச்செயல்கள் பொதுவான முன்னேற்றத்திற்கும், பாதுகாப்பிற்கும் அவசியமானவை. சில சட்டங்கள் அரசாங்கம் அனுமதி பெற்ற பின்னர் தான் செயல்பாட்டிற்கு வரவேண்டும். ஏனெனில் சட்டத்திற்கு உயிரூட்டுவதே அரசாங்கமாக இருந்தால்தான், அரசாங்கத்திற்கு மதிப்பும் மரியாதையும்; இல்லையேல் உள்ளாட்சி அமைப்புக்கள், தன்னாட்சி அமைப்புக்களாக மாறிவிடலாம். கடன்கள் திரட்ட, புதுவரிகள் விதிக்க, பொது அமைதியைப் பாதிக்கும் மதப் பிரச்சனை போன்றவற்றிற்கு, பிறவற்றிற்கு அரசாங்கத்தின் அனுமதி பெற்றாக வேண்டும். இவ்வாறு அரசாங்கத்தின் அனுமதி பெறக்கூடிய விஷயங்கள் ஆரம்ப காலத்தில் அதிகமாகவே இருந்தாலும், நாளடைவில், நடைமுறையில் குறைந்து விடுமெனவும் தலைமை ஆளுநர் மன்றம் கூறியது. இரண்டாவதாக ஒரு குறிப்பிட்ட விவகாரத்தைப் பற்றி உள்ளாட்சி வாரியத்தின் நடவடிக்கைகளைத் தள்ளுபடி செய்ய அவசியமான கடமைகளைச் செய்வதிலிருந்து தவறியிருந்தாலோ அல்லது செய்யத் தவறினாலோ, உள்ளாட்சி அமைப்பைத் தற்காலிகமாக நீக்கம் செய்ய, உள்ளாட்சிப் பணிகளைத் திருப்திகரமாகச் செய்யும் வண்ணம் தனி அதிகாரிகளை நியமனம் செய்தல், செயல்படுத்தல் ஆகியன அரசாங்கத்தின் அதிகாரங்களாக இருக்க வேண்டும். இவ்வாறு உள்ளாட்சி அமைப்புகளைக் கலைப்பதற்கு அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டும். இவ்வாறு உள்ளாட்சி அரசாங்கங்களைக் கலைக்க உயர் அரசாங்கம் கொண்டிருக்கும் அதிகாரமானது இங்கிலாந்து நாட்டின் சட்டங்களில் தெளிவாக இருந்தது. உயர் அரசாங்கங்கள் பொதுப்படையாக உள்ளாட்சி அரசாங்கங்களைக் கவனித்துக் கொண்டு, கடமைகள் செய்யத் தவறினால் அவற்றை உணர்த்தவும், தவறுகள் செய்ய ஆரம்பித்தால் அவற்றைத் தண்டிக்கவும் வேண்டும்.

உள்ளாட்சி வாரியங்களின் நடவடிக்கைகளில் அதிகாரிகள் குறுக்கிடாமல், உள்ளாட்சிச் செயல்களைக் கண்காணிப்பும், கட்டுப்பாடும் செய்யவேண்டும். இந்த அதிகாரிகள் நகரச் செயலாக்க அதிகாரிகளாக இருப்பதுடன், உள்ளாட்சி அமைப்புக்களின் தலைவராகவும், உறுப்பினராகவும் இருந்து வந்தனர். இவர்கள் பதவியின் அடிப்படையில் தலைவராகவும், உறுப்பினராகவும் இருந்ததால் சீரான வழிகாட்டுக்களைத் தந்தனர். உள்ளாட்சி நடவடிக்கைகளில் நடைமுறையில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் இவர்களுக்கு இருந்தது. ஆனால் இவர்களால் உள்ளாட்சிப் பயிற்சியினைக் கொடுக்க முடியவில்லை என்பது தெரியலாயிற்று. மேலும் அதிகாரிகள் உள்ளாட்சிகளில் தலைவராக இருந்ததால், மக்கள் பிரதிநிதிகள் நிருவாகத்தில் கலந்து கொள்ள ஆர்வம் காட்டவில்லை. மக்களும் அதிகாரமில்லாத அமைப்புக்களில் அவர்களது நேரத்தைச் செலவழிக்கவும் விரும்பவில்லை. மேலும் மக்கள் பிரதிநிதிகள் தன்னிச்சையாகவும், விருப்பமாகவும், ஆர்வமாகவும்செயல்பட்டதால் மோதல்கள் ஏற்பட்டன. எனவே இந்த விவகாரம் மிகவும் கவனமாக ஆராயப்பட்டது.

மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சி வாரியங்களில் தலைவராக நியமிக்கப்படுவதை தலைமை ஆளுநர் மன்றம் விரும்பியது. அவ்வாறு தகுதியான மக்கள் தலைவர் இல்லையேல் அதிகாரிகளே அப்பதவிகளில்

அமர்ந்து கொள்ளலாம் எனக்கூறியது. இருப்பினும் அதிகாரிகள் தலைவராக இருந்தாலும், நடவடிக்கைகளை முடிவு செய்யும் வாக்குரிமை (Casting Vote) கிடையாது என வரையறுத்தது. எனவே மக்கள் பிரதிநிதிகளின் அதிகாரம் ஓரளவிற்கு அதிகமானது. உள்ளாட்சி அரசாங்கத்தின் அனுமதியோடுதான் தலைவர்களது நியமனங்கள் அனுமதிக்கப்பட்டன. உள்ளாட்சிஅரசாங்கங்கள் தலைவர்களை எப்பொழுதுமே நியமனம் செய்யவில்லை. உள்ளாட்சி வாரியங்கள்கூடுமானவரையில் தங்களது தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைக் கொடுப்பதில் தலைமை ஆளுநர் மன்றம் மகிழ்ச்சி தெரிவித்ததோடு, அது செயலாக்கத்தை உள்ளாட்சி அரசாங்கத்தின் விருப்ப அதிகாரத்திற்கு விட்டு விட்டது. மேலும் கொள்கைகளுக்கு உடனே செயலாக்கம் கொடுக்கும்படி உள்ளாட்சி அரசாங்கங்களைக் கேட்டுக் கொண்டது. உள்ளாட்சி வேலைகளைச் செய்வதற்குப் பொறியியலர் போன்றவர்களைக் கொடுத்து உதவவும் உயர் அரசாங்கம் கூறியது. அரசாங்கம் கிராம ஊராட்சிகள், வட்ட வாரியங்கள், மாவட்ட வாரியங்கள் ஆகிய அனைத்திற்கும் ஒரே மாதிரியான கொள்கையையும் கட்டுப்பாட்டையும் வைத்திருந்தது. ஊராட்சிகள், வட்ட வாரியங்கள், மாவட்ட வாரியங்கள் போன்றவை அமைப்பில், செயல்களில் வித்தியாசமாக இருந்த போதிலும் ஒரே மாதிரியான கட்டுப்பாடு அனைத்திற்கும் பொருத்தமானதாக அமையவில்லை. முழுவதும் மக்கள் பிரதிநிதிகளையே கொண்டு உள்ளாட்சி வாரியங்கள் 1930–ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பின்னரும் கூடத் தன்னிச்சையாகச் செயல்படுமா என்ற கேள்வி எழுந்தது. ஏனெனில் அரசாங்கம் அப்போது மிகுதியான கட்டுப்பாட்டு அதிகாரத்தைத் தன்னிடத்தே வைத்திருந்தது.

ரிப்பன் பிரபுவின் 1882–ஆம் ஆண்டுத் தீர்மானமானது, உள்ளாட்சி வளர்ச்சியின் ஓர் திருப்புமுனை என்பதை அறிவோம். இந்தத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு 1884 –ஆம் ஆண்டு உள்ளாட்சி வாரியங்களின் சட்டமியற்றப்பட்டது. இந்தச் சட்டமானது அரசாங்க அதிகாரிகளின் பலத்த எதிர்ப்புகளுக்கிடையே நிறைவேற்றப்பட்டது. எனவே இதனைச் செயல்படுத்த அரசாங்கம் அதிகக் கவனம் செலுத்தியது. உள்ளாட்சி வாரியங்களின் உறுப்பினர்களை நியமிப்பது தேர்ந்தெடுப்பது ஆகியன ஆளுநர் மன்றத்தின் விருப்ப அதிகாரத்திற்கு விடப்பட்டன. ஆகவே தேர்தல் முறையைப் புகுத்த வேண்டுமென்பது கட்டாயப்படுத்தப் படவில்லை. ரிப்பன் பிரபுவின் கொள்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன எனினும், அவற்றைச் செயல்படுத்தும் முடிவான அதிகாரம் மாநில அரசாங்கத்திடம் இருந்தது. மாநில அரசாங்கம் அதிகாரிகளின் ஒத்துழைப்போடு செயல்பட்டதால் உள்ளாட்சி அரசாங்கத்தின் நோக்கங்களை உண்மையாக உணர்ந்து செயல்படுத்தவில்லை. ஆனால் எப்போது, எங்கு தேர்தல் முறையை செயல்படுத்தலாமென்பதை முடிவு செய்யக்கூடிய அதிகாரம் ஆளுநர் மன்றத்திடம் இருந்தாலும் தேர்தல் முறையை விரும்புகின்ற உள்ளாட்சி வாரியங்களின் எண்ணத்தை ஆளுநர் மன்றம் எப்போதும் புறக்கணித்ததில்லை.

## மாவட்ட வாரியங்கள்

உள்ளாட்சி வாரியங்களின் 1884–ஆம் ஆண்டுச் சட்டத்தின் படி மூன்றுவிதப் படிநிலை உள்ளாட்சி அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. அவை மாவட்ட வாரியங்கள், வட்ட வாரியங்கள், ஒன்றிய ஊராட்சிகள் என்பனவாகும். மாவட்ட வாரியங்களுக்குக் குறைந்த பட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 24 ஆகும். இவர்கள் அலுவலக உறுப்பினர்களும், மக்கள் பிரதிநிதிகளும் ஆவர். ஆனால் அலுவலக உறுப்பினர்களின் எண்ணிக்கையானது மொத்த எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்கிற்கு மேலாக இருக்கக்கூடாது. இவர்களை ஆளுநர் மன்றம் நியமனம் செய்தது. வருவாய் அதிகாரி ஒவ்வொரு கோட்டத்திலும் பதவியின் அடிப்படையில் உறுப்பினராக இருந்தார். மற்ற உறுப்பினர்களில் நான்கில் ஒரு பங்கு உறுப்பினர்கள் நியமனமாகவும் தேர்தல் மூலமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.இவற்றில் வட்ட வாரியத்தின் உறுப்பினர்கள் சிலரும் உண்டு, வாரியத்தின் தலைவர் பொதுவாக அந்த மாவட்டத்தின் ஆட்சித்தலைவராகவே இருந்தார். ஆனால் தலைவரை மாவட்ட வாரியமும் தேர்ந்தெடுக்க வழிசெய்யப்பட்டு இருந்தது. இதன்படி மாவட்ட

வாரியம் ஆளுநர் மன்றத்தின் அனுமதியைப் பெற்றுத் தனது தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பின்னர் சட்டத் திருத்தத்தால் ஆளுநர் மன்றமே மாவட்ட வாரியத் தலைவரை நியமனம் செய்யும் அதிகாரத்தை பெற்றது. ஆனால் தலைவர் மாவட்ட வாரிய உறுப்பினர்களில் ஒருவராக இருக்கவேண்டும் என்பதும் வரையறுக்கப்பட்டது. அத்துடன் ஒவ்வொரு வாரியமும் ஒரு துணைத்தலைவரையும் கொண்டிருந்தது. அரசாங்க அனுமதியோடு மாவட்ட வாரியங்கள் தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும்படியாகவோ அல்லது அரசாங்கம் அத்தலைவரை நியமிக்கக் கூடியதாகவோ அமைந்தது.

## வட்ட வாரியங்கள்

வட்டவாரியங்கள் மாவட்ட வாரியத்தைப் போல் அமைக்கப்பட்டன. இவற்றில் குறைந்த பட்சஉறுப்பினர்களின் எண்ணிக்கை 12 ஆகும். இதில் அலுவலக உறுப்பினர்கள் மூன்றில் ஒரு பங்கும், மக்கள் பிரதிநிதிகள் மூன்றில் இரண்டு பங்கும் இருக்க வேண்டுமெனச் சட்டம் வரையறுத்தது. வட்ட வாரிய உறுப்பினர்கள் அரசாங்க நியமனம் மூலமாகவும் மக்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். வட்ட ஊராட்சியின் உறுப்பினர்களும், வரிசெலுத்துவோர்களும் வாக்காளர்கள், இவர்கள் வட்ட வாரிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர். எல்லா வருவாய்க்கோட்ட அதிகாரிகளும் பதவியின் அடிப்படையில் வட்டவாரியங்களில் உறுப்பினர்களாக இடம் பெற்றனர். ஆனால் வாரியத் தலைவரை நியமனம் செய்யவோ தேர்ந்தெடுக்கவோ எந்த வித அம்சமும் சட்டத்தில் இடம் பெறவில்லை. இவர்களை ஆளுநரே நியமித்தார். இதேமாதிரியாக உதவித்தலைவரையும் நியமனம் செய்யவும் தேர்ந்தெடுக்கவும் வழிசெய்யப்பட்டது. இவ்வாறாக வட்ட வாரியங்கள் அமைந்து இருந்தன.

## ஒன்றிய ஊராட்சிகள்

வட்ட வாரியங்களுக்கு அடுத்த படிநிலை ஒன்றிய ஊராட்சிகளாகும். இவற்றில் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் ஐந்தாக நிருணயிக்கப்பட்டது. கிராமத் தலைவர் பதவியின் அடிப்படையில் உறுப்பினரானார். மற்ற உறுப்பினர்களை ஆளுநர் மன்றம் நியமனம் செய்தது. சில உறுப்பினர்களை மக்கள் தேர்ந்தெடுத்தனர். ஒன்றிய ஊராட்சித் தலைவரை ஆளுநர் மன்றம் நியமித்தது. அரசாங்கத்தின் அனுமதியோடு சில ஊராட்சிகள் தங்களது தலைவரைத் தேர்ந்தெடுத்தன. சில உள்ளாட்சி அமைப்புக்களில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வசதி செய்யும் பொறுப்பு ஆளுநர் மன்றத்தின் விருப்ப அதிகாரத்தில் ஒன்றாக அமைந்தது என்பதை அறிவோம். ஆளுநர் மன்றமானது இந்த விருப்ப அதிகாரத்தைத் தாராளமாகப் பயன்படுத்தவில்லை; மிகவும் குறைந்த அளவில் தான் இந்த விருப்ப அதிகாரங்கள் பயன்படுத்தப்பட்டன. எனவே தேர்தல் முறை செயலாக்க ஆணைகளின் மூலம் புகுத்தப் பட்டது. உள்ளாட்சி அமைப்புக்களில் பாதிக்குக் குறையாத உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கச் செயலாக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. ஆனால் இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் வட்ட வாரிய உறுப்பினர்களாக இருந்ததால் எதிர்பார்த்த அளவு இம்முறை வெற்றிபெறவில்லை. ஏனெனில் வட்ட வாரிய உறுப்பினர்கள் ஏற்கனவே அரசாங்கத்தின் நியமன உறுப்பினர்களாவர். ஆகவே இது உண்மையான தேர்தலாக நடைமுறையில்இருக்கவில்லை. அடுத்ததாக வாரியங்களுக்கு உதவித்தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வசதிசெய்யும் அம்சமும் சட்டத்தில் அதிகமாக வலியுறுத்தப்படவில்லை. எனவே இந்திய அரசாங்கம் வாரியங்களின் உதவித்தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமெனப் பரிந்துரை செய்தது. இதற்குச் சட்ட மன்றத்திற்குள்ளும், வெளியிலுமாக ஏராளமான ஆதரவு கிடைத்தன. 1898 –1899–ஆம் ஆண்டில் ஆறு வட்டவாரியங்கள் உதவித்தலைவரைத் தேர்ந்தெடுத்தன. எனவே 1898–ஆம் ஆண்டில் சட்ட மன்ற உறுப்பினர்கள் தேர்தல் முறையைக் கொண்டுவரவேண்டுமென மிகுதியாக வலியுறுத்தினர். மேலும் 1870–71 ஆம் ஆண்டிலிருந்தே ஆங்கிலக் கல்விமுறை இந்தியாவில் பரவியதால் மக்களாட்சி பற்றிய மேலை நாட்டு எண்ணங்கள் மக்கள் மத்தியில் வேரூன்ற ஆரம்பித்து விட்டன. இதற்கிடையே நகராட்சிகளில்

தேர்தல் முறை புகுத்தப்பட்டு, செயல்பட ஆரம்பித்தது. எனவே கிராமப்புற மக்களும் தேர்தல் பற்றி விழிப்புடைந்தனர். ஊராட்சிகளுக்குத் தேர்தல் முறையைக் கொண்டுவர ஆர்வம் காட்டினர். உள்ளூர் தேர்தல்முறைகள், மேலை நாட்டுத் தேர்தல் முறையால் சிறிது சிறிதாக மறைய ஆரம்பித்தன. எனவே மேலை நாட்டுத் தேர்தல் முறை ஒன்றின் மூலம்தான் இந்திய மக்கள் நிருவாகத்தில் சீராக பங்கு பெற இயலும் என்ற முடிவிற்கு வந்தது அரசாங்கம். 1871 –ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கம் உள்ளாட்சியில் உறுப்பினர்களை நியமனம் செய்தாலும் போதுமான வெற்றி பெறவில்லை. ஏனெனில் திறமையானவர்கள் நிர்வாகத்தில் பங்கு பெற முன்வரவில்லை. மேலும் தகுதியில்லாதவர்களுக்கு வாக்குரிமை கொடுத்தது வெற்றிபெற இயலாமல் போனதற்கு மற்றுமொரு காரணமாகும். எனவே தகுதி அடிப்படையில் வாக்குரிமை நிருணயித்து, படிப்படியாக எல்லா மக்களும் வாக்குரிமை பெறவேண்டும் என்ற நிலைமக்களிடையே நிலவியது. மேலும் உள்ளாட்சி வாரியங்களில் மக்கள் பிரதிநிதிகளை ஆளுநர் மன்றம் தலைவர்களாக நியமிக்க விருப்ப அதிகாரம் பெற்றது. இது ஒரு முக்கியமான மாற்றமெனலாம்.

ரிப்பன் பிரபுவின் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்ட தேர்தல் முறையில் மாநில அரசாங்கங்கள் போதுமான கவனம் செலுத்தியதா? என்று ஆராய்ந்தால் நிச்சயமாக எதிர்மறையான பதில்தான் வரும். ஆயினும் 1909–ஆம் ஆண்டு அதிகாரப் பரவல் மீதான அரசுரிமை ஆணையமானது தேர்தல் முறையைப் பற்றி ஆராய்ந்து அறிக்கையை சமர்ப்பித்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் கிராம ஊராட்சி அமைக்கப்பட வேண்டுமென அது பரிந்துரை வழங்கியது. வட்ட வாரியங்கள் மற்றும் மாவட்ட வாரியங்கள் போன்றவற்றில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்கள் பெரும்பான்மையினராக இருக்க வேண்டுமெனவும் கூறியது. ஊராட்சிகளுக்கு உறுப்பினர்களை நியமனம் செய்யும் முறையை வன்மையாக அவ்வாணையம் கண்டித்தது. ஏனெனில் இவ்வாறு நியமனம் செய்யப்படுவதால், கிராம மக்கள் கிராம விவகாரங்களில் அக்கறையும், ஆர்வமும் செலுத்துவது தடுக்கப்படுவதாக உள்ளது என்று கருதியது. ஏனெனில் அரசாங்கத்தின் துணை அதிகாரிகள் நிருவாகத்தில் குறுக்கீடு செய்வது மக்களது ஆர்வத்தைக் குறைக்கிறது என்றும், அதிகாரிகள்தான் நியமனத்திற்குப் பொறுப்பானவர்களாக இருந்ததால், இவ்விதமாகக் குற்றம் சாட்டப்பட்டது. அந்தக் கிராமங்களின் கிராமத் தலைவர்கள் திறமையாக இருப்பார்களேயானால் ஊராட்சித் தலைவர்களாக நியமிக்கலாமென ஆணையம் பரிந்துரைத்தது. வட்ட, மாவட்ட வாரியங்கள் முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாக இருக்க வேண்டுமென்பதை ஆணையம் விரும்பவில்லை. ஏனெனில் உள்ளாட்சி வாரியங்களில் சிறுபான்மையினர்களான முஸ்லீம் போன்றவர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டியதிருப்பதாலும், ஒரு பிரிவினர் வாரியங்களில் ஆதிக்கம் செலுத்துவதைத் தவிர்க்கவும் ஆணையம் அவ்வாறு கருதியது. மேலும் அதிகாரிகளின் அனுபவங்கள் கொள்கை உருவாக்கலில் இடம் பெற்றால்தான் செம்மையாக உள்ளாட்சிகளை நிர்வகிக்க முடியும் என்ற கருத்தை அழுத்தம் திருத்தமாக ஆணையம் கொண்டிருந்தது. ஆகவே இந்நோக்கங்களை நிறைவேற்ற அரசாங்கம் உறுப்பினர்களை நியமனம் செய்யும் அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டுமெனக் கூறியது. மேலும் மிண்டோ–மார்லி சீர்திருத்தங்கள் பற்றி அச்சமயத்தில் விவாதம் நடைபெற்றுக் கொண்டு வந்த காரணத்தால், முஸ்லீம்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்ற மிண்டோ–மார்லி கருத்தானது ஆணையத்திலும் ஓரளவு செல்வாக்குப் பெறலாயிற்று.

மாவட்ட வாரியத்தைப் பொறுத்த அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தொடர்ந்து வாரியத்தின் தலைவராக இருக்கவேண்டுமென ஆணையம் கருத்துத் தெரிவித்தது. இதே மாதிரியாக வட்ட வாரியங்களில் கோட்ட அதிகாரிகள் தலைவராக நீடிக்கும்படிக் கூறியது. இக்கருத்தானது ரிப்பன் பிரபுவின் தீர்மானத்திற்கு நேர் எதிர்மாறானதாகும். மக்கள் அனைவரும் வாரியத்தின் தலைவர் தங்களில் ஒருவராக இருக்கவேண்டுமென்ற கருத்து நிலவி வந்தசமயத்தில், இங்ஙனம் ஆணையம் கருத்துத் தெரிவித்தது இக்கட்டான நிலையாகும். மாவட்ட ஆட்சித் தலைவரை, மாவட்ட வாரியத்தின் தலைவர் பதவியிலிருந்து

எடுத்துவிட்டால், மாவட்ட ஆட்சித் தலைவரின் பணியானது வெறுமனே வரிவசூலிக்கக் கூடியதாகி விடுமென்றும், மக்களின் தொடர்பு குறையுமெனவும் ஆணையம் அஞ்சியது. மாவட்ட ஆட்சித் தலைவரின் விரிவான அறிவு, அனுபவம் வாரியத்தின் நிருவாகத்தில் பயன்படுத்தப்படாமல் போய்விடலாமென எண்ணியது. தவிர, மக்கள் பிரதிநிதிகளிடம் முழுப் பொறுப்பையும் வழங்க ஆணையம் விரும்பவில்லை.

அரசுரிமை ஆணையத்தின் பரிந்துரைகள் ரிப்பன் பிரபுவின் தீர்மானத்தைப் போல் சிறப்பானவையாகக் கருத முடியாது. இப்பரிந்துரைகள் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு ஆறு ஆண்டுகள் ஆனது. பின்னர் 1915–ஆம் ஆண்டு அரசாங்கம் ஒரு தீர்மானத்தை வெளியிட்டது. அத்தீர்மானம் உள்ளாட்சி வளர்ச்சி பற்றி ஊக்குவிக்காததால் மக்களிடம் அதிருப்தி ஏற்பட்டது. இப்பரிந்துரைகளின் முடிவெடுக்கும் அதிகாரத்தை அந்தந்த மாநிலங்களிடம் கொடுத்தது மத்திய அரசாங்கம். ஆனால் சென்னை அரசாங்கத்தில் மட்டும், உள்ளாட்சி சிறப்பானதாக இருந்ததால் இத் தீர்மானம் குறித்து அதிகமான அக்கறை காட்டவில்லை. ஏனெனில் ஏற்கனவே மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சியில் அதிக இடம் பெற்றிருந்தனர். மேலும் உள்ளாட்சியின் அன்றாடப் பணி குறித்துக் கூட உறுப்பினர்கள் ஆளுநர் மன்றத்தில் கேள்வி கேட்டனர். ஆளுநரின் செயலாக்க மன்றத்தில் ஓர் இந்தியர் இடம் பெற்றிருந்ததால் உள்ளாட்சித் துறைக்குப் பொறுப்பானவராகத் திகழ்ந்தார்.

1912–1913–ஆம் ஆண்டிலிருந்து ஒன்றிய வாரியங்கள் சில தங்களது உறுப்பினர்களையும், தலைவர்களையும் தேர்ந்தெடுத்தன. பிறகு வட்ட வாரியங்களில் தேர்தல் முறை கொண்டுவரப்பட்டது. இதன் விளைவாக 1917–18–ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையானது மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்காகப் பெருகியது. பின்னர் வட்ட வாரியத் தலைவரைத் தேர்ந்தெடுக்க நான்கு வட்ட வாரியங்களுக்கு 1911–ஆம் ஆண்டு அனுமதி வழங்கியது. சில வட்ட வாரியங்களில் தலைவர்கள் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதன் முதலாக 1912–ஆம் ஆண்டு இம்முறை நடைமுறைக்கு வந்தது. 1919–20 ஆம் ஆண்டில் மொத்தமுள்ள 98 வட்ட வாரியங்களில் 64வட்ட வாரியத் தலைவர்கள் மக்கள் பிரதிநிதி தலைவர்களாவர். இதில் 13 மக்கள் பிரதிநிதிகளைத் தலைவர்களாக அவர்களே தேர்ந்தெடுத்தனர். மற்ற மக்கள் பிரதிநிதிகளை அரசாங்கம் தலைவர்களாக நியமித்தது. இதே மாதிரியாக வாரியங்களின் உதவித் தலைவர்களும் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து நியமனம் செய்யப்பட்டனர். இவ்வாறாக உள்ளாட்சி வாரியங்களில் மக்கள் பிரதிநிதிகளின் ஆதிக்கம் படிப்படியாகப் பெருகியது.

1917–ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 17–ஆம் தேதி உள்ளாட்சி குறித்து அரசாங்கம் ஒரு பிரகடனத்தை (declaration) வெளியிட்டது. இப்பிரகடனத்தைத் தொடர்ந்து 1918–ஆம் ஆண்டுத் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியது. உள்ளாட்சி அரசாங்க வளர்ச்சியில் ஒரு முக்கியமான இடத்தை இந்தப் பிரகடனமும் தீர்மானமும் பெற்றுள்ளன. இதன் முக்கிய அம்சங்கள்:–

1. உள்ளாட்சி வாரியங்களில் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கையானது பெரும்பான்மையாக இருக்க வேண்டும். அலுவலக உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்கில் ஒரு பங்கிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2. சிறுபான்மையினர்களை நியமிப்பதற்கு மட்டுமே நியமன முறைமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

3. அதிகாரிகளில் சிலர் உறுப்பினர்களாக நியமிக்கப்படலாம். ஆனால் அவர்களுக்கு வாக்குரிமை கொடுக்கக்கூடாது.

4. வரி செலுத்துவோர்களுக்குத் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வாக்குரிமை அளிக்க வேண்டும்.

5. வாரியத் தலைவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும். இவர்கள் தேர்ந்தெடுக்கப்படக் கூடியவர்களாக இருத்தல் விரும்பத்தக்கது.

6. செயலாக்கப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு வாரியத் தலைவர்களிடம் இருக்கக் கூடாது. செயலாக்கப் பணிகளைச் செய்வதற்கெனத் தனி அதிகாரிகளை நியமிக்க வேண்டும்.

உள்ளாட்சி வாரியங்களின் சட்டம் இதைத் தொடர்ந்து அரசாங்கத்தால் இயற்றப்பட்டது. இதில் உள்ள சிறப்பு அம்சங்கள் வருமாறு:–

1. உள்ளாட்சி வாரியங்களில் அலுவலக உறுப்பினர்களின் பிரதிநிதித்துவம் நீக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித்தலைவரும், கோட்ட அதிகாரிகளும் பதவியின் அடிப்படையில் உறுப்பினர்களாக விளங்கினர். கிராமத் தலைவர்களைத் தவிர பிற அரசாங்க அதிகாரிகள் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்படவில்லை. இவ்வாறு முழுமையாக மக்களின் பிரதிநிதித்துவம் ஏற்பட இச்சட்டம் வழியமைத்தது.

2. உள்ளாட்சி வாரியத்தில் நான்கில் மூன்று பங்கிற்குக் குறையாத உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்க இச்சட்டம் வழிவகுத்தது. ஆனால் இந்த விகிதாச்சார முறையை ஏற்படுத்தும் அதிகாரம் மாநில அரசாங்கங்களிடம் இல்லாமல் அந்தந்த வாரியங்கள் முடிவு செய்யும்படியாகச் செய்தது. சிறுபான்மையோர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்குவதற்கு வசதியாக, தேர்ந்தெடுக்கும் முறையை முழுமையாக ஆதரிக்கவில்லை. இதனால் சில இடங்களை சிறுபான்மையோர்களுக்கு ஒதுக்கி அவர்களை மட்டுமே தேர்ந்தெடுக்க வசதி செய்தனர். இருப்பினும் மாநில அரசாங்கமானது மாவட்ட வாரியங்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரத்தைத் தன்னிடத்தே தக்கவைத்துக் கொண்டது. மேலும் புதிய அரசியலமைப்பின்படி (Transferred Subject) மாற்றப்பட்ட வரிசையின் கீழ் மாநிலங்களில் உள்ளாட்சி அமைந்ததால், அமைச்சரின் கட்டுப்பாட்டிற்குள் நின்று செயல்படக் கூடியதாக உள்ளாட்சி மாறியது. எனவே உறுப்பினர்களை அமைச்சர்களே நியமித்தனரே தவிர, அதிகாரிகள் நியமிக்கவில்லை. இச்சட்டம் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை ஒன்றிய ஊராட்சிகளுக்கு வழங்கியது. வட்ட வாரியங்களைப் பொறுத்த அளவில் பொதுவாகத் தேர்தல் மூலம் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் சில தவிர்க்க முடியாத காரணங்களில் மட்டும் மாநில அரசாங்கம் தலைவர்களை நியமிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது. மாவட்ட வாரியங்களின் தலைவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கவேண்டுமென வரையறுக்கப்பட்டது. வட்ட வாரியம் மற்றும் மாவட்ட வாரியத்தின் உதவித் தலைவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக இருக்க வேண்டுமெனவும் வரையறுக்கப்பட்டது. எனவே 1920–ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி உள்ளாட்சி வாரியங்களில் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதில் உண்மையான முயற்சியை எடுத்தது எனலாம். பின்னர் இதே ஆண்டில் நிறைவேற்றப்பட்ட கிராம ஊராட்சிகளின் சட்டம் ஊராட்சி உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட வழி செய்தது. வாக்குரிமையைப் பலரும் பெறும் படியாக வாக்குரிமைத் தகுதியைத் தளர்த்திச் சட்டம் இயற்றப்பட்டது. நிலவரி, நிலவாடகை ரூபாய் பத்து ஆண்டிற்குக் கட்டுகின்றவர்கள். வருமானவரி, தொழில் வரி, கம்பெனிகள் வரி போன்ற வரிகள் செலுத்துகின்ற அனைவரும் வட்ட வாரியத்தின் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்படும் தகுதி பெற்றனர். ஒன்றிய ஊராட்சிகளில் ஆண்டிற்கு மூன்று ரூபாய் வாடகை செலுத்துகின்றவர்களும் வாக்காளர்களாகப் பதிவு செய்யத் தகுதி பெற்றனர். கிராம ஊராட்சிகளில், 25 வயதிற்கு மேற்பட்டவர்கள் அனைவரும் வாக்காளர்களானார்கள். மாவட்ட வாரியத்தைத் தவிர்த்து மற்ற வாரியங்கள் எல்லாம், உறுப்பினர்களை நேரடியாகத் தேர்ந்தெடுத்தன. மாவட்ட வாரியத்திற்கு மட்டும் உறுப்பினர்கள் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒவ்வொரு வட்ட வாரியமும் ஒரு குறிப்பிட்ட அளவு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, மாவட்ட வாரியத்திற்கு அனுப்பி வைத்தது. மாவட்ட வாரியங்களின் பணிகளும் வட்ட வாரியங்களின் பணிகளும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டாலும், தேர்தல் முறையானது முறைமுகமாகவே இருந்தது. ஏனெனில் சில பொதுப் பணிகளைச் செய்வதற்கு, மாவட்ட, வட்ட வாரியங்களின் ஒருங்கிணைப்பு அவசியமானதாக இருந்தது.

மாநிலங்களில் இரட்டையாட்சி புகுத்தப்பட்டதால் உள்ளாட்சி வாரியங்களின் சட்டமும் 1920–ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. மாற்றப்பட்ட வரிசையில் உள்ள விவகாரங்களுக்கு அமைச்சர்கள் பொறுப்பேற்றனர். சட்ட மன்றத்தில் பெரும்பான்மையுள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். இவ்வாறாக அரசியலானது உள்ளாட்சி அமைப்பில் கலந்தது. அரசியல் இதுவரையிலும் உள்ளாட்சி விவகாரங்களில் பங்கேற்கவில்லை. முக்கியமாக, பிரச்சனையானது அதிகாரிகள் அல்லது அலுவலக உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் என்பன போன்றுதான் இருந்தது, இச்சீர்திருத்தத்தின் விளைவாக, ஆளும்கட்சியினர், எதிர்க்கட்சியினர் என்ற பாகுபாடு ஏற்படலாயிற்று.

பின்னர் உள்ளாட்சி வாரியங்களுக்கும் மாநில சட்டமன்ற அரசியலுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. மாவட்ட வாரியத் தலைவர் மாவட்டத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்றவராக இருந்த காரணத்தால், சட்டமன்றத்திற்கு எளிதாகத் தேர்ந்தெடுக்கப்படலாயினர். ஏராளமான மாவட்ட வாரியத் தலைவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனவே இவர்களே யாரை அமைச்சராக நியமிக்கலாம், எவ்வளவு காலம் பதவி வகிக்க வேண்டும் என்பனவற்றையெல்லாம் முடிவு செய்ய ஆரம்பித்தனர். எனவே அமைச்சராக வேண்டுமென விரும்புகின்றவர்கள் மாவட்ட வாரியத் தலைவர்களின் ஆதரவைத் தேடலாயினர். மற்றும் மாநில அரசாங்கமானது மாவட்ட வாரியங்களுக்கு உறுப்பினர்கள், தலைவர்கள் போன்ற நியமனங்கள் செய்யப்படுகின்றபொழுது, மேற்படி ஆதரவும் ஓரளவு பயன்படுத்தப்பட்டது. இவற்றின் காரணமாக அரசாங்கத்திற்கும் மாவட்ட வாரியங்களுக்குமிடையே ஒரு பரஸ்பர ஒற்றுமை ஏற்பட்டது. இரண்டும் ஒன்றையொன்று சார்ந்து செல்லக் கூடியதாக இருப்பதால், ஒவ்வொன்றும் தங்களால் இயன்ற அளவு நன்மைகளை அல்லது ஆதாயங்களைப் பெறுவதில் தீவிர ஆர்வம் எடுத்துக் கொண்டன. ஆளுங்கட்சியானது அதிகாரத்தைத் தவறான வழியில் பயன்படுத்த இம்முறை வழிவகுத்ததால், எதிர்க்கட்சிகள் இந்த முறையை எதிர்த்தன.

இரட்டையாட்சி மாநிலங்களில் கொண்டுவரப்பட்ட காரணத்தால், உள்ளாட்சி வாரியங்களில் அரசியல் கட்சிகள் செல்வாக்குப் பெற்றன. மேலும் நியமனம் செய்யப்படுகின்ற சிறுபான்மையோர்களான முஸ்லீம்கள், இந்தியக் கிறிஸ்தவர்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் நியமனம் செய்கின்ற முறையை ஆதரித்தனர். ஏனெனில் இவர்களது பிரதிநிதித்துவம் தேர்தல் மூலமாகப் பெறுவது என்றால் எளிதான செயலல்ல. ஆகவே இதற்கு அவர்கள் தங்களது ஆதரவைத் தந்தனர். இருப்பினும் நியமனமுறை செயல்படுவதைத் தீவிரமாக எதிர்க்கவும் செய்தனர். மேலும் மக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சி அதிகமாக இருந்ததால் நியமன முறையை எதிர்த்தனர். தேர்தல்களில் கடுமையான போட்டி ஏற்பட்டதால் உள்ளாட்சியில் வீணான மோதல்கள், பொறாமை போன்றவை அதிகரித்தன. மேலும் வட்ட வாரிய உறுப்பினர்களின் நியமனங்களுக்கு மாவட்ட வாரிய உறுப்பினர்கள் பரிந்துரை செய்தனர். இப் பரிந்துரையை ஏற்றுக்கொள்ளவில்லையேல், மோதல் ஏற்படுமென அஞ்சி, அவற்றை ஏற்றுக் கொண்டனர். மொத்தத்தில் அதிகாரத் துஷ்பிரயோகம் மலிந்தது.

மேற்கூறிய சூழ்நிலை நிலவிக் கொண்டு வந்த காரணத்தால் நியமன முறை 1930–ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி அகற்றப்பட்டது. சிறுபான்மையோர்களின் நலன், இடங்கள் ஒதுக்கீடு ஆகியன செய்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இருப்பினும் மாவட்ட வாரியங்கள் தங்களது தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் பெற்றிருந்தன. 1922–23–ஆம் ஆண்டுகளில் இரண்டு வாரியங்கள் மட்டுமே தலைவரைத் தேர்ந்தெடுத்தன. இது 1925–26–இல் 15 ஆக உயர்ந்தது. 1928–29–இல் மொத்த மாவட்ட வாரியங்கள் 21 ஆகும். 1928–29–இல் மொத்தமுள்ள 129 வட்ட வாரியங்களில் 122 வாரியங்கள் தங்களது தலைவர்களைத் தேர்ந்தெடுத்தன. இவ்வாறு உள்ளாட்சி வாரியங்கள் வளர்ந்து வந்துள்ளன. இவை 1959, 1960ஆம் ஆண்டு வரை, அதாவது பல்வந்தராய் குழுவின் பரிந்துரைகள் ஏற்கப்படும் வரை தமிழகத்தில் செயல்பட்டு வந்துள்ளன.

## மாதிரி வினா

உள்ளாட்சி வாரியங்களின் அமைப்பு மற்றும் பணிகளை எழுது.

# பாடம் – 4

## தமிழக ஊராட்சிகளின் வளர்ச்சி

தமிழகத்தில் ஊராட்சி முறை அரசாங்கம் பண்டைக் காலம் தொட்டே இருந்து வந்துள்ளது. உத்திர மேரூர் கல்வெட்டுக்கள் மூலமாக சோழர்காலத்தில் சிறப்பாக இயக்கி வந்துள்ள ஊராட்சி முறை நமக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. ஊராட்சிகள், குழு ஆகியன செயல்பட்டுள்ளதை தெளிவாக விளக்கியுள்ளது. இன்றைய நாளில் செயல்பட்டு வரும் நகரிலுள்ள மன்றங்கள் என்பவை பண்டைக்கால ஊராட்சி முறையின் தொடர்ச்சிதான் என்பதை உணரவேண்டும். கிராமத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவும் தங்களது பிரிதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க குடவோலை முறை செயல்பட்டு வந்ததுதான் ஊராட்சி முறையின் தேர்தல் முறையாகும். இன்றைய நாளில் தேர்வு செய்யும் தேர்தல் முறையைக் காட்டிலும் மிகவும் சிறந்த தேர்தல் முறையென அறிஞர்கள் பாராட்டுகின்றனர்.

குடவோலை முறையில் தேர்தல் முறை சிறப்பாக விவரிக்கப்பட்டுள்ளது. தேர்தல்கள் நடத்தும் முறை, போட்டியிடும் வேட்பாளர்களின் தகுதிகள், மற்றும் யார்? யார்? போட்டியிடத் தகுதியில்லாதவர்கள் என்ற விவரம், கிராமப் பதிவேடுகள் எவை? எவை? எவ்வாறு? பராமரிக்கப்பட வேண்டுமென்ற முழுவிவரமும் கல்வெட்டுக்களிலிருந்து நாம் அறிய முடிகின்றது. இவற்றை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஊராட்சி முறை தமிழகத்தில் பல்லாண்டுகளாகச் செயல்பட்டு வந்து, சிறப்படைந்து உள்ளது என்பதை நாம் அறியலாம். எனவே தமிழக கலாச்சாரத்தின் ஓர் அங்கமாகவே உள்ளாட்சி நிர்வாக முறையை எடுத்துக் கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் வேற்று நாட்டினர்கள் ஆட்சியைப் பிடித்து ஆள ஆரம்பித்ததால், உள்ளாட்சி மீது முழுக் கவனம் செலுத்தவில்லை. எனவே உள்ளாட்சி அரசாங்கம் மங்க ஆரம்பித்தது, செயல்பட முடியாமலும் போய் விட்டது. நிதி ஒதுக்கீடு மற்றும் அந்நிறுவனங்களைக் காக்க வேண்டுமென்ற எண்ணம் வேற்று நாட்டினரிடம் காணப்படவில்லை.

ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் உள்ளாட்சி அரசாங்கமென்பது மாவட்ட வாரியங்களின் மூலமாக ஆரம்பமாயிற்று. (முன்னர் பாடத்தில் விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது).

1920 ஆம் ஆண்டு சென்னை கிராம ஊராட்சிகள் சட்டம் நிறைவேற்றப்பட்டது. சென்னை வாரியங்கள் சட்டம் என்ற பெயர் நீக்கப்பட்டு, 1950 முதல் ஊராட்சிகளுக்கென சட்டம் இயற்றும் முறை தொடங்கப்பட்டது.

இந்திய சுதந்திரத்திற்குப் பின்னர் தேசிய வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து, திட்ட ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. கிராம ஊராட்சிகள் கிராமங்கள் திட்டம் மற்றும் வளர்ச்சியைக் கண்காணிக்கும் அமைப்புக்களாகக் கருதியது திட்ட ஆணையம். எனவே கிராமங்கள் மூலம் தேசம் முழுவதும் ஒட்டு மொத்த வளர்ச்சித் திட்டத்தைத் திட்ட ஆணையம் உருவாக்கியது. எனவே ஊராட்சிகள் முக்கியத்துவம் பெற்றன. ஊராட்சிகளை செம்மைப்படுத்த பல ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. தேசிய விரிவாக்கப் பணி, ஊராட்சி மேம்பாட்டுத் திட்டங்கள் என பல விதமான திட்டங்கள் உருவாக்கப்பட்டன. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு பின்னர், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல திட்டங்கள் சேர்க்கப்பட்டன. திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து நேரத்திற்கு நேரம் விவாதிக்கப்பட்டு, குறைகள் நீக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன. சென்னையில் உள்ளாட்சி அரசாங்கம் குறித்து வெள்ளைத்தாள் வெளியிடப்பட்டது. இதனை சட்டமன்றம் தீர்க்கமாக விவாதித்து, சென்னை உள்ளாட்சிகள் சட்டம் 1958 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இதனை இது வரை செயல்பட்டு வந்து வாரிய முறை நீக்கப்பட்டு, பல்வேந்தரராய் பரிந்துரையின் மூன்றடுக்கு முறை தமிழகத்தின் தன்மைக்கேற்ப கொண்டுவரப்பட்டது. இது 1994 ஆம் ஆண்டு மாற்றப்பட்டு புதிய முறை செயல்பட்டு வருகிறது. புதிய ஊராட்சிகளின் சட்டம் 73 வது அரசியலமைப்புத் திருத்தத்தின் முக்கியமான அம்சமாகும்.

## 73வது அரசியலமைப்பு சட்டம் 1992

ஏப்ரல் 20, 1993த்திருத்தம் 73வது அரசியலமைப்பு பாதிக்கும் குறையாத மாநில அரசுகளின் சட்டமன்ற பேரவைகளின் ஒப்புதலுடன், 1993ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் நாள் குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்குப்பின்னர் செயலாக்கத்திற்கு வந்துள்ளது.

### ஊராட்சி

'கிராம சபை' என்பது, கிராம ஊராட்சிப் பகுதியில் சேர்ந்துள்ள கிராமங்களில், பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் அனைவரையும் கொண்ட கிராம அளவிலான அமைப்பாகும். மாநில அரசின் சட்டப் பேரவையினால் வகுத்துரைக்கப்படும் சட்டத்திற்கிணங்க கிராம அளவில் அதிகாரங்களையும், பொறுப்புகளையும் கிராம சபை ஆற்றி வரும்.

ஊராட்சிகளை அமைத்தல்

(1) இப்பிரிவில் வகுத்துரைக்கப்படும் வகைமுறைகளுக்கிணங்க, ஒவ்வொரு மாநில அரசும் கிராம அளவிலும், இடைப்பட்ட நிலையிலும், மாவட்ட அளவிலும் ஊராட்சி அமைப்பை ஏற்படுத்தும்.

(2) உட்பிரிவு (1) ல் என்ன சொல்லப்பட்டிருந்தாலும், ஒரு மாநிலத்தின் மக்கள் தொகை இருபது லட்சங்களுக்கும் குறைவாக இருக்குமானால், இடைப்பட்ட நிலையில் உள்ள ஊராட்சி அமைப்பை ஏற்படுத்தாமல் இருக்கலாம்.

3. (2) ஊராட்சி அமைப்பின் அனைத்து வார்டுகளிலிருந்தும் உறுப்பினர்களை நேரடி தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

4. 243–டி இட ஒதுக்கீடு

(1) பதவியிடங்களில் பின்வருபவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

(எ) தாழ்த்தப்பட்டோர்

(பி) பழங்குடியினர்

ஒவ்வொரு ஊராட்சிலும், பட்டியல் சாதியினருக்கும், பழங்குடியினருக்கும், ஒதுக்கப்படும் இட ஒதுக்கீடு, மேற்படி வகுப்பினரின் மக்கள் தொகை, அந்த ஊராட்சி அமைப்பின் மொத்த மக்கள் தொகையில் எந்த விகிதாச்சார அளவு உள்ளதோ அந்த விகிதாச்சார அளவில் ஒதுக்கீடு செய்யப்படவேண்டும். மேலும் இடஒதுக்கீட்டை சுழற்சி முறையில் ஒவ்வொரு பகுதிக்கும் மாற்றி செய்யப்பட வேண்டும். ஒதுக்கீடு செய்யப்படும் இடங்களில், மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பெண்களுக்கு ஒதுக்கப்படும் இட ஒதுக்கீட்டையும் சேர்த்து ஒவ்வொரு ஊராட்சியிலும், நேரடித் தேர்தல் மூலம் பூர்த்தி செய்யப்படும் மொத்த பதவியிடங்களில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும். கிராம அளவில் மற்றும் இதர அளவில் உள்ள ஊராட்சிகளின் தலைவர், பதவியிடங்களில் தாழ்த்ததப்பட்டோருக்கும் பழங்குடியினருக்கும், பெண்களுக்கும், மாநில சட்டப் பேரவைகளினால் இயற்றப்படும் சட்டத்தில் கூறப்பட்டுள்ள வகை முறைகளுக்கு ஏற்ப ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஊராட்சியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். ஊராட்சி அமைப்பு கலைக்கப்பட்ட நாளிலிருந்து ஆறுமாத காலம் முடிவடைவதற்குள் தேர்தல் நடத்தி முடிக்கப்பட வேண்டும்.

## பஞ்சாயத்தின் அதிகாரங்களும் பொறுப்புகளும்

அரசியலமைப்பு சட்டத்தில் கூறப்பட்டுள்ள வகைமுறைகளை மீறாமல், ஒவ்வொரு மாநிலமும், ஊராட்சி அமைப்புகள் சுய அரசுகளாக விளங்குவதற்கு என்னென்ன பொறுப்புகளையும், அதிகாரங்களையும் வழங்க வேண்டுமோ, அவற்றை வழங்குவதற்கும், மாநில சட்ட பேரவையின் மூலம் சட்டம் இயற்றலாம். இவ்வாறு இயற்றப்படும் சட்டத்தில், கூறப்படும் நிபந்தனைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு,

ஒவ்வொரு நிலையில் உள்ள ஊராட்சி அமைப்பும் ஆற்ற வேண்டிய கடமைகளையும், பொறுப்புகளையும், அதிகாரங்களையும் வரையறுத்து வழங்குவதானது.பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதியை மேம்படுத்த திட்டம் தயாரிப்பது பதினொராவது அட்டவணையில் ஊராட்சி அமைப்புகளுக்கு பிரித்து வழங்க வேண்டிய பொருள்கள் உள்ளடங்கலாக பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூக நீதியை உறுதிப்படுத்தும் வகையில் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்புகள் வழங்குவது.

## நிதி ஆணையத்தை அமைத்தல் மற்றும் நிதியிருப்பை ஆய்வு செய்தல்

1992 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (73வது திருத்தச்) சட்டம் நடைமுறைக்கு வந்ததலிருந்து கூடிய அளவில் உடனடியாகவோ அல்லது ஒரு ஆண்டு முடிவடைவதற்குள்ளோ அதற்கு பின்பு ஒவ்வொரு ஐந்து ஆண்டுகள் முடிவடைவதற்குள்ளும் ஒவ்வொரு மாநில ஆளுநரும் நிதி ஆணையத்தை அமைக்க வேண்டும். இந்நிதி ஆணையம் ஊராட்சிகளின் நிதி நிலையை விரிவாக ஆய்வு செய்து, கீழ்க்கண்ட பொருள்களின் மீதான பரிந்துரைகளை ஆளுநருக்கு சமர்ப்பிக்கும்.

(எ) ஆய்வு செய்யும் பொருள்களாவன:

(i) மாநில அரசு விதிக்கும் வரிகள், கட்டணங்கள், தீர்வைகள், மற்றும் சுங்கம் ஆகியவற்றின் வருவாயிலிருந்து மாநில அரசுக்கும், ஊராட்சிகளுக்கும் பிரித்து கொடுக்கப்பட வேண்டிய அளவுகள் மற்றும் முறைகள் பற்றியும் அந்த வருமானத்தில் ஒவ்வொரு நிலை ஊராட்சி அமைப்பிற்கும் எந்த அளவு வழங்க வேண்டும் என்பதை பரிந்துரைத்தல். ஊராட்சிகளுக்கு நேரிடையாக ஒதுக்கப்படவேண்டிய வரிகள், கட்டணங்கள், தீர்வைகள் மற்றும் சுங்கம் ஆகியவற்றை முடிவு செய்தல். மாநில அரசின் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு பிரித்து வழங்கவேண்டிய மானிய உதவிகள். ஊராட்சிகளின் நிதி ஆதாரத்தை பெருக்குவதற்கான வழிமுறைகளை கூறுதல். அவ்வப்போது ஆளுநர் அவர்களால் கேட்டுக்கொண்டதிற்கிணங்க ஊராட்சிகளின் நிதி நிலையை அதிகப்படுத்துவதற்கான வழிமுறைகளை பரிந்துரை செய்தல். குழுவில் அமைப்பு பற்றியும், குழுவின் உறுப்பினர்களாக இருப்பதற்கு தேவையான தகுதிகள் பற்றியும், அவர்கள், எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பது பற்றியும் மாநில சட்டப் பேரவை சட்டம் இயற்றலாம். சட்டத்தில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டு குழுவின் செயல்முறைகளையும், அதிகாரங்களையும் மாநில நிதிக்குழு முடிவு செய்யலாம். மாநில நிதிக்குழு அளித்த பரிந்துரை அறிக்கைகளையும் அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரங்களையும், மாநில ஆளுநர் சட்டப் பேரவையில் வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மாநில சட்ட பேரவை, ஊராட்சிகள் கணக்குகள் பராமரித்தல் பற்றியும் கணக்குகளின் தணிக்கை பற்றியும் சட்டம் இயற்றலாம்.

## ஊராட்சிகளுக்கான தேர்தல்

(1) ஊராட்சிகளின் வாக்காளர் பட்டியல் தயாரிப்பதை மேற்பார்வையிடுதல், ஆணைகள் வழங்குதல், கட்டுப்பாடு செய்தல் மற்றும் ஊராட்சிகளின் தேர்தலை நடத்தும் அதிகாரமும், மாநிலத் தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைக்கப்படும். மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கான மாநிலத் தேர்தல் ஆணையரை, ஆளுநர் நியமிப்பார். மாநில சட்டப் பேரவையினால் நிறைவேற்றப்படும் சட்டத்திற்கு, உட்பட்டு, மாநிலத் தேர்தல் ஆணையரின் பணி விதிகள், பதவிக்காலம் ஆகியவை குறித்து ஆளுநர் விதிகளை நிர்ணயிக்கலாம். ஆனால் மாநிலத் தேர்தல் ஆணையரை அவருடைய பதவியிலிருந்து நீக்க முடியாது. பதவியிலிருந்து நீக்குவதாக இருந்தால், உயர் நீதிமன்ற நீதிபதியை நீக்கும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மேலும், மாநிலத் தேர்தல் ஆணையர், நியமனத்திற்கு பின்னர் அவருடைய பணிவிதிகள் சம்பந்தமான நிபந்தனைகளை அவரை பாதிக்கக்கூடிய வகையில் மாற்றியமைக்க முடியாது. தேவைப்படும் பொழுது மாநில தேர்தல் ஆணையத்திற்கு பணிகளை நிறைவேற்ற தேவையான பணியாளர்களை கிடைக்கும்படி மாநில ஆளுநர் ஆவன செய்ய வேண்டும். ஊராட்சிகளின் தேர்தல் குறித்தோ அல்லது அது சம்பந்தமான அனைத்து நடைமுறைகள் குறித்தோ, இவ்வரசியலமைப்பு சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு மாநில சட்டப் பேரவையினால் சட்டம் இயற்றலாம். தேர்தல் விவகாரங்களில் நீதிமன்றங்கள் தலையிடத்தடை செய்யப்பட்டுள்ளது.

இவ்வரசியலமைப்புச் சட்டத்தில் என்ன சொல்லியிருப்பினும் வார்டுகளின் வரையறை குறித்தோ அல்லது அது போன்ற வார்டுகளுக்கு ஒதுக்கப்படுகின்ற பகுதியில் குறித்தோ, ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்கின்ற எந்த ஒரு சட்டத்தின் செல்லுபடியாகும் சட்டம் குறித்து எந்த ஒரு நீதிமன்றத்திலும் கேள்வி கேட்க முடியாது. ஒரு மாநில சட்டமன்றத்தின் மூலம் இயற்றப்பட்ட எந்த ஒரு சட்டத்தின் கீழோ அல்லது அதன் மூலம் வழங்கப்பட்டுள்ள வரைமுறையின்படியே அதிகார அமைப்பிற்கும் தேர்தல் மனுவை அளிப்பது மூலமாக அன்றி எந்த ஒரு ஊராட்சிற்கான தேர்தல் குறித்தும் கேள்வி எழுப்ப முடியாது. மாநிலத்தின் நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் மாநிலத்தில் பஞ்சாயத்துகளின் நிதி ஆதாரங்களைப் பெருக்கவும் மாநிலத்தின் தொகுப்பு நிதியைப் பெறத் தேவையான செயல்முறைகள்.

புதிதாக பதினொன்றாவது அட்டவணை சேர்க்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பு சட்டத்தில் பத்தாவது அட்டவணைக்கு அடுத்து பின்வரும் பதினொன்றாவது அட்டவணையில் அடங்கியுள்ள செயல்களாவன.

1. வேளாண்மை சார்ந்த விரிவாக்கம் உள்ளடங்கிய வேளாண்மை
2. நில மேம்பாடு, நிலச்சீர்திருத்தத்தை கொண்டுவருதல், நில ஒருங்கிணைப்பு மற்றும் மண் வளம் காத்தல்
3. சிறு பாசனம், நீர் மேலாண்மை மற்றும் நீர்ப்பிடிப்பு மேம்பாடு
4. கால்நடை பராமரிப்பு, பால் பண்ணை மற்றும் கோழிப் பண்ணை
5. மீன் வளம்
6. சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள்
7. சிறிய காடுகளின் உற்பத்திப் பொருள்கள்
8. உணவைப் பதப்படுத்தும் தொழில், உள்ளடங்கலான சிறு தொழில்கள்
9. கதர் கிராம மற்றும் குடிசைத் தொழில்கள்
10. வீட்டு வசதி
11. குடிநீர்
12. விறகு மற்றும் தீவனம்
13. சாலைகள், சிறு பாலங்கள், பாலங்கள், நீர்வழிகள் மற்றும் பிற தொடர்பு வழிகள்
14. மின்சார விநியோகம் உள்ளடங்கலான ஊரக மின்மயமாக்கல்
15. மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள்
16. வறுமை ஒழிப்புத் திட்டங்கள்
17. தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளிகள் உள்ளடங்கலான கல்வி
18. தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் தொழில் கல்வி
19. வயது வந்தோர் மற்றும் முறைசாரக் கல்வி
20. நூலகங்கள்
21. பண்பாடுகளை மேம்படுத்தம் நிகழ்ச்சிகள்

22. சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்
23. மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மருந்தகங்கள் உள்ளடங்களாக சுகாதாரம் மற்றும் துப்புரவு
24. குடும்ப நல்வாழ்வு
25. மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு
26. உடல் ஊனமுற்றோர் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் நலம் உள்ளடங்கலான சமூகநலம்.
27. நலிவுற்ற பிரிவினர்களின் நலம் மற்றும் குறிப்பாக பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் நலம்.
28. பொது விநியோக முறை
29. சமூகப் சொத்துக்களைப் பராமரித்தல்

## மாதிரி வினா

73வது அரசியலமைப்புத்திருத்தத்தின் முக்கிய அம்சங்களை எழுது.

# பாடம் –5

# தமிழக நகராட்சிகளின் வரலாறு

சென்னை மாகாணத்தில் நகர மேம்பாட்டுச் சட்டத்தின் கீழ் 1841 ஆம் ஆண்டு நகராட்சிமுறை அறிமுகத்திற்கு வந்தது. நகராட்சி முறையை விரும்பும் நகரங்கள் நகரச் செலவு முழுவதையும் சாலை, விளக்கிடல், காவல், வடிகால் வசதி ஆகிய அனைத்துச் செலவுகளைப் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற விதி இருந்தததால், சென்னை மாகாணத்தில் எந்த நகரமும் இந்த விதியை ஏற்கவில்லை. பின்னர் காவல் செலவை மட்டும் ஏற்றால் போதுமானதான 1856ஆம் ஆண்டுச் சட்டம் கூறியது. இதனை ஏற்று 1857ஆம் ஆண்டு சேலம் நகராட்சி ஏற்படுத்தப்பட்டது. இதற்குப் பின்னர் 1861 ஆம் ஆண்டுச் சட்டம் காவல் செலவில் பாதியை ஏற்கும் படி நகரங்களின் விருப்பத்தை கேட்டது. இதற்கு சில நகரங்கள் தங்களது விருப்பத்தைத் தெரிவித்தன. நகர மேம்பாட்டுச் சட்டம் நகராட்சிச் (Municipal) சட்டங்கள் என பெயர் மாற்றத்திற்குள் ளாகியது. இதன்படி 1865 ஆம் ஆண்டு நகரமேம்பாட்டுச் சட்டம் இயற்றப்பட்டது. இதன்படி 1866 ஆம் ஆண்டு மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய முக்கியமான நகரங்களில் மொத்தம் 17 நகராட்சிகள் ஏற்படுத்தப்பட்டன.

1865 ஆம் ஆண்டு சட்டத்தின்படி, அரசாங்கம் காவல் செலவின் அளவை நிர்ணயிக்கும். அதனை நகராட்சிகள் வசூலித்துக் கொடுக்க வேண்டும். காவல் செலவு தவிர, சாலை பராமரிப்பு, தெருவிளக்கிடல், வடிகால் வசதி, ஆகிய செலவுகளைச் செய்தன. தொழில்வரி, சொத்துவரி, வாகனவரி, போன்ற வரிகள் விதித்து, வசூலித்துச் செயபல்பட்டன. இருப்பினும் காவல் செலவைக் கட்ட முடியாவிட்டால் நகராட்சிகள் மாவட்ட நீதிபதிகளால் நிர்வகிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டன. பின்னர் மாயோ பிரபுவின் தீர்மானத்தின்படி உள்ளாட்சிகளுக்கு சில அதிகாரங்கள் கிடைத்தன. உள்ளாட்சி நிதி உள்ளாட்சி நோக்கங்களுக்கு செயல்பட வழி வகுத்தது. இதனால் காவல் செலவு இல்லாமல் போய்விட்டது. மற்ற பணிகளுக்கு அதிகமாக செலவு செய்யப்பட்டன. புதிய பணிகளான கல்வி, மருத்துவமனை போன்றவை நகராட்சிகளுக்கு வழங்கப்பட்டன. தேர்தலில் போட்டியிடும் தகுதிகள் குறைக்கப்பட்டதால், ஏராளமானோர் தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கிட்டியது. பதவிக்காலமும் ஓராண்டிலிருந்து மூன்று ஆண்டுகளாக அதிகரிக்கப்பட்டது.

ரிப்பன் பிரபுவின் தீர்மானத்திற்குப் பின்னர், நகராட்சி நிர்வாகம் மேம்படுத்தப்பட்டது. நகர மேம்பாட்டுச் சட்டம் என்பது நகராட்சிச் சட்டமாக மாறியது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. சில நகராட்சிகளில் தலைவர்களைத் தாங்களே தேர்ந்தெடுத்தனர். மக்கள் முதன் முதலாக அதிக அளவில் நகராட்சி நிர்வாகத்திற்கு முக்கியத்துவம் அளித்தனர் என்றால் மிகையல்ல.

1885 முதல் 1920 வரை நகராட்சிகள் சிறப்பாக இயங்கிய காலமெனலாம். ஏனெனில் நகராட்சி மன்ற உறுப்பினர்கள் தலைவர் ஆகியோர் மக்கள் பிரதிநிகள், அதிகாரம் பெற்றனர், அதிகாரிகள் ஆதிக்கம் குறைந்தது. 1920–ஆம் ஆண்டுச் சட்டம் அதிகமான அதிகாரங்கங்களை நகராட்சிகளுக்கு வழங்கியது. மாகாண அரசியலும் உள்ளாட்சி அரசியலும் இணைந்து செயல்பட்டதால், உள்ளாட்சி மீது குறைகள் தெரிவிக்கப்பட்டது. 1930 ஆம் ஆண்டு நியமன உறுப்பினர்கள் முறை நீக்கப்பட்டது. சிறுபான்மையோருக்கு இடஒதுக்கீடு செய்யப்பட்டது. 1935 ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. இந்தியாசுதந்திரமடைந்த பின்னர், உள்ளாட்சி மாநில அரசாங்கத்தின் அதிகாரத்தின் கீழ் வந்தது. எனினும் 1920 ஆம் ஆண்டுச் சட்டமே அடிப்படைச் சட்டமாக, அதில் பல திருத்தங்களை நேரத்திற்கு நேரம் அரசாங்கம் செய்து வருகின்றது. 1950 முதல் 1990 வரை நகராட்சி நிர்வகிக்கப்பட்ட முறை, மக்கள் எண்ணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து, மத்திய பாராளுமன்றம் 74வது அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்தது. அதன் முக்கிய அம்சங்களைப் பார்ப்போம்.

# 74வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் (1993)

## நகராட்சிகளின் தலைவர்களை தேர்ந்தெடுக்கப்படக்கூடிய முறை வார்டுகளை அமைத்தலும் அவைகளின் அமைப்பும்

(1) மூன்று லட்சம் மக்கள் தொகை மற்றும் அதற்கு மேற்பட்ட நகராட்சிகளில் ஒன்றோ அதற்கு மேற்பட்ட வார்டுகளைக் கொண்ட வார்டுகள் குழுக்கள் அமைக்கப்படும். ஒவ்வொரு நகராட்சியிலும், அந்த நகராட்சியில் நேரடியான தேர்தல் மூலம் நிரப்பப்பட வேண்டிய மொத்த உறுப்பினர் இடங்களில் அந்த நகராட்சிப் பகுதியின் மொத்த மக்கட் தொகைக்கு அந்த நகராட்சிப் பகுதியில் உள்ள தாழ்த்ததப்பட்டோர் அல்லது பழங்குடியினர் மக்கள் தொகைக்கும் இடையேயுள்ள விகிதத்திற்கு கிட்டத்தட்ட இயலுமளவில், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு செய்யப்படவேண்டும். மேலும் அத்தகைய இடங்கள் நகராட்சிப் பகுதியில் உள்ள வெவ்வேறு வார்டுகளுக்கு சுழற்சி முறையில் ஒதுக்கப்பட வேண்டும். தாழ்த்தப்பட்டோர் அல்லது பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட வேண்டிய இடங்களில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாத அளவில் அந்த இனங்களின் பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

## நகராட்சிகளின் பதவிக்காலம்

(1) ஒவ்வொரு நகராட்சியும், அவ்வப்போது அமுலில் உள்ள யாதொரு சட்டத்தின்படி கலைக்கப்பட்டாலன்றி, அதன் முதல் கூட்டம் நடைபெற நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் வரை பதவியில் இருக்கும்.

(2) நகராட்சியை அமைப்பதற்கான தேர்தல்

குறிப்பிடப்பட்டிருக்கும் கால அளவு முடிவடைவதற்கு முன்னரே தேர்தல் நடத்தி முடிக்கப்பட வேண்டும். அது கலைக்கப்பட்டால் கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறுமாதகாலம் முடிவடைவதற்கு முன்னரே தேர்தல் முடிக்கப்படவேண்டும்.

## உறுப்பினர் பதவிக்கான தகுதியின்மைகள்

(1) எந்த ஒரு நகராட்சிக்கும் உறுப்பினராகத் தேர்வு பெறுவதற்கும் தொடர்ந்து உறுப்பினராக இருப்பதற்கும். தற்போது அமுலில் உள்ள யாதொரு சட்டத்தின்படியோ அல்லது சட்டத்தின்கீழோ, அந்த மாநிலத்தின் சட்டமன்றத் தேர்தலில் நிற்பதற்குத் தகுதியைப் பெற்றிராத யாதொரு நபரும் நகராட்சி தேர்தலில் நிலைப்பதற்கு தகுதியைப் பெற்றிருக்க மாட்டார்.

ஆனால் இருபத்தொரு வயதைப் பூர்த்தியடைந்த எவரும் அவர் இருபத்தைந்து வயதிற்குக் குறைவாக இருப்பதினின் காரணத்தினால் தகுதியைப் பெற்றிராதவராக மாட்டார்.

நகராட்சிகளின் அதிகாரங்கள், அதிகார அமைப்பு மற்றும் பொறுப்புகள் போன்றவை

அரசியலமைப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு, மாநிலச் சட்டப்பேரவையானது, சட்டத்தின் மூலம் கீழ்க்கண்டவற்றை அளிக்கலாம்.

(எ) நகராட்சிகளுக்கு அவைகள் தன்னாட்சி நிறுவனங்களாக இயங்குவதற்கு எவ்வளவு அதிகாரங்களும் அதிகார அமைப்பும் தேவையோ அவ்வளவையும் அளிக்கலாம். மேலும் அத்தகைய சட்டம் கீழ்கண்டவை சம்பந்தமாக குறித்துரைக்கப்படக்கூடிய நிபந்தனைகளுடன் கூடிய அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் சம்பந்தமான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கலாம்.

(i) பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூகநீதியின் பொருட்டு திட்டங்களைக் தயாரித்தல். பன்னிரண்டாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்டிருக்கும் பொருள்கள் உட்பட ஒப்படைக்கப்படக்கூடிய அலுவலர்கள் மற்றும் திட்டங்களை நிறைவேற்றுதல். குழுக்களுக்கு பன்னிரெண்டாவது அட்டவணையில்

பட்டியலிடப்பட்டிருக்கும் பொருள்கள் உட்பட அவைகளுக்கு வழக்கப்படும் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டி தேவைப்படும் அதிகாரங்கள் மற்றும் அதிகார அமைப்பை அளிக்கலாம். வரிகளை விதிக்கவும் நிதிகளை ஏற்படுத்தவும் நகராட்சிகளுக்கு உள்ள அதிகாரம்.

மாநிலச் சட்டமன்றம், கீழ்க்கண்டவைகள் குறித்த ஏற்பாடுகளின் பொருட்டு சட்டம் இயற்றலாம்

உரிய வரிகள், தீர்வைகள், சுங்கக்கட்டணங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை உரிய முறையில் உரிய கட்டுப்பாடுகளுக்குட்பட்டு விதித்து வசூல் செய்து உபயோகப்படுத்துவதற்கு நகராட்சிகளுக்கு அதிகாரமளித்தல். மாநில அரசு விதித்து வசூலிக்கும் வரிகள், தீர்வைகள், சாலைச் சுங்கக் கட்டணங்கள் மற்றும் கட்டணங்களில் உரியதை உரிய நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்குபட்டு நகராட்சிகளுக்கு ஒதுக்குதல். மாநிலத்தின் தொகுப்பு நிதியிலிருந்து நகராட்சிகளுக்கு உதவி மானியங்களை வழங்க ஏற்பாடு செய்தல். நகராட்சிகளால் (அ) நகராட்சிகள் சார்பாக பெறப்படும் தொகைகளைச் செலுத்துவதின் பொருட்டும் (Crediting) உரிய தொகைகளைத் திரும்பப் பெறுவதற்கும் (With drawals) உரிய நிதிகளை அமைத்தல்.

## நிதி ஆணையம்

நிதி ஆணையம், நகராட்சிகளின் நிதி நிலைமையை ஆய்வு செய்து ஆளுநருக்குக் கீழ்க்கண்டவாறு பரிந்துரைகளைச் செய்ய வேண்டும்.

(எ) கீழ் குறித்தவைகளைப் பற்றி கைளாப்பட வேண்டிய கொள்கைகள்

(i) அரசால் விதித்து வசூல் செய்யப்படும் வரிகள், தீர்வைகள், சாலைச் சுங்கக் கட்டணங்கள் மற்றும் கட்டணங்களின் நிகரத் தொகைகளில் இந்த பகுதியின் கீழ் மாநிலம் மற்றும் நகராட்சிகளுக்கிடையே விநியோகம் செய்வதின் பொருட்டு பிரித்துக்கொடுத்தல் மற்றும் எல்லா நிலைகளிலும் உள்ள நகராட்சிகளுக்கிடையேயும் இத்தகைய தொகையில் அவைகளுக்குரிய பங்கை ஒதுக்கீடு செய்தல். நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யத்தக்க (அ) நகராட்சிகளால் உபயோகத்திற்கான வரிகள், தீர்வைகள், சாலைசுங்கக் கட்டணங்கள் மற்றும் கட்டணங்களை நிர்ணயம் செய்தல். மாநிலத்தின் தொகுப்பு நிதியிலிருந்து நகராட்சிகளுக்கு வழங்கத்தக்க உதவிமானியங்கள் நகராட்சிகளின் நிதிநிலையை மேம்பாடு செய்வதற்கான நடவடிக்கைகள்.

நிதி ஆணையத்தால் செய்யப்படும் ஒவ்வொரு பரிந்துரையையும் அதன் மீது எடுத்த நடவடிக்கையைக் குறித்து குறிப்பாணையுடன் மாநில சட்டமன்றத்தின் முன்பு வைப்பதற்கு ஆளுநர் ஏற்பாடு செய்ய வேண்டும்.

நகராட்சிசகளின் கணக்குகளின் தணிக்கை

நகராட்சிகளால் கணக்குகளை பராமரித்து வருதல் மற்றும் அத்தகைய கணக்குகளைத் தணிக்கைச் செய்தல் சம்பந்தமான ஏற்பாட்டை மாநிலச் சட்ட ப் பேரவை சட்டம் இயற்றலாம்.

நகராட்சிகளின் தேர்தல்கள்

(1) நகராட்சிகளின் தேர்தல்கள் சம்பந்தமான மேற்பார்வை வாக்காளர் பட்டியல்கள் தயாரிப்பு சம்பந்தமான கட்டளை மற்றும் கட்டுப்பாடு தேர்தல்களை நடத்துதல் அனைத்தும் பிரிவு 243-K குறிப்பிடப்பட்டிருக்கும் மாநிலத் தேர்தல் ஆணையத்தைச் சேரும்.

(2) அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு, நகராட்சிகளில் தேர்தல் சார்பாக மாநிலச் சட்டமன்றம் சட்டம் இயற்றலாம்.

## மாவட்டத் திட்டக்குழு

(1) ஒவ்வொரு மாநிலத்திலும், மாவட்ட நிலையில் உள்ள பஞ்சாயத்துக்கள் மற்றும் நகராட்சிகள் தயார் செய்யும் திட்டங்களைத் தொகுத்து முழு மாவட்டத்திற்கான மாவட்ட வரைவு மேம்பாடு திட்டத்தைத் தயார் செய்வதின் பொருட்டு, ஒரு மாவட்டத் திட்டக்குழுவை அமைக்க வேண்டும்.

(2) மாநிலச் சட்டமன்றம் கீழ்க்கண்டவை சம்பந்தமாக சட்டம் இயற்றலாம்.

(எ) மாவட்டத்திட்டக் குழுக்களின் உறுப்பினர் அமைப்பு. அத்தகைய குழுக்களில் உள்ள உறுப்பினர் இடங்களை நிரப்புவதற்கான முறை ஆனால் அத்தகைய குழுவின் மொத்த உறுப்பினர்களில், ஐந்தில்–நான்கு பங்கிற்குக் குறையாத அளவில் உறுப்பினர்கள் மாவட்ட நிலைப் பஞ்சாயத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், நகராட்சிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகிய இவர்களுக்கிடையே, ஊரகப் பகுதி மற்றும் நகர்புற பகுதிகளின் மக்கட்தொகை இடையேயுள்ள விகிதத்திற்கேற்ப தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அத்தகைய குழுக்களுக்கு ஒதுக்கக்கூடிய மாவட்ட அளவில் திட்டமிடுவதற்கான அலுவல்கள் அத்தகைய குழுக்களின் தலைவர்கள் தேர்வு செய்வதற்கான முறை, வரைவு மேம்பாட்டுத் திட்டத் தயாரிப்பில் ஒவ்வொரு மாவட்டத் திட்டக்குழுவும், கீழ்க்கண்டவைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். பிரதேசத்திட்டம், (Spatial Planning), தண்ணீர் மற்றும் புற மற்றும் இயற்கை ஆதாரங்களைப் (Physical and natural resources) பகிர்வு செய்தல் அடிப்படைக் கட்டுமானம் மற்றும் சுற்றுப்புறச் சூழலை பாதுகாத்தல் சம்பந்தமான ஒருங்கிணைந்த மேம்பாட்டுத்திட்டம் உட்பட, பஞ்சாயத்துக்கள் மற்றும் நகராட்சிகளுக்கும் பொதுவான அக்கரையுடைய பொருள்கள். கிடைக்ககூடிய நிதி வளம் அல்லது மற்ற வகையான வளங்களின் அளவு (Size) மற்றும் வகை (Type) ஆளுநரின் ஆணையின் மூலம் குறித்துரைக்க நிலையங்கள் மற்றும் அமைப்புகளைக் கலந்தாலோசிக்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டத் திட்டக்குழுவின் தலைவரும் அக்குழு பரிந்துரைத்ததின்படி மேம்பாட்டுத் திட்டத்தை மாநில அரசிற்கு அனுப்ப வேண்டும்.

## பெருநகரத் திட்டக் குழு

ஒவ்வொரு பெருநகரப்பகுதிக்கும் அதற்கான வரைவு மேம்பாட்டுத்திட்டம் தயார் செய்வதின் பொருட்டும் பெருநகரத்திட்டக்குழு அமைக்கப்பட வேண்டும்.

மாநிலச் சட்ட மன்றம் பின்வருபவை சம்பந்தமாக சட்டம் இயற்றலாம்.

பெருநகரத் திட்டக்குழுக்களின் உறுப்பினர் அமைப்பு

அத்தகைய குழுக்களில் உள்ள உறுப்பினர் இடங்களை நிரப்புவதற்கான முறை

ஆனால் அத்தகைய குழுவின் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத அளவில் உறுப்பினர்கள், நகராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அப்பெருநகரப் பகுதியில் உள்ள பஞ்சாயத்துக்களின் தலைவர்கள் ஆகிய இவர்களுக்கிடையே அப்பகுதியில் உள்ள நகராட்சிகள் மற்றும் பஞ்சாயத்துக்களின் மக்கட் தொகைக்கு இடையேயுள்ள விகிதத்திற்கேற்ப தேந்தெடுக்கப் படுவார்கள். அத்தகைய குழுக்களுக்கு ஒதுக்கப்படும் அலுவல்களை நிறைவேற்றுவதற்கேற்ப அத்தகைய குழுக்களில் மத்திய அரசு, மாநில அரசு, அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவைகளுக்கும் அவசியம் எனக்கருதும் அளவில் பிரதிநிதித்துவம் தருதல். அத்தகைய குழுக்களின் திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைப்பு சம்பந்தமாக ஒதுக்கக் கூடிய அலுவல்கள்.

அத்தகைய குழுக்களில் தலைவர்களை தேர்வு செய்வதற்கான முறை,

வரைவு மேம்பாட்டுத் திட்டத்தின் தயாரிப்பில் ஒவ்வொரு பொருளாதாரத் திட்டக்குழுவும்,

கீழ்க்கண்டவைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளால் தயார் செய்யப்பட்ட திட்டங்கள் பெருநகரப் பகுதியின் ஒருங்கிணைந்த பிரதேசத்திட்டம் (Integrated spatial planning) தண்ணீர் மற்றும் புற மற்றும் இயற்கை வளங்கள் அடிப்படை கட்டுமான மற்றும் சுற்றுப்புறச் சூழலை பாதுகாத்தல் சம்பந்தமான ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் உட்பட, நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்குப் பொதுவான பொருள்கள். மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் நிர்ணயம் செய்யும் மொத்தமான குறிக்கோள்கள் மற்றும் முன்னுரிமைகள். மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் முகமைகளினால் (Agency) பெருநகரப் பகுதியில் செய்யக்கூடிய மூலதனங்களின் அளவு மற்றும் தன்மை (Nature) மற்றும் கிடைக்கக்கூடிய நிதிவகையிலான அல்லது மற்றும் வகையிலான வளங்கள். ஆளுநரின் ஆணையின் மூலம் குறித்துரைக்கப்படும் நிலையங்கள் மற்றும் அமைப்புகளைக் கலந்தாலோசிக்க வேண்டும். ஒவ்வொரு பெருநகரத் திட்டக்குழுவின் தலைவரும், அக்குழுவின் மேம்பாட்டுத் திட்ட பரிந்துரைகளை மாநில அரசிற்கு அனுப்ப வேண்டும். தேர்தல் சம்பந்தமான பிரச்சனைகளில் நீதிமன்றங்கள் தலையிடத் தடை உள்ளது.

அரசியல் அமைப்புச் சட்டத்தில் எது இருந்தபோதிலும், செய்யப்படும் அல்லது செய்யப்படுவதாகக் தோன்றக்கூடிய தொகுதிப்பிரிவு அல்லது தொகுதிக்கு உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஒதுக்குதல் பற்றி சட்டத்தின் செல்லுபடியாகும் தன்மையைப்பற்றிய கேள்வியும் எந்த ஒரு நீதிமன்றத்திலும் எழுப்பப்படமாட்டது. மாநிலச் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தால் அல்லது சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட அதிகார அமைப்பிற்கு உரிய முறையில் அளிக்கப்பட்ட தேர்தல் மனுவின் மூலமாகவன்றி வேறு எந்த முறையிலும் யாதொரு நகராட்சியின் தேர்தல் பற்றிய கேள்வி எழுப்பப்படமாட்டாது.

பன்னிரண்டாவது அட்டவணையைச் சேர்த்தல்

அரசியல் அமைப்புச் சட்டத்தின் பதினொன்றாவது அட்டவணைக்குப் பிறகு கீழ்க்கண்ட அட்டவணையைச் சேர்க்க வேண்டியது. அதாவது:

11. பன்னிரண்டாவது அட்டவணை

1. நகரமைப்பு உள்ளாட்சி நகர்ப்புறத் திட்டம்

2. நில உபயோகத்தைக் கட்டுப்படுத்துதல் மற்றும் வீடுகள் கட்டுதல்

3. பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கான திட்டமிடுதல்

4. சாலைகள் மற்றும் பாலங்கள்

5. வீடுகள், தொழிற்சாலைகள் மற்றும் வணிகக் காரியங்களுக்குத் தண்ணீர் வழங்குதல்

6. மக்கள் நலம் சுகாதாரம் துப்புரவு மற்றும் திடக் கழிவுப் பொருள்களின் நிர்வாகம்

7. தீயணைப்புப் பணிகள்

8. நகர்ப்புறக்காடுகள், சுற்றுப்புறச்சூழல், பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைச் சூழலியல் பெருக்கம் (Promotion of ecological assets)

9. சமூகத்தின் நலிவடைந்தோர் நலன் பாதுகாப்பு, ஊனமுற்றோர் மற்றும் மனநிலைப் பாதிக்கப் பட்டோர் நலன்

10. குடிசைபகுதி மேம்பாடு மற்றும் தரம் உயர்வு

11. நகர்ப்புற வறுமை ஒழிப்பு

12. பூங்காக்கள், வனத்தோட்டங்கள், விளையாடுமிடங்கள் போன்ற நகர்ப்புற வசதிகளில் ஏற்பாடு

13. பண்பாடு, கல்வி மற்றும் கலை நயம் சார்ந்த நுட்பங்களின் வளர்ச்சி (Promotion of assthetic aspects)

14. மயானங்கள், எரியூட்டுமிடங்கள் மற்றும் மின்சார எரியூட்டுமிடங்கள்

15. கால்நடைப் பட்டிகள், மிருக வதைத் தடுப்பு

16. பிறப்பு இறப்புப் பதிவுகள், உட்பட புள்ளி விவரங்களைப் பேணுதல்.

17. பொதுமக்களின் வசதிகள், தெரு விளக்குகள் வசதி, வாகன நிறுத்துமிடங்கள், பேருந்து நிறுத்துமிடங்கள் மற்றும் கழிப்பிட வசதிகள்.

18. ஆடுமாடுகள் வெட்டுமிடங்கள் மற்றும் தோல் பதனிடுதல் முறைப்படுத்துதல்.

இச்சட்டம் குடியரசுத் தலைவர் தலைவரால் **20.4.1993**ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு **1.6.1993** தேதியிலிருந்து அமுலுக்கு வந்துள்ளது. இதன் படி புதிய நகராட்சி நிர்வாக முறை செயல்பட்டு வருகின்றது.

**மாதிரி வினா:**

நகராட்சி வளர்ச்சி முறையை விவரி.

# பாடம் –6

## பல்வந்தராய் மேத்தா குழு

பல்வந்தராய் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்தியா ஜனநாயகப் பன்முகப்படுத்தலைச் செயல் முறைப்படுத்துவதில் நல்ல அனுபவம் பெற்றுள்ளது. ஜனநாயகப் பன்முகப் படுத்தலை முறைப்படுத்துவதிலும் அதன் அமைப்பிலும் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபாடுகள் காணப்படுகின்றன. மேலும் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதில் ஏற்றத் தாழ்வுகளும் இருந்துள்ளன.

திட்ட ஆணையம், சமுதாய வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய விஸ்தரிப்பு அமைப்பு ஆகியவற்றின் செயல் நடவடிக்கைகளை ஆய்வு செய்வதற்கென 1957–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திரு. பல்வந்தராய் மேத்தா தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. இக்குழுவின் நோக்கம் என்னவென்றால், சிக்கனம் மற்றும் திறமையை உருவாக்குதல்; மேலும் இத்திட்டங்கள் எந்த அளவிற்கு உள்ளாட்சி அமைப்புக்களின் முயற்சிகளை பயன்படுத்தி இருக்கின்றன என்றும், கிராமப்புற பகுதிகளின் சமூகப் பொருளாதார வளர்ச்சி தொடர்ச்சியாக இருக்கும் நோக்கோடு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு அவற்றில் வெற்றி கிடைத்துள்ளதா என்றும் மதிப்பிடுவதேயாகும். இக்குழு சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் வேலைப் பணிகளை ஆய்வு நடத்தி 1957–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தன்னுடைய அறிக்கையை சமர்ப்பித்தது. இக்குழுவின் அறிக்கையானது சமுதாய வளர்ச்சித் திட்டத்தைப் பற்றி புதியதொரு எண்ணத்தை உருவாக்கிவிட்டது.

இக்குழு இரண்டு செயல்வழிகளைக் கூறி இருக்கின்றது. முதலாவதாக வளர்ச்சித் திட்டங்கள் திறமையான முறையில் செயல்படுத்தப்பட வேண்டுமானால், நிர்வாகம் பன்முகப்படுதல் வேண்டும். இவ்வாறு பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாகப் பிரிவானது தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனமொன்றின் கட்டுப்பாட்டிற்குட் பட்டதாக இருக்க வேண்டும். "பொறுப்பும் அதிகாரமும் இல்லையென்றால் வளர்ச்சியில் எந்த விதமான முன்னேற்றமும் இருக்காது. சமுதாயமானது தன்னுடைய பிரச்சனைகளைப் புரிந்து, பொறுப்புக்களை உணர்ந்து நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக தேவையான அதிகாரங்களைச் செயல்படுத்தி, உள்ளாட்சி நிர்வாகத்தின் மேல் நிலையான கண்காணிப்புக் கொண்டிருந்தால்தான் சமுதாய வளர்ச்சி என்பது உண்மையானதாக இருக்கும். இந்த நோக்கோடு தான் நாங்கள், சட்டபூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனமொன்று தேவையான வளங்கள், அதிகாரம் ஆகியவற்றுடன் உருவாக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்கிறோம்" என்று தங்களுடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். செயல்முறை அடிப்படையில் இதனைத்தான் அவ்வறிக்கை ஜனநாயகப் பன்முகப்படுத்தல் என்று குறிப்பிடுகிறது. இரண்டாவதாக ஜனநாயகப் பன்முகப்படுதலின் அடிப்படைப் பிரிவு வட்டாரம் அல்லது சமிதி அளவில் உருவாக்கப்பட வேண்டும் என்றும் இவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.

தேவைகள் மற்றும் பிரச்சனைகளை மனதிற்கொண்டு இக்குழுவானது ஒரு மூன்றடுக்கு நிறுவன அமைப்பை பரிந்துரை செய்தது. இம்மூன்றடுக்குப்படிநிலை அமைப்பில், கிராம மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட கிராமப் பஞ்சாயத்து கீழ் மட்டத்தில் இருக்க வேண்டும். இதற்கு அடுத்த நிலையில் அமைந்துள்ளது பஞ்சாயத்து சமிதியாகும் இப்பஞ்சாயத்து சமிதி வட்டார அளவில் அமைக்கப்பட வேண்டும். ஜில்லா போர்டுகளுக்குப் பதிலாக அந்த இடத்தில் அமைக்கப்பட்டிருப்பது தான் ஜில்லா பரிசத். இது இம்மூன்றடுக்கு படி நிலை அமைப்பில் மேல் மட்டத்தில் உள்ளதாகும். இம்மூன்றடுக்கு முறை கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையிலும் ஜனநாயகப்படுத்தப்பட்டு நாட்டின் மூலை முடுக்குகளில் வாழ்கின்ற ஆண், பெண் ஆகியோரை சுயாட்சி அரசாங்கத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்திருக்கின்றது.

அரசாங்கத்திடம் இக்குழு தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பித்தற்குப் பின்னர் தேசிய வளர்ச்சிக் குழுவும் அதற்குப் பின்னர் உள்ளாட்சி அரசாங்க மத்திய குழுவும் அவ்வறிக்கையை ஏற்றுக் கொண்டன. இவ்விரண்டு குழுக்களும் அவ்வறிக்கையை விரும்பியதோடு மட்டுமின்றி அதனை மாநிலங்களுக்கும்

பரிந்துரை செய்தன. இருப்பினும் இக்குழுக்கள், மாநிலங்கள் இதனைத் தங்களுடைய சூழ்நிலைக்கேற்பச் செயல்படுத்துவதில் மாற்றங்கள் செய்து கொள்ளும் உரிமையையும் வழங்கின.

1959–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2–ந்தேதி ராஜஸ்தான் மாநிலம் இம்மூன்றடுக்கு படிநிலை அமைப்பை முதன் முதலாக செயல்படுத்தியது. காலம் சென்ற நம்முடைய முன்னாள் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அதனைத் துவக்கி வைத்து இவ்வமைப்புக்கு பஞ்சாயத்தி ராஜ் என்று பெயரிட்டார்.

ஒன்றாக இணைந்திருந்த பம்பாய் மாநிலம் இக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. இவ்வரசாங்கம் தன்னுடைய மாநிலத்திலுள்ள சூழ்நிலைகளுக்கேற்ப இக்குழுவின் பரிந்துரைகளை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும் என்று கோரியது. இந்நிலையில் பம்பாய் மாநிலமானது மஹாராஷ்டிரம், குஜராத் என்று இரண்டு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. இவ்விரண்டு மாநிலங்களும் பல்வந்த்ராய் குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்வதற்கென தங்களுடைய குழுக்களை நியமித்தன. மஹாராஷ்டிரா மாநிலம் நியமித்த நாயக்குழு, நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜில்லா பரிசத் இருக்கவேண்டும் என்றும், பஞ்சாயத்து சமிதி இரண்டாவது நிலையில் தான் இருக்கவேண்டும் என்றும் பரிந்துரை செய்தது. குஜராத் மாநிலம் பல்வந்தராய் குழுவின் பரிந்துரைகளுக்கும், நாயக் குழுவின் பரிந்துரைகளுக்கும் இடைப்பட்ட ஒரு பொதுவான நிலையைப் பின்பற்றியது.

இதனைத் தொடர்ந்து பல ஆண்டுகளில் பல்வந்தராய் மேத்தா குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நாடு முழுவதிலும் பஞ்சாயத்தி ராஜ் நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. நாட்டிலுள்ள கிராமப்பஞ்சாயத்துக்கள் 90 சதவிகித கிராமப்புற மக்களைக் கொண்டிருந்தன. 1974 வட்டாரங்களில் 4033 பஞ்சாயத்து சமிதிகள் காணப்பட்டன. ஒரு சில மாநிலங்கள் மாவட்டங்களையும், தாலுகாக்களையும் இவ்வமைப்பின் முக்கிய பிரிவுகளாகக் கொண்டிருக்க விரும்பின 399 மாவட்டங்களில் 262 ஜில்லா பரிசத்துக்கள் பல வகைப்பட்ட அதிகாரங்களுடன் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

1957–ஆம் ஆண்டில் இக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டத்திலிருந்து கிராமப்புற பொருளாதாரத்தில் பலமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆய்வு செய்து அதன் பின்னர் அதனை மதிப்பீடு செய்து. அவை எந்த அளவிற்கு பஞ்சாயத்தி ராஜ் நிறுவனங்களின் அமைப்பு, பணிகள் ஆகியவற்றில் இடம் பெற்றுள்ளன என்பதை நிர்ணயிக்க வேண்டியது அவசியமாகும்.

1947–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இந்தியா சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னால் உள்ளாட்சி அரசாங்கமுறை புதியதொரு கட்டத்தினை அடைந்தது. உள்ளாட்சி அரசாங்கம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு புதியதொரு அணுகுமுறை கையாளப்பட்டது. நூறு ஆண்டுகளாக பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் ஏழ்மை, படிப்பின்மை, நோய், வேலையின்மை போன்ற கொடுமைகளை அனுபவித்து வந்த நாட்டு மக்கள் அக்கொடுமைகளினின்று விடுதலை பெற வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் தோன்றியது தான் இப்புதிய அணுகுமுறை. ஆகையினால்தான் காங்கிரஸ் கட்சி பிரிட்டிஷ் ஆட்சியில் ஏற்பட்ட இவ்வின்னல்களைக் களைந்து மக்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்தி அதனடிப்படையில் நாட்டைப் பொருளாதார, தொழில் வளர்ச்சியில் மேம்பாடு அடையச் செய்யவேண்டும் என்று உறுதி செய்தது. வறுமை, அறியாமை, சுகமின்மை, வேலையின்மை போன்ற கொடுமைகளை மக்களிடமிருந்து நீக்க வேண்டுமெனில், பலவகைப்பட்ட தேசிய அளவிலான வளர்ச்சித் திட்டங்களில் மக்கள் பங்கு பெறுவதோடு ஒத்துழைக்கவும் வேண்டும். இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்கள் தேவையான அளவு மாற்றி அமைக்கப்பட்டால்தான், அவ்வாறு மாற்றி அமைக்கப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்கள் மூலமாக வளர்ச்சித் திட்டங்களில் மக்களைப் பங்கேற்கச் செய்ய முடியும். சுதந்திரத்திற்குப் பின்னர்தான் உள்ளாட்சி அரசாங்கம், வளர்ச்சியோடு அதிலும் குறிப்பாக கிராமப்புற வளர்ச்சியோடு இணைந்து செல்கின்றது என்று கருதப்பட்டது. ஐந்தாண்டு திட்டங்களும் உருவாக்கப்பட்டன. 1947–ஆம்

ஆண்டிற்குப் பின்னர் உள்ளாட்சி அரசாங்கம் என்ற கருத்தில் மாற்றம் ஏற்பட்டதற்கு வேறு சில முக்கியமான காரணங்களும் உண்டு.

1. காந்தியின் கிராமிய தத்துவம்.

2. சுயாட்சி அரசாங்கத்தின் ஒரு பகுதியாக கிராமம் கருதப்பட வேண்டுமென்று அரசியல் நிர்ணய சபையில் நடைபெற்ற விவாதங்கள்.

3. சமுதாய வளர்ச்சி இயக்கம்.

இந்தியாவில் 7½ லட்சம் கிராமங்கள் இருக்கின்றன. எனவே நாடு முழுவதிற்குமான அரசாங்கம் ஒன்று கிராம சுயாட்சி அரசாங்கம் என்ற அடித்தளத்தின் மீது தான் எழுப்பப்பட வேண்டும். அத்தகைய அரசாங்கம் தான் உண்மையான அரசாங்கம் என்று காந்திஜி குறிப்பிட்டிருக்கிறார். கிராமத்திற்குரிய பண்புகளையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் நிலவிய உள்ளாட்சி அரசாங்கக் கோட்பாட்டின் அடிப்படையில் எந்தவொரு உள்ளாட்சி நிறுவனமும் சட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லாத எப்பணியையும் செய்யமுடியாது. உள்ளாட்சி நிறுவனங்களின் பணிகள் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருந்தன. இந்திய அரசியல் நிர்ணய சபை தன்னுடைய விவாதத்திற்குப் பின்னர் அரசியலமைப்பின் 40–ஆம் விதியாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிற்று (IV பாகம், அரசு நெறிமுறைக் கொள்கைகள்)

மாநில அரசுகள் கிராமப் பஞ்சாயத்துக்களை அமைக்க முயற்சிகள் எடுக்கவேண்டும். அக்கிராமப் பஞ்சாயத்துக்கள் சுயாட்சி அரசாங்கமாக செயல்படும் அளவிற்கு அவைகளுக்கு அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும் என்று அரசியலமைப்பின் 40–ஆம் விதி கூறுகின்றது. நாடு முழுவதும் உருவாக்கப்பட்டிருக்கின்ற உள்ளாட்சி அரசாங்கங்கள் அரசியலமைப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அரசாங்கத்தின் ஜனநாயக அமைப்புக்கள் என்று தான் ஐந்தாண்டுத் திட்டங்களில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. 1952–ஆம் ஆண்டு துவக்கப்பட்ட சமுதாய வளர்ச்சி திட்டம் ஜனநாயகப் பன்முகப்படுத்தல் திட்டத்தோடு நெருங்கிய தொடர்புடையது. இத்திட்டத்தின் மூலம் ஐந்தாண்டு திட்டங்கள் கிராமப்புற மக்களிடையே சமூக பொருளாதார மாற்றத்தை உருவாக்க முனைந்தன. இப்புதிய அணுகுமுறையானது அரசாங்கத்தின் உள்ளாட்சி அரசாங்கம் சம்பந்தப்பட்ட பழைய கொள்கையினின்று மாறுபட்டதாகும். ஜனநாயக ரீதியில் உள்ளாட்சி நிறுவனங்களைத் தோற்றுவித்து அவைகளிடத்தில் சுகாதாரம், அடிப்படைக் கல்வி போன்ற வழக்கமான பணிகள் மட்டுமின்றி விவசாயம், கால்நடை, குடிசைத் தொழில் போன்ற வளர்ச்சிப் பணிகளையும் ஒப்படைப்பது தான் இப்புதிய கொள்கையாகும். எனவே இப்புதிய அணுகுமுறையானது வளர்ச்சிப் பணிகளையும் கொண்டதாகும்.

## சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் அமைப்பு

கிராமப்புற பகுதிகள் தீவிரமாக வளர்ச்சி அடைய வேண்டியும் மக்களை ஒன்றிணைக்கவும் முதல் ஐந்தாண்டு திட்டத்தில் சமுதாய வளர்ச்சித்திட்டம் துவக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில பகுதிகளில் சமுதாயத் திட்டங்கள் என்ற பெயரில் 1952–ஆம் ஆண்டு சமுதாய வளர்ச்சித் திட்டம் துவக்கப்பட்டது. 1953–ஆம் ஆண்டு திட்டப்பகுதிகளின் அளவு குறைக்கப்பட்டது. 66,000 மக்கள் கொண்ட ஒரு சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் உருவாக்கப்பட்டன. சமுதாய வளர்ச்சி அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறுவதற்காக நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களையும் அதிகாரிகளையும் கொண்ட ஆலோசனைக் குழு இருந்தது. வளர்ச்சி வட்டாரத்தை அடிமட்ட நிர்வாகப் பிரிவாகக் கொண்டு தேசிய விரிவாக்கப் பணி நாடு முழுவதும் துவக்கப்பட்டது. இக்கீழ்மட்டப் பிரிவு நிர்வாகப் பிரிவாகவும் வளர்ச்சிப் பிரிவாகவும் செயல்படுகிறது. தற்காலிகக் குழுக்கள் அமைக்கப்பட்டதற்குப் பின்னர் உள்ளூர் மக்களின் முயற்சியும், ஆர்வமும் முன்வரவில்லை. முதல் ஐந்தாண்டு திட்டம் துவக்கப்படும் பொழுது எந்தவொரு மாற்றமும் இல்லாமல் பழமையான உள்ளாட்சி நிறுவனங்களே சில ஆண்டுகளுக்குத் தொடர்ந்து இருந்தன. பொது மக்களுடைய முயற்சியின்மைக்கும், வளர்ச்சித் திட்டங்களில் ஆர்வமில்லாமல் இருப்பதற்கும் உரிய காரணங்களைக் கண்டறிந்து பரிகாரங்களை பரிந்துரைக்க வேண்டியதும்

அவசியமாயிற்று. ஆகையால் தான் 1957–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பல்வந்தராய் மேத்தா தலைமையில் 'சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் தேசிய விரிவாக்கப் பணி' ஆகியவற்றிற்கான குழுவொன்றைத் திட்டச் செயற்குழு ந'' மித்து, இக்குழு வளர்ச்சித் திட்டங்களில் மக்கள் முயற்சி எடுக்காமல் இருப்பதையும் அதில் ஆர்வம் காட்டாமல் இருப்பதற்குரிய காரணங்களை கண்டறிந்து அதற்குரிய பரிகாரங்களை பரிந்துரை செய்யக் கூறியது. இக்குழு ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு சில தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களுக்கு சென்றது. அங்கு உள்ளூர் மக்கள், உள்ளூர் அதிகாரிகள், பல அமைப்புக்களில் பிரதிநிதிகள், மாவட்ட அதிகாரிகள், வளர்ச்சிப் பிரிவின் தலைவர்கள் வளர்ச்சித் துறையின் அரசாங்க செயலாளர்கள் போன்றோருடன் இது கலந்துபேசிற்று. இக்குழு தன்னுடைய வரலாற்றுச் சிறப்புமிக்க அறிக்கையை 1957–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சமர்ப்பித்தது. இவ்வறிக்கை ஜனநாயகப் பன்முகப்படுத்துதல் என்ற கோட்பாட்டை அடிப்படையாக கொண்டிருந்தது. அக்கோட்பாட்டின் அடிப்படையில் உள்ளாட்சி நிறுவன அமைப்புக்களை அது குறிப்பிட்டிருந்தது. இவ்வாறாக மேத்தா குழு இந்தியாவில் பஞ்சாயத்திராஜ் முறை உருவாவதற்கு அடிக்கல் நாட்டியது.

## மேத்தா குழுவின் அறிக்கை: சிறப்பு அம்சங்கள்

1. "உள்ளூர் மக்களின் தேவைகளையும், விருப்பங்களையும் உள்ளடக்கிய நோக்கங்களை அடைவதற்கென செலவு செய்கின்ற நிதியை முறையாக மேற்பார்வை செய்து பாதுகாக்கவும், உள்ளூர் மக்களின் ஆர்வத்தை வளர்க்கவும் போதுமான அளவு அதிகாரமும் நிதிவசதியும் கொண்ட பிரதிநிதித்துவ மக்களாட்சி நிறுவனங்கள் அமைக்கப்படவில்லையென்றால் வளர்ச்சி சம்பந்தப்பட்ட துறைகளில் மக்களின் முயற்சியையும், ஆர்வத்தையும் நாம் காணமுடியாது" என்று இக்குழுவின் அறிக்கை குறிப்பிடுகிறது. இதையே கீழ்க்கண்ட முறையில் குறிப்பிடலாம்.

1. ஒவ்வொரு கிராமத்திலும் முழுமையான பிரதிநிதித்துவ மக்களாட்சி நிறுவனம் நிறுவப்பட வேண்டும்.

2. இந்நிறுவனம் உள்ளூர் மக்களின் ஆர்வத்தை வளர்த்து, உள்ளூர் வளர்ச்சி சம்பந்தப்பட்ட நோக்கங்களை அடைவதற்கென செலவு செய்யப்படும் நிதியை முறையாக மேற்பார்வை செய்து பாதுகாக்க வேண்டும்.

3. பொதுமக்களின் தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்யவே நிதி செலவு செய்யப்பட வேண்டும் என்பதையும் இந்நிறுவனம் உறுதி செய்ய வேண்டும்.

4. அந்நிறுவனம் போதுமான அளவு அதிகாரமும், நிதிவசதியும் பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறாக மேத்தா குழுவானது கிராம மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையிலும் உள்ளாட்சி நிறுவனங்கள் முழுமையான மக்களாட்சி அமைப்புக்களாக இருக்கவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறது. ஜனநாயக ரீதியில் அமைக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்துக்கள் மேல் மட்டத்திலுள்ள மக்களாட்சி நிறுவனங்களுடன் அமைப்பின் அடிப்படையில் இணைந்திருக்க வேண்டும். கிராமப்பஞ்சாயத்துக்கள் பிரதிநிதித்துவ மக்களாட்சி அமைப்பாக மட்டுமின்றி போதுமான அளவு அதிகாரமும் நிதிவசதியும் கொண்டிருக்கவேண்டும். இவ்வாறு இருந்தால் தான் அவைகள் தங்களுடைய பகுதியின் வளர்ச்சியையும் பொது நிர்வாகத்தில் தங்களுக்குள்ள பணிகளையும் கடமைகளையும் செவ்வனே செய்ய முடியும். மக்களாட்சி அடிப்படையில் கிராமப் பஞ்சாயத்து அமைப்புக்களில் ஏற்படுகின்ற இம்மாற்றம், அவைகளுடைய பணிகளில் நல்ல விதமான மாற்றத்தை உருவாக்கி இருக்கிறது என்று இக்குழு தன்னுடைய கருத்தைத் தெரிவிக்கிறது.

மாவட்டக் கழகம் அல்லது ஜில்லா போர்டு போன்று இருக்கின்ற உள்ளாட்சி நிறுவனங்கள் இப்புதிய நிர்வாகப் பணிகளையும், வளர்ச்சிப் பணிகளையும் செய்ய இயலுமா? அல்லது இவைகளால் இப்பணிகளைச்

செய்ய இயலாது என்றால் இவைகளுக்குப் பதிலாக இப்பணிகளை நிறைவேற்ற எத்தகைய புதிய நிறுவனங்களை உருவாக்கவேண்டும்? என்பதனை மேத்தா குழு ஆய்வு செய்து 'ஜில்லாபோர்டு' களைப்பற்றித் தன்னுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறது.

எந்தப்பணிக்காக வேண்டி ஜில்லா போர்டுகள் உருவாக்கப்பட்டனவோ அப்பணிகளை அவைகள் செய்திருக்கலாம். உதாரணமாக நம் மக்களுக்கு சுயாட்சி அரசாங்கத்தைப்பற்றிய கல்வியறிவு புகட்டுதலைக் கூறலாம். மேலும் தெளிவான கவனம் செலுத்த முடியாத அளவிற்கு அது அதிக அளவு பணியைக் கொண்டிருந்தது. இதனால் அதிக அளவிலான அதிகாரங்களைத் தன்னுடைய அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டி இருந்தது. அதிலும் அரசாங்கமும் பலவிதமான பணிகளைத் தானே எடுத்துக் கொண்டது. இதனால் நிர்வாகத்தின் ஒரு சில பிரிவுகளில் இரட்டை ஆட்சி முறை கூட இருந்தது.

சுருங்கக்கூறின், ஐந்தாண்டு திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட மாறுபட்ட புதிய சூழலில் பிரிட்டிஷ் காலத்தில் உருவாக்கப்பட்ட ஜில்லா போர்டுகள் நிர்வாகப் பணிகளையும், வளர்ச்சிப்பணிகளையும் செய்வதற்கு தகுதியுடையவைகளாக இல்லை. ஜில்லா போர்டின் பரப்பளவு அதிக அளவில் இருந்ததால் அவைகள் திறமையாக வளர்ச்சிப் பணிகளை செய்ய முடியவில்லை. எனவே மேத்தா குழுவானது அடுத்த நடவடிக்கையாக சிறிய பகுதிகள்கொண்ட உள்ளாட்சி நிறுவனங்களை உருவாக்குதலைப் பற்றி எண்ணலாயிற்று. உள்ளாட்சி நிறுவனங்கள் சிறிய பகுதிகளாக இருக்க வேண்டும் என்ற கருத்தை மேத்தா குழு வற்புறுத்திக் கூறியது. 1907–ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பன்முகப்படுத்துதல் குழு சிறிய பகுதியைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. கிராமப்புற நிர்வாகத்திற்கென துணை ஜில்லா போர்டுகளை உருவாக்க வேண்டும் என்று கூறி இருந்தது. கோகலே போன்ற தலைவர்களும் இக்கருத்தையே வலியுறுத்தினார்கள். மேத்தா குழு, கிராமப் பஞ்சாயத்தை ஜில்லா போர்டுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளச் செய்வதை விரும்பவில்லை. கிராம பஞ்சாயத்தை ஜில்லா போர்டுடன் நேரடியாக இணைப்பது என்பது "சுலபமுமல்ல, சுமூகமானதுமல்ல; நடைமுறையில் முடியாததும் கூட" என்று இக்குழு கருத்து தெரிவித்தது. பல மாநிலங்களில் ஒரு மாவட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட கிராமப்பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இச்சூழ்நிலையில் இவ்விரண்டையும் இணைப்பது என்பது அவ்வளவு நல்லதல்ல.

கிராமப் பஞ்சாயத்துக்களை ஜில்லா போர்டுகளுடன் நடைமுறையில் இணைக்க முடியாது என்ற நிலையில் மேத்தா குழுவானது, இருக்கின்ற உள்ளாட்சி நிறுவனங்களை மாற்றி புதியதொரு உள்ளாட்சி நிறுவன அமைப்பைப் பரிந்துரை செய்தது.

கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக இருக்கின்ற உள்ளாட்சி நிறுவனங்களை மாற்றி அமைத்து புதியதொரு பிரதிநிதித்துவ அடிப்படையில் அமைக்கப்பட்ட ஜனநாயக நிறுவனம் ஒன்று தேவை என்பதை உரைக்கக்கூடிய காலம் வந்துவிட்டது. அத்தகைய ஒரு நிறுவனம் உருவாக்கப்பட்டால் அது சட்ட ரீதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், தன்னுடைய பணிகளையும், கடமைகளையும் பரந்த அளவில் செயலாற்றக் கூடியதாகவும், போதுமான அளவு செயலாட்சி நிறுவனங்களையும், வளங்களையும் வசதிகளையும் உடையதாகவும் இருக்க வேண்டும். உள்ளாட்சி வளர்ச்சி சம்பந்தப்பட்ட பிரச்சனைகளில் உள்ளூர் மக்களின் கருத்துக்களையும், விருப்பங்களையும் வெளிப்படுத்துகின்ற நிறுவனமாக இருக்க வேண்டும் என்று மேத்தா குழுவின் அறிக்கை குறிப்பிடுகின்றது.

பரந்த அளவில் செயலாற்றுகின்ற மக்களாட்சி அரசாங்கமானது உள்ளாட்சிப் பகுதிகளில் தேவைகளை போதுமான அளவு திருப்திகரமாகச் செய்ய இயலாது. எனவேதான் அதிகாரங்களும், செயலாட்சி நிறுவனங்களும் பன்முகப்படுத்தப்பட்டு அந்நிறுவனங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டதொரு உள்ளாட்சி நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இயங்க வேண்டும். இவ்வாறாகத் தான் அதிகாரங்கள் ஜனநாயக ரீதியில் பன்முகப்படுத்துதல் என்ற கொள்கை தோன்றியது.

## மாதிரி வினா

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள் யாவை?

# பாடம் – 7

## உள்ளாட்சிகள் அமைப்பு : ஊராட்சிகள்

உள்ளாட்சி நிருவாகத்தில் அடிப்படை அலகாக அமைக்கப்பட்டுள்ளது ஊராட்சியாகும். ஊராட்சிகள் அனைத்தும் அரசாங்கத்தால் அமைக்கப்படுகின்றன. இந்த மாதிரியாக அமைக்கப்படாமல், மக்களே கிராமங்களில் ஊராட்சிகள் அமைத்துள்ளனர். இவ்வூராட்சிகள், இன்றும் செயல்பட்டு வருகின்றன. ஊராட்சிகளிலிருந்து இவற்றைப் பிரித்துக் காட்டுவதற்காகக் கிராம அவைகள் என்றும் இவை சொல்லப்படுகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இரண்டு வகை ஊராட்சிகள் உள்ளன. இவை முதல் வகை ஊராட்சி, இரண்டாம்வகை பேரூராட்சியென்பனவாகும். தற்போது ஊராட்சிகள் கிராம ஊராட்சிகள், பேரூராட்சிகள் என இரண்டுவகை ஊராட்சிகள் இயங்கிக்கொண்டு வருகின்றன. இவ்வூராட்சிகள் மக்கள் தொகை, வருமானம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து, வகைப்படுத்தப்படுகின்றன. இந்த இருவகை ஊராட்சிகளைத் தவிர்த்து நகரியங்கள் (Townships) உள்ளன. அரசாங்கம் தனியான சில தன்மைகளை வரையறுத்து, இந்த நகரியங்களை அமைக்கின்றது. மக்கள் தொகை ஐயாயிரத்துக்குக் குறையாமலும், ஆண்டு வருமானம் சராசரி 1 இலட்சம் ரூபாய்களுக்குக் குறையாமலும் இருக்கும் ஒவ்வொரு வருவாய்க் கிராமத்தையோ கிராமங்களையோ, பேரூராட்சிகள் என்று பிரிக்கப்பட்டுள்ளன. தற்போது (14.6.04) பேரூராட்சிகளை மாநில ஊராட்சிகளாக மாற்றி அரசாங்கம் ஆணைபிறப்பித்துள்ளது. கிராம ஊராட்சிகளில் மக்கள் தொகை ஐந்நூறுக்குக் குறையாமல் இருக்கவேண்டும். சட்டமன்றம் தனியாக ஒரு தீர்மானம் நிறைவேற்றி, அதன்மூலம் ஒரு கிராமத்தை, தொழில்துறை, தொழிலாளர் குடியிருப்பு, ஆரோக்கிய வாசஸ்தலம் ஆகியவற்றை நகரியங்களாக அறிவிக்கின்றது. ஒரு தனித்தன்மையான நோக்கத்திற்காக, அரசாங்கத்தின் மூலம் நகரியங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

### அதிகார எல்லை

வருவாய் கிராமம் ஒன்றிலோ அதில் ஒரு பகுதியையோ, அல்லது அதைவிடப் பெரிதாகவோ இருக்கக்கூடிய பகுதிகளில் ஊராட்சிகள் அமைக்கலாமென்று 1950–க்கு முன்னர் உள்ள சட்டம் வரையறை செய்தது, எனவே ஊராட்சிகளின் அதிகார வரையறை எல்லை சிறிதும் பெரிதுமாக இருந்தன. பின்னர் 1950–ஆம் ஆண்டுச் சட்டம் ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஓர் ஊராட்சி கட்டாயமாக அமைக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தியது. இதற்காக வருவாய் கிராமம் முழுவதுமோ, வருவாய் கிராமம் பிரிந்தோ, ஏராளமான வருவாய் கிராமங்கள் இணைந்தோ இவ்வூராட்சிகள் அமைக்கலாமெனக் கூறியது. இதற்குச் சிற்றூர்கள் (hamlets) விதி விலக்கு. ஆனால் குறைந்தபட்ச மக்கள் தொகையானது 500 ஆக இருக்க வேண்டுமென்பதில் மாற்றமேதும் செய்யவில்லை. இருப்பினும் நடைமுறையைக் கணக்கிலெடுத்துக் கொண்டு, உயர்ந்த அளவு குறைந்தபட்ச மக்கள் தொகை 1000என வரையறுக்க வேண்டுமென முன்மொழியப்பட்டது. ஆகவே, மக்கள் தொகை 500–லிருந்து 1000 வரையிலும் இருந்தால், சட்டத்துவ ஊராட்சிகள் அமைக்கத் தடையேதுமில்லை. ஆனால் நடைமுறை வசதிக்காக இக்கிராமங்கள் அரசாங்கத்தின் விசேஷ அனுமதியைப் பெற்ற பின்னர்தான் ஊராட்சிகள் அமைக்க வேண்டுமெனவும் முன்மொழியப்பட்டது.

### ஊராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை

ஊராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகபட்சம் 15–ஆகவும், குறைந்த பட்சம் 5–ஆகவும் 1950–ஆம் ஆண்டுச் சட்டம் வரையறுத்தது. மக்கள் தொகையானது 1000மும் அதற்கு மேலும் இருந்தால் 5 வார்டுகளாகப் பிரிக்கலாமெனக் கூறியுள்ளது. மேலும் இரண்டாம் வகுப்பு ஊராட்சிகளில் உறுப்பினர்கள் பலர் தேர்ந்தெடுக்க வசதியாக வார்டுகள் ஏற்படுத்த வேண்டுமென வலியுறுத்தியது. ஒவ்வொரு வார்டிலும் குறைந்த பட்சம் 100 வாக்காளர்கள் இருக்கும் வகையிலும், வார்டுகள் குறுகலாக, செம்மையாக அமையும் படியும் நிருணயிக்க முன்மொழியப்பட்டன. இரண்டாம் வகுப்பு ஊராட்சிகளில் உறுப்பினர்களின் எண்ணிக்கை கீழ்க்கண்ட விதமாக அமைக்கப்பட வேண்டுமெனக் குழு கூறியுள்ளது:

மக்கள் தொகை உறுப்பினர்களின் எண்ணிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| 500க்கு | மேலும் | 700க்குக் கீழும் | ..... | 5 |
| 700 | மேலும் | 900க்குக் கீழும் | ..... | 6 |
| 1,100 | மேலும் | 1,300க்குக் கீழும் | ..... | 8 |
| 1,300 | மேலும் | 1,500க்குக் கீழும் | ..... | 9 |
| 1,500 | மேலும் | 1,700க்குக் கீழும் | ..... | 10 |
| 1,700 | மேலும் | 1,900க்குக் கீழும் | ..... | 11 |
| 1,900 | மேலும் | 2,100க்குக் கீழும் | ..... | 12 |
| 2,100 | மேலும் | 2,300க்குக் கீழும் | ..... | 13 |
| 2,300 | மேலும் | 2,500க்குக் கீழும் | ..... | 14 |
| 2,500க்கு மேல் | | | ..... | 15 |

இவர்கள் வார்டுகளிலுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கைக்கேற்ப விகிதாச்சார முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஆனால் ஒரே வார்டில் 5 உறுப்பினர்களுக்கு மேல் தேர்ந்தெடுக்கப்படக் கூடாது. ஊராட்சிகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை முன்கூறியபடி அமைத்தால், ஊராட்சியில் கூட்டுறவும், பிரிவுத் தன்மை நீங்கவும் அதிகமான வாய்ப்பு உள்ளது. ஏனெனில் ஓர் ஊராட்சியில் 2000 மக்கள் தொகை இருந்தால், 12 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 2000 மக்கள் தொகையுள்ள கிராமமானது ஏறக்குறைய 400 குடும்பங்களைக் கொண்டதாகவே இருக்கும். எனவே ஒவ்வொரு உறுப்பினரும் 30 அல்லது 40 குடும்பங்களின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதால், போட்டி அதிகமாக இருக்க வாய்ப்பில்லை 30 அல்லது 40 குடும்பங்களின் ஒற்றுமையுடன், அவர்களுக்குள் ஒருவர் தேர்ந்டுெக்கப்பட வழியுண்டு. எனவே பெரும்பாலும் உறுப்பினர்கள் போட்டியில்லாமலே தேர்ந்தெடுக்கப்பட்டனர். வட மதுரை ஊராட்சி ஒன்றியத்தில் புதிதாக நிறுவப்பட்ட 30 ஊராட்சிகளுக்குத் தேர்தல் நடத்தப்பட்டதில், ஒற்றுமையும், நல்லெண்ணமும்தான் அதிகமாகப் பிரதிபலித்தன. இரண்டு ஊராட்சிகளைத் தவிர்த்து, மற்ற ஊராட்சிகளில் தேர்தல் போட்டியில்லாமல் நடைபெற்றது. அந்த இரண்டு ஊராட்சிகளிலும்கூடக் கடுமையான போட்டி என்று கூறுவதிற்கில்லை, அங்கும் அமைதியாகவே நடைபெற்றுள்ளது.

## வகைப்படுத்தல்

ஊராட்சிகள், வருமானத்தின் அடிப்படையில் மூன்றுபடிநிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை மூன்றும் பெரிய ஊராட்சிகளில் அடங்கக் கூடியனவாகும். இவை தவிர்த்து, சிறிய ஊராட்சிகளும் உண்டு அவை:

| ஆண்டு வருமானம் | படிநிலை |
|---|---|
| ரூ. 20,000 முதல் 30,000 வரை | முதல் படிநிலை ஊராட்சி |
| ரூ. 10,000 முதல் 20,000 வரை | இரண்டாம் படிநிலை ஊராட்சி |
| ரூ. 5,000 முதல் 10,000 வரை | மூன்றாம் படிநிலை ஊராட்சி |
| ரூ. 5000–க்குக்கீழ் | சிறிய ஊராட்சி |

இந்த ஊராட்சிகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையானது 8 முதல் 16 வரையாகும். இந்த உறுப்பினர்கள் ஊராட்சியின் மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு நிருணயிக்கப்படவில்லை. ஏனெனில் உறுப்பினர்களின் எண்ணிக்கையானது மக்கள் தொகைக்கேற்ப வித்தியாசம் கொண்டதாக இருந்தாலும், சில ஊராட்சிகளில் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாகவும், சில ஊராட்சிகளில் உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவும் இருந்தன. இவை ஒருமித்த வகையில் பிரிக்கப்படவில்லை. உதாரணமாக ஓர் ஊராட்சியில் 13,053 மக்கள் தொகை தான். இதில் 16 உறுப்பினர்கள் இருந்தனர். மற்றொரு ஊராட்சியில் 36,000 பேர் இருந்தனர், ஆனால் உறுப்பினர்களின் எண்ணிக்கையானது அதே 16தான் இது முதல் படிநிலை ஊராட்சியில் காணப்படும் வித்தியாசம். இதே மாதிரியாக மற்ற படிநிலை ஊராட்சிகளிலும் உறுப்பினர்களின் எண்ணிக்கை வித்தியாசமாகவே இருந்தது.

ஊராட்சிகளில் சிறுபான்மையோர்களுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டன. சிறுபான்மையோர் பட்டியலில் கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள், பின்தங்கியோர் ஆகியோர் இருந்தாலும், எல்லா சிறுபான்மையோர்களுக்கும் கட்டாயமாக ஊராட்சியில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்பட்டது. சிறுபான்மை மக்கள் தொகையின் எண்ணிக்கைக்கு ஏற்ப, இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. எனவே, சிறுபான்மையோர்களுக்குத் தக்க வீதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டன. பதவியின் அடிப்படையில் (ex-officio) ஊராட்சியில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் கூட சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில் இல்லவே இல்லை. இருப்பினும் 1941–ஆம் ஆண்டில் உருவாக்கிய வரைவில் பதவியின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென ஆலோசிக்கப்பட்டாலும், பின்னர் கைவிடப்பட்டது. 1946–ஆம் ஆண்டில் கொண்டுவந்த சட்டத்தில் பதவியின் அடிப்படைப் பிரதிநிதித்துவம் இடம் பெறவில்லை. பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்பதுவும் இதில் இடம் பெறவில்லை. அப்போது பெண்களும் அதிகமாக அக்கறை காட்டவில்லை. பின்னர் மிகுதியான பெண்கள் ஆர்வம் காட்டியதால் பெண்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது.

1957–58–ஆம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் 267 முதல் வகுப்பு ஊராட்சிகளும், 7.210 இரண்டாம் வகுப்பு ஊராட்சிகளும் இருந்தன. இரண்டாம் வகுப்பு ஊராட்சிகள் 1953–54–ஆம் ஆண்டிற்குப் பிறகு சிறப்பான முன்னேற்றத்தை அடைந்துள்ளன. ஊராட்சி அமைப்பது குறித்த சட்டம் திருத்தப்பட்டு, வருவாய்க் கிராமங்களைப் பிரித்தும், குழுக்களாக அமைத்தும் ஊராட்சிகள் அமைக்கப்படலாமெனக் கொண்டுவரப்பட்டது. இதனால் சென்னை மாகாணத்தில் தெலுங்கு பேசப்படாத பகுதிகளில் 1951–52–இல் 4,309 ஊராட்சிகள் இருந்தன. இது 1953–54இல் 4,334ஆகவும், 1955–56–இல் 6,063 ஆகவும், 1956–57–இல் 6,984 ஆகவும், 1957–58–இல் 7,210 ஆகவும் உயர்ந்தது.

ஊராட்சியில் பெரும்பாலும் தேர்தல்கள் வாக்குச்சீட்டுக்களின் மூலமாகவே நடைபெற்றுள்ளன. சில ஊராட்சிகளில் ஊராட்சி உறுப்பினர்கள், மக்கள் தங்களது கைகளை உயர்த்தி அவர்களுக்கு ஆதரவைத் தெரிவித்ததன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இம்முறை சிறிய ஊராட்சிகளில் பெரும்பாலும் நடைபெற்றுள்ளது. ஊராட்சியில் அனைத்துப் பகுதி மக்களும் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தனர். நியாயமான பிரதிநிதித்துவம் (fair reperresentation) என்பது நடைமுறையில் இருந்துள்ளது. ஏனெனில், ஊராட்சியின் அதிகார எல்லையில் அமைந்துள்ள சிறிய கிராமங்கள் கூட ஊராட்சியில் பிரதிநிதித்துதும் பெற்றுள்ளன. ஊராட்சியில் உறுப்பினர் பதவி காலியாகிவிட்டால், மாவட்ட ஊராட்சி அதிகாரிக்குத் தெரியப்படுத்தி, அவர் புதிய தேர்தல் மூலம் காலியிடங்களை நிரப்புவார்.

பொதுவாக ஊராட்சியானது ஒவ்வொரு கிராமத்திற்கு ஒன்றென்ற அடிப்படையில் தான் அமைக்கப்பட்டது. ஆனால் பல கிராமங்கள் கொண்ட ஊராட்சிகளும் இருந்தன. இன்றும் இம்மாதிரி ஊராட்சிகள் உள்ளன. ஊராட்சித் தலைவர், ஊராட்சி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனவே கிராமத்தில் பிரிவும், பூசலும் தேர்தலின் போது பொதுவாக நடைபெற்று வந்துள்ளன. ஊராட்சி உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படவேண்டுமென்பதற்கும் ஆதரவு இருந்துள்ளது என்பதை 1941–ஆம்

ஆண்டுச் சட்ட வரைவு நமக்கு விளக்குகிறது. ஆனால் நியமன உறுப்பினர்கள் ஊராட்சியை ஒன்று முதல் மூன்று ஆண்டுகள் வரை நிருவகிக்கலாமெனச் சட்டம் கூறினாலும், நடைமுறையில் நிருவகித்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் ஊராட்சி சரியாக இயங்கவில்லையேல் கலைக்கப்பட்டது.

1947க்கு முன்னர் 300–க்கு மேற்பட்ட முதல் வகுப்பு ஊராட்சிகள் உள்ளன. இவை பெரும்பாலும் முன்னர் இயங்கிவந்த ஒன்றிய ஊராட்சிகள் (Union Panchayats) ஆகும். இவை நகரத்தன்மை கொண்டு விளங்குகின்ற காரணத்தால் நகராட்சிகளோடு ஒப்பீடு செய்து கொள்ளவும் முடிகின்றது. மக்கள் தொகை, வருமானம் ஆகியவற்றின் அடிப்படையில் இவற்றைக் கணக்கிட்டால் சிறிய அளவு நகராட்சிகள் மாதிரி உள்ளன. நகராட்சி நகரத்தன்மை பெற்றுள்ளது. ஆனால் முதல் வகுப்பு ஊராட்சிகள் சில நகரத்தன்மைகளை மட்டும் கொண்டுள்ளன. இரத்தினசபாபதி முதலியாரின் குழு ஊராட்சிகள் தானாகவே நகராட்சியாக மாறவேண்டுமென்ற ஒரு கருத்தை வெளியிட்டது. இக்குழு முதல் வகுப்பு ஊராட்சிகள் 20,000 பேர்களுக்கு மிகுதியாக இருந்தால், அவை தானாகவே நகராட்சிகளென மாற்றப்பட வேண்டுமெனக் கூறியது. ஆனால் இக்கருத்திற்குப் பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட காரணத்தால், செயலாக்கப்படவில்லை. தொழிற்சாலை, தொழிலாளர்கள், நிறுவன வகைக் குடியிருப்புக்களென அரசாங்கம் அங்கீகரிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நகரியங்கள் அமைக்கலாமெனத் தீர்மானிக்கப்பட்டது. இந்த நகரியங்கள் அருகிலுள்ள பகுதியில் அமைக்கப்பட்ட அமைப்பிலிருந்து பெரிதும் வித்தியாசமானவையாகும். சென்னை ஊராட்சிச் சட்டத்தில் நகரியம் அமைப்பது குறித்து அம்சம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்நகரியங்கள் ஊராட்சிச் சட்டம் அல்லது நகராட்சிச் சட்டம் ஆகியவற்றை வைத்துத்தான் செயல்படுமென்றாலும், அந்தந்த இடத்தின் சூழ்நிலைக்கேற்ப தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் செயல்படக் கூடியனவாகும்.

ஊராட்சி நிருவாகம் ஊராட்சி மன்றத்தால் நடத்தப்படுகின்றது. ஊராட்சி மன்றத்தின் உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அரசாங்கம்தான் முடிவு செய்கின்றது. இந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை மக்கள் தொகை அடிப்படையில் நிருணயம் செய்யப்படுகின்றது. ஊராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்த பட்சம் ஐந்தாகவும், உயர்ந்தபட்சம் பதினைந்துக்கு வேறுபடாமலும் இருக்கவேண்டுமென வரையறுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி மன்றத்திற்குக் கூட்டு நியமனம் (Co-option) மூலமாக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வழி செய்யப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்கள் பிரதிநிதித்துவம் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு ஊராட்சியிலும் கிராமம் அல்லது நகர ஊராட்சிகளின் மக்கள் தொகைக்கேற்ப இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்த இடங்கள் மூன்றுக்கு மிகாமல் இருக்க வேண்டுமெனவும் வரையறுக்கப்பட்டுள்ளது. தவிர, ஊராட்சி மன்றத்தில் பெண் உறுப்பினர்கள் எவரும் இடம் பெறவில்லையேல், ஊராட்சி மன்றம் பெண் உறுப்பினர் ஒருவரைக் கூட்டு நியமனம் மூலமாகத் தேர்ந்தெடுக்க வழி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக ஊராட்சி மன்றம் மக்களின் பொதுநலனைக் கருதுவதோடு, தாழ்த்தப்பட்டோர்கள், பெண்கள் ஆகியோர்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, இடங்கள் ஒதுக்கீடு செய்து செயல்பட்டு வந்துள்ளன.

## பதவிக்காலம்

ஊராட்சி மன்றத்தின் பதவிக்காலம் முதலில் மூன்று ஆண்டுகளாக நிருணயிக்கப்பட்டு இருந்தது. ஆனால் ஆண்டுதோறும் ஊராட்சிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே சென்ற காரணத்தாலும், அடிக்கடி தேர்தல்கள் நடத்துவதால் மக்கள் மத்தியில் போட்டியும் பொறாமையும் தோன்றி, மக்களது அமைதியைக் கெடுத்ததாலும், தேர்தல்கள் குறுகிய காலத்திற்கொருமுறை நடத்துவதால் அரசாங்கத்தின் செலவும் அதிகரிக்கவே, பதவிக்காலத்தை நீட்டவேண்டுமென அனைவரும் விருப்பம் தெரிவித்தனர். இதன் காரணமாக, 1970–ஆம் ஆண்டு செய்த திருத்தத்தின் விளைவாக, பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகக் கூடியது. புதிய ஊராட்சிச் சட்டத்தின்படியும், பதவிக் காலம் ஐந்தாண்டுகள் ஆகும்.

ஊராட்சியின் கூட்டங்களுக்குத் தலைவர் தலைமை தாங்குகிறார். அவர் வந்திராவிடில் துணைத்தலைவர் தலைமை தாங்க வேண்டும். அவ்விருவரும் வராவிட்டால் அந்தச் சமயத்திற்காக ஊராட்சியிலுள்ள உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் தலைமை தாங்க வேண்டும். தலைவர் ஊராட்சியின் கூட்டங்களில் ஒழுங்கு குலையாமல், தவறு நேராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் கூட்டங்களில் ஏற்படும் ஒழுங்கைப் பற்றியும், அங்கு எழும் எல்லாப் பிரச்சனை பற்றியும் அவர் தீர்ப்புக் கூற வேண்டும். ஒழுங்கு பிரச்சனை பற்றியும் அவர் தீர்ப்புக் கூற வேண்டும் ஒழுங்கு முறையைப் பற்றிய எந்தப் பிரச்சனை குறித்தும் கூட்டத்தில் பேச்சோ, விவாதமோ கூடாது. ஒழுங்கு முறையைப் பற்றிய எந்தப் பிரச்சனையைக் குறித்தும் தலைவர் செய்யும் முடிவே இறுதியானது. குறிப்பிட்ட ஒரு சமயத்தில் தலைமை தாங்குபவர், துணைத் தலைவராயினும் சரி, உறுப்பினராயினும் சரி, அவர் தலைமை தாங்கும் வரையில் தலைவருக்குள்ள அதிகாரம் யாவும் அவருக்கும் உண்டு. ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியங்களின் ஒவ்வொரு கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகளுக்கு ஒரு நகலையும், அக்கூட்டம் முடிந்து 48 மணி நேரத்திற்குள் கூட்டத்திற்கு வந்திருந்த உறுப்பினர் எவரிடத்திலாவது வரப்பெற்ற கருத்து வேற்றுமைக் குறிப்புகளையும் சம்பந்தப்பட்ட ஊராட்சித்தலைவர் கூட்டம் நடந்த மூன்று நாட்களுக்குள் ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு அனுப்ப வேண்டும். எனினும் அத்தகைய குறிப்புகளைப் பொதுவாக அல்லது குறிப்பிட்ட வகைப்பட்டவைகளை இதன் பொருட்டுத் தம்மிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள எந்த அதிகாரிக்கும் அனுப்புமாறு ஆய்வாளர் கட்டளையிடலாம்.

தலைவரைத் தானே தீர்மானம் கொண்டு வருவதன் மூலம் நீக்கலாம்; அல்லது ஊராட்சியின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத உறுப்பினர்களால் குற்றச்சாட்டு அறிக்கை அடங்கிய எழுத்து மூலமான முறையீடு, ஊராட்சியின் ஏதாவது இரண்டு உறுப்பினர்களால் ஆய்வாளரிடம் நேரடியாக அளிக்கப்பட வேண்டும். அக்குற்றச் சாட்டுகளில் ஊராட்சித் தலைவர் சட்டத்தின் ஏற்பாடுகளை. பிறப்பிக்கப்பட்ட விதிகள், துணைச்சட்டங்கள், சட்டதிட்டங்கள் போன்றவற்றை வேண்டுமென்றே நிறைவேற்றாது விட்டுவிட்டார் அல்லது மறுக்கிறார், அதிகாரங்களைத் தவறாக, துஷ்பிரயோகப்படுத்தினார் என ஆய்வாளர் கருதினால், எழுத்து வடிவில் தவறுதல்கள் சம்பந்தமாய் விளக்கம் தெரிவிக்கும்படி ஊராட்சித் தலைவரை அவர் கேட்கலாம். தலைவரது விளக்கம் திருப்திகரமானது என ஆய்வாளர் கருதினால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமல் விட்டு விடலாம். முன் விளக்கம் திருப்திகரமானது என ஆய்வாளர் கருதினால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமல் விட்டு விடலாம். முன் விளக்கம் கிடைக்கவில்லையென்றாலும் விளக்கம் திருப்திகரமானதாயில்லை என்று தாம் கருதினாலும், ஆய்வாளர் தலைவரைப் பதவியிலிருந்து விலக்கத் தமது ஆலோசனையை வட்டாட்சித் தலைவருக்கு அனுப்ப வேண்டும். பின்னர் வட்டாட்சித்தலைவர் ஊராட்சித் தலைவரைப் பதவியிலிருந்து விலக்குவதற்கான ஆலோசனையை ஆராய்வதற்காக ஊராட்சிக் கூட்டம் ஒன்றைக் கூட்ட வேண்டும். தலைவருக்கும் ஊராட்சியின் எல்லா உறுப்பினர்களுக்கும் கூட்டத் தேதிக்கு ஏழு முழு நாட்களுக்கு முன்பாகவாவது கூட்ட நகலை வட்டாட்சித் தலைவர் சேர்ப்பிக்க வேண்டும். இக் கூட்டத்திற்கு வட்டாட்சித் தலைவர் தலைமை வகிக்க வேண்டும். அவரைத் தவிர வேறுயாரும் அங்கே தலைமை வகிக்கக்கூடாது. கூட்டத்திற்கு நியமிக்கப்பட்ட நேரத்திலிருந்து அரைமணி நேரத்திற்குள் வட்டாட்சித் தலைவர் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க வராவிட்டால் வட்டாட்சித் தலைவர் நியமிக்கிற இன்னொரு நேரத்திற்கு இக் கூட்டம் ஒத்திவைக்கப்படும். இந்த நேரத்தைக் குறித்து வட்டாட்சித் தலைவர் உறுப்பினர்களுக்கும் தலைவருக்கும் தெரியப்படுத்த வேண்டும். கூட்டத்தில் தலைமை வகிக்க வட்டாட்சித் தலைவருக்கு முடியவில்லையென்றால் அவர் அதற்கான காரணங்களை எழுதி வைத்துவிட்டு, தாம் நியமிக்கக் கூடிய இன்னொரு காலத்திற்குக் கூட்டத்தை ஒத்திவைக்கலாம். அவ்வாறு நியமிக்கிற தேதி, கூட்டப்பட்ட கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட தேதியிலியிருந்து முப்பது தினங்களுக்கு மேற்படக்கூடாது. ஒத்திவைத்த கூட்டத்திற்கான காலத்தைப் பற்றிக் குறைந்தது ஏழு முழுநாட்களுக்கு முன் உறுப்பினர்களுக்கும் தலைவருக்கும் அறிவிப்பு அனுப்ப வேண்டும். தலைவரை விலக்குவதற்கான யோசனையை ஆராய்வதற்கென்று கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தை எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஒத்திவைக்கக் கூடாது.

அதற்கெனக் கூட்டப்பட்ட கூட்டம் ஆரம்பமானதும், வட்டாட்சித் தலைவர், ஆய்வாளர் அனுப்பிய அறிவிப்பையும், ஊராட்சித் தலைவர் விளக்கம் ஏதேனும் அனுப்பியிருந்தால் அதையும் ஊராட்சிமன்றத்தில் படித்துக்காட்ட வேண்டும். இவற்றை ஆராய்வதற்கென்றே தம்மால் இக்கூட்டம் கூட்டப்பட்டுள்ளது என்றும் கூறவேண்டும். வட்டாட்சித் தலைவர் இந்த அறிவிப்பின் அல்லது விளக்கத்தின் நன்மைகளைப் பற்றிப் பேசக்கூடாது. கூட்டத்தில் அவருக்கு வாக்களிக்க உரிமையும் இல்லை. ஆய்வாளர் அனுப்பிய யோசனையை ஏற்றுக்கொண்டோ, நிராகரித்தோ ஊராட்சி மன்றம் முடிவு செய்யும். அம்முடிவை கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகளில் முறையே எழுதி வைக்க வேண்டும். அந்த நடவடிக்கைக் குறிப்புகளின் நகல் ஒன்றை கூட்டம் முடிந்தவுடன் வட்டாட்சித் தலைவர் ஆய்வாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும். அந்த யோசனையை ஊராட்சி மன்றம் அக் கூட்டத்தில் ஏற்றுக் கொண்டிருந்தால் ஊராட்சி தலைவர் பதவியிலிருந்து விளம்பரம் மூலமாக ஆய்வாளர் நீக்கி விடலாம், இவ்வாறு விலக்கப்பட்டவர் ஓராண்டு முடிவதற்குள் தலைவராகத் தேர்ந்தெடுப்பதற்கு தகுதிபெற மாட்டார். இவ்வாறாகத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு வரையறை செய்யப்பட்டு உள்ளது.

ஊராட்சி உறுப்பினர்கள் மக்கள் விரும்பும் பணிகளையும், மக்களது தேவைகளையும் உணர்ந்து செயல்படக் கூடியவர்கள். ஊராட்சி நிருவாகத்தில் அதிக அக்கறை கொண்டவர்கள். ஊராட்சி வேலைகள் செய்யும் பொழுது ஏற்படுகின்ற தடைகளையும் ஊராட்சியின் சொத்துக்கள் அழிக்கப்படும்போது இவ் விஷயங்களை ஊராட்சி உறுப்பினர் சம்பந்தப்பட்ட நிருவாக அதிகாரி அல்லது ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். பொதுச் சொத்துக்கள் அழிக்கப்படும்போது அனைவருமே தடுக்க வேண்டுமென்பது ஒவ்வொருவரின் கடமை என்றாலும் ஊராட்சிப் பிரதிநிதிகள் மிகவும் விழிப்பாகச் செயல்பட வேண்டுமென்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஊராட்சிப் பணிகள் குறித்து உறுப்பினர் தீர்மானம் கொண்டு வரலாம், ஊராட்சிப் பணிகள் செய்யாமல் இருந்தால், அதற்குரிய விவரங்களைக் கேட்க, ஒவ்வொரு உறுப்பினரும் உரிமை பெற்றுள்ளர். ஊராட்சி அலுவலகத்தில் நடைபெறுகின்ற செயல்களை, அதாவது ஆவணங்களைப் பார்வையிடவும் ஊராட்சி உறுப்பினர்கள் அதிகாரம் கொண்டுள்ளனர். ஆனால் ஆவணங்களைப் பார்ப்பதற்கு, ஆணையாளர் எழுத்து மூலமாகக் காரணங்களைக் காட்டி பார்வையிட முடியாமல் தடுக்கவும் செய்யலாம். பொதுவாக ஆவணங்களைப் பார்க்க உறுப்பினர்கள் உரிமை பெற்றவர்களெனினும், பொது நன்மையைக் கருதி, பொது நன்மைக்குப் பங்கம் விளைவிக்குமென எண்ணினால் ஆணையாளர் பார்வையிடுவதைத் தடுத்துவிடுவார். ஊராட்சி உறுப்பினர்கள், தலைவர், துணைத்தலைவர் போன்றோர்கள் மக்களுக்காகப் பணியாற்றுகின்றவர்களேயாயினும், அவர்களது பணிக்கு ஈடாக ஊதியம் ஏதும் பெறக் கூடாது, வழங்கவும் கூடாது எனக் கண்டிப்பாக வரையறுக்கப்பட்டுள்ளது. இன்றைய அளவில் ஊராட்சிகள் மிகவும் சிறியதாகவே அமைந்து கொண்டே வருகின்ற காரணத்தால், ஊதியம் வழங்கி உறுப்பினர்களின் ஒற்றுமையையும் மக்களின் ஒற்றுமையையும் குலைத்து விடக்கூடாது.

ஊராட்சிக் கூட்டங்கள் கூடுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் உறுப்பினர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் உறுப்பினர்களின் வருகை திருப்திகரமாக இருந்ததெனக் கூற முடியாது ஏனெனில் 50 விழுக்காடு வருகைதான் பெரும்பாலும் இருந்து வந்துள்ளது. சில ஊராட்சிகள் அரிதாகவே கூட்டங்களைக் கூட்டின. பல மாதங்களாகக் கூட்டம் கூட்டாமலும் இருந்து வந்துள்ளன. சில ஊராட்சிகள், பெரிய ஊராட்சிகளின் நிலையே இந்த மாதிரியாக இருந்தால், சிறிய ஊராட்சிகள் எப்படியிக்குமென நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளமுடியும். ஊராட்சிகள் திருப்திகரமாகச் செயல்பட வில்லையேல், தள்ளிவைக்கப்படும். ஊராட்சிகள், கிராமப்பிரிவு, பிரிவினை, அரசியல், கூட்டங்களைப் பகிஷ்காரம் செய்தல், வரி விதிப்பிற்கு எதிர்ப்புச் செய்தல், நியமனங்களில் சொந்தக்காரர்களை நியமித்தல், அரசாங்க நிதியைத் தவறாகப் பயன்படுத்துதல், அதிகாரங்களைப் பணியாற்றவிடாது தடுத்தல் போன்றவற்றால் தான் ஊராட்சிகள் கலைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. ஊராட்சிகள் கலைக்கப்பட்டு, அதிகாரிகளை நியமித்து அவர்களின் மூலம் நிருவகிக்கப்பட்டன.

ஊராட்சி மன்றக் கூட்டங்களுக்கு உறுப்பினர்கள் தவறாது வருகை தரவேண்டும். தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைகள் கொண்ட கூட்டங்களுக்கு உறுப்பினர்கள் வருகை தரவில்லையேல் பதவி நீக்கமும் செய்யப்படுகின்றனர். கூட்டங்களுக்கு ஊராட்சித் தலைவர் தலைமை தாங்கி நடத்துகிறார். ஊராட்சியின் கவனத்திற்கு வரும் ஒரு பிரச்சனையில் உறுப்பினர் எவராவது நேரடியாகவோ, மறைமுகமாகவோ பணசம்பந்தமுடைய அக்கறை கொண்டவர்களாக இருந்தால், அவ் உறுப்பினர்கள் அப்பிரச்சனையில் வாக்களிக்கவும், அந்த விவாதத்தில் கலந்து கொள்ளவும் கூடாது. உறுப்பினர் மறுப்பு தெரிவித்தால், கூட்டத்தின் தீர்ப்பே முடிவானதாகும்.

நகரியங்களை நிருவகிக்க நகரியக் குழுக்களை அரசாங்கம் நியமிக்கின்றது. நகரியப்பணிகள் ஊராட்சிகள் செய்யும் பணிகள் போல் அமைக்கப்படுகின்றன. எனவே அப்பேர்ப்பட்ட சமயங்களில் ஊராட்சியின் சட்டம் நகரியங்களுக்கும் பொருந்தும், நகரியக்குழுக்களின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய முறை, யார்? யார்? நகரியத்தில் இடம் பெறவேண்டும் என்பதும் பற்றியும், நகரியக்குழுவின் தலைவர் தலைவருக்கும் உறுப்பினர்களுக்குமுள்ள தொடர்புகள், தலைவர் நியமனம் செய்யப்பட வேண்டுமா அல்லது தேர்ந்தெடுக்கப்படவேண்டுமா என்பதையும் அரசாங்கமே நிருணயிக்கின்றது. மேலும் உறுப்பினர்கள், தலைவர் ஆகியோர்களின் பதவிக்காலம், நகரியத்தின் வரையறை நிபந்தனைகள், கடமைகள் மற்றும் நகரியத்திற்குரிய நடைமுறைகள் போன்றவற்றையும் அரசாங்கமே நிர்ணயம் செய்கின்றது. எனவே, நகரிய நிருவாகத்தைப் பொறுத்தவரை அதனைத் தனித்தன்மையோடு செயல்பட வைக்க அரசாங்கம் முழு அதிகாரத்தையும் கொண்டுள்ளது. உள்ளாட்சிகளில் நகரியம் தனித்தன்மை பெற்றது

இந்தியாவில் ஒவ்வொரு ஊராட்சியிலும் சராசரி மக்கள் தொகை 1914எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை 65 விழுக்காடு ஊராட்சிகள் தான் இந்த மக்கள் தொகையைக் கொண்டுள்ளன. தவிர 179 ஊராட்சிகளில் வரையறுக்கப்பட்டுள்ள 500 பேர்களுக்கும் குறைவாகவே உள்ளனர். ஆனால் ஒரு கிராமத்திற்கு ஒரு ஊராட்சி என்று இருந்தால், கிராமத்தை அடிப்படை அலகாக எடுத்துக் கொள்ளலாம். அதற்குக் கிராமங்கள் போதுமான மக்கள் தொகையைக் கொண்டிருக்கவில்லை. எனவேதான் ஒரு ஊராட்சியில் ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்கள் அடங்கியுள்ளன. 8 கிராமங்கள், 10 கிராமங்கள் எனப் பல கிராமங்களைக் கொண்டிருக்கக்கூடிய ஊராட்சிகளும் தமிழகத்தில் உள்ளன. சாதாரண மாக ஒவ்வொரு ஊராட்சியும் நான்கு அல்லது ஐந்து கிராமங்களைக் கொண்டுள்ளன. ஆகவே ஓர் ஊராட்சி எவ்வளவு மக்கள் தொகையைக் கொண்டிருக்க வேண்டும் என்பது பல காலமாகக் கேட்கப்பட்டு வரும் கேள்வி. இந்தியாவைப் பொறுத்தவரை 1000 மக்கள் தொகையாக ஒவ்வொரு கிராமமும் இருக்க வேண்டுமாயின் 36.8 விழுக்காடு அதாவது, 1,66,286 கிராமங்கள் 1000க்கு குறைவான மக்கள் தொகையைக் கொண்டிருக்கின்றன. இந்தியாவில் கிராமங்களின் மொத்த எண்ணிக்கை 4,51,623 ஆகும்.

தமிழகத்தில் கிராம ஊராட்சிகள் ஒவ்வொரு மாவட்ட ஆட்சித்தலைவரின் உதவியாளர்களின் கண்காணிப்பில் செயல்படுகின்றன. அவர்கள்தான் அந்தந்த மாவட்டங்களுக்குப் பொறுப்பாளர்கள். தமிழக ஊராட்சி வளர்ச்சி இயக்குநகரம் ஊராட்சி ஒன்றிய நடவடிக்கைகளைக் கண்காணிக்கின்றது. ஐந்நூறுக்கும் குறையாமல் இருக்கக்கூடுமென மதிப்பிடப்பட்டுள்ள மக்கள் தொகையுடன் கூடியதொரு வருவாய்க் கிராமத்தை அல்லது கிராமங்களை, அல்லது ஒரு வருவாய்க் கிராமத்தின் பகுதி எதையும், அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய்க் கிராமங்களை ஒட்டியுள்ள பகுதிகளை கொண்டிருக்கின்ற உள்ளாட்சிப் பரப்பிடம் ஒவ்வொன்றிலும் ஊராட்சி அமைக்கலாம்.

## ஊராட்சி மன்றம்

ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு ஊராட்சி மன்றம் இருக்கும். ஊராட்சி மன்ற உறுப்பினர்களையும், ஊராட்சித்தலைவரையும் மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுப்பர். இதற்காக கிராமங்கள் பல வார்டுகளாக பிரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வார்டிலிருந்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஊராட்சியில்

ஒன்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் இருப்பதால் எல்லாக் கிராமங்களிலிருந்தும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். 18வயது நிறைவு பெற்றவர்கள் வாக்களிக்கத் தகுதியுடைய வாக்காளர்கள்.

## கிராம ஊராட்சித் தலைவரின் கடமைகள் மற்றும் அதிகாரங்கள்

கிராம ஊராட்சியின் தலைவர் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். கிராம ஊராட்சியின் தலைவர் என்ற முறையில் சட்ட ரீதியாகச் சில கடமைகளும் அதிகாரங்களும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன. அவைகளாவன.

❖ கிராம சபைக் கூட்டங்களை வருடத்திற்கு நான்கு முறை (ஜனவரி 26, மே.1,ஆகஸ்ட். 15, அக்டோபர் 2) கூட்ட வேண்டும். கிராம ஊராட்சியின் கூட்டங்களை மாதம் ஒரு முறை கூட்ட வேண்டும் இவற்றின் கூட்டங்களில் தலைமை ஏற்று முறையாக நடத்தி தீர்மானங்கள் பதிவு செய்ய வேண்டும். புதிதாக பதவியேற்கும் உறுப்பினர்களை உறுதி மொழி எடுக்கச் செய்து தீர்மானப் புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டும். கிராம ஊராட்சிக் கூட்டங்களுக்கான தேதி மற்றும் கூட்டப் பொருள்கள் முடிவு செய்வது மற்றும் கூட்டத்தில் தீர்மானங்களை பதிவு செய்து கிராம சபையின் ஒப்புதல் பெற வேண்டும். கிராம ஊராட்சிக்கான வளர்ச்சித் திட்டம் தயார் செய்து கிராம சபையின் ஒப்புதல் பெற வேண்டும். பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களை உறுப்பினர்களுடன் இணைந்து செயல்படுத்த வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் அடுத்து வரும் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்டம் தயார் செய்து கிராம சபை மற்றும் கிராம ஊராட்சியின் ஒப்புதல் பெற வேண்டும். சட்டத்தின் பல்வேறு பிரிவுகளில் தலைவருக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள கடமைகளை ஆற்றுதல் மற்றும் அரசு அவ்வப்போது பிறப்பிக்கும் ஆணைகளைச் செயல்படுத்த வேண்டும்.

ஒரு கிராம ஊராட்சியின் தலைவரே அக்கிராம ஊராட்சியின் நிர்வாக அலுவலராகச் செயல்பட சட்டம் அதிகாரமளித்துள்ளது. எனவே நிர்வாக அதிகாரி என்ற முறையில் தலைவர் சில கடமைகளைச் செயல்படுத்தி, பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும்.

❖ கிராம ஊராட்சியின் தீர்மானங்களை நிறைவேற்றுதல் ஆய்வாளரால் இசைவளிக்கப்பட்ட பணியிடங்களுக்கான அலுவலர்களையும், ஊழியர்களையும் நியமித்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் அவர்களின் பணியைக் கண்காணித்தல். அலுவலக வேலைகள், கடிதப் போக்குவரத்து செய்தல், பதிவேடுகள் பராமரித்தல். கிராம ஊராட்சியின் நிதி நிர்வாகம் கவனித்தல், வரிகளை வசூலித்தல். வரவு செலவுத் திட்டம் தயாரித்தல். வழக்குகள் தொடர்தல், குற்றச்சாட்டு செய்தல். கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்க உதவுதல், நிகழ்ச்சி நிரலை உறுப்பினர்களுக்கு சேர்ப்பித்தல். ஊராட்சியின் ஆண்டுத் திட்டம் தயாரிக்க கிராம ஊராட்சிக்கு உதவுதல். வளர்ச்சித் திட்டங்களையும் அரசு அளிக்கும் பிற கடமைகளையும் நிறைவேற்றுதல். சொத்துக்களைப் பாதுகாத்தல், பேணுதல்; தேவைப்படும் சமயங்களில் அவசர கால அதிகாரங்கள் பிரயோகித்தல் பிற துறை அலுவலர்கள் மற்றும் பள்ளி, கூட்டுறவு போன்ற நிறுவனங்களின் பொறுப்பாளருடன் இணைந்து கிராம முன்னேற்றத்திற்கு பாடுபடுதல். உறுப்பினர்கள் தகுதியிழந்தால் அறிவிப்பு கொடுத்து மேல் நடவடிக்கை எடுத்தல். காலியிடங்கள் பற்றி ஆய்வாளருக்கு அறிக்கை அனுப்பி தேர்தல் நடத்த ஏற்பாடு செய்தல்.

## நிர்வாகக் கடமைகள்

நடந்து முடிந்த மாதத்தின் கணக்குகளை30ல் பதிவு செய்து அடுத்த மாதம் 5–ஆம் தேதிக்குள் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

கிராம ஊராட்சிக்கான கீழ்க்கண்ட மூன்று கணக்குகளை பராமரிக்க வேண்டும். அவை கிராம ஊராட்சி பொதுக் கணக்கு, ஒதுக்கப்பட்ட நிதிக் கணக்கு, திட்ட நிதிக் கணக்கு

இவை தவிர குடிநீர்த் திட்டத்திற்கான கணக்கையும் தனியாகப் பராமரித்தல். தலைவர் மற்றும் துணைத் தலைவர் அல்லது இரண்டாம் கையெழுத்திடுவதற்காக ஆய்வாளரால் ஒப்புதல் பெற்று தேர்வு

செய்யப்பட்ட உறுப்பினரின் கையொப்பத்துடன் காசோலை வழங்குதல். ஒரே நேரத்தில் அவசரம் கருதி ரூ.2000 வரை மதிப்பீடுள்ள பணிகளை ஓராண்டிற்கு ரூ.5000க்கு மிகாமல் அளவீடு இல்லாமல் செய்யலாம். திட்ட நிதிக் கணக்கில் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் பட்டியலில் வட்டார வளர்ச்சி அலுவலரால் (ஊராட்சி) இசைவளிக்கப்பட்ட பின்பு தான் காசோலை வழங்கப்பட வேண்டும். ஒதுக்கப்பட்ட நிதிக் கணக்கு மற்றும் கிராம ஊராட்சி நிதியிலிருந்து ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இடம் பெற்ற பணிகளுக்கு மட்டும் செலவினம் மேற்கொள்ளலாம். இவ்வாறு மேற்கொள்ளப்படும் பணிகளில் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மூலதனப் பணிகளையே மேற்கொள்ள வேண்டும்.

## அதிகாரங்கள் துணைத் தலைவரை அல்லது துணைத் தலைவர் இல்லாத நிலையில் உறுப்பினரை சென்றடைதல்

1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 47, உட்பிரிவு 3ன் படி கிராம ஊராட்சித் தலைவர் பதவி காலியாக இருந்தாலோ 30 தினங்களுக்கு மேல் அவர் கிராம ஊராட்சி எல்லையில் இல்லாமலிருந்தாலோ அல்லது நோய்வாய்ப்பட்டு இருந்தாலே அவரது பொறுப்பு முழுவதும் துணைத் தலைவரைச் சாரும். கிராம ஊராட்சித் தலைவர், துணைத் தலைவர் பதவிகள் காலியாகவிருந்தாலோ அல்லது ஒரு பதவி காலியாகயிருந்து மற்றவர் மேற்சொன்னவாறு 30 தினங்களுக்கு மேல் தம் கடமையினைச் செயலாற்ற முடியாத நிலையிலிருந்தாலோ ஆய்வாளர் அக்கிராம ஊராட்சி உறுப்பினர்களில் ஒருவரை அல்லது உறுப்பினர் எவரும் பொறுப்பினை ஏற்க முன் வரவில்லையெனில் யாரேனும் ஒரு நபரை கிராம ஊராட்சியின் தற்காலிக தலைவராக நியமனம் செய்யலாம். தலைவரது பொறுப்புக்களை புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் அல்லது பதவியிலிருக்கும் தலைவர், துணைத்தலைவர் யாரேனும் மீண்டும் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளும் வரையில் ஏற்று செயல்படுத்த வேண்டும். கிராம ஊராட்சித் தலைவர் தொடர்ந்தாற் போல் 30 தினங்களுக்கு மேல் ஊராட்சி எல்லையில் இல்லாமலிருந்தாலோ அல்லது நோய்வாய்ப்பட்டிருந்தாலோ அவ்வேளையில் தலைவர் பொறுப்புக்களை பொறுப்புக்களை நிறைவேற்ற துணைத் தலைவர்/உறுப்பினர் எப்படி பணியாற்ற வேண்டும் என்பதற்கான சில வரைமுறைகளை கிராம ஊராட்சி விதிக்கலாம்.

## கிராம ஊராட்சிக் கூட்டங்கள்

கூட்டங்கள் மூன்றுவித நோக்கங்களை நிறைவேற்றுகின்றன.

கிராமத்தில் செல்வாக்குப் பெற்ற மற்றும் பெரும்பான்மையினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பல உறுப்பினர்கள் கூடி ஒரு பொருளைப் பற்றி பேசி, சாதக பாதகங்களை அலசி ஆராய்ந்து, அவரவர்களது கருத்துக்களை எடுத்துரைத்து இறுதியில் ஏகோபித்த ஒரு முடிவிற்கு வருவதற்கு வகை செய்கிறது. ஒரு தனிநபர் ஒரு பொருளைப் பற்றி முடிவு செய்வதை விட பல பேர்கள் கூடி ஒருமித்த ஒரு முடிவிற்கு வருவதால், கிராம ஊராட்சியின் மக்களில் பெரும்பாலோரும், சமூகத்தில் செல்வாக்குப் பெற்றவர்களும் கூட கிராம ஊராட்சியின் முடிவை ஏற்று தங்களது ஒத்துழைப்பை நல்கத் தயாராகிறார்கள். எனவே மக்களது ஒத்துழைப்பைப் பெறுவதற்கு கூட்டங்களில் முடிவு செய்வது சிறந்தது.

தனது கடமையை நிறைவேற்றுவதற்காக, தானே தீர்மானிக்கும் நாளில், கிராம ஊராட்சி அலுவலகத்தில் கூட்டம் நடத்தப்படவேண்டும். அவ்வாறு கூட்டம் நடத்த வேண்டும் என்பது சட்டப்படியான ஒரு கடமை ஆகும். கிராம ஊராட்சியின் கூட்டங்கள் முறையாக நடத்தப்படவில்லையென்றால் அக்கிராம ஊராட்சியின் மீது நடவடிக்கை எடுக்கலாம். விதிகளின்படி, கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றிய பின்னரே கிராம ஊராட்சி தனது பணிகளைச் செயல்படுத்த முடியும்.

## கிராம ஊராட்சி கூட்டங்களின் வகைகள்

கூட்டங்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவைகளாவன

1. சாதாரணக் கூட்டம்
2. அவசரக் கூட்டம்
3. சிறப்புக் கூட்டம்
4. வேண்டுகோள் கூட்டம்

ஒவ்வொரு வகையான கூட்டமும் ஒவ்வொரு தன்மையுடன் கூடியவையாகும். அவற்றைக் கீழே காணலாம்.

## சாதாரணக் கூட்டம்

ஒவ்வொரு மாதமும் சாதாரண முறையில் வழக்கமாக நிர்வாக அலுவல்கள் குறித்து முடிவு செய்வதற்காகக் கூடுவது சாதாரணக் கூட்டம் எனப்படும். இவ்வகையான கூட்டங்கள் கண்டிப்பாக மூன்று நாட்கள் கால அவகாசம் கொடுத்து நடத்தப்பட வேண்டும்.

சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருட்களை தவறாது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

- ❖ முந்தைய கூட்டங்களில் ஒத்தி வைக்கப்பட்ட பொருள்
- ❖ கடந்த மாத வரவு செலவுகளை செலவுச்சீட்டு வாரியாக பரிசீலனை செய்தல்
- ❖ பல்வேறு வரவினங்களில் கேட்பு மற்றும் வசூல் விபரங்கள் பற்றி பரிசீலித்தல்
- ❖ திட்டப்பணிகள் மற்றும் வேலைகளின் முன்னேற்ற அறிக்கையை பரிசீலித்தல்
- ❖ ஆய்வு செய்த அலுவலர்கள் அறிக்கைகளை பார்வையிடல்
- ❖ சட்டப்படி அவ்வப்போது பரிசீலனை செய்ய வேண்டிய பொருட்கள் அரசாணைகள் மற்றும் சுற்றிக்கைகள்

இவை தவிர வரவு செலவுத் திட்டம், கிராம வளர்ச்சித் திட்டம், நிர்வாக அறிக்கை போன்றவற்றை அந்தந்த சந்தர்ப்பங்களில் கிராம ஊராட்சிக் கூட்டங்களில் அறிவுரைகளின்படி வைக்க வேண்டும்.

## அவசரக் கூட்டம்

வழக்கமான முறையில் அல்லாது அவசரமாகக் கூடி அவசரமான பிரச்சனைகளைப் பரிசீலித்து முடிவு செய்ய வேண்டிய அவசியம் நேர்ந்தால் கிராம ஊராட்சி, குறைந்த கால அவகாசத்தில் கூடி முடிவுகள் எடுத்து தீர்மானம் நிறைவேற்றலாம். இவ்வகையில் நடைபெறும் கூட்டங்கள் அவசரக் கூட்டம் எனப்படும். இத்தகைய கூட்டங்களுக்கு 24 மணி நேர அவகாசத்திற்குக் குறையாமல் கூட்ட அறிவிப்பு கொடுக்க வேண்டும்.

## சிறப்புக் கூட்டம்

சாதாரண முறையில் இல்லாமல் ஒரே ஒரு முக்கியமான பொருள் குறித்து கலந்து பேசி முடிவு செய்வதற்காகக் கூட்டப்படும் கூட்டம் சிறப்புக் கூட்டம் எனப்படும். சட்டத்தின் படியோ அல்லது விதிகளின்படியோ சிறப்புக் கூட்டத்தில் மட்டுமே பரிசீலித்து முடிவு செய்யப்பட வேண்டிய பொருட்கள் சிறப்புக் கூட்டத்தில் மட்டுமே பரிசீலிக்கப்பட்டு முடிவு செய்யப்பட வேண்டும். இவ்வகையான கூட்டங்களுக்கு சட்டத்திலும், விதியிலும் பொருட்களின் தன்மைக்கேற்ப 7 முதல் 15 நாட்கள் வரை கால அவகாசம் அளிக்கப்பட வேண்டும். உதாரணமாக நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தை மூன்று மாதங்களுக்குள்ளாக நீக்குதல் அல்லது திருத்துதல், துணைத் தலைவர் தேர்தல், வரிவீதம் உயர்த்துதல் போன்றவை.

## குறைவெண் கணக்கிடும் முறை

உதாரணமாக ஒரு கிராம ஊராட்சியில் தலைவர் தவிர அனுமதிக்கப்பட்ட உறுப்பினர்கள் 12 பேர். இதில் இரண்டு உறுப்பினர் இடங்கள் காலியாக உள்ளன. எனவே உறுப்பினர் 10 பேரும் தலைவரும் அச்சமயத்தில் பதவி வகிக்கிறார்கள். எனவே தலைவரைச் சேர்த்து மொத்த உறுப்பினர் 11 ஆகும். இதில் மூன்றில் ஒரு பங்கு என்பது 3.66 ஆகும். இதை முழு எண்ணாக மாற்றினால் நான்கு ஆகும். எனவே தலைவரும் மூன்று உறுப்பினர்களும் வந்திருந்தால் குறைவெண் உள்ளதாகக் கருதி கூட்டம் நடத்தலாம். தலைவர் வராமலிருந்து துணைத் தலைவரைச் சேர்த்து நான்கு உறுப்பினர்கள் வந்தாலும் கூட்டம் நடத்தலாம். தலைவரும், துணைத் தலைவரும் வராமல் வேறு நான்கு உறுப்பினர்கள் மட்டும் வந்திருந்தாலும் குறைவெண் உள்ளபடியால், வந்திருக்கும் நான்கு பேர்களுக்குள் ஒருவரை தேர்ந்தெடுத்து அவ்வுறுப்பினர் தலைமையில் கூட்டம் நடத்தலாம். தலைவர், துணைத்தலைவர் வந்தால் தான் கூட்டம் நடத்த வேண்டும் மென்பதோ, அவர்கள் வருகைக்காக காத்திருக்க வேண்டுமென்பதோ கிடையாது. கூட்டம் நடத்துவதற்கு ‘குறைவெண்’ அதாவது குறைந்த அளவு உறுப்பினர் தொகுதி தான் தேவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

கிராம ஊராட்சி சம்பந்தப்பட்ட எல்லா ஆவணங்களையும் அலுவலக நேரத்தில் நேரில் பார்வையிட உறுப்பினருக்கு உரிமை உண்டு.

கிராம ஊராட்சி ஆவணங்களைப் பார்வையிட உறுப்பினர் விரும்பினால் முன்னதாகவே நிர்வாக அலுவலருக்கு இது குறித்து தகவல் கொடுத்து ஆவணங்களைப் பார்வையிடலாம்.

# தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி மூன்றடுக்கு ஊராட்சிகளின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் – கிராம ஊராட்சி

## (i) கிராம ஊராட்சிகள் ஆற்ற வேண்டிய கட்டாயக் கடமைகள்

(அ) எல்லாக் கிராம சாலைகளையும் (கிராமத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட பெருஞ்சாலைகள் ஊராட்சி ஒன்றிய சாலைகள் தவிர்த்து) எல்லா சாலைகளையும் அத்தகைய சாலைகளில் உள்ள பாலங்கள், சிறுபாலங்கள், சாலை அணைகள், தரைப் பாலங்கள் ஆகியவற்றைக் கட்டுதல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல்.

(அஅ) வீட்டு மனை பிரிவுகளுக்கு அனுமதி வழங்குதல் மற்றும் கட்டிட வரைப்படங்களுக்கு அனுமதி அளித்தல்

(ஆ) வடிகால்களைக் கட்டுதல் மற்றும் வடிகால் நீரையும், மாசுக்களையும் அகற்றுதல்

(இ) தெருக்களை துப்பரவு செய்தல், குப்பை குவியல்களையும் புதர்ச் செடிகளையும், முற்செடிகளையும் அகற்றுதல், பாழுங்கிணறுகளையும், சுகாதாரக் கேடான குளங்களையும் குட்டைகளையும் பள்ளங்களையும் அல்லது பொந்துகளையும் மூடுதல். மேலும் அந்த கிராமத்தை சுகாதாரமான நிலைமைக்கு கொண்டுவர மற்ற சீர்திருத்தங்களையும் செய்தல்.

(ஈ) பொதுக்கழிப்பிடம் ஏற்படுத்துவதும் மற்றும் பொது அல்லது தனியார் கழிப்பிடங்களைத் துப்புரவு செய்ய ஏற்பாடுகள் செய்தல்

(உ) இடுகாடுகளையும், சுடுகாடுகளையும் ஏற்படுத்துதல் மற்றும் அவற்றை பராமரித்தல்

(ஊ) கிணறுகள் வெட்டுதலும், பழுது பார்த்தலும், குட்டைகள் அல்லது குளங்கள் வெட்டுதலும், பழுது பார்த்தலும், பேணுதலும் குடிக்கும் மற்றும் குளிக்கும் நோக்கங்களுக்கென நீரை வழங்குவதற்காக நீர் நிலையங்களைக் கட்டுதலும் பேணுதலும்.

## (ii) கிராம ஊராட்சிகள் ஆற்றக்கூடிய விருப்பக் கடமைகள்

(அ) கிராமத்தில் உள்ள எல்லா பொதுச்சாலைகளில் இரு பக்கங்களிலும் மரங்கள் நடுதலும் அவற்றை காப்பாற்றுதலும் எந்தச் சாலையையாவது கிராம ஊராட்சியால் பராமரிக்கப்படாமல் இருந்தால், அந்த சாலையை பராமரிக்கும் அதிகார அமைப்பும் கிராம ஊராட்சியும் இணைந்து, இருதரப்பினரும் ஒத்துக்கொள்ளும் வரையறைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு மரங்களை நட்டு பராமரித்தல்.

(ஆ) பொதுச் சாலைகளுக்கும், கட்டிடங்கள் இருக்கும் பகுதிகளுக்கும் அப்பால் உள்ள பொது இடங்களில் விளக்கு அமைத்தல்.

(இ) ஊராட்சி ஒன்றிய சந்தைகளென வகைப்படுத்தப்பட்டவை தவிர கிராம ஊராட்சி பொது சந்தைகளை ஏற்படுத்துதல் மற்றும் நடத்துதல்

(ஈ) ஊராட்சி ஒன்றிய பொருட்காட்சிகள், விழாக்கள் என வகைப்படுத்தப்பட்டவை தவிர பிற பொருட்காட்சிகளையும் விழாக்களையும் கட்டுப்படுத்துதல்

(உ) பொது மக்களுக்கான இறங்குமிடங்களையும், நிற்குமிடங்களையும், வண்டி நிலையங்களையும், பொதுக் கால்நடைத் தொழுவங்களை ஏற்படுத்துதல் மற்றும் நடத்துதுல்

(ஊ) பொது இறைச்சி கொட்டில்களை ஏற்படுத்துதல் மற்றும் நடத்துதல்

(எ) படிப்பகங்கள் ஏற்படுத்துதல் மற்றும் நடத்துதல் மற்றும்

(ஏ) வானொலிப் பெட்டிகள், விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள், விளையாட்டு மன்றங்கள், உடற்பயிற்சி நிலையங்களை ஏற்படுத்துதல் மற்றும் நடத்துதல்

(ஐ) எழுத்தறிவிக்கும் நிலையங்கள் மற்றும் சமூகக் கல்வி புகட்டுவதற்கான நிலையங்கள் ஏற்படுத்துதல் மற்றும் நடத்துதல்

(ஒ) பொது வசதிக்கான கட்டிடங்களைக் கட்டுதலும் அற்தக் கிராமத்தில் வாழ்வோரின் பாதுகாப்பு, சுகம், வசதி, பண்பாடு, பொழுது போக்கு ஆகியவற்றிற்கான மற்ற வசதிகளை ஏற்படுத்துதல்

## (iii) கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகள்

1. கிராம ஊராட்சி பகுதியில் உள்ள பொதுச் சாலைகள் மற்றும் பொது இடங்களிலும் அரசால் பொதுவான அல்லது தனி ஆணையின் மூலமாக பணிக்கும் பொழுது அப்பகுதிகளில் விளக்குகளை அமைத்தல்.

2. கிராம ஊராட்சி பகுதியில் உள்ள அனைத்து ஒதுக்கப்படாத காடுகளையும், கிராம ஊராட்சி நிர்வகிக்கலாம்.

3. இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகள், பொதுவான சலவைத் துறை, குளிக்கும் துறை, குடிநீர் ஆதாரங்களை ஏற்படுத்தி பராமரிக்கலாம்.

4. கிராமத்தில் உள்ள அனைத்து பொது சாலைகள் (தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட பெருஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் தவிர) மற்ற அனைத்து சாலைகளும், அச்சாலைகளில் உள்ள நடை பாதைகள், பாலங்கள் சிறுபாலங்கள், சாலை அணைகள், தரைப்பாலங்கள் ஆகியவற்றை பராமரித்தல்.

5. அரசால் கேட்டுக்கொள்ளப்படும் பொழுது, கிராம ஊராட்சியானது கிராம நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சாலைகளில் உள்ள சாக்கடைகளையும், நடைபாதைகளையும் சீராக பராமரிக்கலாம்.

6. கிராம ஊராட்சி சாலைகளின் அருகில் உள்ள எந்த கட்டிடமாவது பொதுமக்களுக்கு அபாயம் விளைவிக்ககூடும் எனக் கிராம ஊராட்சி கருதினால், கட்டிடத்தின் உரிமையாளரை வேலியிடவோ அல்லது பழுது பார்க்குமாறு கேட்டுக் கொள்ளலாம்.

7. கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சாலைகளுக்கு அருகில் உள்ள கட்டிடங்களின் சொந்தக்காரர்களை, பொது அறிவிக்கையின் மூலம் சாலைகளின் ஓரத்தில் இருக்கும் புதர்ச் செடிகள், நடைபாதைகளுக்கு இடையூறு இல்லாமலும், போக்குவரத்து பார்வைக்கு தடங்கலாக இல்லாமலும் இருக்குமாறு கூறலாம். மேலும் சாலைகளின் ஓரங்களில் உள்ள கட்டிடங்கள் போக்குவரத்து பார்வைக்கு தடங்கலாக இல்லாமல் கட்டிடத்தின் உயரத்தை குறைக்கும்படி கூறலாம்.

8. கிராம ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள சாலைகளில் கிராம ஊராட்சியின் அனுமதியின்றி தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ, ஆக்கிரமிப்பு செய்திருந்தால், அவற்றை அகற்றலாம். மேலும் கிராம ஊராட்சி சாலைகளிலிருந்து 20மீட்டர் தூரம் வரை சுரங்கம் அமைப்பதற்கோ அல்லது கல், மண் அல்லது வேறு பொருள்களை அகற்றக்கூடாது என கிராம ஊராட்சி தடை விதிக்கலாம்.

9. பொது மக்களின் பொது நன்மைக்காக நிர்வகிக்கப்படும் சொத்து அல்லது வருவாயை கிராம மக்களுக்கு நன்மை பயக்கும்படி கிராம ஊராட்சி நிர்வகித்து வரலாம்.

10. அரசால் ஒரு நீர்ப்பாசன அமைப்பை பாதுகாக்கவோ அல்லது பராமரிக்கவோ அல்லது மேலாண்மை செய்யவோ அல்லது நீர் பகிர்ந்தளிப்பை ஒழுங்குப்படுத்தவோ கேட்டுக்கொள்ளப்படும் பொழுது அவற்றை நிறைவேற்றலாம். இவ்வாறு குடிமராமத்து செய்வதற்காக வரி விதிக்கலாம்.

11. கிராமத்தில் உள்ள புறம்போக்குகளான மேய்ச்சல் நிலம், கதிரடிக்கும் களங்கள், சுடுகாடுகள் மற்றும் இடுகாடுகள், கால்நடை தொழுவங்கள், வண்டிப்பேட்டைகள் மற்றும் தோப்புகள் கிராம ஊராட்சிக்கு சொந்தமாகும். இப்புறம்போக்குகளை கிராம ஊராட்சிகள் பயன்படுத்தி வருவாயைப் பெருக்கலாம்.

12. 1908ஆம் ஆண்டு தமிழ்நாடு எஸ்டேட்டுகள் நிலச்சட்டத்தின் ஆளுமைக்கு உட்பட்ட பண்ணை தோட்டத்தில் உள்ள சில பொது நிலங்களின் (கதிரடிக்கும் களம், கால்நடை தொழுவம், கிராம நத்தம்) உபயோகத்தை கிராம ஊராட்சிகள் முறைப்படுத்தலாம்.

13. ஆண்டு முழுவதும் அல்லது குறிப்பிட்ட சமயங்களில் திரளாக கூடும், கோவில் மசூதி, மடம், அல்லது சமய வழிபாட்டு தளம் அல்லது விழா அல்லது சந்தை ஆகியவற்றில் பொதுமக்களின் பாதுகாப்பு, உடல் நலம், சுகாதார வசதிகளை நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக ஏற்படுத்த வேண்டுமென கிராம ஊராட்சி கேட்டுக்கொள்ளலாம்.

14. கிராம ஊராட்சிப் பகுதிகளில், தனியார் சந்தைகளுக்கு உரிமம் வழங்கலாம். தனியார் சந்தைகளில், பின்பற்ற வேண்டிய துப்புரவு நடவடிக்கைகள், பயன்படுத்த வேண்டிய அளவு மற்றும் விதிக்கப்பட வேண்டிய வாடகை மற்றும் கட்டணங்களை வரையறுத்து உரிமம் வழங்கலாம். வழங்கப்பட்ட உரிமத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறும் பொழுது, உரிமத்தை நீக்கம் செய்யலாம்.

15. உரிமம் பெறாமலோ அல்லது உரிமத்தை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தாலோ அல்லது சட்டத்திற்கு புறம்பாக நடத்துகின்ற தனியார் சந்தையை கிராம ஊராட்சி மூடிவிடலாம்.

16. பொது மக்கள் இறங்கும் இடங்கள் வண்டி மற்றும் வாகனங்கள் நிறுத்தும் இடங்களை பயன்படுத்துவதற்கு கட்டணங்களை விதித்து வசூலிக்கலாம். கிராம ஊராட்சிக்கு உட்பட்ட பொது இடங்கள், அல்லது பொது சாலைகளின் ஓரங்களில், தனி நபர் மேற்சொன்ன காரணங்களுக்காக பயன்படுத்துவதை கிராம ஊராட்சி தடை செய்யலாம்.

17. பொது இறைச்சி கொட்டில்கள் அல்லாத பிற இடங்களில் கால் நடை வெட்டுதல் மற்றும் அறுப்பதை கிராம ஊராட்சி தடை செய்யலாம். கால்நடை வெட்டுவதற்கான நபர்களுக்கு உரிமம் வழங்கலாம்.

18. அரசின் ஒப்புதலுடன் கிராம ஊராட்சி புதிய ஊராட்சி சாலை, தெரு, பூங்கா, விளையாட்டு திடல், பேருந்து நிலையம், நுழைவு வளைவு அல்லது வேறு பொது சொத்துக்களுக்கு பெயர் சூட்டலாம்.

19. கிராம ஊராட்சிப் பகுதிகளில், ஆபத்தான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்கள் துவங்க உரிமம் வழங்கலாம்.

## கிராம சபை

### கிராம சபையின் பொறுப்புகள்:

கிராம திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல்.

கிராமத்தின் ஆண்டு வரவு – செலவு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல்.

சென்ற ஆண்டிற்கான கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் அளித்தல்.

கிராம ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட அனைத்துத்திட்டங்களையும் நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தல்.

கிராம ஊராட்சியால் பல்வேறு சமுதாய நலத்திட்டப் பணிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள பயனாளிகள் பட்டியலுக்கு ஒப்புதல் அளித்தல்.

சென்ற ஆண்டில் முடிக்கப்பட்ட பணிகள் மற்றும் நடப்பு ஆண்டில் அரசு துறைகள் மற்றும் நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்து ஆய்வு செய்தல்.

கிராமத்தின் அடிமட்டத்திலுள்ள மக்களிடையே சமுதாய நல்லிணக்கம் வளர நடவடிக்கை எடுத்தல்.

சமுதாய வளர்ச்சி பணிகளில் மக்களின் பங்கேற்புடன், உழைப்பாகவோ, பொருளாகவோ பணமாகவோ திரட்டுதல் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் சேவைப் பெறுவதற்கான முயற்சி செய்தல்.

கிராம ஊராட்சியின் ஆண்டறிக்கை மற்றும் தணிக்கை அறிக்கைகளை ஆய்வு செய்தல்.

### கிராம சபை கூட்டத்தை நடத்தும் முறை

கிராம சபைக் கூட்டத்தை கூட்டுவதற்கு ஏழுதினங்களுக்கு முன்னரே கிராம சபை கூடும் நாள், விவாதிக்கப்படும் பொருள்கள் பற்றி கிராமத்தில் உள்ள அனைத்து வாக்காளர்களும் அறிந்து கொள்ளுமாறு விளம்பரப்படுத்த வேண்டும். கிராம சபைக் கூட்டத்திற்கு, கிராம ஊராட்சியில் உள்ள மொத்த வாக்காளர்களில் குறைந்தது பத்தில் ஒரு பங்கு உறுப்பினர்களாவது கலந்து கொள்ள வேண்டும்.

கிராம சபைக் கூட்டத்திற்கான பொருள்களை தலைவர் கிராம ஊராட்சியை கலந்தாலோசித்து தயாரிக்க வேண்டும். கிராம சபைக் கூட்டத்திற்கு கிராம ஊராட்சித் தலைவர் தலைமையேற்று நடத்த வேண்டும். ஆய்வாளரின் சார்பாக வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையில் உள்ள ஒரு அலுவலர் பார்வையாளராக கலந்து கொள்வார்.

கிராம சபைக் கூட்டம் முடிந்து மூன்று தினங்களுக்குள் கூட்ட முடிவு அறிக்கையை ஆய்வாளருக்கு தலைவர் அனுப்பிவைக்க வேண்டும்.

## ஊராட்சி – நிர்வாகத்தில் குழுக்களின் பங்கு

மூன்றடுக்கு ஊராட்சிகள், அதாவது கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மற்றும் மாவட்ட ஊராட்சிகள், தங்களுக்கு சட்டப்படி வழங்கப்பட்ட கடமைகளையும் பணிகளையும் சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்காக பல்வேறு குழுக்களை அமைத்து அவற்றின் ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் பெற்றுச் செயல்படலாம். வளர்ச்சி சம்பந்தமான பல்வேறு பிரச்சனைகளை கூர்ந்தாய்வு செய்து சம்பந்தப்பட்ட தொழில் நுட்பக் கருத்துக்கள் அடிப்படையில் நேரடியாக முடிவு செய்வது கடினம் என்பதால் இத்தகைய கூர்ந்தாய்வு பணிகளை நிலைக்குழு மூலம் செய்து அதன் ஆலோசனை அடிப்படையில் முடிவு செய்யலாம். குழுக்கள் மூலமாக ஊராட்சிகள் தங்களது கடமைகளை ஆற்றுவது விரைவானது, திறன் மிக்கது, மற்றும் எளிமையானது. ஏனெனில்

1. குழுவின் உறுப்பினர்கள் மிகக் குறைவு. எனவே கூட்டத்தில் அனைவரும் பங்கேற்று, தங்களது கருத்துக்களை எடுத்துரைத்து விரைவாக ஒருமித்த கருத்துக்கு வர இயலும்.

2. குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் பலரும், அவர்கள் பணியாற்றும் குழுவின் செயல்பாடுகளில், ஆழ்ந்த அறிவும் அனுபவமும் உடையவர்களாக இருப்பதால் அவர்களது விவாதமும் கருத்தாழமும், மேற்கொள்ளும் முடிவுகளும் சிறப்பாகவும் பிரச்சினைகளைத் தீர்க்கும் விதமாகவும் அமையும். எனவே திறன்மிக்க செயல்பாடு காணலாம்.

3. குழுக் கூட்டங்களை கூட்டுவதும், நடத்துவதும் எளிதானதும், விரைவானதுமாகும். மேலும் குறைந்த எண்ணிக்கையிலான வல்லுநர்கள் பிரச்சினைகளை விவாதித்து விரைவில் முடிவு எடுப்பது மிக எளிதானது.

4. இத்தகைய குழுக்கள் கிராம வளர்ச்சித் திட்டத்தை தயாரிக்கும்போது கிராமத் திட்டமிடுதல், துறை வாரியான விவாதம் போன்றவை மூலம் திட்டங்களை தயாரித்து ஒருங்கிணைக்க வழிவகை செய்யும்.

கிராம ஊராட்சியில் அமைக்கப்படும் பல்வேறு குழுக்கள் பற்றி கீழே காணலாம்.

### 1. கிராம ஊராட்சிக் குழுக்கள்

1) நியமனக் குழு
2) நலக்குழு
3) நல்வாழ்வு தண்ணீர் (மற்றும்) சுகாதாரக் குழு
4) பொது விநியோக முறைக் குழு
5) வேளாண்மைக் குழு
6) பணிகள் குழு
7) கல்விக் குழு

### 2. குழுவின் உறுப்பினர்கள் தேர்வு செய்தல்

ஒவ்வொரு கிராம ஊராட்சியும் மேற்சொன்ன ஆறு குழுக்களுக்கும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு உறுப்பினர்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

1. நியமனக் குழு தவிர ஏனைய குழுக்களில் ஐந்து உறுப்பினர்கள் வரை இருக்கலாம். நியமனக் குழுவில் தலைவர் தவிர இரண்டு கிராம ஊராட்சி உறுப்பினர்கள் மட்டுமே இருப்பார்கள்.

2. நியமனக் குழு தவிர குழுக்களில் கிராம ஊராட்சி உறுப்பினரல்லாத இரண்டு வெளி நபர்களை கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தேர்வு செய்யலாம்.

தேர்வு செய்யப்படும் வெளி நபர்கள்

(அ) அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள் அல்லது
(ஆ) சமூக நல ஊழியர்கள், அல்லது
(இ) கிராம மக்களின் வளர்ச்சிக்கு ஆலோசனை வழங்குபவர்களாக இருக்க வேண்டும்.

கிராம ஊராட்சியின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்களில் பணிபுரியலாம்.

இக்குழுக்கள் அமைப்பதில் கிராம ஊராட்சி கவனத்தில் கொள்ள வேண்டியவை, ஐந்து பேர் கொண்ட குழுவில் வெளி நபர்கள் இருவராகவும் மூன்று பேர் கொண்ட குழுவில் வெளி நபர் ஒருவரையும் தேர்வு செய்வது பொருத்தமானது. எந்நிலையிலும் ஒரு குழுவில் வெளி நபர்கள் எண்ணிக்கை குழுவின் மொத்த நபர்களது எண்ணிக்கையில் பாதிக்கு மேல் இருக்கக் கூடாது. சாதாரணமாக ஒரு நபர், இரண்டு நபர் கொண்ட குழுக்கள் அமைக்கப்படுவது கிடையாது.

## 3. குழுக்களின் தலைவர்கள்

நியமனக் குழு தவிர பிற குழுக்களின் தலைவர்கள் சம்பந்தப்பட்ட குழுக்களின் உறுப்பினர் களிலிருந்து தேர்வு செய்யப்பட வேண்டும். நலக் குழு, நலவாழ்வு, தண்ணீர் (மற்றும்) சுகாதாரக் குழு, பொது விநியோகமுறைக் குழு ஆகியவற்றிற்கான தலைவர்கள் கிராம ஊராட்சியின் பெண் உறுப்பினர்களிலிருந்து தேர்வு செய்யப்பட வேண்டும். அத்தகைய உறுப்பினர்கள் மூன்று குழுக்களின் தலைவர் பதவிக்கு மேல் வகிக்கக் கூடாது.

## 4. நியமனக் குழு

நியமனக் குழுவில் கிராம ஊராட்சித் தலைவரும் அதன் உறுப்பினர்களிலிருந்து ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்படும் இரண்டு உறுப்பினர்களும் இருக்க வேண்டும். கிராம ஊராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்கு மற்றும் கிராம ஊராட்சியில் உள்ள எந்தப் பதவிகளுக்கான ஊதியம், கிராம ஊராட்சி நிதியிலிருந்து வழங்கப்படுகிறதோ, அத்தகைய எல்லா பதவிகளுக்கும், பொருத்தமான நபர்கள் நியமனக் குழுவின் மூலம் தேர்வு செய்யப்பட வேண்டும்.

## 5. நலக் குழு

நலக் குழு பெண்கள், குழந்தைகள், உடல் ஊனமுற்றோர், ஆதரவற்றவர்கள், விதவைகள், முதியோர், கைவினைத் தொழிலாளர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர்களது நலத்தை மேம்படுத்த கிராம ஊராட்சிக்கு ஆலோசனை வழங்கும்.

குறிப்பாக

- ❖ சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்
- ❖ சிறார் தொழிலாளர் முறை ஒழித்தல்
- ❖ குடிப்பழக்கத்தைக் கட்டுப்படுத்துதல்
- ❖ பெண் சிசு வதையினைத் தடுத்தல்
- ❖ வரதட்சணை எதிர்ப்பை வளர்த்தல்
- ❖ சமுதாய நல்லிணக்கத்தை வளர்த்தல் மற்றும்
- ❖ தீண்டாமை பழக்கத்தை நீக்குதல் ஆகிய பொருட்களில் கவனம் செலுத்தும்.

## 6. நல்வாழ்வு, தண்ணீர் (மற்றும்) சுகாதாரக் குழு

நல்வாழ்வு, தண்ணீர் (மற்றும்) சுகாதாரக் குழுவானது,

- ❖ உடல் நலம் சார்ந்த சமுதாயக் சொத்துக்களை பராமரித்தல்.
- ❖ குடிநீர் வசதி மற்றும் சுகாதாரம், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதைக் கண்காணித்தல்.

❖ தொற்றுநோய்கள் பரவாமல் தடுப்பதை உறுதி செய்தல் மற்றும் அம்மை மற்றும் தடுப்பு சிகள் போடுவதற்கான முகாம்கைளை ஏற்பாடு செய்தல், கலந்து கொள்ளல், உடல் நலத்தைப் பேணிக் காப்பது குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல். சுத்தமான குடிநீர், கிராம சுகாதாரம் போன்றவற்றை உறுதிபடுத்துவதற்கான விழிப்புணர்ச்சி முகாம்கள் நடத்துதல் மற்றும் கலந்து கொள்ளல் போன்ற பணிகளில் ஈடுபடும். மேலும் இக்குழு கிராமங்களில் உள்ள துணை மருந்தகங்கள் மற்றும் பொது மருந்தகங்கள் ஆகியவற்றை பார்வையிட்டு கிராம ஊராட்சியில் அது குறித்து விவாதித்து ஆலோசனை மற்றும் அறிக்கையினை அளிக்கும்.

குடிநீர் உபயோகிப்பாளர்களைக் கொண்டு குடிநீர் ஆதாரங்களை பராமரிப்பதற்கு ஊக்குவித்தல், தனிப்பட்ட வீடுகளில் கழிப்பிடம், தொகுதி கழிப்பிடம் மற்றும் பள்ளிகள் மற்றும் சமுதாய அளவில் சுகாதார வசதிகள் மேம்பாட்டிக்கு இக்குழு உதவும்.

## 7. பொது விநியோகமுறைக்குழு

கிராம ஊராட்சியில் பொது பங்கீட்டு முறையில் செயல்படும் உணவுப் பங்கீடு, கடைகளின் செயல்பாடுகள் குறித்து கிராம ஊராட்சி கண்காணிக்க இந்த பொது விநியோகமுறைக்கு கிராம ஊராட்சிக்கு உதவும்.

- ❖ குறிப்பிட்ட காலங்களில் தரமான பொருள்கள் விநியோகம் செய்வதை கண்காணித்தல்.
- ❖ தினமும் கடையில் உள்ள பொருள்களின் இருப்பை காண்பித்தல்.
- ❖ விற்பனை பொருட்களின் விலைகள் தெரிவித்தல்.
- ❖ உணவு பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்படும் பொருட்கள் விவரம்.
- ❖ பொது மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளைக் கூறுதல்

போன்றவை இக்குழு கவனிக்கும்.

## 8. வேளாண்மை உற்பத்திக் குழு

- ❖ விவசாயம்,
- ❖ தோட்டக்கலை,
- ❖ பட்டுப்புழு வளர்ப்பு,
- ❖ மலர் வளர்ப்பு,
- ❖ மீன் வளர்ப்பு,
- ❖ பால் பெருக்கம்,
- ❖ நீர் பிடிப்பு மற்றும் தரிசுநில மேம்பாடு
- ❖ சமூக காடுகள் வளர்ப்பு
- ❖ மண்வளப் பாதுகாப்பு
- ❖ நீர் மேலாண்மை

போன்றவற்றில் திட்டங்கள் தயாரித்து செயல்படுத்துவதற்கு வேளாண்மை உற்பத்திக்குழு உதவும். இக்குழு கிராமங்களில் விவசாயக் குழுக்களை ஏற்படுத்தி புதிய உத்திகளை கையாளுவதற்கு ஏற்பாடு செய்யும்.

## 9. பணிகள் குழு

❖ மத்திய மற்றும் மாநில அரசுகளால் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்களின் கீழ் பணிகளை நிறைவேற்றுவதற்கும்,

❖ அதற்கான வழிமுறைகளை பொதுமக்கள் அறியும் வகையில் எடுத்துச் சொல்வதற்கும். பிறதுறைகள் மற்றும நிறுவனங்கள் மூலம் செயலாக்கப்படும் வேலைகளைக் கண்காணித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பணியை முடிக்கவும். தரத்தை உறுதி செய்யவும் பொறுப்புக் கொண்டுள்ளது.

மேலும் உள்ளூர் தேவைகள் மற்றும் வள ஆதாரங்கள் அடிப்டையில் கிராம ஊராட்சிக்கான வளர்ச்சித் திட்டம் தயார் செய்வதற்கும் இக்குழு கிராம ஊரட்சிக்கு உதவும்.

## 10. கல்விக் குழு

கவ்விக் குழு, கிராம ஊராட்சி, பொது மக்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர்களை உறுப்பினராகக் கொண்டது. இக் கல்விக் குழு. அப்பகுதிகளில் செயல்படும் அனைத்து பள்ளிகளின் செயல்பாட்டையும் கண்காணிக்கும். பள்ளிக்கு தேவைப்படும் கட்டிடம் போன்ற கட்டுமான வசதிகளைப் பெருக்க மக்களின் பங்கினை பெற்று திட்டம் தீட்டும். பொது மக்களிடையே கல்வி அறிவு வளர படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தும்.

## 11. தற்காலிகக் குழுக்கள் ஏற்படுத்துதல்

கிராம ஊராட்சி, குறிப்பிட்ட நோக்கத்திற்காக, அதிகாரத்தை செலுத்துவதற்கும், பணிகளை ஆற்றுவதற்கும், கடமைகளைச் செய்வதற்கும் (பாசன தவரி) வேறு சில குழுக்களை ஏற்படுத்தலாம். மேலும் தேவை ஏற்படின் ஏதாவது பொருள் தொடர்பாக பரிசீலனை செய்து அறிக்கை அல்லது ஆலோசனை வழங்குமாறு கோரியிருப்பின், அதன் பொருட்டு குழு ஒன்று அமைக்கலாம். இந்தக் குழுக்களின் பதவிக்காலம் ஆறு மாத காலத்திற்கு மேற்படக்கூடாது. ஆறு மாதத்திற்கு மேல் செயல்பட வேண்டுமென்ற தேவை ஏற்பட்டால், ஊராட்சிகளின் ஆய்வாளரின் முன் அனுமதிபெறப்படல் வேண்டும்.

இவ்வாறு அமைக்கப்படும் அனைத்து குழுக்களுக்கும் தலைவர் அலுவல் சாரா உறுப்பினர் ஆவார்.

ஒவ்வொரு குழுவும் கிராம ஊராட்சிப் பகுதியில் உள்ள மையம், நிறுவனம் அல்லது நிலையம் எதனையும் பார்வையிடலாம். குழுவின் தலைவர், சம்மந்தப்பட்ட மையம், நிறுவனம் அல்லது நிலையத்தின் பொறுப்பாளருக்கு மூன்று நாட்களுக்கு முன்பே பார்வையிடும் தேதி, நேரம் மற்றும் காரணத்தைக் குறிப்பிட்டு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

## 12. கூட்ட அறிவிப்பு மற்றும் நிகழ்ச்சி நிரல்

குழுவின் தலைவர் கூட்ட தேதி, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றை மூன்று தினங்களுக்குள் முன்பாக முடிவு செய்து அதனை அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவிக்க வேண்டும்.

## 13. கூட்டம் நடத்துவதற்கான காலமுறை

நியமனக் குழு தவிர மற்ற குழுக்கள் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும். கிராம ஊராட்சிக்கு ஏதாவது பணியிடத்திற்கு நபர்கள் தேர்வு செய்ய அவசியம் எழுந்தால் நியமனக் குழு கூட்டப்பட்ட வேண்டும்.

## 14. திட்டம் தயாரித்தல்

ஒவ்வொரு குழுவும், சம்பந்தப்பட்ட துறை குறித்து ஆண்டு மற்றும் தொலை நோக்கு வளர்ச்சித் திட்டம் தயார் செய்யும். ஒவ்வொரு குழுவின் தலைவர் அந்த திட்டத்தை கிராம ஊராட்சியில் கலந்தாய்வு செய்து முடிவு எடுப்பதற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

## 15. கிராம ஊராட்சி அனுமதித்தல்

அனைத்துக் குழுவின் கருத்துரைகள், ஆலோசனைகள் அல்லது பரிந்துரைகளை கிராம ஊராட்சி கூட்டத்தின் வைத்து பரிசீலனை செய்து முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

## 16. குழுக்களின் பரிந்துரைகளை கிராம சபையில் தெரிவித்தல்

ஒவ்வொரு ஆண்டும் ஊராட்சி குழுக்களின் பரிந்துரைகளை தனித்தனியே தயாரித்துத் தொகுத்து ஜனவரி முதல் மார்ச் மாதத்திலான காலாண்டில் நடைபெறும் கிராம சபை கூட்டத்தில் தெரிவிக்க வேண்டும்.

**மாதிரி வினா:**

ஊராட்சி அமைப்பை விவரித்து அதன் பணிகளை எழுது.

# பாடம் – 8

## ஊராட்சி ஒன்றியங்கள்

இந்திய அரசியலமைப்பின் 40–ஆவது பிரிவு செம்மையாகச் செயல்பட வேண்டுமாயின், கிராம ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் அமைக்கப்பட வேண்டுமென்பது உறுதி. இதனால் மாவட்ட வாரியங்கள் நீக்கப்பட வேண்டுமென்பதுவும் அவசியமான ஒன்றாக மாறியது. 19–ஆம் நூற்றாண்டின் மத்திய காலம் வரையிலும் உள்ளாட்சி வாரியங்கள் என்பது தெரியாமலிருந்தாயினும், புதிதாக அமைக்கப்பட்ட உள்ளாட்சி வாரியங்கள் குறுகிய காலத்தில் அழிக்கப்படவேண்டிய கட்டத்திற்கு வந்துவிட்டன. ஏனெனில் மாவட்ட வாரியங்கள் பெரிய அளவு பரப்பளவுடையதாக, நிருவகிக்கச் சிக்கல் நிறைந்ததாக இருந்ததால், அவற்றில் போதுமான கவனம் செலுத்த இயலவில்லை. தவிர, மாவட்ட வாரியங்களின் வேலையும் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே வந்ததால், வாரியங்கள் செம்மையாகச் செயல்படவும் முடியவில்லை. ஆரம்பக்கல்வியை மட்டுமே எடுத்துக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால், ஆரம்பக்கல்வியை வளர்ப்பதற்கு மாவட்ட வாரியங்கள் போதுமான கவனம் செலுத்தக் கூடிய நிலையில் இல்லாமலிருந்ததைக் காணலாம். மேலும் அதிகாரங்கள் மிகுதியாக வாரியங்களில் குவிந்து இருந்த காரணத்தால், பணிகள் செய்யப்படுவது குறித்து மோதல்கள் ஏற்படலாயின. அதிக அதிகாரங்கள், மிகுதியான பணிகள் நிறைவேற்ற வேண்டியிருந்ததால், ஆணவமும் உள்ளாட்சி வாரியங்களில் அதிகரித்து விட்டது. மக்களின் பிரதிநிதிகள் ஆர்வத்தோடு நிருவாகத்தில் பங்கேற்க, நிருவாகம் சீராக அமைய, அதிகார வரையறை எல்லை சிறியதாக, அளவானதாக இருக்க வேண்டுமென்பது முடிவு.

வட்டார அளவில் ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பட வேண்டுமெனத் தீர்மானித்ததால் மாவட்ட வாரியங்களை நீக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மாவட்ட வாரியங்களின் பணிகள் ஊராட்சிகளில் அமையும்படி மாற்றி அமைக்கப்பட்டது. மாவட்ட வாரியங்கள் ஊராட்சியின் அருகாமையில் வரலாயின. ஊராட்சி ஒன்றியங்களில் பங்குபெற்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கை மாவட்ட வாரியப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் பன்மடங்காக அதிகரித்தது. இதனால் நிருவாகத்தைத் [illegible] தலைமைப்பண்பினை அனைத்துப் பிரதிநிதிகளும் பெற்றனர். ஊராட்சி ஒன்றியத்[illegible] பெருகலாயிற்று, ஏனெனில் ஊராட்சி ஒன்றியங்கள் மாவட்ட வாரியங்களைக் காட்டிலும் சிறியன. ஒரு மாவட்டத்தில் பல ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பட்டன. எனவே ஊராட்சி ஒன்றியத்தின் அதிகார வரையறை எல்லை சிறியதாகவும், அளவானதாகவும் அமையலாயிற்று. ஊராட்சி ஒன்றியப் பிரதிநிதிகள் மக்களைப் பற்றியும், ஊராட்சிகளின் வளங்கள், மூலப்பொருட்கள், தேவைகள் போன்றவற்றைத் தெரிந்தவர்களாக இருந்ததால், மக்களின் குறைகளைக் களையும் வண்ணமும், மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வண்ணமும், ஊராட்சி ஒன்றியப் பிரதிநிதிகள் செயல்பட்டதால், பணிகளின் வளர்ச்சி பெருகலாயிற்று.

ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் ஆரம்பத்தில் ஒவ்வொரு ஊராட்சியின் பிரதிநிதியும் உறுப்பினராக இருப்பர், ஊராட்சித் தலைவர் ஊராட்சி ஒன்றியத்தில் உறுப்பினர் ஆவார். எனவே ஊராட்சிக்கும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் நெருக்கமான தொடர்பு இருந்ததால் ஒற்றுமை, ஒருங்கிணைப்பு எளிதாகக் கிடைக்கலாயின, ஊராட்சியும் ஊராட்சி ஒன்றியமும் பரஸ்பரமாகவும், ஒற்றுமையுடனும் செயல்பட ஆரம்பித்தன. மாவட்ட வாரியங்கள் செயல்பட்ட காலத்தில் ஒவ்வொரு ஊராட்சிக்கும் மாவட்ட வாரியத்திற்கும் நெருக்கமான தொடர்பு கிடையாது. எனவே ஊராட்சி ஒன்றிய முறை சிறந்த முறையாகச் செயல்படுத்தப்பட்டது. மேலும் மாவட்ட வாரியத்தின் செயல்திறன் குறைய ஆரம்பித்ததால், மாற்று முறையின் மூலமாகச் செயல் திறனைக் காப்பாற்றி, பணிகளையும் சிறப்பாகச் செய்யலாம் என்பதற்காக மாவட்ட வாரிய முறைமை கைவிடப்பட்டது என்று கூறலாம். மேலும் மாவட்ட வாரியங்கள் செயல்படுவதற்கு நிதிவசதியும் போதுமானதாக இல்லை. மாவட்ட அளவில் பணியாற்றுவதற்குத் திறமை கொண்ட பயிற்சி பெற்ற பணியாளர்களும் கிடைக்கவில்லை. ஆகவே பணியாளர்களின் திறமையை முழுவதும் பயன்படுத்தவும்,

போதுமான அளவு நிதிவசதி அளித்துச் செயல்படவும் ஊராட்சி ஒன்றிய முறை சிறந்த முறையாகக் கருதப்படுகிறது.

தன்னிச்சையான அரசாங்கம் உள்ளாட்சியில் செயல்பட வேண்டுமாயின், ஊராட்சி ஒன்றியங்கள் தான் மக்களாட்சியின் அடிப்படை என பல்வந்த்ராய் குழுவின் செயல்திட்ட ஆய்வுக்குழு கூறுகின்றது. ஏனெனில் ஊராட்சி ஒன்றியம் மிகப் பெரியதாகவும் இல்லாமல், சிறியதாகவும் இல்லாமல் நடுத்தரமாக அமையக் கூடியதாகும். ஊராட்சி ஒன்றியங்களை ஏற்படுத்தச் சட்டமன்றத்தில் அனைத்துத் தரப்பு உறுப்பினர்களும் ஆதரவு தந்தனர். மாவட்ட வாரியங்களை நீக்குவதையும் எல்லா உறுப்பினர்களும் ஆதரித்தனர். 1957–ஆம் ஆண்டு டிசம்பர் 1,2 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மாநில ஊராட்சி ஒன்றிய மாநாடு மாவட்ட வாரியங்கள் நீக்கப்பட்டதை வரவேற்றது. எனவே 1958–ஆம் ஆண்டு அக்டோர் 31–ஆம் தேதி மாவட்ட வாரியங்கள் கலைக்கப்பட்டு ஊராட்சி ஒன்றியங்கள் நவம்பர் 1,1958–ஆம் ஆண்டிலிருந்து செயலாக்கத்திற்கு வந்தன.

தேசியப் பணி விரிவாக்கத் திட்டத்தின்கீழ் வளர்ச்சி வட்டாரங்களை ஊராட்சி ஒன்றியங்களாக அமைக்க வளர்ச்சி வட்டாரம் அடிப்படையாக ஆக்கப்பட்டது. ஏனெனில் இது இரண்டு காரணங்களினால் பொருத்தமானது. ஒன்று வட்டார வளர்ச்சி அதிகாரிகள், கிராம வட்டப் பணியாளர்கள். விரிவாக்கப் பணிகளின் அதிகாரிகள் ஆகியோர் வட்டார அளவில் பெறுகின்ற அனுபவம் சிறந்ததாகவும் சிறப்பானதாகவும் இருந்தது. வட்டார அளவில் பணிபுரியக்கூடிய இந்த அதிகாரிகள் அவ்வட்டாரத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதிகளுடன் கலந்து, கூட்டாக, ஒத்துழைத்துச் செயல்பட முடியும் என அனுபவங்கள் உணர்த்தின. அதாவது ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்படுவதற்கு முன்னர், மக்கள் பிரதிநிதிகளாலான வட்டார ஆலோசனைக் குழுக்கள் செயல்பட்டன. வட்டார வளர்ச்சிப் பணிகள், தேசிய விரிவாக்கப்பணிகள் போன்றவை தொடர்ந்து, நிரந்தரமாகச் செயல்பட வேண்டுமென இந்திய அரசாங்கம் தெரிவித்தது. எனவே அப்பணிகள் நிரந்தரமாக்கப்படுகின்ற காரணத்தால் தொடர்ந்து செலவுகளை ஈடுகட்ட ஓர் அமைப்பு தேவைப்பட்டது. ஊராட்சி ஒன்றியங்கள் அவ்வட்டாரத்தில் நிறுவப்பட்டால், இக்குறையைத் தீர்க்கவும், தொடர்ந்து செலவுகளைச் சரிக்கட்டவும் முடியும் எனவும் தேசிய விரிவாக்கப் பணியில் பணியாற்றுகின்ற திறமைமிகுந்த பணியாளர்களை நிரந்தரமாக ஊராட்சி ஒன்றித்திற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற காரணத்திற்காவும், ஊராட்சி ஒன்றியங்கள் வட்டார அளவில் அமைக்கப்பட்டன. மேலும் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் அனைத்தையும், ஒருங்கே இணைத்தால், ஊராட்சிக்கும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் தொடர்ந்த ஒற்றுமையும், ஒருங்கிணைப்பும் ஏற்படும். ஊராட்சி ஒன்றியம் பரந்த அளவில் அமைக்கப்பெற்றால், ஏராளமான ஊராட்சிகளை ஒன்றாக இணைக்க வேண்டும். அப்போது முன்னர் இயங்கிய மாவட்ட வாரியங்களுக்கு ஒப்பாகவே அமைந்துவிடும். நெருக்கமான தொடர்புகள் அறுந்துவிடும். ஆகவே வட்டார அளவில் வளர்ச்சி வட்டாரங்கள் ஊராட்சி ஒன்றியங்கள் அமையச் சிறந்த அடிப்படைக் காரணங்களாக இருந்தன.

திட்ட ஆணையத்தால் அமைக்கப்பட்ட ஆய்வு செயல்திட்டக் குழுவின் துணைக் குழுவும் ஊராட்சி ஒன்றியங்கள் அமைப்பதற்கும், மாவட்ட வாரியங்கள் நீக்கப்படுதற்கும் ஆதரவு தெரிவித்தது.

ஊராட்சி ஒன்றியம் கீழ்க்கண்ட நான்கு வகை உறுப்பினர்களைக் கொண்டதாக முதலில் அமைந்தது. அவை:

1. ஊராட்சிப் பிரதிநிதிகள்
2. கூட்டு நியமன உறுப்பினர்கள், ஒதுக்கீடு உறுப்பினர்கள்
3. மாவட்டப் பிரதிநிதிகள்
4. அலுவல் அடிப்படையில் உறுப்பினர்கள்

ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஓர் உறுப்பினரைப் பிரதிநிதியாக அனுப்பவேண்டும். கிராம ஊராட்சியின் மக்கள் தொகை 1000 முதல் 3000 வரை இருந்தால், அது ஒரு பிரதிநிதியை மட்டும் அனுப்பவேண்டும். 3000க்கு மேலான தொகையைக் கொண்ட கிராமங்கள் இரண்டு பிரதிநிதிகளை அனுப்ப வேண்டும். இவ்உறுப்பினர்கள் போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்டால் நலமானது என்று கருதியது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தாழ்த்தப்பட்ட உறுப்பினர் இடம் பெற வேண்டும். இவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லையேல், கூட்டு நியமனம் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

வட்டாரங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள், ஊராட்சி ஒன்றியத்திலும் உறுப்பினராக இருக்க வேண்டும்.

வட்டாரத்திற்குட்பட்ட தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர், வட்டார வளர்ச்சி அதிகாரி ஆகியோர் அலுவல் அடிப்படையில் உறுப்பினர்களாக இருப்பர்.

ஊராட்சிக்கு மேலாக உள்ளாட்சி நிருவாகத்தில் இடம் பெறுவது ஊராட்சி ஒன்றியம் ஆகும். இது மற்ற மாநிலங்களில் அமையப்பெற்று உள்ள ஊராட்சி சமிதிகளுக்கு ஒப்பானதாகும். சமுதாய வளர்ச்சி, தேசிய விரிவாக்கப் பணிகள் ஆகிய திட்டச் செயல்களினால் ஒரு வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிலும் ஊராட்சி ஒன்றியம் அமைக்கலாமென முடிவு செய்யப்பட்டது. ஏனெனில் சமுதாய வளர்ச்சிப்பணிக்கும், ஊராட்சிகளின் பொதுவான அமைப்பாகவும் ஊராட்சி ஒன்றியம் அமைந்துள்ளது. ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு மன்றம் உள்ளது. இதுதான் ஊராட்சி ஒன்றியத்தின் நிருவாகத்தைச் செயல்படுத்திக் கொண்டு வருகின்றது. ஊராட்சி ஒன்றியத்திற்கு, ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளைச் செய்ய அதிகாரம் இல்லை. எனினும் ஊராட்சி ஒன்றியத்தில் ஏதாவது ஒரு பகுதியில் ஊராட்சி இல்லையெனில், அப்படி இல்லாதவரையில் ஊராட்சி ஒன்றியமே வரி விதித்தல் உட்பட எல்லா அதிகாரங்களையும் செயல்படுத்தும். எல்லாக் கடமைகளையும் ஊராட்சி ஒன்றியம் செய்கின்றது. இவ்வாறு ஊராட்சிகளுக்குப் பொதுவாக நின்று செயல்படக்கூடியதாக இது உள்ளது. ஊராட்சி ஒன்றியம் ஊராட்சிப் பணிகளில் தலையீடு செய்யாது. எனினும் ஊராட்சி அமையாமலிருந்தால் இது தானாகவே ஊராட்சிப் பணிகளை ஏற்று, பொறுப்பாகச் செயல்படுத்தும். ஊராட்சி ஒன்றிய மன்றத்தில், ஒன்றியத்திலுள்ள அனைத்து ஊராட்சித் தலைவர்களும் உறுப்பினர்களாளவர். நகரியத்தின் பிரதிநிதியாக ஒரு மக்கள் பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடி வகுப்பினர் ஆகியோர்களுக்கு மூன்று இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. இதே மாதிரியாக மூன்று பெண் உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர். இப்பிரிவினர்கள் ஊராட்சி ஒன்றித்தில் இடம் பெறவில்லையேல், அவர்கள் பிரதிநிதித்துவம் பெறும் வகையில் ஏற்பாடு செய்யப்படுகின்றது. ஊராட்சி ஒன்றியத்திற்குள்ளாக வரும் தொகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலச் சட்ட மன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள் போன்றோர் ஊராட்சி ஒன்றிய மன்ற நடவடிக்கைகளில் பங்கு கொள்கின்றனர். ஆனால் அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது. ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகும். ஆனால் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர்கள் இந்த ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஊராட்சிகளின் தலைவர்களாகவும் நகரியங்களின் உறுப்பினர்களாகவும் இருந்தால் தான், ஊராட்சி ஒன்றியத்தின் உறுப்பினர்களாகவும் இருக்க முடியும். ஊராட்சித் தலைவர், நகரிய உறுப்பினர் ஆகியோர் பதவிகளிலிருந்து விலகினால், ஊராட்சி ஒன்றிய மன்றத்திலிருந்தும் விலகிவிடுவார்கள். ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களுக்கு ஊராட்சி ஒன்றியத் தலைவர் தலைமை தாங்கி நடத்துகிறார். ஊராட்சி ஒன்றிய மன்ற உறுப்பினர்கள் ஊராட்சிகள் சம்பந்தமான தீர்மானங்களைக் கொண்டு வரவும், ஊராட்சி ஒன்றிய நிருவாகச் செயல் முறைகள் குறித்து கேள்விகள் கேட்கவும் உரிமை பெற்றுள்ளனர். இவ்வாறாக ஊராட்சி ஒன்றியச் செயல்களில் அக்கறை எடுத்துப் பங்கேற்றாலும், ஊதியம் வழங்குவது கிடையாது. இவ்வாறாக, ஊராட்சி ஒன்றிய மன்றம் தனது அதிகார வரையறைக்குட்பட்ட பணிகளைச் செய்து வந்தது.

ஊராட்சி ஒன்றியம் போன்ற அமைப்புகளுக்கு உறுப்பினர்கள் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப் படுவதால் சில நன்மைகளும், தீமைகளும் உள்ளன. அவைகளில் சில ஊராட்சி அரசு நிறுவனங்கள் மூன்று படிவரிசையாக அமைக்கப்பட்டு இருப்பதால், இவைகளின் மொத்தத் தொடர்ச்சி ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களை மறைமுகமாகத் தேர்ந்தெடுப்பதன் மூலமாகக் காக்கப்படுகிறது. செயல்கள் அனைத்தும் ஒருங்கே மொத்தமாக ஒருங்கிணைந்து செய்ய வழி கொடுக்கிறது. கிராம ஊராட்சிகள் திறமையாகச் செயல்படும் வண்ணமும், குழப்பமின்றியும், நோக்கங்களை நிறைவேற்றவும், வளர்க்கவும் இம்முறை பயன்படுகிறது. உயர்மட்ட அமைப்புகளின் செயல்முறைகள் எளிதாக்கப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியம் போன்ற உயர்மட்ட அமைப்பு, ஊராட்சி உறுப்பினர்களைக் கொண்டிருப்பதால் ஊராட்சி ஒன்றிய முடிவுகள் அனைத்தும், ஊராட்சி உறுப்பினர்களின் கருத்துக்களாகும். மறைமுகமாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுவதால், தேர்தல் செலவு குறைகிறது. பொதுத் தேர்தல் போல் இல்லாது, மிகவும் அதிகமான செலவுமில்லாமல், ஆர்ப்பாட்டமில்லாமல் அமைதியாகத் தேர்தலை நடத்த முடிகிறது. தேர்தல்கள் தான் மக்களாட்சியின் எண்ணங்களைப் பிரதிபலிக்கக் கூடியன என்பது உண்மை. இருப்பினும் ஊராட்சி அரசு நிறுவனங்களில் அரசியல் கட்சி அடிப்படையில் தேர்தல் நடத்தினால், நிச்சயமாக உள்ளூர்ப் பிரச்சனைகள் எதையுமே தெரியாமல், தேர்தல் தேசிய அளவு இலட்சியத்துவ நோக்கில்தான் நடைபெறும். இதனால் உள்ளூர்ப் பிரச்சனைகளுக்குப் போதுமான கவனம் செலுத்தப்படமாட்டாது. மேலும் ஊராட்சி அரசு நிறுவனங்கள் குறுகிய பரப்பில் செயல்படுவதால் போட்டி, பொறாமைகளைத் தவிர்க்கப் போட்டியின்றி ஒரே முகமாகத் தேர்ந்தெடுக்கப் படுவதே விரும்பத்தக்கது.

ஊராட்சி ஒன்றிய அமைப்பிற்கு, நேரடியாக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதால், ஊராட்சி ஒன்றியம் சிறந்த அமைப்பாகத் திகழ்கின்றது. மக்கள் எண்ணங்களைப் பிரதிபலித்து. பரிகாரம் தேடக்கூடிய அமைப்பாக இது விளங்குகின்றது. இந்த அமைப்பிற்குத் திறமையானவர்களும், தகுதி வாய்ந்தவர்களுமே வரக்கூடிய அளவில் அமையும். மக்கள்தான் இதற்குப் பொறுப்பாக இருக்கின்றனர். மக்கள் திறமைமிகுந்தவர்களைத்தான் தேர்ந்தெடுப்பர், உறுப்பினர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதால், இவ்வமைப்பு தன்னிச்சையாக இயங்கும் தன்மையைப் பெற வழியுண்டு. மக்கள்தான் இவர்களுக்கு எஜமானர்களே தவிர, மற்ற எவரும் இந்த அமைப்பில் செல்வாக்குப் பெற முடியாது. மக்களாட்சியின் உண்மை நோக்கை அடையக்கூடிய நிறுவனமாக இது திகழும். அரசியல் உள்ளாட்சியில் ஈடுபடுவது விரும்பத்தக்கதல்ல. எனினும் தேசிய அளவில் கட்சிகளின் அடிப்படையே உள்ளாட்சிகளாகத்தான் திகழ்ந்து வருகின்றன என்பது தெளிவாக விளங்குகிறது. எனவே ஊராட்சி ஒன்றியத்திற்கு நேரடியாக உறுப்பினர்களைத் தேர்தெடுப்பதில் பல நன்மைகள் இருப்பினும், தேர்தல் குறைபாடுகள் அனைத்து நன்மைகளையும் எடுத்து விடுகிறது. தேர்தலின் போது கிராமப்புறங்களில் எண்ணற்ற வீடுகளும், வைக்கோல் போர்களும் தீயிற்கு இரையாவது கண்கூடாக நடந்து வருகின்ற விஷயம், இனச் சார்பு பல பிரிவுகளை ஏற்படுத்தி, குழப்பத்தை விளைவிக்கின்றது.

தமிழகத்தில் ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கத் தேர்தல் அறிவிப்பு ஜனவரி 24, 29, 1982ல் செய்யப்பட்டது எல்லா அரசியல் கட்சிகளும் தங்களது பலத்தைக் காட்ட முன்வந்தன. ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்க வழிசெய்யப்பட்டதால், அரசியல் கட்சிகள் தீவிரமாகத் தேர்தலில் ஈடுபட்டன. சட்டமன்ற உறுப்பினர்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர். 27சட்ட மன்ற உறுப்பினர்களில் அ.தி.மு.க. 17, தி.மு.க.6, காங்கிரஸ் (1) 3, சி.பி.ஐ (எம்) 1 எனப் பல்வேறு கட்சிச் சட்டமன்ற உறுப்பினர்கள் தாக்கல் செய்தனர். ஆனால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுவிட்டது. ஊராட்சி ஒன்றியத் தலைவர்களின் பெண்கள், சிறுபான்மையோர் ஆகியோர்களுக்கு இட ஒதுக்கீடு சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கீடு செய்யப்பட்டதால் தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்டது. இன்று ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். புதிய ஊராட்சி சட்டத்தின்படி உள்ள ஊராட்சி ஒன்றிய முறை அமைப்பைப் பார்ப்போம்.

## ஊராட்சி ஒன்றிய எல்லை அமைப்பு

1960 ஆம் ஆண்டிற்கு முன்னர், தமிழ்நாட்டில் செயல்பட்டு வந்த சமுதாய வளாச்சி வட்டாரங்களே பின்னர் ஊராட்சி ஒன்றியங்களாக மாற்றப்பட்டன. சராசரியாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் அறுபது ஆயிரத்திலிருந்து ஒரு லட்சம் வரை மக்கள் தொகை கொண்டதாக உள்ளது. தற்பொழுது தமிழ்நாட்டில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்கள் பின்வரும் எண்ணிக்கையிலான கிராம ஊராட்சிகளைக் கொண்டுள்ளது.

| கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | ஊராட்சி ஒன்றியங்கள் |
|---|---|
| 10 கிராம ஊராட்சிகளுக்கும் குறைவு | 24 |
| 11 லிருந்து 20 வரை | 75 |
| 21 லிருந்து 30 வரை | 83 |
| 31 லிருந்து 40 வரை | 82 |
| 41 லிருந்து 50 வரை | 68 |
| 50 கிராம ஊராட்சிகளுக்கும் அதிகம் | 53 |
| மொத்தம் | 385 |

## ஊராட்சி ஒன்றிய அமைப்பு – வார்டு பிரிவினை

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றிய வார்டுகள் சராசரியாக 5,000 மக்கள் தொகை கொண்ட பகுதியை கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

## ஊராட்சி ஒன்றியத் தேர்தல்:

ஊராட்சி ஒன்றியங்களின் தேர்தல்கள் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டிலும் மேற்பார்வையிலும் நடைபெறுகிறது. அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் 1996 மற்றும் 2001 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தேர்தல் நடத்தப்பட்டு ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் பதவியேற்றனர், பின்னர் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களிலிருந்து ஊராட்சி ஒன்றியத் தலைவரும், ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## இடஒதுக்கிடு

இந்திய அரசியலமைப்பு 73வது சட்டத்திருத்தின்படி ஊரக ஊராட்சி அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகளில் தாழ்த்தப்பட்டவர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 20(1)ன் படி, ஒரு ஊராட்சி ஒன்றியப் பகுதியின் மொத்த மக்கள் தொகையில், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை எந்த விகிதாச்சாரத்தில் அமைந்துள்ளதோ கிட்டத்தட்ட இயலுமளவிற்கு அதே விகிதாச்சாரத்தில் இட ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியத்தில், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த பதவியிடங்களில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் அதே இனங்களைச் சேர்ந்த பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாமல் (தாழ்த்தப்பட்வர்கள், பழங்குடியினர் இட ஒதுக்கீட்டில்ஒதுக்கப்பட்ட பெண்கள் உட்பட) பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்படுகின்றது. இட ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களில், மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பேற்ற பின்னர், ஐந்தாண்டு காலத்திற்கும், அப்பதவியிடம் காலியானால், காலியாவதற்கு முன்னர் எந்த

பிரிவினருக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டதோ, அதே பிரிவினருக்குத்தான் இடைத்தேர்லின் போதும் இட ஒதுக்கீடு அளிக்கப்படும். ஊராட்சி ஒன்றிய வார்டுகளின் பெண்களுக்கு செய்யப்படும் இட ஒதுக்கீடு சுழற்சி முறையில் ஊராட்சி முறையில் ஊராட்சி ஒன்றியத்தின் இதர வார்டுகளுக்கு மாற்றப்படும்.

❖ தமிழ்நாட்டில் தற்பொழுதுள்ள 6505 ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் பதவியிடங்களில் பின்வருமாறு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தாழ்த்தப்பட்டவர்கள் / பழங்குடியினர் | 856 |
| தாழ்த்தப்பட்டவர்கள் / பழங்குடியினர் | 547 |
| பொது (பெண்கள்) | 1750 |
| பொது | 3352 |
| மொத்தம் | 6505 |

## ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பதவியிடங்களில் இட ஒதுக்கீடு

❖ தமிழ்நாட்டில் தற்பொழுதுள்ள 385 ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பதவியிடங்களில் பின்வருமாறு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தாழ்த்தப்பட்டவர்கள்/பழங்குடியினர் | 44 |
| தாழ்த்தப்பட்டவர்கள்/பழங்குடியினர் பெண்கள் | 32 |
| பொது (பெண்கள்) | 107 |
| பொது | 202 |
| மொத்தம் | 385 |

ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவியிடங்களில் இட ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

## ஊராட்சி ஒன்றிய வார்டு தேர்தல்களில் போட்டியிடத் தகுதிகள்

ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் தேர்தலில் நிற்பவருக்கு என்னென்ன தகுதிகள் தேவை. எந்தெந்த தகுதியின்மைகள் இருக்கக் கூடாது என்பது பற்றி கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

❖ ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் தேர்தலில் போட்டியிட விரும்பும் நபரது பெயர் போட்டியிட இருக்கும் ஊராட்சி ஒன்றியத்தின் ஏதாவது ஒரு வார்டின் வாக்காளர் பட்டியலில் இருக்க வேண்டும். 21 வயது பூர்த்தி செய்திருக்க வேண்டும். (குறிப்பு: வயதுத் தகுதி, வேட்பு மனுக்களின் பரிசீலனை தேதியிலானது பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்). போட்டியிட விரும்பும் வார்டிற்கு அல்லது பதவிக்கு உரிய இட ஒதுக்கீடு தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் (அதாவது தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அல்லது பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவராக இருத்தல் அல்லது மற்றும் பெண்ணாக இருத்தல்).

## தேர்தல்களில் போட்டியிட யார் யார் தகுதியற்றவர்கள்?

ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் தேர்தல்களில் நிற்பவருக்கு கீழ்கண்ட தகுதியின்மைகள் இருக்கக் கூடாது. ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு வார்டுக்கு மேல் ஒரு உறுப்பினர் தேர்தலிலோ அல்லது இன்னோரு ஊராட்சி ஒன்றியத்தின் வார்டு உறுப்பினர் தேர்தலிலோ போட்டியிடக் கூடாது. எந்த ஒரு கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் அல்லது தலைவர் தேர்தலிலும் அல்லது எந்தவொரு மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலிலும் போட்டியிடக் கூடாது. கிராம ஊராட்சியின் தலைவராக இருக்கக் கூடாது.

**ஊராட்சி ஒன்றியத் தேர்தலில் போட்டியிடுவர்.**

அ) கீழ்க்கண்ட பதவிகள் எதிலும் இருக்கக் கூடாது.

❖ கிராம நிர்வாக அலுவலர்

❖ மத்திய அல்லது மாநில அரசு ஊழியர்

❖ தமிழ்நாட்டில் உள்ள கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி, பேரூராட்சி நகராட்சி அல்லது மாநகராட்சியின் ஊழியர். மத்திய, மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு தொழில் நகரியம் அல்லது கூட்டாண்மை உரிமை பெற்ற (Corporate) கழகம் அல்லது வாரியம் அல்லது ராணுவக் குடியிருப்பு அமைப்பில் (கண்டோன்மெண்டு – Cantonment ) ஊழியர்.

❖ 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவுகள் 58 முதல் 71 முடிய உள்ள பிரிவுகளில் உள்ள தேர்தல் குற்றங்களுக்கான அல்லது இந்திய தண்டனைச் சட்டம் படலம் 9ஏ–யில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டவர்கள் அல்லது சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்குத் தகுதியற்றவர்கள் என்று எந்தச் சட்டங்களினாலும் அறிவிக்கப்பட்டவர், தண்டனை பெற்ற தேதிலியிருந்து ஐந்து ஆண்டுகள் முடிய தேர்தலில் போட்டியிடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஒழுக்கம் சம்பந்தப்பட்ட குற்றத்திற்காக (Moral delinquency ) நீதிமன்றத்தில் தண்டனையடைந்தவர் (அத்தகைய தண்டனை ரத்து செய்யப்படாதவரை) தண்டனை காலத்தில் தண்டனைக் காலம் முடிந்து ஐந்து ஆண்டுகள் வரையிலும் உறுப்பினர் தேர்தலில் போட்டியிட முடியாது. 1955ம் ஆண்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தண்டனையடைந்தவர், தண்டனையடைந்த தேதியிலிருந்து 5 ஆண்டுகள் முடிய தேர்தலில் போட்டியிடத் தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும் புத்தி சுவாதீனம் அற்றவர் அல்லது செவிட்டுமையாக இருப்பவர் கடனாளி என்று நீதி மன்றத்தில் அறிவிக்கப்பட்டவர் அல்லது கடனை திருப்பிச் செலுத்தாதவர் என்று நீதி மன்றத்தால் அறிவிக்கப்பட்டவர் மாநிலத்தில் உள்ள எந்த ஒரு கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் அல்லது மாவட்ட ஊராட்சியிடம் செய்து கொண்ட முடிவுறாத ஒப்பந்தத்தில் அல்லது வேலையில் சம்பந்தப்பட்டிருந்தால், (ஆனால் ஒரு நிறுவனம் ஊராட்சியுடன் ஒப்பந்தம் செய்திருந்தால்) அந்த நிறுவனத்தில் பங்குதாரராக மட்டும் இருப்பவருக்கு தேர்தலில் போட்டியிடத் தடையில்லை).

தேர்தலில் போட்டியிட இருக்கும் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் அல்லது மாவட்ட ஊராட்சியின் சார்பாகவோ அல்லது எதிராகவோ கட்டணம் பெற்றுக் கொண்டு வாதாடும் வழக்கறிஞர்கள், மாநிலத்தில் உள்ள எந்த ஒரு கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் அல்லது மாவட்ட ஊராட்சிக்குச் சேர வேண்டிய யாதொருவிதமான தொகையையும் செலுத்தத் தவறி நிலுவையாக வைத்திருப்பவர்கள், இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 243 (F) –ன் படியும். 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 35–ன்படியும், சட்ட மற்ற தேர்தல்களில் போட்டியிடுவோர்க்கு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும் தகுதியின்மைகளும் ஊராட்சிகள் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு தகுதியின்மைகளை ஏற்படுத்தும். கீழ்க்கண்ட சட்டங்களில் ஏதாவது ஒன்றின் கீழ் 6 மாத காலத்திற்குக் குறையாமல் தண்டனையடைந்தவர் தண்டனையடைந்த தேதியிலிருந்து 5 வருடங்கள் முடிய ஊராட்சித் தேர்தல்களில் போட்டியிட முடியாது (1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் பிரிவு 8 (2). பதுக்கல் அல்லது கொள்ளை லாபத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டனையடைந்தவர்கள், உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழாவது தண்டனை பெற்றவர்கள்,

1961ஆம் ஆண்டு வரதட்சணைத் தடுப்புச் சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழாவது தண்டனை பெற்றவர்கள், 1957 ஆம் ஆண்டு உடன் கட்டை ஏறுவதைத் தடை செய்யும் சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழவாது தண்டனையடைந்தவர்கள் போன்றோர் தேர்தலில் போட்டியிட முடியாது.

## ஊராட்சி ஒன்றியத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல்

❖ ஊராட்சி ஒன்றியத் தலைவர் மற்றும் துணைத் தலைவரை ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பார்கள். ஒவ்வொரு சாதாராண தேர்தல் நடந்து முடிந்த பின்னர், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் நிர்ணயிக்கும் முதல் கூட்ட நாளில், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் உறுதி மொழி எடுத்து பதவியேற்று பின்னர். ஊராட்சி ஒன்றியத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல் நடைபெறும். இத்தேர்தல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரால் நடத்தப்படும்.

## ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அதிகாரங்கள்

❖ ஊராட்சி ஒன்றிய பொது நிதியிருப்பை கவனத்தில் கொண்டு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் வாழும் மக்களின் பாதுகாப்பு, சுகாதாரம், நலத்தை முன்னேற்றும் பொருட்டு, ஊராட்சி ஒன்றிய மன்றம், தான் தகுதியெனக் கருதும் நிதி ஒதுக்கீட்டை செய்யலாம். இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளின் உபயோகத்திற்காக பொதுவான இடுகாடு மற்றும் கடுகாட்டை அமைத்து பராமரிக்கலாம். இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளில் வாழும் மக்களின் தேவைக்காக சலவை மற்றும் குளியல் காரியங்களுக்கான பொதுவான நீராதாரத்தை (துறை) அமைத்து பராமரிக்கலாம். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பொதுவான இடங்களில் கிராம ஊராட்சிகள் விளக்கு வசதி அமைக்கவில்லையெனில், பொதுமக்களின் நலம் மற்றும் பாதுகாப்பிற்காக விளக்கு வசதி அமைத்துத் தரலாம். இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் சேர்ந்து பொது மருந்தகங்கள் அமைத்து பராமரிக்கலாம். ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு சொந்தமான அசையா சொத்துக்களை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எந்த ஒரு கிராம ஊராட்சியிடமும் ஒப்படைக்கலாம் என அறிவிக்கை செய்யலாம். ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள எந்த ஒரு கிராம ஊராட்சியிடமும் ஒப்பந்தம் செய்து கொண்டு எந்த ஒரு ஊராட்சி நிறுவனங்களையும் அமைத்து பராமரிக்கலாம். ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதியிலிருந்து செலவிடப்படும் எந்த ஒரு செலவினமும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஒப்பதலுடனே செய்யப்பட வேண்டும். ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் வரவு செலவுத் திட்டத்திற்கு ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அனுமதி பெற்ற பின்னரே திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அரசின் பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்கள் செயல்படுத்தும் எந்த ஒரு வளர்ச்சி திட்டப் பணியையும் ஆய்வு செய்யலாம். 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 96ல் கூறப்பட்டுள்ள நிலைக் குழுக்களை தவிர்த்து, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தேவையான பிற நிலைக் குழுக்களை தவிர்த்து, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தேவையான பிற நிலைக் குழுக்களை அமைத்து, அக்குழுக்களின் ஆலோசனைகளில் அடிப்படையில் செயல்படலாம். பிற ஊராட்சி அமைப்புக்கள் வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதற்காக தேவையான நிதியை, ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து கடனாக அளிக்கலாம். அதே போன்று ஊராட்சி ஒன்றியத்தின் நிதியிருப்பு குறைவாக இருக்குமாயின், வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றும் பொருட்டு பிற உள்ளாட்சி அமைப்புகள், அரசு நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களில் தேவையான நிதியைக் கடனாக அளிக்கலாம். அதே போன்று ஊராட்சி ஒன்றியத்தின் நிதியிருப்பு குறைவாக இருக்குமாயின், வளர்ச்சி பணிகளை நிறைவேற்றும் பொருட்டு பிற உள்ளாட்சி அமைப்புகள், அரசு நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களில் தேவையான நிதியை கடனாக பெறலாம். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நீர்ப்பாசன ஆதாரத்தில் குடிமராமத்து வேலைகளை மேற்கொண்டு பொது மக்களிடமிருந்து குடிமராமத்து கட்டணத்தை நிர்ணயித்து வசூலிக்கலாம். ஊராட்சி ஒன்றிய நீர்ப்பாசன ஆதாரங்களில் மீன் பிடிப்பதற்கான உரிமம் வழங்கலாம்.

## ஊராட்சி ஒன்றியத் தலைவரின் பொறுப்பும், கடமையும்

❖ ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களைக் கூட்ட ஏற்பாடு செய்வதுடன், அக்கூட்டங்களுக்கு தலைமை வகித்து நடத்துதல் இவருடைய முக்கிய கடமையாகும். ஊராட்சி ஒன்றியத்தில் பராமரிக்கப்படும் எல்லா ஆவணங்களையும் எப்போதும் பார்வையிடலாம். ஊராட்சி ஒன்றிய தலைவருக்கென சட்டத்தின் குறிப்பிட்டுள்ள எல்லா கடமைகளையும் அதிகாரங்களையும் செயல்படுத்துதல்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவி காலியாக இருந்தால் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் தலைவரது பொறுப்பு முழுவதும் ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவரைச் சாரும். ஊராட்சி ஒன்றியத் தவைர் 30 தினங்களுக்கு மேல் தொடர்ச்சியாக ஊராட்சி ஒன்றியப் பகுதிகயில் இல்லாமல் இருந்தாலோ அல்லது உடல் நலக் குறைவு காரணமாக 30 தினங்களுக்கு மேல் தம் கடமையினை செய்திட முடியாத நிலைமையில் இருந்தாலோ, அவர் பொறுப்பும் கடமையும் துணைத் தலைவரைச் சாரும்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர், துணைத் தலைவர் பதவி காலியாக இருந்தாலோ அல்லது தலைவர் பதவி கலியாக இருந்து துணைத் தலைவர் 30 தினங்களுக்கு மேல் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் இல்லாமலிருக்கும் நிலைமை ஏற்பட்டாலோ அல்லது உடல் நலக் குறைவு காரணமாக 30 நாட்களுக்கு மேல் கடமையாற்ற முடியாத நிலையில் அவர் இருந்தாலோ ஊராட்சி ஒன்றியத் தலைவர் பொறுப்பினையும், கடமையினையும் மீண்டும் தலைவரோ துணைத் தலைவரோ ஏற்றுக் கொள்வது வரையிலும், சம்பந்தப்பட்ட வருவாய் கோட்ட அலுவலர் பொறுப்பில் இருப்பார். அச்சமயம் அவர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பதவி சார்ந்த உறுப்பினர் மற்றும் தலைவராக கருதப்படுவார்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் தனது பொறுப்புகளில் சிலவற்றை தமது விருப்பத்தின் பேரில் துணைத் தலைவருக்கு எழுத்து மூலம் ஒப்படைக்கலாம். ஆனால் ஏதாவது பொறுப்பினையோ அதிகாரத்தினையோ விட்டுக் கொடுக்கலாகாது என ஊராட்சி ஒன்றிய மன்றம் தீர்மானம் மூலம் தடுத்திருந்தால் அவ்வதிகாரம் மற்றும் பொறுப்புகளை துணைத் தலைவருக்கு கொடுக்க இயலாது.

## தலைவரது அதிகாரம் பெற்ற உறுப்பினர்

ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவர் பதவி காலியாகயிருந்தாலோ 30 தினங்களுக்கு மேல் அவர் ஊராட்சி ஒன்றிய பகுதியில் இல்லாமல் இருந்தாலோ அல்லது உடல் நலக் குறைவு காரணமாக 30 தினங்களுக்கு மேல் தமது கடமையினைச் செய்திட முடியாத நிலையிலிருந்தாலோ ஊராட்சி ஒன்றியத் தலைவர் தமது அதிகாரங்களில் சிலவற்றை ஏதேனும் ஒரு உறுப்பினருக்கு எழுத்து மூலம் ஒப்பளிப்பு செய்யலாம். இவ்வாறு அதிகாரம் கொடுக்கப்பட்ட நபர் தற்காலிகமாக ஊராட்சி ஒன்றியத் தலைவர் என அழைக்கப்படுவர்.

இம்மாதிரி அதிகாரங்களை உறுப்பினர் யாருக்கேனும் கொடுத்தால் அவ்விவரம் அடுத்த ஊராட்சி ஒன்றியக் கூட்டத்தில் உறுப்பினர்களது தகவலுக்கு வைக்கப்பட வேண்டும். ஏற்கனவே ஒரு உறுப்பினருக்கு சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்குமாயின் அப்போது வேறொரு உறுப்பினருக்கு இந்த அதிகாரத்தில் எதனையும் கொடுக்கலாகாது. மேலும் ஒரு வருடத்தில் மொத்தம் 90 நாட்ளுக்கு மேல் இம்மாதிரி அதிகாரங்களை கொடுப்பதற்கு ஊராட்சி ஒன்றியத்தின் சிறப்பு அனுமதியினைத் தலைவர் பெற்றிருக்க வேண்டும். உறுப்பினர் எவருக்கேனும் தலைவர் தமது அதிகாரங்களை கொடுக்கும் போது தேவையான வரையறைகளையும் கட்டுப்பாடுகளையும் அவர் ஏற்படுத்திடலாம்.

## ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களின் உரிமை மற்றும் பொறுப்புகள்

ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களில் கலந்து கொண்டு, நிர்வாகத்தில் காணப்படும் குறைகளைச் சுட்டிக்காட்டலாம். மக்களின் தேவைகளை எடுத்துக் கூறலாம். தேவையான ஆலோசனைகள் வழங்கலாம். கூட்டங்களில் தீர்மானங்கள் கொண்டு வரலாம். கேள்வி எழுப்பி பதில் பெறலாம். ஆவணங்களைக் கோரிப் பார்வையிடலாம். ஊராட்சி ஒன்றிய தலைவரிடம் ஊராட்சி ஒன்றிய நிதிக்கு ஏற்பட்ட இழப்பு குறித்து விளக்கம் கேட்கலாம். விவாதத்தில் பங்கு கொண்டு வாக்களிக்கலாம்.

ஊராட்சி ஒன்றிய ஆவணங்களைப் பார்வையிடல் உறுப்பினர் எவரேனும் விரும்பினால் முன்னதாகவே அது குறித்து ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு தெரியப்படுத்திட வேண்டும். அப்படி உறுப்பினரால் கேட்கப்பட்ட ஆவணங்களை அவர்கள் பார்வைக்கு வைப்பதற்கு தடையாக நியாயமான காரணம் எதுவும் இருப்பின், அந்த ஆவணங்களை கொடுப்பதற்கு இல்லையென ஆணையர் எழுத்து மூலம் அவ்வுறுப்பினருக்கு பதில் அளிக்கலாம். ஊராட்சி ஒன்றிய தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து ஊதியம் எதுவும் பெற முடியாது. எனினும் ஊராட்சி ஒன்றிய நிர்வாகக் காரணம் கருதி வெளியூர் பயணம் மேற்கொண்டால் அதற்கான பயணப்படி மற்றும் நிலையான பயணப்படி, அமர்வுப்படி போன்றவற்றை விதிமுறைகளின் படி பெற்றுக்கொள்ளலாம். உறுப்பினர் தீர்மானங்கள் கொண்டு வர விரும்பினால் 10 தினங்கள் அவகாசத்தில் தலைவருக்கு எழுத்து மூலம் தகவல் தருவதுடன் தீர்மான வாசகத்தின் மாதிரி ஒன்றினையும் அனுப்பிட வேண்டும். தீர்மானம் சட்ட விதிகளுக்கு உட்பட்டுயிருக்குமாயின், தலைவர் அத்தீர்மானத்தை அடுத்த கூட்டத்தின் பொருட்குறிப்பில் சேர்த்திடுவார். உறுப்பினரது தீர்மானம் கூட்டத்தில் கலந்த கொள்ள ஏதாவது ஒரு உறுப்பினரால் வழி மொழியப்பட வேண்டும். இல்லையாயின் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஊராட்சி ஒன்றியக் கூட்டத்தில் நிர்வாகம் சம்பந்தமாக கேள்வி ஏதேனும் உறுப்பினர் கேட்க விரும்பினால் 10 நாட்கள் இடைவெளியில் அது பற்றி தலைவருக்கு எழுத்து மூலம் தெரிவித்திட வேண்டும். கேட்கப்படவிருக்கும் கேள்வி சட்ட திட்டங்களுக்குட்பட்டதாக இருப்பின் ஊராட்சி ஒன்றியத் தலைவர் அடுத்த கூட்டத்தின் பொருட்குறிப்பில் அக்கேள்வியினைச் சேர்த்து கூட்டத்தின் போது உரிய பதிலினை எழுத்து மூலம் அளித்திடுவார். கூட்டப்பொருட் குறிப்பிலும் கேள்வி பதிலினைச் சேர்க்க வேண்டும்.

## ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் வினா எழுப்பும் நடைமுறை

ஊராட்சி ஒன்றியத் தலைவரை உறுப்பினர் எவரும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு எழுத்து மூலம் கேள்வி கேட்கலாம்.

1. ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திற்கு தொடர்பற்ற எதனையும் குறித்து கேள்வி எழுப்பக் கூடாது. அவ்வாறு கேட்கப்பட்ட கேள்விக்குத் தலைவர் பதில் அளிக்கவும் கூடாது.

2. உண்மை நிலையைத் தெரிந்து கொள்வதற்காக மட்டுமே கேள்வி எழுப்பப்படவேண்டும். பதில்களும் உண்மை நிலவரத்தைத் தெரிவிப்பதாக அமைய வேண்டும்.

3. குறைந்தது 10 நாட்கள் கால அவகாசம் அளித்து உறுப்பினர் எழுத்து மூலம் கேள்வியைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும்.

4. எழுப்பப்படும் கேள்வி சுருக்கமாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும்.

5. கேள்வியைத் தெளிவாகப் புரிந்துகொள்ளும் அளவிற்கு உதவுகின்ற அல்லது தேவையான விவரங்கள் அல்லது நபரின் பெயரை மட்டிலுமே கேள்வியில் குறிப்பிட வேண்டும். தேவையற்ற விவரங்கள் மற்றும் அறிக்கைகள் எதுவும் இருக்கக் கூடாது.

6. கேள்வியில் குறிப்பிடப்படும் அறிக்கையில் கண்டுள்ள விவரங்கள் உண்மையானவை என்று நிரூபிக்கும் பொறுப்பு கேள்வி கேட்கும் உறுப்பினரையே சாரும்.

7. வாதங்கள், அனுமானங்கள் வஞ்சப்புகழ்ச்சியான சொற்றொடர்கள், அல்லது ஒருவர் புகழுக்குப் பங்கம் ஏற்படுத்தும் அவதூறு எதுவும் கேள்வியில் இடம் பெறக் கூடாது.

8. ஆலோசனை கூறுவதற்காகவோ, நடைமுறைக்குத் தொடர்பற்ற சட்டத்தின் நுணுக்கம் குறித்தோ, அல்லது ஊகத்தின் அடிப்படையிலோ கேள்வி எழுப்பக் கூடாது.

9. ஒருவரது பொது வாழ்க்கை பதவிச் செயல்பாடு தவிர அவரது தனிப்பட்ட வாழ்க்கை, ஒழுக்கம் அல்லது நடத்தை பற்றி கேள்வியில் குறிப்பிடலாகாது.

10. ஒருமுறை முழுமையாகப் பதில் அளிக்கப்பட்ட கேள்வியை மீண்டும் எழுப்பலாகாது.

## கேள்வியை ஏற்றுக் கொள்ளுதல்

தலைவர், ஒரு கேள்வி ஏற்றுக் கொள்ளப்படத் தக்கதா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்பார். ஏற்றுக் கொண்ட கேள்விகளை அடுத்து வரும் ஊராட்சி ஒன்றியக் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு கேள்வியைக் கீழ்க்கண்ட காரணங்களுக்கானத் தலைவர் ஏற்றுக் கொள்ள மறுக்கலாம்.

❖ கேள்வி கேட்கும் உரிமையைத் தவறாகப் பயன்படுத்தும் விதத்தில் அது கேட்கப்பட்டிருந்தால், அல்லது ஒரு கேள்விக்குப் பதில் அளிப்பது பொது நலனுக்குப் பாதகமாக அமையும் என்று தலைவர் கருதினால்.

அந்நிலையில் அக்கேள்வி கூட்ட நிகழ்ச்சி நிரல் சேர்க்கப்பட வேண்டியதில்லை. ஆனால் தலைவர் இது குறித்து கேள்வி கேட்ட உறுப்பினருக்கு ஒரு பதில் அனுப்ப வேண்டும்.

## கேள்விகளுக்கு பதில் அளித்தல்

ஊராட்சி ஒன்றியக் கூட்ட நடவடிக்கைகளில் கேள்வி பதில் முதலில் இடம் பெறும். ஆகவே, கூட்டத்தின் இதர நடவடிக்கைகளுக்கு முன், தலைவர் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளை வரிசைக்கிரமமான முறையில் ஒவ்வொன்றாக படித்து பதில் அளிக்க வேண்டும். கேள்வி கேட்ட உறுப்பினர், கேள்விக்குப் பதில் அளிக்கும் முன் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். அந்நிலையில் பொதுவாக அக்கேள்விக்குப் பதில் அளிக்க வேண்டியதில்லை. ஆனால் நிர்வாக நலன் கருதி தேவைப்படின் தலைவர் திரும்பப் பெறப்பட்ட கேள்விக்குக் கூட பதில் அளிக்கலாம். தலைவர் அளிக்கும் பதிலின் உண்மை நிலை குறித்து மேலும் விவரம் வேண்டும் எனக் கருதும் உறுப்பினர் எவரும் துணைக் கேள்வி அல்லது தொடர் கேள்வி எழுப்பலாம். தலைவர் அக்கேள்வியின் தன்மையைப் பரிசீலித்து அவற்றை அனுமதித்து பதில் அளிக்கலாம். போதிய காரணங்களுக்காகப் பதில் அளிக்க மறுக்கலாம். தொடர்பற்றகேள்வி என்று எதனையும் மறுத்தால், உறுப்பினர் அதனை ஊராட்சி ஒன்றியத்தின் அடுத்த கூட்டத்தில் புதிய கேள்வியாக எழுப்பலாம். கேட்கப்பட்ட கேள்வி மற்றும் அதற்களிக்கப்பட்ட பதில் பற்றி விவாதம் எதுவும் நடைபெறலாகாது. நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்ட கேள்வி மற்றும் அதற்களிக்கப்பட்ட பதில் ஆகியவற்றை ஊராட்சி ஒன்றிய செயல்முறைக் குறிப்புகளில் தலைவர் எழுதி வைக்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய கூட்ட நடவடிக்கைகளில் கேள்வி பதில் நிகழ்ச்சிக்குப் பின் நிகழ்ச்சி நிரலில் உள்ள பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். உறுப்பினர்களில் கொண்டுவரப்படும் தீர்மானங்கள் அதற்கு அடுத்தப்படியாக விவாதத்திற்கும் எடுத்துக்கொள்ளப்படும்.

## தீர்மானங்கள் மீது நடவடிக்கை எடுத்தல்

ஒன்றியக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் ஆணையாளருக்குத்தான் உண்டு. இதற்கென ஆணையாளர் தானே ஒரு நடைமுறையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். சட்ட ரீதியாகவும், விதிமுறைகளை அனுசரித்தும் நிறைவேற்றப்பட்ட அனைத்துத் தீர்மானங்களையும் பதிவேடு ஒன்றில் பராமரிக்க வேண்டும் அவ்வாறு பராமரிக்காத தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்பட்டால் அத்தகைய தீர்மானங்களைச் செயல்படுத்த வேண்டியதில்லை. ஆனால் அத்தீர்மானங்களை ரத்து செய்ய ஆய்வாளருக்கு எழுத வேண்டும். பதிவேட்டில் பதியப்பட்ட தீர்மானங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு கோப்பு எண் பெற்று பொருளுக்கேற்ப எழுத்தர்களிடம் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து 3 நாட்களுக்குள் தீர்மானத்தைச் செயல்படுத்த

நடவடிக்கை தொடர வேண்டும். ஆணையாளர் தீர்மானத்தின் மீது நடவடிக்கை எடுக்கும் பதிவேட்டை 15 நாட்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்து எழுத்தர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும். ஒரு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு செயல்பாட்டிற்கு கொண்டுவர வேண்டிய தீர்மானங்களின் மீது எடுத்த நடவடிக்கையை அடுத்த கூட்டத்திற்கான பொருட் குறிப்பில் சேர்த்து உறுப்பினர்களது தகவலுக்கு வைத்துப் பதிவு செய்ய வேண்டும்.

## (ஊ) ஊராட்சி ஒன்றியங்கள் ஆற்ற வேண்டிய கடமைகள்

(அ) ஊராட்சி ஒன்றிய சாலைகள் என்று வகைப்படுத்தப்பட்ட பொதுச்சாலைகள், அச்சாலைகளில் உள்ள பாலங்கள், சிறுபாலங்கள், சாலை அணைகள், தரைப் பாலங்கள் ஆகியவற்றைக் கட்டுதல், பழுது பார்த்தல் மற்றும் பேணுதல்.

(அஅ) குடிப்பதற்கும் துவைப்பதற்கும் மற்றும் குளிப்பதற்கும் தேவையான கட்டமைப்பு வசதிகளை அமைத்தல்.

(அஅஅ) ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு தேவையான குடிநீர் வழங்கும் பணிகளை மேற்கொள்ளுதல்.

(ஆ) ஊரக மருந்தங்களை ஏற்படுத்தி அவற்றை பராமரிப்பதுடன் கிராம மருத்துவ தொழில் புரிவோருக்கு உதவித் தொகை அறித்தல்.

(இ) தாய் சேய் நல விடுதிகளை ஏற்படுத்தி நடத்துதல், தாய் சேவைப்பணி கிடைக்க செய்தல், குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தில் தாய்மார்களுக்கு உதவி அளித்தல்.

(ஈ) ஏழைகளுக்கான வீடுகள், அனாதை இல்லங்கள், கடைகள், விற்பனை மையங்கள் தரைமேடைகள் கட்டுதலும் அவற்றை பராமரித்தலும், அம்மை குத்துபவர்களை பயிற்றுவிப்பதும் அவர்களை வேலைக்கு அமர்த்தி மக்களுக்கு நோய் பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுத்தல்.

(உ) ஆரம்பப் பள்ளிகள் மற்றும் தொடக்க பள்ளிகளை ஏற்படுத்துதல், அவற்றை பராமரித்தல் மற்றும் அவைகளை விரிவாக்கம் செய்தல். தொடக்கப் பள்ளிகளை நடத்தும் தனியார் நிர்வாகத்திற்கு உதவித் தொகை வழங்குதல்.

(ஊ) தொற்று நோய் அல்லது மலேரியா நோய் பரவாமல் செய்ய தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தல்.

(எ) ஊராட்சி ஒன்றிய பொருட்காட்சிகள் விழாக்கள் என வகைப்படுத்தப்பட்டவைகளை கட்டுப்பாடு செய்தல்.

(ஏ) ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் கால்நடை நோய் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுதல்.

(ஐ) ஊராட்சி ஒன்றிய சந்தை என வகைப்படுத்தப்பட்ட பொதுச் சந்தைகளை ஏற்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.

(ஒ) ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் பிறப்பு இறப்புகள் சம்பந்தமான புள்ளி விவரங்களை வைத்திருத்தல்.

(ஓ) பொதுமக்கள் தங்குவதற்கான சத்திரங்கள் மற்றும் தங்குமிடங்களை ஏற்படுத்தி அவற்றை பராமரித்தல்.

(ஔ) வேளாண்மை, மற்றும் வேளாண்மை சார்பான வசதிகளை மேம்படுத்தலும் மற்றும் வேளாண்மை கண்காட்சிகளை நடத்துதல்.

(ஃ) ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் குடிசைத் தொழிலை ஊக்குவித்தல்.

## (ii) ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகள்

1. கிராம மக்களின் சமூக நிலையை மேம்படுத்தும் பொருட்டு, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு தனிநபர் அல்லது குழுக்களினால் மேற்கொள்ளப்படும் கிராம தொழில்களின் வளர்ச்சி உள்ளடங்களான தேசிய விரிவாக்க வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுதல்.

2.. கிராம பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, அரசாலோ அல்லது சட்டப்படியான அமைப்பு அல்லது பிற முகமை எதனாலுமோ வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதாக இருந்தால், அவற்றை நிறைவேற்றுவதற்காக ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கலாம்.

3. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் வாழும் மக்களின் பாதுகாப்பு, சுகாதாரம், நலம், அல்லது வசதிகளையும் முன்னேற்றுவதற்காக போதுமான நிதி ஒதுக்கீடு செய்து நிறைவேற்றலாம்.

4. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள பொது சாலைகளிலும் அல்லது பொது இடங்களிலும் விளக்கு வசதி அமைக்குமாறு ஊராட்சி ஒன்றியத்தை, அரசு கேட்டுக்கொண்டால், அதனை நிறைவேற்ற வேண்டும்.

5. இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் சேர்ந்து பொது மருந்தகங்களையும், பிற நிறுவனங்களையும் அமைத்து பராமரித்து வரலாம்.

6. ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை, அறிவிக்கை மூலம் விதிக்கப்படும் கட்டுபாடுகளுக்கு உட்பட்டு, ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள ஏதாவது ஒரு கிராம ஊராட்சிக்கு பராமரித்து வருமாறு ஒப்படைக்கலாம்.

7. 1817ஆம் ஆண்டு தமிழ் நாடு அறக்கட்டளைகள் மற்றும் எஸ்டேட்டுகள் ஒழுங்கு முறை சட்டத்தின்படி, நில நிர்வாக ஆணையருக்கு, வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியக் குழுவின் சம்மதத்துடன் ஒப்படைக்கலாம். அவ்வாறு ஒப்படைக்கப்படும் பொழுது சட்டப்படி நிலநிர்வாக ஆணையரின் அதிகாரங்களை செலுத்தியும் பொறுப்புகளை ஆற்றி வரலாம்.

8. அரசு, ஊரக வளர்ச்சி இயக்குநர் பிற துறைகளின் ஆணையர்கள் அல்லது இயக்குநர்கள் அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றியக்குழுவின் சம்மதத்துடன், ஏதவாது நிறுவனத்தின் நிர்வாகத்தையோ அல்லது எந்த பணியையாவது செயல்படுத்துமாறு அல்லது பராமரிக்கும்படி அல்லது சில அதிகாரங்களை செலுத்தி வருமாறு அல்லது ஏதாவது கடமைகளை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படும் பொழுது அப்பணிகளை ஊராட்சி ஒன்றியம் ஆற்றலாம்.

9. ஊராட்சி ஒன்றிய சாலைகளில் உள்ள நடைபாதைகள் கற்கள், இதர கட்டுமானங்களான, ஊராட்சி சாக்கடைகள், பாலங்கள், சிறுபாலங்கள், தரைப் பாலங்கள் ஆகியவற்றை பராமரிக்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியத்திற்கே உள்ளது.

10. ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் அருகில் உள்ள மரங்கள் அச்சாலையை பயன்படுத்துவோருக்கு ஆபத்தை விளைவிக்ககூடியதாகவோ அல்லது அச்சாலைகளில் உள்ள கட்டுமானத்திற்கு அபாயம் விளைவிக்கும் என ஊராட்சி ஒன்றியக் குழு கருதுமானால், மரத்தின் சொந்தக்காரரை அம்மரத்தை பாதுகாப்பு செய்யவோ, கிளைகளை வெட்டவோ கட்டளையிடலாம்.

11. ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சாலைகளுக்கு அருகில் உள்ள கட்டிடங்களின் சொந்தக்காரர்களை, பொது அறிவிக்கையின் மூலம் சாலைகளின் ஓரத்தில் இருக்கும் புதர்ச் செடிகள் நடைபாதைகளுக்கு இடையூறு இல்லாமலும் போக்குவரத்து பார்வைக்கு தடங்கலாக இல்லாமலும் இருக்குமாறு கூறலாம். மேலும் சாலைகளின் ஓரங்களின் உள்ள கட்டிடங்கள் போக்குவரத்து பார்வைக்கு தடங்கலாக இல்லாமல் கட்டிடத்தின் உயரத்தை குறைக்குமாறு கூறலாம்.

12. ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள சாலைகளின் ஊராட்சி ஒன்றியத்தின் அனுமதியின்றி தற்காலிகமாவோ, நிரந்தரமாகவோ, ஆக்கிரமிப்பு செய்திருந்தால், அவற்றை அகற்றலாம். மேலும் ஊராட்சி ஒன்றிய சாலைகளிலிருந்து 20 மீட்டர் தூரம் வரை சுரங்கம் அமைப்பதற்கோ அல்லது கல், மண் அல்லது வேறு பொருள்களை அகற்றக்கூடாது என ஊராட்சி ஒன்றியம் தடை விதிக்கலாம்.

13. அரசால் ஒரு நீர்ப்பாசன அமைப்பை பாதுகாக்கவோ அல்லது பராமரிக்கவோ அல்லது மேலாண்மை செய்யவோ அல்லது நீரை பகிர்ந்தளிப்பை ஒழுங்குப்படுத்தவோ கேட்டுக்கொள்ளப்படும் பொழுது அவற்றை நிறைவேற்றலாம். அவ்வாறு நீர்ப்பாசன அமைப்பை குடிமராமத்து செய்வதற்காக வரி விதிக்கலாம்.

14. ஊராட்சி ஒன்றியக் குழு ஆய்வாளரின் அனுமதியுடன் பொது சந்தைகளாக பயன்படுத்தி கொள்வதற்கான இடங்களை வழங்கலாம். ஊராட்சி ஒன்றிய பொது சந்தைகளில் கட்டணங்கள், வாடகைகளை நிர்ணயிக்கலாம்.

15. கிராம ஊராட்சிப் பகுதிகளில், தனியார் சந்தைகளுக்கு உரிமம் வழங்கலாம். தனியார் சந்தைகளில், பின்பற்ற வேண்டிய துப்புறவு நடவடிக்கைகள் பயன்படுத்த வேண்டிய அளவு மற்றும். விதிக்கப் படவேண்டிய வாடகை மற்றும் கட்டணங்களை வரையறுத்து உரிமம் வழங்கலாம். வழங்கப்பட்ட உரிமத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறும் பொழுது, உரிமத்தை நீக்கம் செய்யலாம்.

16. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தனியார் சந்தை வைத்திருப்பதற்கான நபரின் உரிமத்தை கையகப்படுத்தலாம். அதில் கட்டணங்களை விதிக்கலாம்.

17. அரசின் ஒப்புதலுடன் புதிய ஊராட்சி ஒன்றிய சாலைப் பூங்கா, விளையாட்டு திடல், பேருந்து நிலையம், நுழைவு வளைவு அல்லது வேறு ஊராட்சி ஒன்றிய பொது சொத்துகளுக்கு பெயர் சூட்டலாம்.

18. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தொழிற்சாலை கட்டுவதற்கும் இயந்திரங்கள் நிறுவுவதற்கும் அனுமதி வழங்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## 7. ஊராட்சி ஒன்றியக் குழுக்களும் அவற்றின் செயல்பாடுகளும்

ஊராட்சி ஒன்றியங்கள் தங்களுக்கு சட்டப்படி வழங்கப்பட்ட கடமைகளையும் பணிகளையும் சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்காக பல்வேறு குழுக்களை அமைத்து அவற்றின் ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் பெற்றுச் செயல்படலாம். வளர்ச்சி சம்பந்தமான பல்வேறு பிரச்சனைகளை கூர்ந்தாய்வு செய்து சம்பந்தப்பட்ட தொழில் நுட்பக் கருத்துக்கள் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள் நேரடியாக முடிவு செய்வது கடினம் என்பதால் இத்தகைய கூர்ந்தாய்வு பணியை குழுக்கள் மூலம் செய்து அதன் ஆலோசனை அடிப்படையில் முடிவு செய்யலாம்.

ஊராட்சி ஒன்றியத்தின் அமைக்கப்படும் பல்வேறு குழுக்கள் பற்றி கீழே காணலாம்.

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள்

1. நியமனக் குழு
2. வேளாண்மை உற்பத்திக் குழு
3. கல்விக் குழு
4. பொது நோக்கக் குழு
5. அரசு உத்திரவிட்டால் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் தீர்மானத்தால் அமைக்கப்படும் ஏனைய குழுக்கள்.

### நியமனக் குழு

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு நியமனக் குழு அமைக்கப்படும். அக்குழுவில் ஒன்றியத்

தலைவரும், ஆணையாளரும், ஒன்றியக் குழுவால் ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஒருவரும், ஆக மூவர் இடம் பெறுவர். ஒன்றியத்தலைவரே இக்குழுவின் தலைவராவர்.

ஊராட்சி ஒன்றியத்தின் நிதியிலிருந்து ஊதியம் கொடுக்கப்படும் மற்றும் ஊராட்சி ஒன்றியத்தின் அனுமதிக்கப்பட்ட எல்லாப் பணியிடங்களுக்குமான நியமனங்கள் இக்குழுவின் ஒப்புதலுடன் செய்யப்படும். அதாவது நியமனங்களுக்கான நபர்கள் தேர்வு, நியமனக் குழுவால் தேர்வு செய்யப்பட்டு ஆணையாளரால் நியமன உத்தரவு வழங்கப்படும். நியமனக் குழுவின் நடவடிக்கைகள், ஊராட்சி ஒன்றியக் குழுவின் அடுத்த கூட்டத்தில் தகவலுக்காக வைக்கப்படும்.

நியமனக் குழு உறுப்பினர் ஒவ்வொரு ஆண்டும், இதற்கென பிறப்பிக்கப்பட்ட விதி முறைகளின் படி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அடுத்த உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்கும் வரை பதவியில் இருப்பவர் தொடர்ந்து செயல்படுவர். நியமனக் குழு இரண்டு உறுப்பினர்களுடன் (அதாவது தலைவர் மற்றும் ஆணையாளருடன்) செயல்படுவது சட்ட ரீதியாக அனுமதிக்கப்பட்டது என்றாலும், இந்நிலை ஏற்படுவதைத் தவிர்க்கலாம். அதவாது இரண்டு உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் கூட்டத்தில் ஆணையர் ஒருவராக இருக்க வேண்டும்.

நியமனக் குழுவில் உறுப்பினர்களுக்கும் ஆணையாளருக்கும் கருத்து வேற்றுமை எழுந்தால், தீர்த்து வைக்கும் முறையாவது, நியமனக் குழுவில் எந்த ஒரு பொருளும் ஏகமனதாக நிறைவேறினால் ஆணையாளர் உடன் அத்தீர்மானத்தில் மீது நடவடிக்கை எடுத்து உத்திரவு வழங்கலாம். சில சந்தர்ப்பங்களில் இரண்டு உறுப்பினர்கள் ஆதரவுடன் ஒரு தீர்மானம் நிறைவேறலாம். அவ்வாறாயின் அந்த இரு உறுப்பினர்களில் ஒருவர் ஆணையாளராக இருப்பின், அத்தீர்மானத்தில் மீது நடவடிக்கை எடுத்து உத்தரவு வழங்கலாம். ஆணையாளர் எதிராகவும் தலைவரும் உறுப்பினரும் ஆதாரவாகவும் ஒரு தீர்மானம் நிறைவேற்றினால், அதாவது ஆணையாளருடன் குழுவின் இதர இரு உறுப்பினர்களுக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டால் ஆணையாளர் இது குறித்து கல்வி சம்பந்தப்பட்ட பணியிடங்களுக்கு பள்ளிக் கல்வி இயக்குநருக்கும், இதர பணியிடங்களைப் பொறுத்தவைர ஊரக வளர்ச்சி இயக்குநர் இல்லது அரசுக்கு தெரிவித்து அவர்கள் எடுக்கும் முடிவின்படி செயல்பட வேண்டும். இது விஷயத்தில் அரசு அல்லது உயர் அலுவலர்களின் முடிவு இறுதியானது.

## வேளாண்மை உற்பத்திக் குழு

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு வேளாண்மை உற்பத்திக் குழு அமைக்கப்பட வேண்டும். ஊராட்சி ஒன்றியத் தலைவர் இக்குழுவின் தலைவராவார். ஆணையாளரும், ஒன்றியக் குழுவால் சேர்த்துக் கொள்ளப்பட்ட மூன்று நபர்களும் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர். ஒன்றியக் குழுவின் கருத்துப்படி வேளாண்மையில் போதிய அறிவும் அனுபவமும் உள்ளவர்களையே இக்குழுவின் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஊராட்சி ஒன்றியப் பகுதியில் வேளாண்மை உற்பத்தியை பெருக்குவதற்குத் தேவையான பயனுள்ள ஆலோசனைகளை வழங்குவதே இக்குழுவின் பணியாகும்.

## கல்விக் குழு

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கல்விக் குழு ஒன்று அமைக்கப்படும். இக்குழுவில் எத்தனை பேர் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்று ஊராட்சி ஒன்றியம் தீர்மானிக்கும். ஊராட்சி ஒன்றியத் தலைவரே இக்குழுவின் தலைவராவார். இக்குழுவின் உறுப்பினர்கள் இதற்கென பிறப்பிக்கப்பட்டுள்ள விதிகளின்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

ஊராட்சி ஒன்றியப் பகுதியில் நடைபெற்று வரும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளைக் செம்மையாக நிர்வகிக்க ஆலோசனை வழங்கவே இக்கல்விக் குழு அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்பப் பள்ளிகளை திறந்து பராமரித்து, மேம்படுத்தும் கடமை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் இக்குழு அது குறித்து ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் ஒன்றிய மன்றம் மூலம் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு வழங்கலாம்.

## பொதுநோக்கக் குழு

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் பொது நோக்கக் குழு ஒன்று அமைக்கப்படும். இக்குழுவிலும் எத்தனை பேர் உறுப்பினர்களாக இருக்கலாம் என்பதை ஊராட்சி ஒன்றிய மன்றம் தீர்மானிக்கும். ஏனைய குழுக்கள் போலவே இக்குழுவிற்கும் ஊராட்சி ஒன்றியத் தலைவரே தலைவராவார். இதர குழு உறுப்பினர்களிலிருந்து தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இக்குழு பல்வேறு வளர்ச்சித் திட்டச் செயல்பாடுகள் குறித்தும், ஒன்றிய மன்றத்தின் பொதுவான செயல்பாடுகளை மேம்படுத்துவது குறித்தும், ஒன்றிய மன்றம் கேட்டுக் கொண்டால் குறிப்பிட்ட ஒரு பொருள் குறித்தும், ஒன்றிய மன்றத்திற்கு ஆலோசனைகளும் பரிந்துரைகளும் நல்கும். அரசு பிறப்பிக்கும் விதிகளுக்குட்பட்டு, ஊராட்சி ஒன்றிய மன்றம் மேற்குறித்து நான்கு குழுக்களின் கடமைகளையும், அதிகாரங்களையும் ஒழுங்கு முறை விதிகள் பிறப்பித்து தெளிவுபடுத்தி நெறிப்படுத்தலாம்; வழி காட்டலாம்.

மேற்படி குழுக்களில், நியமனக் குழு நீங்கலாக ஏனையக் குழுக்களில் கூட்ட நடவடிக்கைகள், ஒன்றிய மன்றத்தின் அடுத்த கூட்டத்தில் பரிசீலனைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்பட்ட வேண்டும். ஆனால் நியமனக் குழுக் கூட்ட நடவடிக்கைகளை பொறுத்த வரையில் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தகவலுக்கு வைத்தால் போதும். மேற்படி குழுவின் தீர்மானத்தை ஊராட்சி ஒன்றிய மன்றம் பதிவு செய்யலாமே தவிர, திருத்தவோ, மாற்றவோ முடியாது.

## கூட்டுக் குழுக்கள் அமைத்தல்

ஒன்றுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகள் இணைந்தோ அல்லது ஊராட்சி ஒன்றியத்துடன் இணைந்தோ, அவ்வமைப்புகள் சேர்ந்து நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளைத் தீர்மானிப்பதற்காக கூட்டுக் குழுக்களை அமைக்கலாம். கூட்டுக் குழுக்களை, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் தாங்களாகவே தீர்மானித்தும் அமைக்கலாம். ஆய்வாளார் கேட்டுக் கொண்டால் கண்டிப்பாக அமைக்க வேண்டும்.

## மாதிரி வினா

ஊராட்சி ஒன்றிய அமைப்பை விவரி.

# பாடம் – 9

## மாவட்ட ஊராட்சி

புதிய ஊராட்சி முறையில் மாவட்ட அளவிலான ஊராட்சி அமைப்பு மாவட்ட ஊராட்சியாகும். மாவட்ட அளவில் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கென உருவாக்கப்பட்டதாகும்.

மாவட்ட ஊராட்சிக்கு மாவட்டத்திலுள்ள மக்களால் உறுப்பினர்கர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்கள் தவிர மாவட்டத்திலுள்ள சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களும் இதில் இடம்பெறுவர். இவர்கள் மாவட்ட ஊராட்சி நடவடிக்கைகளில் பங்கு பெறவும், வாக்களிக்கவும் அதிகாரம் கொண்டவர்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் மாவட்ட வளர்ச்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இவர் மாவட்ட ஊராட்சிக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி நடத்துவார். மாவட்ட ஊராட்சி இயற்றிய தீர்மானங்களைச் செயல்படுத்த மாவட்ட ஊராட்சியின் செயல் அதிகாரி அதிகாரம் வாய்ந்தவராகும். மாவட்ட ஊராட்சியில் வரையறுக்கப்பட்ட இட ஒதுக்கீடு பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கும் வழங்கப்படுகிறது. மாவட்டம் முழுவதையும் ஒரே சீராக வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவது தான் இதன் நோக்கம் என்பதை அறிவோம்.

மாவட்ட அளவில் மாவட்ட ஊராட்சியின் பணிகளைச் செயல்படுத்த கீழ்கண்ட அதிகாரிகள் மாவட்ட அளவில் இடம் பெற்றுள்ளனர். மாவட்ட ஆட்சித்தலைவர் ஊராட்சிகளின் ஆய்வாளராக இருக்கின்றர். இவருக்கு உதவியாக இந்த அதிகாரிகள் உள்ளனர்.

1. செயல்திட்ட அலுவலர் (மவாட்ட ஊரக வளர்ச்சி முகவாண்மை)
2. தனி உதவியாளர் (ஊராட்சி வளர்ச்சி)
3. தனி உதவியாளர் (சத்துணவு)
4. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
5. உதவி இயக்குநர் (தணிக்கை)

மாவட்ட ஊரக வளர்ச்சி முகவாண்மை என்பது ஒரு சுதந்திரமாக இயங்கும் அமைப்பு. இதற்கு தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவர், உதவித்தலைவர் மாவட்ட ஊராட்சித் தலைவராகும். செயல்திட்ட அலுவலர் கூடுதல் ஆட்சித் தலைவராக உள்ளார். இவர் வட்டார வளர்ச்சி அதிகாரிகளின் துணையோடு மாவட்ட அளவில் செயல்படுத்தப்படும் அனைத்துத்திட்டங்களையும் கண்காணிப்பார். மாவட்ட செயல் திட்ட அலுவலருக்கும் கீழ் ஒரு குழு (team) உதவி செயல்திட்ட அலுவலர்கள் உதவி செய்து வருகின்றனர். வறுமை ஒழிப்புத்திட்டங்கள் முதலாக அனைத்துத் திட்டங்களையும் செம்மையாகச் செயல்படுத்த உதவிபுரிபவர்கள். ஊராட்சி, சத்துணவு ஆகிய பணிகளை தனி உதவியாளர்களும், ஊராட்சிகள் நிர்வாக நடவடிக்கைகளை உதவி இயக்குநரும், ஊராட்சியின் செயல்பாட்டில் நிதி குறைபாடுகளைக் கவனிக்க உதவி இயக்குநரும் மாவட்ட ஆட்சித் தலைவரும் உதவிபுரிந்து வருகின்றனர்.

### மாவட்ட ஊராட்சியின் பொறுப்புகள் மற்றும் அலுவல்கள்:

(அ) மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுத்தும் வளர்ச்சி திட்டங்கள், அவைகள் செய்துவரும் இதர சேவைப்பணிகள் பற்றியும் மற்றும் மாவட்டத்தில் உள்ள அரசின் நிர்வாக கட்டுப்பாட்டில் உள்ள இதர நிறுவனங்கள் செயல்படுத்தும் வளர்ச்சி பணிகளின் செயல்பாடுகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

(ஆ) மாவட்டத்தில் நடைபெறும் பணிகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக, அரசு, கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் துறை முகவரமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளில் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்.

(இ) அரசால் மாவட்ட ஊராட்சியை குறிப்பாக கேட்டுக்கொள்ளப்படும்பொழுது சட்டத்தின் வகைமுறைகள் அல்லது ஆணை எதையும் செயல்படுத்துவது தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

(ஈ) சந்தைகளை கிராம ஊராட்சி சந்தைகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய சந்தைகள் என்று வகைப்படுத்துதல் மற்றும் ஒரு ஊராட்சி அமைப்பு மற்றொன்றிற்குச் செலுத்த வேண்டிய பங்குத் தொகை விகிதங்களை நிர்ணயித்தல்.

(உ) பொருட்காட்சிகளையும் விழாக்களையும் கிராம ஊராட்சி பொருட்காட்சிகள் மற்றும் விழாக்கள் என்றும் ஊராட்சி ஒன்றிய பொருட்காட்சிகள் மற்றும் விழாக்களென்றும் வகைப்படுத்துதல்.

(ஊ) அரசால் தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட பெருஞ்சாலைகள் என்று வகைப்படத்தப்பட்ட சாலைகள் நீங்கலாக பொதுச் சாலைகள் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் என்றும் கிராம ஊராட்சி சாலைகள் என்றும் வகைப்படுத்துதல்.

(எ) சாலைப்போக்குவரத்து மேம்பாடு தொடர்பான அனைத்து பொருட்கள் குறித்தும் அரசுக்கு ஆலோசனை நல்குதல்.

(ஏ) மாவட்டத்தின் வளர்ச்சிக்கென மாவட்ட ஊராட்சியால் தேவையென்று கருதும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(ஐ) தேவையென்று கருதும் தகவல் விபரங்களைச் சேகரித்தல்.

(ஒ) அம்மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊரட்சிகளின் நடவடிக்கைகளை முறைப்படுத்துதல் அல்லது முன்னேற்த்தின் பல்வேறு கூறுகள் குறித்து புள்ளிவிவரம் அல்லது ஏனைய தகவல்களை வெளியிடுதல்.

(ஓ) ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது கிராம ஊராட்சியானது அதன் நடவடிக்கைகளை முறைப்படுத்துதல் அல்லது முன்னேற்றத்தின் பல்வேறு கூறுகள் குறித்து புள்ளி விவரம் அல்லது ஏனைய விபரங்களை வெளியிடுதல்.

மாவட்ட ஊராட்சியானது. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகள் தொடர்பான அனைத்துப் பொருட்பாடுகள் குறித்தும் அம்மாவட்டத்தின் பொருளாதார வள ஆதாரங்களின் வளர்ச்சி, குடியிருப்போரின் பண்பாடு நலம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காகப் செயல்படுத்தப்படும் பணிகள் தொடர்பான பொருட்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

## மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கான திட்டமிடுதல்.

1. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஐந்தாண்டுகளுக்கான வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். அத்திட்டம் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு மாநில ஐந்தாண்டு திட்டமாக தயாரிக்கப்படுவதை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். மாவட்ட ஆண்டுத் திட்டத்தை தயாரிப்பது மாவட்ட திட்ட குழுவின் முதன்மையான பணியாகும். தமிழ்நாடு அரசு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட திட்டக் குழுக்களை அமைப்பதற்கான நடவடிக்கையில் மாவட்ட திட்ட குழுவிற்கு உதவும் வகையில் மாவட்ட திட்டமிடும் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாநில திட்டக் குழுவானது, மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வளர்ச்சித் திட்டங்கள் தயாரிப்பதற்கான வழிமுறைகளை வகுக்கும்.

2. பல்வேறு பகுதிகளுக்கான திட்டங்கள் ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சித் திட்டமாக, இருக்கும் வகையில் கிராம ஊராட்சிகளுக்கு, கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலரும் ஊராட்சி ஒன்றிய வளர்ச்சித் திட்டங்களை வட்டார வளர்ச்சி அலுவலரும் மாவட்ட ஊராட்சியின் திட்டங்களை செயலாளரும் தயாரிக்க வேண்டும். மாவட்ட திட்ட அலுவலர் மூலம் ஊரக மற்றும் நகர பகுதி திட்டங்களும் பிற துறை திட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு முழுமையான மாவட்ட திட்டமாக தயாரிக்க நடவடிக்கை எடுத்தல்.

3. கிராம ஊராட்சிக்கான ஆண்டு திட்டம் செப்டம்பர் மாதத்தில் தயாரித்து அம்மாத இறுதிக்குள் கிராம சபையின் ஒப்புதலைப் பெற்று ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்பப்பட வேண்டும். ஊராட்சி ஒன்றிய ஆண்டு திட்டம் அக்டோபர் மாதத்தில் தயாரித்து அம்மாத இறுதிக்குள் மாவட்ட ஊராட்சிகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும். மாவட்ட ஊராட்சி ஆண்டுத் திட்டம் நவம்பர் மாதத்தில் தயாரித்து அம்மாத இறுதிக்குள் மாவட்ட ஊராட்சியின் ஒப்புதல் பெற்று மாவட்ட திட்டக் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும். மாவட்ட அளவில் ஊரக மற்றும் நகர திட்டங்களை ஒருங்கிணந்து ஆண்டு திட்டம் டிசம்பர் மாத இறுதிக்குள் ஒருங்கிணைந்த மாவட்ட வளர்ச்சித் திட்டமாக தயார் செய்து அம்மாத இறுதிக்குள் மாநில திட்டக் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

4. கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான வளர்ச்சித் திட்டத்தை உருவாக்குவதற்கு பின்வருமாறு துறை அலுவலர்கள் ஒவ்வொரு பகுதி வளர்ச்சித் திட்டத்திற்கும் பொறுப்பேற்று உள்ளாட்சி அமைப்புகளுக்கும் உதவுவர்.

## கிராம ஊராட்சி அமைப்புகளுக்கு திட்டம் தயாரித்தல்

### (அனைத்து செயல் திட்டங்களையும் உள்ளடக்கிய ஓராண்டு மற்றும் ஐந்தாண்டு திட்டம் தயாரித்தல்)

| வ.எண் | பொருள் | துறை | கிராம ஊராட்சிகளுக்கு திட்டம் தயாரிக்க பொறுப்புடைய அலுவலர்கள் |
|---|---|---|---|
| 1. | பயிர்உற்பத்தி மற்றும் பாதுகாப்பு | வேளாண்மை மற்றும் தோட்டக்கலை | வேளாண்மை அலுவலர் தோட்டக்கலை அலுவலர் |
| 2. | மண்வளம், நீர்வள, பாதுகாப்பு | வேளாண்மை மற்றும் வனத்துறை | வேளாண்மை அலுவலர் வனச்சரகர் |
| 3. | கால்நடைப்பராமரிப்பு | கால்நடைத் துறை | கால்நடை ஆய்வாளர் |
| 4. | பால் வளமேம்பாடு | பால்வளத்துறை | பால்சேமிப்பு அலுவலர் |
| 5. | மீன்வளம் | மீன்வளத்துறை | மீன்வள ஆய்வாளர் |
| 6. | சமூகக்காடுகள் | வனவளத்துறை | வளச்சரகர், சமூகக் காடுகள் |
| 7. | கூட்டுறவு | கூட்டுறவுத்துறை | சார்பதிவாளர், கூட்டுறவுதுறை |
| 8. | ஊரக வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டங்கள் | ஊரக வளர்ச்சித்துறை | விரிவாக்க அலுவலர் (ஊராட்சி) |
| 9. | நிலச்சீர்திருத்தம் | வருவாய்த் துறை | வருவாய் ஆய்வாளர் |
| 10. | சமூகநலம் | சமூகநலம் சத்துணவுத் துறை | விரிவாக்க அலுவலர் (சத்துணவு) |

| | | | |
|---|---|---|---|
| 11. | சிறுபாசனம் | பொதுப்பணித்துறை<br>வேளாண்மை துறை | நீர்பாய்ச்சி, மற்றும் உதவி<br>வேளாண்மை அலுவலர் |
| 12. | பாசனப் பகுதி மேம்பாடு | வேளாண்மைப்<br>பொறியியல் துறை | உதவிப்பொறியாளர் வேளாண்மை<br>பொறியியல் துறை. |

**மாதிரி வினா:**

மாவட்ட ஊராட்சி அமைப்பு மற்றும் அதன் பணிகளை எழுதுக.

# பாடம் – 10

## நகராட்சி அமைப்பு

நகராட்சி அமைப்பது பற்றி 1920–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் விளக்குகின்றது. எந்த நகரத்தையும், கிராமத்தையும், சிறுபிரிவு இடங்களையும், சந்தை மற்றும் பிற உள்ளூர் இடங்களையும் அவை சார்ந்த குழுவாக, ஒன்றோடொன்று அருகாமையில் இணைக்கப்பட்டு இருந்தாலும், அவைகளை நகராட்சியாக மாநில அரசாங்கம் உருவாக்கலாம் என பரிவு 4 (1) வில் 1920–ஆம் ஆண்டுச் சட்டம் கூறுகிறது. ஊராட்சிகளை நகராட்சியாக மாற்றுவது குறித்து ஒழுங்குமுறையோ, வரையறையோ ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. 1958–ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகளின் சட்டம், எல்லாக் கிராமங்களிலும் ஊராட்சிகள் அமைக்க வேண்டுமென வலியுறுத்துகிறது. இந்த ஊராட்சிகளில் ஆண்டு வருமானம் ரூ.10,000 மும் அதற்கு மேலாகவும் இருந்தால், அவை நகர ஊராட்சிகள் என வகைப்படுத்தப்படுகின்றன. இந்த நகர ஊராட்சிகள் மறுபடியும் மூன்று படிநிலைகளாக மேலும் வகைப்படுத்தப்படுகின்றன. அவை:

1. ஆண்டு வருமானம் ரூ.40,000மும் அதற்குக் குறைவாகவும் இருக்க நேரிட்டால், ஊராட்சிகள் இரண்டாம் படிநிலை அந்தஸ்தைப் பெறுகின்றன.

2. ஆண்டு வருமானம் ரூ.40,000க்கு மேலாகவும் ஒரு இலட்சத்திற்குக் குறைவாகவும் உள்ள ஊராட்சிகள் முதல் படிநிலை ஊராட்சி அந்தஸ்தைப் பெறுகின்றன.

3. ஒரு இலட்சமும் அதற்கு மேலாகவும் ஆண்டு வருமானம் வரக்கூடிய ஊராட்சிகள், தேர்வுப் படிநிலை ஊராட்சிகள் அந்தஸ்து பெறுகின்றன.

தேர்வுப்படிநிலை ஊராட்சிகள் சில குறிப்பிட்ட முறைகளைக் கையாண்டு, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய மன்றம் ஆகியவற்றோடு கலந்தாலோசித்து, நகராட்சிகளாக மாற்றப்படுகின்றன. ஊராட்சிகள் நகராட்சிகளாக மாறுவதற்குரிய தகுதிகளை அடையப் பெற்றதும், அவற்றை நகராட்சிகளாக மாற்ற வேண்டுமென்ற கட்டாயம் பற்றி 1920–ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தில் அம்சங்கள் ஏதும் இடம் பெற்றதாகத் தெரியவில்லை.

தமிழ் நாட்டின் மக்கள் தொகை 49,199,168 என 1971–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு கூறுகின்றது. இதில் நகரத்தில் வாழ்கின்ற மக்கள் தொகையின் எண்ணிக்கை 12,464,834 ஆகும். இது மொத்த மக்கள் தொகையில் 30,26 விழுக்காடு ஆகும். 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி மக்கள் தொகை 62110839 ஆகும். இவற்றில் 44% விழுக்காட்டினர் வாழ்கின்றனர். இது இந்தியாவில் நகரங்களில் வாழும் மொத்த மக்கள் தொகை விழுக்காட்டை விட அதிகமாகும். பொதுவாக இந்தியாவில் நகரங்களில் வாழும் மக்கள் தொகையின் அளவு 19.91 விழுக்காடு ஆகும். இம்மாநிலத்தில் 5893.5 சதுர கி.மீ. பரப்பு நகரத்தில் வாழக்கூடிய மக்கள் பயன்படுத்துகின்ற அளவாகும். இது மாநில மொத்தப் பரப்பளவில் 4.53 விழுக்காடு ஆகும். இந்தியாவில் 1.33 விழுக்காடு தான் நகரப்பரப்பைப் பயன்படுத்துகின்றவர்களாகும் நகரப் பரப்புக்களில் ஒரு சதுர கி.மீட்டருக்கு 2115 பேர்கள் உள்ளனர் என்ற மக்கள் தொகை நெருக்கத்தைச் கூறியுள்ளது. நகர ஊராட்சிகள் 5000 பேர்களுக்கு மேலாக மக்கள் தொகை இருக்குமாயின், அவை நகராண்மை (Urban) என்று தீர்மானிக்கப்பட வேண்டுமென மக்கள் தொகை கணக்கெடுப்பு கூறுகிறது இந்த மாதிரியாக 439 நகரங்கள் தமிழ் நாட்டில் உள்ளன. ஆனால் 102 நகராட்சிகளும், நகரியங்களு தான் உள்ளன. எல்லா நகரங்களும். நகராட்சியாகவோ, நகரியங்களாகவோ மாற்றப்படவில்லை.

நகராண்மை நகரங்களில் (Urban Centres) 1921–ஆம் ஆண்டு 6.25 விழுக்காடு மக்கள் வாழ்ந்தனர். இது 15.5 விழுக்காடாக 1971–ஆம் ஆண்டு பெருகியது. 1921–ஆம் ஆண்டிலிருந்து 2001–ஆம் ஆண்டு வரையிலும் பெருகிய மக்கள் தொகை பற்றிப் காண்போம்.

| மாநில மக்கள் | | நகராண்மை நகரில் | |
|---|---|---|---|
| வருடம் | தொகை (இலட்சக் கணக்கில்) | வாழும் மக்கள் தொகை | விழுக்காடு |
| 1921 | 216.28 | 13.83 | 6.25 |
| 1931 | 234.72 | 17.47 | 7.25 |
| 1941 | 262.67 | 22.66 | 8.50 |
| 1951 | 301.19 | 31.09 | 10.33 |
| 1961 | 336.86 | 48.83 | 14.50 |
| 1971 | 411.99 | 63.59 | 15.50 |
| 2001 | 621.11 | 272 | 44 |

நகரங்களில் வாழ்கின்ற மக்கள் தொகையின் அளவு மொத்த மக்கள் தொகையில் 30.26 விழுக்காடாகும். ஆனால் நகராண்மை நகரங்களில் 15.50 விழுக்காடு மக்கள் தான் வசித்து வந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் நகராட்சிகளின் எண்ணிக்கை 1866ல் 18 ஆக இருந்தது. தற்போது 102 ஆக உள்ளது. விவரம் வருமாறு.

| வருடம் | நகராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1866 | 18 |
| 1876 | 21 |
| 1886 | 29 |
| 1896 | 31 |
| 1906 | 31 |
| 1916 | 37 |
| 1926 | 45 |
| 1936 | 47 |
| 1946 | 49 |
| 1956 | 61 |
| 1966 | 88 |
| 1974 | 101 |
| 1977 | 103 |
| 1984 | 106 |
| 2004 | 102 |

தமிழ் நாட்டிலுள்ள நகராட்சிகள் பல படிநிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை:

**1. சிறப்புப் படிநிலை:–** வருட வருமானம் ரூ.75 இலட்சங்களும் அதற்கு மேலும் எல்லாக் கணக்குகளிலும் வரக்கூடியதாகவும் ரூ 50 இலட்சங்கள் பொது நிதிக்கணக்குகளிலும் இருக்க வேண்டும்.

**2. தேர்வுப் படிநிலை:–** வருட வருமானம் ரூ.50 இலட்சங்கள் எல்லாக் கணக்குகளிலும் இருக்கும் படியாகவும் ரூ.25 இலட்சங்கள் பொதுநிதிக் கணக்குகளிலும் இருக்க வேண்டும்.

**3. முதல் படிநிலை:–** எல்லாக் கணக்குகளிலும் வருட வருமானம் ரூ.15 இலட்சங்களும், பொது நிதிக்கணக்குகளில் ரூ.10 இலட்சமும் இருக்க வேண்டும்.

**4. இரண்டாவது படிநிலை:–** எல்லாக் கணக்குகளிலும் வருட வருமானம் ஏழரை இலட்சங்களும், பொதுநிதிக் கணக்கில் ரூ.5 இலட்சமும் இருக்க வேண்டும்.

**5. மூன்றாவது படிநிலை:–** வருட வருமானம் ரூபாய் மூன்று இலட்சங்களுக்கு மிகுந்து, அனைத்துக் கணக்குகளிலும் இருப்பதுடன், ரூபாய் இரண்டு இலட்சம் பொதுநிதிக் கணக்கிலும் இருக்க வேண்டும்.

நகராண்மை நகரியங்களும் மூன்று படிநிலைகளாகப் பிரிக்கப்பட்டு உள்ளன. அவை:

**1. தேர்வுப் படிநிலை:–** ரூபாய் 10 இலட்சங்களுக்கு மிகுந்த வருட வருமானம் கொண்டு, சாதாரண பொது நிதிக் கணக்கில் இடம் பெறுவது.

**2. முதல் படிநிலை:–** சாதாரணப் பொது நிதிக்கணக்கின் கீழ் ஆண்டு வருமானம் ரூ.5 இலட்சத்திலிருந்து 10 இலட்சத்திற்குள் இருக்கக் கூடியது.

**3. இரண்டாம் படிநிலை:–** சாதாரணப் பொதுநிதிக் கணக்கின் கீழ் வருட வருமானம் ரூ.5 இலட்சமும் அதற்குக் கீழாக உள்ளவைகளும் ஆகும்.

நகராட்சிகளை வகைப்படுத்தி, தரம்பிரிப்பது முதலில் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டது. மூன்று வருடங்களின் சராசரி ஆண்டு வருமானத்தைக் கணக்கிட்டு, வகைப்படுத்தப்பட்டது. இம்முறை 1963–ஆம் ஆண்டு வரையிலும் பின்பற்றப்பட்டது. பின்னர் அரசாங்கம் வருமானத்துடன், மக்கள் தொகையையும் கணக்கிட்டு வகைப்படுத்த வேண்டுமென ஆணை பிறப்பித்தது. ஆனால் இம்முறை நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. பொதுக் கணக்கில் வரக்கூடிய வரவுகளை மட்டுமே வைத்துத்தான் கணக்கிட வேண்டுமென மறுபடியும் ஆணை பிறப்பித்தது. இதன்படி நகராட்சிகள் வகைப்படுத்தப்பட்ட முறையைப் பற்றிக் காணலாம்.

| | பொதுக்கணக்கில் மூன்று ஆண்டுகள் |
|---|---|
| நகராட்சிகளின் படிநிலை | வந்த பொது ஆண்டு வருமானம் |
| சிறப்புப் படிநிலை | ரூ.50 இலட்சத்திற்கு மேல் |
| தேர்வுப் படிநிலை | ரூ.25 இலட்சத்திற்கு மேல் |
| முதல் படிநிலை | ரூ.10 இலட்சத்திற்கு மேல் |
| இரண்டாம் படிநிலை | ரூ.5 இலட்சத்திற்கு மேல் |
| மூன்றாம் படிநிலை | ரூ.2 இலட்சத்திற்கு மேல் |

இவ்வாறு நகராட்சிகள் படிநிலைப்படுத்தப்பட்டதும், ஏராளமான குற்றச்சாட்டுக்கள் மக்களிடையே எழுந்தன. ஏனெனில் நகராட்சியின் வேலை நிதிவகைச் செயல் முறைகளைப் பொறுத்துத் தான்

அமையக்கூடியதென்பது உண்மை. ஆனால் இது பொதுக் கணக்கில் மட்டுமே பயன்படுத்தக்கூடியது மட்டுமில்லாமல் துணைக்கணக்குகளான கல்வி, குடிநீர் வசதி மற்றும் விளக்கேற்றல் போன்ற பிரிவுகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே இந்த துணைக்கணக்குகள் மீதும் கவனம் செலுத்தி நகராட்சிகள் வகைப்படுத்த வேண்டுமெனக் கூறப்பட்டது. நிதிவகை, நிருவாகவகைப் பொறுப்புக்கள் அரசுப்பணிகளைச் செய்ய வசதி செய்யவும், தொழில் நுணுக்கப்பணிகளின் தேவைகளையும் மனத்தில் கொண்டு, வரிசைப்படுத்தினால்தான் செம்மையாக அமையும். இவற்றை நன்றாக அரசு ஆராய்ந்து, கீழ்கண்ட முறையில் 1974–ஆம் ஆண்டு ஆணை பிறப்பித்தது. இதன்படி இரண்டு கணக்குகள் உருவாகியுள்ளது. அவை பொதுக் கணக்குகள் மற்றும் எல்லாக் கணக்குகள் என்பனவாகும்.

| நகராட்சிப் படிநிலை | பொதுக்கணக்கில் வருமானம் | எல்லாக் கணக்குகளிலும் மொத்த வருமானம் |
|---|---|---|
| சிறப்புப் படிநிலை | ரூ. 50 இலட்சங்கள் | ரூ. 75 இலட்சங்கள் |
| தேர்வுப் படிநிலை | ரூ. 25 இலட்சங்கள் | ரூ. 50 இலட்சங்கள் |
| முதல் படிநிலை | ரூ. 10 இலட்சங்கள் | ரூ. 15 இலட்சங்கள் |
| இரண்டாம் படிநிலை | ரூ. 5 இலட்சங்கள் | ரூ. 7 இலட்சங்கள் |
| மூன்றாம் படிநிலை | ரூ. 2 இலட்சங்கள் | ரூ. 3 இலட்சங்கள் |

இந்த வகைப்படுத்தலில் நிதிவகைப் பொறுப்புடன், நிருவாகப் பொறுப்பினையையும் மனத்தில் கொண்டு வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் மொத்த வருமனம் எல்லாக் கணக்குகளை மட்டுமே வைத்து வகைப்படுத்தவேண்டுமெனக் கூறியுள்ளது. அவை:

| நகராட்சிப் படிநிலை | மொத்த வருமானம் எல்லாக் கணக்குகளிலும் |
|---|---|
| சிறப்புப் படிநிலை | ரூ. 75 இலட்சங்கள் |
| தேர்வுப் படிநிலை | ரூ. 40 இலட்சங்கள் |
| முதல் படிநிலை | ரூ. 15 இலட்சங்கள் |
| இரண்டாம் படிநிலை | ரூ. 7 இலட்சங்கள் |
| மூன்றாம் படிநிலை | ரூ. 3 இலட்சங்கள் |

நகராட்சி அமைப்பது குறித்த விஷயத்தில், ஊராட்சி நகராட்சியாகச் சட்டத்தின்படி மாற வாய்ப்பில்லை. அரசாங்கம் தான் தீர்மானித்து, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட வளர்ச்சி மன்றம் போன்றவற்றின் கருத்துக்களை அறிந்து முடிவு எடுக்கிறது. தற்போது 439 நகர்ப்புற (Urban) நகரங்கள் உள்ளன. இதில் 8 நகரியங்களைச் சேர்த்து 102 நகரங்கள் தான் நகராட்சிகளாக மாற்றப்பட்டுள்ளன. எனவே ஊராட்சிகள் தேவையான தகுதிகளைப் பெற்றவுடன், நகராட்சிகளாக அறிவிக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையாக இருக்க வேண்டுமெனச் சட்டத்திருத்தம் செய்யப்படவேண்டும்.

இந்திய அரசியலமைப்பில் வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டுமென்ற அம்சமுள்ளது. இதன்படி பாராளுமன்றம், சட்டமன்றம் ஆகியவற்றிற்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுப்பதுபோல், உள்ளாட்சிகளுக்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வாக்குரிமை அளிக்க வேண்டுமென்ற கருத்து நிலவியது. உள்ளாட்சிகளுக்குத் தனியான வரையறைகள் நிருணயித்து வாக்குரிமையைத் தடுப்பது இயலாத விஷயமாயிற்று. மேலும் சட்டமன்றத் தேர்தலுக்கு வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படுகின்றபொழுது,

உள்ளாட்சிகளுக்கும் சேர்ந்து வாக்காளர் பட்டியல் தயாரித்தால் செலவு குறையும், சிக்கனமாகவும் இருக்கும். சட்டமன்றத் தேர்தலுக்கு வாக்களிப்பது போல் உள்ளாட்சிகளுக்கும் வாக்களிப்பது உள்ளாட்சிகளுக்குக் குறிப்பாக நகராட்சி மன்றங்களுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்கும் முறை கொண்டு வரப்பட்டது. இதே மாதிரியாக நகராட்சித் தேர்தலுக்குப் போட்டியிடுபவர்களுக்குக் கூடுதல் தகுதிகள் அல்லது சிறப்புப் தகுதிகள் ஏதுவும் நிருணயிக்கப்படவும் இல்லை. வாக்காளர் பட்டியலில் பெயர் இருக்கின்ற அனைவரும், தேர்தலுக்கும் நிற்கத் தகுதி பெற்றவர்கள் என்பது முடிவாகிவிட்டது. எனவே தேர்தலுக்கு முக்கியமாகத் தேவைப்படக் கூடியது வாக்காளர் பட்டியல். இதை வைத்துத்தான் தேர்தல் நடத்த வேண்டும். இதிலுள்ளவர்கள் தான் தேர்தலில் நிற்கவும் முடியும் என்ற நிலை ஏற்பட்டது. மேலும் நகராட்சித் தேர்தலுக்கு, நகராட்சிச் சந்தைகள், வண்டி நிலையங்கள், பஸ் நிலையம், இறைச்சிக் கொட்டில்கள் போன்றவற்றிற்கு உரிமம் பெற்றவர்கள் நிற்கத் தகுதியில்லாதவர்கள் எனச் செய்யலாமா? என ஆலோசிக்கப்பட்டு, பின்னர் வைவிடப்பட்டது. நகராட்சியைப் பல வார்டுகளாகப் பிரித்து அவற்றிலிருந்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்ற முறை தற்போது பின்பற்றப்பட்டு வருகின்றது. இதனை வார்டு முறைமை என்று அழைப்பார்கள். ஒவ்வொரு வார்டிலிருந்தும் ஓர் உறுப்பினர் மட்டுமே தேர்ந்தெடுத்தல் நலமெனப்பட்டது. ஏனெனில் பல உறுப்பினர்களை ஒரே வார்டிலிருந்து தேர்ந்தெடுப்பதால், ஏராளமான சீர்கேடுகள் தேர்தல் முறையில் நடைபெற வழி கோலியுள்ளன. எனவே பல உறுப்பினர்களை ஒரே வார்டிலிருந்து தேர்ந்தெடுக்கும் முறையை முழுவதுமாக நீக்கிட வேண்டுமென்ற கருத்து நிலவியது. ஏனெனில் ஒவ்வொரு வாக்காளருக்கும் வார்டைப் பொறுத்து தேர்ந்தெடுக்க வேண்டிய பிரதிநிதிகளைப் பொறுத்து பல வாக்குகள் அளிக்கப்படுகின்றன. இதில் வாக்காளர் தங்களுக்குப் பிடித்தமான முதலிரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வாக்குகளைப் பயன்படுத்துகின்றனர். பல சமயங்களில் எல்லா வாக்குகளையும் அளிக்க விரும்புவதில்லை. மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் உறுப்பினரின் மரியாதையும், மதிப்பும் ஒரு வார்டிலிருந்து ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரைக் காட்டிலும் அதிகமாக உள்ளன. இது தவிர்க்கப்படவேண்டிய விஷயமாகையால் பல உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கின்ற முறைமை கைவிடப்பட்டது. எனவே வார்டுகளை அதிகரித்து, ஓர் உறுப்பினர் ஒரு வார்டிலிருந்து தேர்ந்தெடுக்கும் முறை கொண்டு வரப்பட்டது. இதற்காகப் புதிய வார்டுகள் ஏற்படுத்தப்பட்டன. அரசாங்கம் இது பற்றிக் கவனமாக அறிவுறுத்தல், வரையறை செய்துள்ளது.

வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டு இருந்தாலும், இனச்சார்பு வேறுபாடு அகற்றப்பட்டாலும், தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேறும் படியாக நகராட்சியில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. தாழ்த்தப்பட்டோர்கள் அதிகமாக இருக்கின்ற வார்டை, ஒதுக்கப்பட்ட வார்டாகக் கருதி, தாழ்த்தப்பட்டோர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கும் படியாகச் செய்யப்பட்டது.

சென்னை மாநகராட்சியில் 1958–ஆம் ஆண்டு வரையிலும் இருந்து வந்த நகராட்சி நியமன உறுப்பினர் (aldermen) நகராட்சிகளிலும் இடம் பெற வேண்டுமென 1958–ஆம் ஆண்டுகளில் வலியுறுத்தப்பட்டது. அனுபவம் பெற்றுவர்களையும், அறிவு முதிர்ந்தவர்களையும் நகராட்சியில் நியமன உறுப்பினர்களாக ஆக்குவதால், நகராட்சி மன்றத்தில் ஒற்றுமையும், மரியாதை, மதிப்பு ஆகியவையும் உயரக் கூடுமென மக்கள் உணர்ந்தனர். இதனால் நகராட்சி மன்றமும் செம்மையாகச் செயல்படவும், திறன் அதிகரிக்கவும் முடியும். நகராட்சி மன்றக் கூட்டங்களின் நடவடிக்கையில் அறிவுள்ளவர்களின் கலப்பால், பங்கேற்பால் பணிகள் திறமையாகச் செய்ய முடியும் என்பது உண்மை, மக்களுக்கு முதன் முதலாக வாக்குரிமை அளிக்கப்பட்ட பொழுது, ஆர்வமாகவும், அக்கறையாகவும் வாக்குரிமையைப் பயன்படுத்தினார்கள். ஆனால் அறியாமையினால் மக்கள் சில தவறான வழிகளையும் தேர்ந்தெடுக்கவும் வழியுண்டு, அத்தவறுகளைக் களைகின்ற முறையைப் பற்றிச் சிந்தித்தனர், மேலும் நிருவாகம் பற்றி அதிகமாகத் தெரியாத பெரும்பாலோர் இருக்கின்றபொழுது, சிறுபான்மையான அறிவு மிகுந்தவர்களை

மன்றத்தில் இடம்பெறச் செய்தால், மக்களாட்சியைப் புறக்கணித்ததாகக் கூறமுடியாது. நகராட்சி நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. நகராட்சி மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் எட்டில் ஒரு பங்கினர் தான் இவர்களாவர். எனவே இவர்கள் மேலாதிக்கம் ஏதும் செய்ய முடியாது. அதே நேரத்தில் நாம் மற்றொன்று பற்றியும் சிந்திக்க வேண்டும். நகராட்சி நியமன உறுப்பினர் என்ற பெயரில், தேர்தலில் தோல்வியடைந்த உறுப்பினர்கள் நகராட்சி மன்றத்தில் இடம் பெறக்கூடாது. தோல்வி அடைந்தவர்கள் மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள். அவர்களை மன்றத்தில் இடம்பெறச் செய்வதால், மக்களை அவமதித்ததற்கு ஒப்பாகும். எனவே தோல்வியடைந்தவர்கள் மன்றத்தில் இடம் பெற முடியாதபடி கட்டுப்பாடு செய்ய வேண்டும். பதவியிலிருந்து ஓய்வு பெற்ற அரசாங்க அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள், முன்னாள் நகராட்சித் தலைவர்கள், நகராட்சி உதவித்தலைவர்கள், முன்னாள் நகராட்சி உறுப்பினர்கள் ஆகியோர் நகராட்சி நியமன உறுப்பினர்களாகச் செய்யலாமென்ற முடிவிற்கு வந்தனர். ஆனால் இவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்தால் தான் இவர்கள் நியமிக்கத் தகுதி வாய்ந்தவர்களாவர்.

பெண்களுக்கு நகராட்சி மன்றத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது பெண்கள் நகராட்சியில் ஆர்வத்தோடு செயல்பட ஊக்குவிப்புச் செய்தல் வேண்டும். எனவே, நகராட்சி நியமன உறுப்பினர்களில் ஒருவர் பெண்ணாக இருக்கவேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது.

| நகராட்சி | உறுப்பினர் எண்ணிக்கை | ஒரு இடத்திற்குரிய வாக்குகள் |
|---|---|---|
| 20,000 மக்கள் தொகைக்கு மிகாமல் | 16 | 625 |
| 20,000 லிருந்து 30,000க்கு மிகாமல் | 20 | 625 |
| 30,000 லிருந்து 40,000க்கு மிகாமல் | 24 | 730 |
| 40,000 லிருந்து 50,000க்கு மிகாமல் | 28 | 805 |
| 50,000 லிருந்து 1,00,000க்கு மிகாமல் | 32–36 | 1050 |
| 1,00,000 லிருந்து 2,00,000க்கு மிகாமல் | 36–40 | 1562 |
| 2,00,000க்கு மேல் | 40–48 | 1562க்கு மேல் |

இவ்வாறு நகராட்சி மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை வரையறுக்கப்பட்டது. இதில் 600 முதல் 800 வாக்குகள் கொண்ட சிறிய நகராட்சிகளுக்கு ஒரு இடம் வீதமும், 1000 முதல் 1500 வரையுள்ள பெரிய நகராட்சிகளுக்கு இரு இடம் வீதமும் நிருணயம் செய்யப்பட்டன. இந்த எண்ணிக்கை நிருணயம் செய்கின்ற பொழுது, மக்கள் தொகையில் 50 விழுக்காடு மக்கள் தான் வாக்குகளைப் பதிவு செய்வர் என்பதை மனதில் கொண்டு நிருணயம் செய்ய வேண்டும்.

வரிகளின் மூலமாக ரூ.20 இலட்சம் திரட்டும் 3,50,000பேர்கள் கொண்ட நகராட்சிகளை, மாநகராட்சியாக மாற்றலாம்.

இதேபோல் 20,000 பேர்கள் கொண்ட ஊராட்சிகள் தாங்களாகவே நகராட்சியாக மாற்ற வேண்டுமெனவும் நகராட்சிகளின் நிதிக்குழு பரிந்துரைத்தது.

நகராட்சி மன்றங்களின் அமைப்பு குறித்து தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் பிரிவு 7(1) கூறுவதைக் காண்போம் :–

| நகராட்சிகளின் மக்கள் தொகை | நகராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 20,000 பேர்களுக்குக் குறைவில்லாமல் இருந்தால் | 16 |
| 20,000 லிருந்து 30,000க்கு மிகாமல் இருந்தால் | 20 |
| 30,000 லிருந்து 40,000க்கு மிகாமல் இருந்தால் | 24 |
| 40,000 லிருந்து 50,000க்கு மிகாமல் இருந்தால் | 28 |
| 50,000 லிருந்து 1,00,000க்கு மிகாமல் இருந்தால் | 32 |
| 1,00,000க்கு மிகாமல் இருந்தால் | 36 |

பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் குறிப்பிட்ட இட ஒதுக்கீடு செய்ய மாநில அரசாங்கம் அதிகாரம் கொண்டுள்ளது. அந்தக் கொள்கைகள் சில:

1. நகராட்சி மக்கள் தொகையில், முந்தைய கணக்கெடுப்பின்படி பாதிக்குமேல் ஓர் இனத்தவர் இல்லையாயின், ஓர் இடமும் அந்த இனத்திற்கு ஒதுக்கீடு செய்யக்கூடாது.

2. நகராட்சி மன்றத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கையில் பெண்களுக்கு நான்கில் ஒரு பங்கிற்கு மிகாமல் ஒதுக்கீடு செய்யவேண்டும்.

3. நகராட்சிகளை வார்டுகளாகப் பிரித்து, அரசாங்கம் அவற்றைப் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் ஒதுக்கீடு செய்வதென அறிவிக்க அதிகாரம் கொண்டுள்ளது.

4. இரட்டை உறுப்பினர் தேர்தல் வார்டுகள் நீக்கப்பட்டு, தேர்தலில் ஓர் உறுப்பினர் மட்டுமே ஒரு வார்டிலிருந்து தேர்ந்தெடுக்கும் வண்ணம் செய்யப்படுகிறது.

'நகராட்சியின் தலைவர், மன்ற உறுப்பினர்களால் ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார். தற்போது மக்கள் நேரடியாக நகராட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். உதவித் தலைவர் தேர்லுக்கு இவர்தான் வசதி செய்து தருகிறார். மன்றக் கூட்டங்களைக் கூட்டுவதும் மற்றும் பிற சட்டத்தில் கூறப்பட்ட அனைத்துச் செயல்களையும் செய்யக் கூடியவராவார்.

ஆட்சித்துறை அதிகாரம் கொண்டவராத் தலைவர் 1955–ஆம் ஆண்டு வரை திகழ்ந்து வந்துள்ளார். பின்னர் 1955–ஆம் ஆண்டு செய்யப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்திருத்தத்தினால், இந்த அதிகாரம் பறிக்கப்பட்டது. அரசாங்கம் இந்த அதிகாரத்தை ஆணையாளரிடம் ஒப்படைத்தது. இவர் மாநில அரசாங்கத்தால், மாநில அரசாங்கப்பணியிலிருந்து நியமனம் செய்யப்படக்கூடியவர். நகராட்சிகளிடமிருந்து ஆணையாளரின் ஊதியம் பிற செலவுகளை மாநில அரசாங்கம் பெற்றுக் கொள்ளும்.

102 நகராட்சிகள் உள்ளன. அவை:

| | |
|---|---|
| சிறப்புத்தர நகராட்சிகள் | 13 |
| தேர்வுநிலை நகராட்சிகள் | 28 |
| முதல் நிலை நகராட்சிகள் | 36 |
| இரண்டாம் நிலை நகராட்சிகள் | 25 |
| | 102 |

நகராட்சிகள் மக்களுக்கு வேண்டிய அடிப்படையான குடிமைப் பணிகளை வழங்கப் பொறுப்புக் கொண்டனவாக உள்ளன. இவற்றில் கீழ்க்கண்ட ஐந்து பணிகளைச் செய்ய வேண்டும். அவை,

1. சாலைகள் அமைத்தல், பராமரித்தல்
2. தெரு விளக்கிடல்
3. பொதுச் சுகாதாரா வசதிகள் ஏற்படுத்துதல்
4. குடிநீர் வசதியும் வடிகால் வசதியும்
5. கல்வி

இப்பணிகள் ஒரே மாதிரியாக பல்லாண்டுகளாக விளங்கினாலும், அவற்றிற்குச் செலவழிக்கப்பட்ட தொகையும், வேலைகளும் மிகுதியாக விரிவடைந்துள்ளன. நகராட்சிகள் செயல்படுத்தவிருக்கும் பணிகள் குறித்து 1920 ஆம் ஆண்டு சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தில் விளக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் இரண்டாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று கட்டாயப் பணிகள், மற்றொன்று விருப்பப் பணிகள்.

### கட்டாயப் பணிகள்

1. தெருக்கள், பாலங்கள், சாலைவழிகள், சிறுபாலங்கள் போன்றவற்றை அமைத்தல், பராமரித்தல்
2. துப்புரவு
3. தெருக்களுக்கு விளக்கிடல்
4. குடிநீர் வசதி
5. வடிகால் வசதி, பராமரித்தல்
6. கழிவு நீர் அகற்றல்
7. சுகாதாரப் பணிகள்
8. அம்மை குத்துதலும், நோய்த்தடுப்பு முறையும்
9. கல்வி
10. பிறப்பு, இறப்புகளைப் பதிவு செய்தல்
11. இடுகாடுகளையும், சுடுகாடுகளையும் பராமரித்தல்
12. மருத்துவ உதவி
13. நகராட்சி அலுவலகத்தையும், ஆவணக் காப்பகத்தையும் பராமரித்தல்
14. நகராட்சியில் அமையப் பெற்றுள்ள பொதுச் சொத்துக்கள், புராதனச் சின்னங்களைப் பராமரித்தல்
15. நகராட்சியின் சொத்துக்களைக் காத்தல்
16. உணவுப் பொருள் விநியோகத்தைக் கட்டுப்படுத்துதல்
17. பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், வாசக நிலையங்கள் போன்றவை அமைத்தல்.
18. பொதுப் பாதுகாப்பு மற்றும் வசதிகள்.

a) உயிருக்கு ஆபத்து விளைவிக்கின்ற வியாபாரங்களையும், ஆபத்துக்களையும் கட்டுப்படுத்துதல்.

b) கட்டிட ஒழுங்குமுறைச் செயல்கள்

c) நகராட்சிச் சாலைகளிலும், நிலங்களிலும் ஆக்கிரமிப்புச் செய்வதைக் கட்டுப்படுத்துதல்.

## விருப்பப் பணிகள்

1. மத்திய தரக் கல்வி நூலகங்கள், தொல்பொருள் நிலையங்கள்
2. ஏழை மறுவாழ்வு இல்லங்கள்
3. வீட்டு வசதி
4. கால்நடை மருத்துவமனை
5. நுழைவழிகளைப் பராமரித்தல்

**மாநகராட்சிப் பணிகளில்** ஊராட்சி, நகராட்சிகள் போல் கட்டாயப் பணி, விருப்பப்பணி என்ற வகைப்பாடு கிடையாது. மாநகராட்சி மன்றம் தான் மேற்கொள்ள முடிவெடுக்கும் அனைத்துப் பணிகளையும் நிறைவேற்ற அதிகாரம் கொண்டுள்ளது.

## சில முக்கியப் பணிகளாவன:

1. ஆரம்பக்கல்வி
2. பொதுச் சுகாதாரம்
3. பிறப்பு – இறப்புக்களைப் பதிவு செய்தல்
4. குடிநீர் வசதி
5. வடிகால் வசதி
6. தெருவிளக்கு
7. இறைச்சிக் கொட்டில்கள்
8. பொதுச் சந்தை
9. பூங்காக்கள்
10. இடுகாடுகள்
11. விளையாட்டுமைதானங்கள்
12. நூலகவசதி

இவ்வாறு நகராட்சிகள் தங்களது பணிகளை இருக்கக்கூடிய நிதி ஆதாரங்களுக்கேற்று பணிகளை நிறைவேற்றி வருகிறது. மாநில அரசாங்க வளர்ச்சித்திட்டங்களையும் நகராட்சிகள் செயல்படுத்தி வருகிறது.

## மாதிரி வினா

நகராட்சியின் பணிகளை விவரி.

# பாடம் – 11

## மாநகராட்சி

அதிக அளவு மக்கள் தொகையும், மேம்பாடும் கொண்ட பகுதிகள் முதல் தர இரண்டாம்தர நகரங்களாகக் கருதப்படுகின்றன. இத்தகைய நகரங்களில் அமைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி நிறுவனம் தான் மிகவும் உயர்வானதாகும். இதனைத்தான் மாநகராட்சி என்று குறிப்பிடுகிறோம். ஆரம்பத்தில் இங்கிலாந்தின் பாராளுமன்றத்தின் விசேட சட்டத்தினால் இந்தியாவில் உருவாக்கப்பட்டவை இம்மாநகராட்சிகள். ஆனால், இன்று அவை அந்தந்த மாநில சட்டமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டங்களின் ஆளுகைக்குட்பட்டுச் செயல்படுகின்றன. யூனியன் பிரதேசத்திலுள்ள மாநகராட்சி மத்திய பாராளுமன்றத்தினாலும், மாநிலத்தில் உள்ள மாநகராட்சி மாநில சட்டமன்றத்தினாலும் உருவாக்கப்படுகின்றன.

முக்கியமான நகரங்களில் உள்ள மாநகராட்சிகள் கீழ்க்கண்ட சட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவைகளாகும்.

(அ) டெல்லி மாநகராட்சிச் சட்டம், 1957.
(Dehi Municipal Corporation Act, 1957)

(ஆ) கல்கத்தா நகராட்சி சட்டம், 1951, 1952 வரை மாற்றி அமைக்கப்பட்டது.
(Calcutta Municipal Act,1951, Modified upto 1952)

(இ) சென்னை மாநகர நகராட்சி சட்டம், 1919, 1951 வரை மாற்றி அமைக்கப்பட்டது.
(The Madras City Municipal Corporation Act, 1919, Modified upto 1951)

(ஈ) பம்பாய் மாநகராட்சி சட்டம், 1888, 1955 வரை மாற்றி அமைக்கப்பட்டது.
(The Bombay Municipal Corproation Act, 1888, Modified upto 1955)

(உ) மதுரை நகர மாநகராட்சி சட்டம் 1971.
(The Madurai City Municipal Corporation Act, 1971)

நகர நிர்வாக அதிகாரம் மூன்று இடங்களில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. (அ) மாநகராட்சி (ஆ) மன்ற நிலைக்குழுக்கள், (இ) ஆணையாளர். மாநகராட்சி தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர் ஒருவரின் தலைமையின் கீழ் செயல்படுகின்றது.

மாநகராட்சிகள் மக்களிடமிருந்து நேரடியாக பணம் கடனாக பெறக் கூடிய உரிமை பெற்றிருக்கின்ற காரணத்தினால், நகராட்சியை விட உயர்வான அந்தஸ்து கொண்டு விளங்குகிறது. அதிக அளவு பணிகளும், அதிகாரங்களும் கொண்டு செயல்படும் உள்ளாட்சி நிறுவனம் மாநகராட்சி ஆகும். இந்தியாவில் ஏறத்தாழ 60 மாநகராட்சிகள் இருக்கின்றன தமிழ் நாட்டில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய ஆறு மாநகராட்சிகள் இருக்கின்றன.

### மாநகராட்சி நிர்வாகம்

பெரும்பான்மையான மக்கள் தொகை கொண்ட நகரப் புறப்பகுதிகள் முதல் தர அல்லது இரண்டாம் தர நகரங்கள் என்ற அந்தஸ்து கொண்டுள்ளன. இந்த இடங்களில் அமைந்துள்ள உள்ளாட்சி நிறுவனங்கள் தான் மாநகராட்சியாகும். இந்தியாவில் உள்ள உள்ளாட்சி அரசாங்க வகைகளில் மிகவும் உயர்வானது மாநகராட்சியாகும். இந்தியாவில் சமீப காலத்தில் மாநகராட்சிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. ஆரம்பத்தில் இம்மாநகராட்சிகள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன. ஆனால் இப்பொழுது அவைகள் அனைத்தும் அந்தந்த மாநில

சட்டமன்றங்களினால் இயற்றப்பட்ட சட்டங்களின் ஆளுகைக்குட்பட்டு செயல்படுகின்றன. டெல்லி மாநகராட்சிக்கு இருப்பது போல ஒவ்வொரு மாநகராட்சியும் ஒவ்வொரு தனிச்சட்டத்தின் கீழ், உருவாக்கப்படலாம். அல்லது ஒரு பொதுச் சட்டத்தின் அடிப்படையில் பல மாநகராட்சிகள் உருவாக்கப்படலாம். உதாரணமாக, 1959–ஆம் ஆண்டையச் சட்டத்தின் கீழ் உத்திர பிரதேசத்திலுள்ள நான்கு மாநகராட்சிகளும் ஒரே சட்டத்தால் உருவாக்கப்பட்டுள்ளன. இது மாதிரியாக மாநகராட்சிகளை தமிழகத்திலும் பொதுவான சட்டம் மூலம் உருவாக்க பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது. பல நகரங்களிலும் மாநகராட்சிகளை உருவாக்கிய சட்டங்கள் பின்வருமாறு.

(1) டெல்லி மாநகராட்சி சட்டம், 1957–டெல்லி மாநகராட்சி

(2) கல்கத்தா நகராட்சி சட்டம் 1951, 1952 வரை மாற்றி அமைக்கப்பட்டது – கல்கத்தா மாநகராட்சி

(3) சென்னை மாநகராட்சி சட்டம், 1919, 1951 வரை மாற்றி அமைக்கப்பட்டது – சென்னை மாநகராட்சி

(4) பம்பாய் மாநகராட்சி சட்டம், 1888, 1955 வரை மாற்றி அமைக்கப்பட்டது – பம்பாய் மாநகராட்சி

(5) மதுரை நகர மாநகராட்சி சட்டம், 1971 – மதுரை மாநகராட்சி

நகராட்சிகளை விட மாநகராட்சிகள் உயர்வான அந்தஸ்துடையவைகள்.

## மேயர்

மாநகராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர் ஒருவரைத் தலைவராகக் கொண்டிருக்கின்றன. மேயர் என்பவர் பெயரளவிலானதொரு தலைவர்தான். மாநகராட்சிமன்றம், மன்ற நிலைக் குழுக்கள், ஆணையாளர் என்ற மூவரிடத்தில்தான் நகரத்தின் பொது நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆணையாளரைத் தவிர மற்ற அதிகாரிகள் அனைவரையும் மாநகராட்சி மன்றம் நியமனம் செய்கின்றது. ஆணையாளரை அரசாங்கம் நியமிக்கிறது. மாநில மன்றத்தின் முக்கிய பணிகளை மன்றநிலைக் குழுக்கள் செய்கின்றன. மாநகராட்சியின் செயலாட்சி அதிகாரம் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருகிறது. இவர் ஒவ்வொரு துறைக்குமுள்ள பணிகளையும் கடமைகளையும் குறிப்பிட்டுச் சொல்லி, அவைகளை மேற்பார்வையும் செய்கிறார்.

சென்னை நகர மாநகராட்சி சட்டமும், மதுரை நகர மாநகராட்சி சட்டமும் மற்றும் பிற நகர மாநகராட்சி சட்டங்களும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. திருத்தி அமைக்கப்பட்ட சட்டத்தின் படி மேயரும். துணைமேயரும் ஓராண்டிற்குப் பதிலாக ஐந்தாண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்கள் மக்களால் தற்போது நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இருவரும் மீண்டும் அப்பதவிகளுக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட தகுதியுடையவர்கள். துணை மேயர், மேயராகத் தேர்ந்தெடுக்கப்படலாம்.

ஒவ்வொரு மாநகராட்சி மன்றக் கூட்டத்திற்கும் மேயர் தலைமை தாங்கிறார். மேயர் இல்லையென்றால் துணைமேயர் தலைமை தாங்குவார். மேயரும், துணைமேயரும் இல்லையென்றால் வந்திருக்கின்ற உறுப்பினர்களில் ஒருவரை மன்றம் தேர்ந்தெடுக்க அவர் மன்றத்துக்கு தலைமை தாங்கி நடத்துவார்.

கூட்டத்திற்குத் தலைமை தாங்குகின்ற மேயரோ அல்லது துணை மேயரோ கூட்டம் அமைதியாக நடைபெறச் செய்ய வேண்டும். கூட்டம் தொடர்பாக எழக்கூடிய ஒழுங்குப்பிரச்சனைகளை அல்லது செயல் முறைகள் சம்மந்தமாக எழக்கூடிய பிரச்சனைகளை அவர்தான் முடிவு செய்ய வேண்டும் ஒழுங்குப் பிரச்சனை மீது எந்தவிதமான விவாதமும் கிடையாது. தலைமை தாங்குகின்ற மேயர் அல்லது துணை மேயருடைய முடிவுதான் இறுதியானதாகும்.

கூட்டத்திற்குத் தலைமை தாங்குகின்ற மேயரோ அல்லது துணை மேயரோ, ஒரு உறுப்பினருடைய நடவடிக்கை அவருடைய கண்ணோட்டத்தில் முறையற்றதாக இருப்பின் இந்த உறுப்பினரை மன்றத்தை விட்டு வெளிறேச் சொல்லலாம். உறுப்பினர் வெளியே செல்ல மறுத்தால், அவரை பலவந்தமாக வெளியே அனுப்பும்படி தலைமை தாங்குகின்ற மேயரோ அல்லது துணை மேயரோ உத்திரவிடலாம்.

மேயரோ அல்லது துணை மேயரோ தம்முடைய பதவியை ராஜினாமா செய்யலாம். மேயர் தன்னுடைய ராஜினாமா கடிதத்தை மாநகராட்சி மன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். துணைமேயர் தன்னுடைய ராஜினாமா கடிதத்தை மேயரிடத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இவர்கள் தங்களுடைய ராஜினாமா கடிதங்களை சமர்ப்பித்த நாளிலிருந்து அது அமலுக்கு வரும்.

மேயருக்கும் துணை மேயருக்கும் மாநகராட்சி நிதியிலிருந்து மாதச் சம்பளம் வழங்கப்படுவதில்லை. மேலும் அவர்கள் ஆற்றிய பணிகளுக்கென பிரத்தியேகமாக எந்தவொரு ஊதியமும் எந்தவொரு நிலையிலும் வழக்கப்படுவதில்லை.

ஆனால் மாநகராட்சி விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி அவர்களுக்குப் பிரயாணப்படியும், போக்குவரத்து வசதிப்படிகளும் வழங்கப்படுகின்றன.

## மேயருக்குரிய சிறப்புரிமை

(1) மாநகராட்சியின் எந்தவொரு பதிவேட்டையும், எந்த நேரத்திலும் பார்வையிட மேயருக்கு உரிமை உண்டு. மேலும் இவர் மாநகராட்சியின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட அறிக்கைகளை ஆணை'பாளரிடம் எப்பொழுது வேண்டுமானாலும் கேட்டுப் பெறலாம்.

(2) அரசாங்கத்திற்கும் ஆணையாளருக்குமிடையே நடைபெறுகின்ற கடிதப் போக்குவரத்து மேயர் மூலமாகத்தான் நடைபெறவேண்டும்.

(3) ஆணையாளரிடமிருந்து அரசாங்கத்திற்கோ அல்லது அரசாங்கத்திடமிருந்து ஆணையாளருக்கோ வருகின்ற செய்திகளை மேயர் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஆணையாளரிடமிருந்து அரசாங்கத்திற்கு செய்திகள் அனுப்புகின்றபொழுது அச்செய்தித் தொடர்பில் தாம் தேவையானது என்று நினைக்கின்ற குறிப்புக்களையும் மேயர் சேர்த்து அனுப்பலாம்.

மேயர் எல்லா நிலைக்குழுக்களிலும் உறுப்பினராக புதிய நகராட்சிச்சட்டத்திற்கு முன்னர் இருந்தார். மேலும் முன்னால் மேயராக ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகின்ற வேளையில் அவர் ஏதேனும் ஒரு நிலைக்குழுவின் தலைவராகவோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராகவோ இருப்பாரேயானால் அவர் அப்பதவியினை உடனடியாக ராஜினாமா செய்துவிட வேண்டும். ஏதேனுமொரு நிலைக்குழுவின் தலைவர் பதவி காலியாகுமேயானால் மேயர் அந்நிலைக் குழுவின் கூட்டத்தைத் கூட்டி அதன் உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பர். தற்போது குழு உறுப்பினர்கள், தலைவர் ஆகியோர் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்களது பதவிக்காலம் தற்போது ஐந்து ஆண்டுகளாகும்.

## துணைமேயரின் பணிகள்

1. மேயர் பதவி காலியாக இருக்குமேயானால் புதியதொரு மேயர் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் இவர் மேயரின் பணிகளைச் செய்ய வேண்டும்.

2. மேயர் தொடர்ந்து பதினைந்து நாட்களுக்கு மேலாக வெளியூர் சென்றிருந்தாலோ அல்லது உடல்நிலை சரியில்லாமல் இருந்தாலோ மேயருடைய பணிகள், கடமைகள், பொறுப்புகள், அனைத்தும் துணை மேயரை வந்து சேரும். மேயர் திரும்பவும் வருகின்றவரையில் இவர் தான் அவருடைய பொறுப்புக்களைச் செயலாற்ற வேண்டும்.

3. மேயர் தன்னுடைய பணிகளில் எதையேனும் துணை மேயரிடம் உத்திரவின் அடிப்படையில் ஒப்படைக்கலாம்.

## மாநகராட்சி மன்றம்

மாநகராட்சியின் சட்டம இயற்றும் பிரிவு மாநகராட்சி மன்றமாகும். இதனுடைய பதவி காலம் மாநகராட்சிக்கு மாநகராட்சி மாறிக் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, பெங்களூர் மாநகராட்சி மூன்று ஆண்டுகளுக்கும். பாட்னா, டெல்லி மாநகராட்சிகள் நான்கு ஆண்டுகளுக்கும், உத்திரப்பிரதேசம், தமிழ்நாடு ஆகிய மாநில மாநகராட்சிகள் ஐந்தாண்டுகளுக்கு, தேர்ந்தெடுக்கப்படுகின்றன. தற்போது ஒரே மாதிரியாக ஐந்தாண்டுகள் பதவிக்காலமாக 74வது அரசியலமைப்புத் திருத்தம் வழிவகை செய்துள்ளது.

வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில் மாநகராட்சி உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மாநகராட்சி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக வேண்டி, அரசாங்கமானது மாநகராட்சி மன்றத்தைக் கலந்தாலோசித்து நகரை பல தொகுதிகளாக அல்லது வார்டுகளாகப் பிரிக்கின்றது. சாதி, சமயம், பால் ஆகிய வேறுபாடுகள் ஏதுமின்றி ஒரு வார்டில் உள்ள அனைத்து வாக்காளர்களும் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றுள்ளார்கள். ஒவ்வொரு வார்டிலிருந்தும் ஒரு உறுப்பினர்தான் தேர்ந்தெடுக்கப்பட முடியும்.

தனக்கென ஒதுக்கப்பட்டுள்ள பொறுப்புக்களைச் செம்மையாகச் செயல்படுத்துவதற்காக மாநகராட்சி மன்றமானது துணைச் சட்டங்களை உருவாக்குகிறது. ஒவ்வொரு நிதி ஆண்டிற்கும் வேண்டியுள்ள வரவு செலவுத் திட்டத்தையும் மாநகராட்சி மன்றம் நிறைவேற்றுகிறது. மாநகராட்சி நிர்வாகப் பிரிவுகள் ஒவ்வொன்றையும் மேற்பார்வை செய்து கட்டுப்பாடும் செலுத்துகின்றது. ஆணையாளர் மற்றும் அதிகாரிகள் மீது நல்ல முறையில் கட்டுப்பாடு செலுத்துகிறது. இது தன்னுடைய பணிகளை ஆணையாளரிடம் ஒப்படைக்கலாம். மேலும் எந்தவொரு நிலைக் குழுவின் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட அறிக்கையும் ஆணையாளரிடம் கேட்டுப் பெறலாம்.

மாநகராட்சி மன்றம் எந்தவொரு நேரத்திலும் ஆணையாளரிடமிருந்து கீழ்க்கண்டவைகளைக் கேட்கலாம்.

1. ஆணையாளர் என்ற முறையில் அவரிடமோ அல்லது அவரது கட்டுப்பாட்டிற்குட்பட்டுள்ள எந்தவொரு பதிவேடு, செய்தித் தொடர்பு திட்டம் அல்லது ஆவணம் ஆகியவற்றைக் கேட்கலாம்.

2. மாநகராட்சி நிர்வாக சம்பந்தப்பட்ட திட்டம், மதிப்பீடு அறிக்கை கணக்கு அல்லது புள்ளி விவரங்கள் போன்றவை;

3. மாநகராட்சி நிர்வாகம் சம்பந்தப்பட்ட அவரது அறிக்கை அல்லது அவரது குறிப்புக்களுடன் கூடிய அவருடைய சார்நிலை அதிகாரிடமிருந்து பெற்ற அறிக்கைகள்.

நிலைக்குழுக்களின் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட பிரதி ஒன்றை மாநகராட்சி மன்றம் கேட்கலாம். அல்லது எந்வொரு குழுவின் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டவைகளையும் கேட்கலாம் அல்லது ஒரு குழுவிற்கென ஒப்படைக்கப்பட்ட அதிகாரம் சம்மந்தப்பட்ட அறிக்கை, கணக்கு ஆகியவற்றையும் கேட்கலாம். மாநகராட்சி மன்றம் குழுக்களை நியமிக்கும் அதிகாரம் பெற்றிருக்கிறது.

## நிலைக் குழுக்கள்

பெரும்பான்மையான உறுப்பினர்களில் வந்திருந்து வாக்களிக்கின்ற அடிப்படையில் ஒவ்வொரு நிலைக்குழுவும் மாநகராட்சி மன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. ஒவ்வொரு நிலைக்குழுவிலும் ஐந்து உறுப்பினர்கள் இருப்பார்கள்.

அரசாங்கத்தின் முன் அனுமதியின் பேரில் மாநகராட்சியின் மன்றமானது நிலைக்குழுக்களின் அதிகாரங்களையும், கடமைகளையும் தீர்மானிக்கிறது.

நிலைக்குழுக்கள் தங்களது பணிகளைச் செயல்படுத்துவதற்கு தேவையான அளவு பணியாளர்களை மாநகராட்சி மன்றமானது வழங்குகிறது.

## கூடுதல் நிலைக்குழுக்கள்

அரசாங்கத்தின் முன் அனுமதியுடன் மாநகராட்சி மன்றம் தனக்குச் சரி என்று தோன்றுமேயானால் கூடுதல் நிலைக்குழுக்களை உருவாக்கலாம்.

## இணைக்குழு

மாநகராட்சி மன்றம் ஒன்று அதற்கு மேற்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களுடன் இணைந்து அவைகள் ஒன்று சேர்ந்து அக்கறை கொண்டுள்ள பணியினைச் செயலாற்றவும் அல்லது அவைகள் இணைந்து பொறுப்புடைய பணிகள் என்று இருப்பின், அவைகளைச் செம்மையாகவும், திறமையாகவும் செயல்படுத்தும் நோக்கோடும் இணைக்குழுக்கள் அமைக்கப்படலாம்

## ஆணையாளர்

மாநகராட்சி ஆணையாளராக அனுபவம் மிக்க ஒரு அரசாங்க அதிகாரி நியமிக்கப்படுவதற்கு சில காரணங்கள் உண்டு. அவையாவன:

1. திறமையும் அனுபவமும் உடைய நிர்வாக அதிகாரியின் பணிகள் மாநகராட்சிக்கு கிடைப்பதற்கு வழி செய்தல்;
2. இந்த நியமனம் அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும்;
3. இந்த நிறுவனத்தின் மூலமாக அரசாங்கம் தன்னுடைய திறமையான கட்டுப்பாட்டைச் செலுத்துவதற்கு வகை செய்தல்.

அரசாங்கத்தினால் அவ்வப்பொழுது நிர்ணயிக்கப்பட்டபடி மாநகராட்சியானது தன்னுடைய நிதியிலிருந்து இ பருக்குச் சம்பளமும் படியும் வழங்குகின்றது. இவருக்கு தங்குவதற்குரிய வசதிகளையும் வண்டி வாகன வசதியையும், மாநகராட்சி வழங்குகின்றது. ஆணையாளர் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்யலாம் அல்லது அரசாங்கம் அவரை பதவி இடமாற்றம் செய்யலாம். ஒரு சில நேரங்களில் மாநகராட்சி மன்ற மொத்த உறுப்பினர்களில் அதிகமான உறுப்பினர்கள் வந்திருந்து வாக்களித்து, அதில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன், ஆணையாளரை திரும்பவும் அரசாங்கம் அழைத்துக் கொள்ளும்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றினால் அரசாங்கம் ஆணையாளரைத் திரும்பவும் அழைத்துக் கொண்டு மாற்றுதல் செய்யும்.

## அதிகாரங்கள்

ஆணையாளாரின் அதிகாரங்களைச் சட்டமியற்றல், நிர்வாகம், நிதி என்ற மூன்று பிரிவுகளாகப் பிரித்துச் சொல்லலாம்.

## சட்டமியற்றல்

இவர் மாநகராட்சி மன்றம் மற்றும் மாநகராட்சி மன்றம் நிலைக்குழுக்களின் கூட்டங்களுக்குச் செல்லலாம். பொதுவாக துணைச் சட்டங்கள் சம்பந்தப்பட்டவைகள் இவரிடம் இருந்துதான் துவக்கம் பெறுகின்றன.

## நிர்வாகம்

நிர்வாகத் துறையில் இவருக்குப் பலவகையான பணிகள் உண்டு. மாநகராட்சி மன்றம் எடுக்கப்பட்ட முடிவுகள், உத்தரவுகள், துணைச்சட்டங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்தும் பொறுப்பு இவருடையதாகும். மாநகராட்சி அதிகாரிகளுடைய பொறுப்புகள், கடமைகள் ஆகியவற்றை இவர்தான் குறிப்பிட்டுக் கொடுக்கிறார். மாநகராட்சி அதிகாரிகள் பணிகளையும், செயல்முறைகளையும் இவரே மேற்பார்வையும் செய்கிறார். பணியாளர்களுடைய நடத்தை, பணி, சம்பளம், படிகள், ஓய்வு கால ஊதியம், ஓய்வு கால நலநிதி சம்பந்தப்பட்ட கேள்விகள் அனைத்தையும் இவரே செய்கின்றார். மாநகராட்சியின் வருடாந்திர அறிக்கையை இவர் தயார் செய்து மாநகராட்சி மன்றம் அதனுடைய ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். குறிப்பிட்ட ரூபாய் மதிப்புக்கு மேற்படாத பொருட்களை இவர் விற்கவோ அல்லது கைமாற்றிக் கொடுக்கவோ இவருக்கு உரிமை உண்டு. மாநகராட்சியின் பெயரில் மாநகராட்சிக்காக ஒப்பந்தங்கள் இவரால் செய்யப்படுகின்றன. குறிப்பிட்ட ரூபாய் மதிப்பிற்கு மேற்படாத ஒப்பந்தங்களை ஆணையாளரே செய்யலாம். மாநகராட்சி சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களுக்கும் இவரே பொறுப்புடையவர். அவசரம் நிமித்தமாக இவரே ஒரு சில பணிகளைச் செய்யும்படி உத்தரவும் இடலாம்.

## நிதி

ஆணையாளர் வரவு செலவு திட்டத்தைத் தயாரித்து அதனைச் சம்பந்தப்பட்ட நிலைக் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். அந்நிலைக்குழு தேவையெனக் கருதுகின்ற ஒரு சில மாற்றங்களைச் செய்ய அதிகாரம் கொண்டது. இதற்குப் பின்னர் வரவு செலவுத் திட்டம் மாநகராட்சி மன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

## ஆணையாளருக்கும் மாநகராட்சி மன்றம் மற்றும் நிலைக் குழுவிற்குமுள்ள தொடர்பு

செயலாட்சி அதிகாரங்கள் முழுவதும் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இவ்வதிகாரங்கள் ஆணையாளர் என்றும் கையாளுதல் வேண்டும் என்ற முறையினைக் குறிப்பிடவும் கட்டுப்படுத்தவும் மாநகராட்சி மன்ற அதிகாரமுண்டு. மாநகராட்சி மன்ற செயலாட்சி துறைகளுக்குமிடையே ஒரு பாலமாக இவர் விளங்குகிறார். மாநகராட்சி கூட்டங்களுக்குச் செல்ல இவருக்கு உரிமை உண்டு. மாநகராட்சி மன்றம் இவரிடத்தில் கேள்விகளைக் கேட்கலாம். அவற்றிற்கு இவர் பதில் சொல்லவும் வேண்டும் மாநகராட்சியின் செயல் நடவடிக்கைகயைப் பற்றிய ஒரு அறிக்கையை இவர் சமர்ப்பிக்க வேண்டும். மாநகராட்சி மன்ற அசையும் அசையாச் சொத்துக்களை வாங்கவோ அல்லது விற்கவோ அதிகாரம் கொண்டிருக்கிறது. இவ்விஷயத்தில் ஆணையாளர் மாநகராட்சி மன்றத்தில் ஒப்புதலுடன் மேற்கொள்ளலாம்.

நிலைக் குழுவும் ஓரளவிற்கு ஆணையாளருடைய பணிகளை மேற்பார்வை செய்யவும் கட்டுப்படுத்தவும் அதிகாரம் கொண்டுள்ளது. நிலைக் குழு தன்னுடைய பணிகளில் சிலவற்றை ஆணையாளரிடம் ஒப்படைக்கலாம், ஒரு குறிப்பிட்ட தொகைக்குள்ளாக சொத்துக்களை விற்பனை செய்வதற்கும் ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கும் இக்குழுவின் ஒப்புதல் அவசியமாகும். ஆணையாளரால் தயாரிக்கப்படுகின்ற வரவு செலவுத் திட்டம் இக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நடைமுறையில் பார்த்தால் ஆணையாளர் பதில் சொல்ல வேண்டிய ஒரு சூழ்நிலையில் இருந்து கொண்டுதான் தன்னுடைய அதிகாரங்களைக் கையாளுகின்றார். இதனைத்தான் பேராசியர் பிரடெரிக் என்பவர் பணிசார்ந்த பொறுப்பு என்று குறிப்பிடுகின்றார்.

## பணிகள்

மாநகராட்சிகள், கட்டாயத்தன்மையுடைய பணிகள், விருப்பப்பணிகள் என்ற இரண்டு வகையான பணிகளைச் செய்ய வேண்டி இருக்கின்றது. கல்கத்தா, சென்னை, மதுரை ஆகிய மாநகராட்சி சட்டங்கள் பணிகளைக் கட்டாயப் பணிகள், விருப்பப் பணிகள் என்று பிரிக்கவில்லை. ஆனால், பம்பாய், டெல்லி

மாநகராட்சிகள் பணிகளை இரண்டு வகையாகப் பிரித்திருக்கின்றன. பணிகள் எவ்வாறு பிரிக்கப் பட்டிருந்தாலும் எல்லா மாநகராட்சிகளிலும் அவைகள் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. மிகவும் முக்கியமான பணிகள்;

1. பொது கழிவு நீர் செல்வதற்குண்டான வசதிகள், பொது கழிப்பறைகளைக் கட்டி அவைகளைப் பராமரித்தல்;
2. குடிநீர் விநியோகத்திற்கென வேண்டிய அளவு வசதிகளை உருவாக்கிக் கொடுத்தல்;
3. சாக்கடை, மற்றும் அசுத்தமான பொருட்களை பொது இடங்களிலிருந்து அகற்றுதல்;
4. மின்சார விநியோகம் மற்றம் போக்குவரத்து நடத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல்;
5. பிணத்தைப் புதைப்பதற்கும், எரிப்பதற்கு உண்டான வசதிகளைச் செய்தல்;
6. பிறப்பு, இறப்பு ஆகியவற்றைப் பதிவு செய்தல்;
7. கடுமையான வியாதிகள் பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுத்தல்;
8. மருத்துவனை மற்றும் தாய்சேய் நல விடுதிகளைக் கட்டி பராமரித்தல்;
9. மாநகராட்சி சந்தைகள், மற்றும் மிருகங்களைக் கொல்லுமிடங்களைக் கட்டி அவற்றைப் பராமரித்தல்;
10. தெருக்களுக்குப் பெயரிட்டு வீடுகளுக்கு எண் இடுதல்;
11. ஆரம்பக்கல்வி; மற்றும்
12. மாநகராட்சி அலுவலகத்தை நிர்வகித்தல்

1. நூலகங்கள், அருங்காட்சியகங்கள், தோட்டங்கள் ஆகியவற்றை உருவாக்குதல்;
2. பொதுப் பூங்கா, ஓய்வு எடுக்கக் கூடிய மைதானங்கள் போன்றவற்றை உருவாக்குதல்;
3. கட்டிடங்கள், நிலங்கள் ஆகியவற்றை அளவெடுத்தல்;
4. திருமணங்களைப் பதிவு செய்தல்;
5. தீயணைப்பு நிலையம், ஓய்வு விடுதி, ஏழைகள் இல்லம், குழந்தைகள் இல்லம், வாழ்க்கையில் வழி தவறியவர்களுக்குரிய பாதுகாப்பு இல்லம் ஆகியவற்றைப் பராமரித்தல்;
6. பால் விநியோகம் செய்தல்;

## நிதி

மேற்கூறிய பணிகள் அனைத்தையும் செயல்படுத்துவதற்கு மாநகராட்சிகளுக்கு நிதி தேவைப்படுகிறது. இந்த நிதியானது அந்த மாநகராட்சியில் வாழ்கின்ற மக்களிடமிருந்து பெறுகின்ற வரிப்பணத்திலிருந்து ஓரளவு கிடைக்கின்றது. மாநகராட்சி கட்டாயமாக விதிக்கக் கூடிய வரி என்றும், மாநகராட்சி விதிக்கலாம் என்றுள்ள வரி என்றும் இரண்டு வகையான வரிகள் உண்டு. இந்த வரிகள் மாநகராட்சி சட்டத்தின் அடிப்படையில் துணைச் சட்டத்தில் இருப்பது போல விதிக்கப்பட்டு, மதிப்பீடு செய்து, வசூலிக்கப்படுகிறது. மாநகராட்சிகளின் நிதி நிலைமையைப் பார்ப்போம்.

## III. சென்னை மாநகராட்சி

### மாநகராட்சி விதிக்கலாம் என்றுள்ள வரிகள்

1. சொத்து வரி;
2. கம்பெனியின் மீதானவரி;
3. தொழில் வரி;
4. வாகனங்கள் மற்றும் மிருகங்கள் மீதான வரி.
5. வண்டிகள் மீதான வரி;
6. நகரத்திற்குள் கொண்டு வருகின்ற மரங்கள் மீது விதிக்கின்ற வரி.
7. பத்திரிக்கைகளில் வந்துள்ளவை நீங்கலாக உள்ள பிற விளம்பரங்கள் மீதான வரி;
8. முத்திரைத்தாள் வரி என்ற முறையில் சொத்துக்களை மாற்றுவதில் மேல் விதிக்கின்ற வரிகள்;

## IV. மதுரை மாநகராட்சி

### மாநகராட்சி விதிக்கலாம் என்றுள்ள வரிகள்

1. சொத்து வரி;
2. தொழில் வரி;
3. வாகனங்கள் மற்றும் மிருகங்கள் மீதான வரி;
4. வண்டிகள் மீது விதிக்கின்ற வரி;
5. பத்திரிக்கைகளில் வந்துள்ளவை நீங்கலாக உள்ள பிற விளம்பரங்கள் மீதான வரி;
6. உபரிவரி என்ற முறையில் சொத்துக்களை மாற்றுகின்றபொழுது விதிக்கின்ற முத்திரைத்தாள் வரி.

### குறிப்பிட்ட காலத்திற்கென விதிக்கின்ற சிறப்பு வரி

மதுரை மாநகராட்சி புண்ணிய யாத்திரை வருகின்ற பக்தர்களிடம் வரி வசூலிக்கின்றது. இப்புண்ணிய யாத்திரை என்பது ஒருசில ஆண்டுகளுக்கொருமுறையோ அல்லது ஒரே ஆண்டில் ஒருமுறையோ அல்லது இரண்டு முறையோ நிகழலாம். இத்தகைய நேரங்களில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் இந்த நகரத்தை விட்டு வெளியூர் செல்கின்றவர்களிடமிருந்து ரெயில்வே கட்டணத்துடன் சேர்ந்து அந்தச் சிறப்புவரி வசூலிக்கப்படுகிறது.

வரிவிதிப்பு, மதிப்பிடு, வசூலித்தல் ஆகியவை சம்பந்தப்பட்ட விதிகளும், முறைகளும் மாநகராட்சிக்கு மாநகராட்சி மாறுபட்டு இருக்கின்றது.

திரும்பப் பெறக்கூடிய அல்லது பெறமுடியாத மானியங்களை மத்திய அல்லது மாநில அரசாங்கங்கள் சம்பந்தப்பட்ட மாநகராட்சிகளுக்கு வழங்குகின்றன. இந்த மானியம் என்பது மிகவும் முக்கியமானதொரு வகையான வருவாயாகும். மானியம் வழங்குகின்றபொழுது அத்துடன் சில நிபந்தனைகளும் இணைந்து இருக்கும். எப்பொழுதும் உள்ளாட்சி நிறுவனங்கள் மாநிலஅரசாங்கங்களைச் சார்ந்தும் அவைகளை எதிர்பார்த்தும் செயல்படுகின்றன. இம்முறையில் மாநில அரசாங்கங்கள் உள்ளாட்சி நிறுவனங்கள் மீது கட்டுப்பாடுகள் செலுத்துகின்றன. மானியத்தோடு இணைந்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்றவில்லை என்றால் மானியம் குறைக்கப்படலாம் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படலாம்.

மாநகராட்சியின் பணம் கடனாகப் பெறலாம். ஆனால் குடிநீர் விநியோகம் போன்ற முக்கியமான நோக்கங்களுக்காகவே இத்தகைய கடன்களை அது வாங்கும்.

## கட்டுப்பாடு

திறமையையும், சிக்கனத்தையும் உறுதிப்படுத்தும் நோக்கோடுதான் அராசங்கம் மாநகராட்சி மீது கட்டுப்பாடு செலுத்துகின்றது அரசாங்கம் பலவகையான கட்டுப்பாடுகளைப் பின்பற்றுகின்றது. முதலாவதாக, ஆணையாளர் அரசாங்கத்தால் நியமனம் செய்யப்படுகின்றார். இரண்டாவதாக அரசாங்கம் ஆணையாளரை மாநகராட்சி சம்பந்தப்பட்ட ஆவணங்கள், செய்திப்போக்குவரத்து, திட்டம், ஆவணங்கள் ஆகியவற்றைச் சமர்ப்பிக்கச் சொல்லலாம். மூன்றாவது மாநகராட்சி தன்னுடைய வருடாந்திர அறிக்கையை அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டும். நான்காவதாக அரசாங்கத்தால் ஒப்படைக்கப்பட்ட ஒரு பணியை மாநகராட்சி செய்யாமல் இருந்தாலோ அல்லது அரைகுறையாக செய்து இருந்தாலோ அம்மாநகரட்சியை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அப்பணியை செம்மையாகச் செய்து முடிக்கும்படி உத்திரவிடலாம். ஐந்தாவதாக, அரசாங்கம் மானியம் வழங்கிறது. இதுதான் மிக முக்கியமான கட்டுப்பாடாகும். இறுதியாக அரசாங்கத்தால் ஒப்படைக்கப்பட்ட பணியைச் செய்ய மாநகராட்சி ஒரு பணியைச் செய்வதில் தொடர்ந்து தவறுகள் செய்து கொண்டிருந்தாலோ அல்லது தன்னுடைய அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தினாலோ, அரசாங்கம் அந்த குறிப்பிட்ட மாநகராட்சி நிர்வாகத்தை கலைத்துவிட்டு, ஒரு தனிநிர்வாக அதிகாரியை நியமிக்கலாம்.

இந்திய மாநிலம் ஒவ்வொன்றிலுமுள்ள உள்ளாட்சி நிறுவனங்கள் அரசாங்க அமைப்பில் முக்கியமான பிரிவுகளாக விளங்குகின்றன. தேசிய நிர்வாக அமைப்போடு அவை இணைந்து காணப்படுகின்றன. மக்களாட்சி எண்ணங்களும், முயற்சிகளும் தூண்டப்படும் முறையில் அவை அமைந்தால்தான் அத்திட்டங்களை நல்லமுறையில் செயல்படுத்த முடியும். நகரபுற வளர்ச்சித் திட்டங்கள், அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையில் மாநில அதிகாரப் பட்டியலின் இரண்டாவது பிரிவில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## மாதிரி வினா:

மாநகராட்சி அமைப்பு மற்றும் பணிகளை விவரி.

# பாடம் – 12

## சமுதாய வளர்ச்சித் திட்டம்

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், நீதி, சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றில் முன்னேற்றம் ஆகிய தன்னுடைய குறிக்கோள்களை இந்திய அரசியலமைப்பு குறிப்பிட்டிருக்கின்றது. இந்தியாவில் பொதுநல அரசை நிறுவ அரசியலமைப்பு அடித்தளம் அமைத்திருக்கின்றது. பொதுமக்கள் உயர்வான வாழ்க்கைத்தரத்தை அடைவதற்கு பொருளாதார, சமூகத் திட்டங்களின் முக்கியத்துவத்தை இந்திய அரசாங்கம் உணர்ந்திருந்தது. புதிய மாற்றங்களுக்கான தேவைகளை சமுதாயம் உணராவிடில் எந்தவொரு பொருளாதாரத் திட்டமும் வெற்றி அடையாது. பொருளாதாரத் திட்டம் மற்றும் சமுதாய சீரமைப்பு போன்ற தேசியத் திட்டங்களில் கிராமப்புற மக்களுக்கு நல்லதொரு ஆர்வத்தை உருவாக்கி பங்கு பெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கோடு சமுதாய வளர்ச்சித் திட்டம் துவக்கப்பட்டது. இந்தியாவில் கிராமப்புற வளர்ச்சி என்பது புதிய கருத்து அல்ல, சுதந்திரத்திற்கு முன்னாளிலேயே பெரும் தலைவர்களும், நிர்மாணத்திட்ட ஊழியர்களும், தன்னிச்சை செயலாண்மைகளும் இப்பணியில் ஏதேனும் ஒரு வகையில் ஈடுபட்டிருந்தனர். இத்தகைய முயற்சிகளினால் பெறப்பட்ட மொத்த அனுபவத்தின் மூலமாக சமுதாய வளர்ச்சித் திட்டம் முதல் ஐந்தாண்டு திட்டத்தின் ஒரு அங்கமாகியது. திட்டமிட்ட வளர்ச்சி நடவடிக்கையானது இந்தியாவில் 1951–ஆம் ஆண்டு துவங்கியது. சமுதாய வளர்ச்சித் திட்டம் 1952–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ந்தேதி துவக்கப்பட்டது. இதற்காக ஆரம்பத்தில் 55 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஒவ்வொரு வட்டாரமும் 300கிராமங்களை உள்ளடக்கியதாக இருந்தது. 1963 -ஆம் ஆண்டு அக்டோபர் மாத அளவில் இத்திட்டம் நாடு முழுவதும் படிப்படியாகத் துவக்கப்பட்டது. கிராமப்புற இந்தியாவானது 5265 சமுதாய வளர்ச்சி வட்டாரங்களுக்குள் அடங்கி உள்ளது.

சமுதாய வளர்ச்சியானது தேசிய விஸ்தரிப்பு அமைப்போடு இணைந்து கிராமப்புறத்தில் அமைதியான புரட்சியை உருவாக்கியிருக்கிறது' என்று P.R துபாசி கூறுகின்றார். இவ்வியக்கம் பண்டித ஜவஹர்லால் நேருவின் நல்லாசியைப் பெற்றிருந்தது. மேலும் அவர் உலக நாடுகளில் எங்குமே இந்தியாவில் உள்ள வளர்ச்சித் திட்டங்கள் போன்ற பெரிய புரட்சிகரமான செயல்கள் நடந்திருக்க முடியாது என்றும் கருதினார்.

### அடிப்படைக் கொள்கைகள்

இந்தியாவில் சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படைக் கொள்கைகள்

1. இது கிராமப்புற சமூக, பொருளாதார வாழ்க்கையின் பல பகுதிகளையும் உள்ளடக்கிய பன்னோக்குக் கொண்டதும் விரிவானதுமான ஒரு திட்டச் செயலாகும்.

2. இது மக்கள் நிறுவனங்கள், தன்னிச்சை நிறுவனங்கள் மற்றும் பணிசார்ந்த பிரிவுகள் மூலமாக சமுதாயத்தை ஒன்று திரட்டும் முறையாகும்.

3. விவசாயிகளுக்கு அவர்களது இடத்திலேயே நிதி மற்றும் தொழில் நுட்ப வசதிகளை வழங்கும் ஒரு முகமையாகும்.

4. பிளவு இல்லாத, ஒருங்கமைந்த ஒருங்கிணைக்கப்பட்ட கிராமப்புற வளர்ச்சிக்கு இது ஒரு புது அணுகுமுறையாகும்.

5. இது கட்டாய வழிகள் இல்லாமல் விரிவான முறையில் உள்ள ஒரு கல்வி முறையாகும்.

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மேலே குறிப்பிட்டுள்ள கோட்பாடுகள் அனைத்தும் காணப்படுவது மிகவும் கடினமானதாகும். இருப்பினும் இவைகள் தான் கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவில் சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளாகவும் முக்கியமான சிறப்பியல்புகளாகவும் இருந்து வந்துள்ளன.

## நோக்கங்கள்

திட்டப்பகுதியில் வாழ்கின்ற ஆண், பெண், குழந்தைகள் ஆகியவர்களுக்கு வாழ்வு, உணவு வசதிகளை ஏற்படுத்துவதிலும் சமுதாய திட்டங்கள் முன்னோடியாக இருந்து உருவாக்கித்தர வேண்டும் என்பது தான் இத்திட்டத்தின் நோக்கம் என்று அரசாங்கம் அதிகார பூர்வமாக அறிவித்திருக்கிறது. B. முகர்ஜி என்பவர் சமுதாய வளர்ச்சித் திட்டத்தைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார். இது பழமையான வாழ்க்கை முறையிலிருந்து முன்னேற்றமான வாழ்க்கை முறைக்கு கிராமிய சமுதாயத்தை மாற்றி அமைக்கும் ஒரு செயல் முறையாகும் (Process )

மக்கள் தம்மிடமுள்ள வசதிகள், திறமை ஆகியவற்றின் மூலமாக தங்களை வளர்த்துக் கொள்வதற்கு துணை புரிகின்ற ஒரு வழியாகும் (Method)

கிராமப்புற மக்களின் நல்வாழ்வு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை கொண்டதொரு செயல் திட்டமாகும் (Programme)

முன்னேற்றத்திற்குரிய குறிப்பிட்ட கொள்கையைக் கொண்டதொரு இயக்கமாகும் (Movement)

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கொள்கையானது அரசாங்கம் பங்கு பெறுகின்ற மக்கள் திட்டமாக இருக்கவேண்டுமே தவிர மக்கள் பங்கு பெறுகின்ற அரசாங்கத் திட்டமாக இருக்கக்கூடாது.

சமுதாய வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய விஸ்தரிப்பு பணித்திட்டம் ஆகியவற்றின் நோக்கங்களை திரு. V.T. கிருஷ்ணமாச்சாரி கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

1. கிராமப்புற மக்களுக்கு முழு வேலை வாய்ப்பிற்கு வழிகாட்டுதல்.

2. விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி குறைவான விவசாய உற்பத்திலிருந்து அதிக அளவில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு கிராம மக்களுக்கு வழிகாட்டுதல்.

3. கூட்டுறவு விதிகளை இயன்றமட்டும் விஸ்தரித்து கிராமிய குடும்பங்களைத் தன்சார்பு உடையதாகச் செய்வது.

4. சமுதாயம் முழுவதற்கும் நன்மை பயக்கும் விதத்தில் கிராமிய சாலைகள், குளங்கள், கிணறுகள், பள்ளிக்கூடங்கள், குழந்தைகள் பூங்கா போன்றவற்றை அதிக அளவிலான சமுதாய முயற்சியின் மூலமாக உருவாக்க வேண்டும்.

கிராமப்புற மக்களின் மொத்த முன்னேற்றம் சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் முக்கியமான நோக்கம் என்பது தெரியவருகிறது. சமுதாய வளர்ச்சித் திட்டமானது சமூக, பொருளாதார மற்றும் கலாச்சாரத்துறைகளை உள்ளடக்கிய ஒரு பன்னோக்குத் திட்டமாகும்.

கிராமப்புற வளர்ச்சிக்கென புதிய நிர்வாகப் பிரிவுகளை உருவாக்க வேண்டிய அவசியத்தை இத்திட்டம் உருவாக்கி இருக்கிறது. இவ்வாறாகத்தான் சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு வட்டாரமும் ஒரு வட்டார வளர்ச்சி அதிகாரியின் கீழ் ஒப்படைக்கப்பட்டது. கிராம வளர்ச்சி சம்பந்தப்பட்ட விவசாயம், கால்நடை, பொது சுகாதாரம், கல்வி போன்ற பல பிரிவுகளையும் கவனிப்பதற்கென ஒவ்வொரு வட்டாரத்திலும் பல விஸ்தரிப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். வட்டார வளர்ச்சி அதிகாரி, விஸ்தரிப்பு அதிகாரிகளின் பணிகளை ஒருங்கிணைக்க வேண்டும். இத்திட்டத்தில் கிராமப்புற வளர்ச்சிக்காக தேசிய விஸ்தரிப்புப்பணிகள் உருவாக்கப்பட்டன.

சமுதாய வளர்ச்சித் திட்டம் கிராமப்புற மக்களை திட்ட நடவடிக்கைகளில் முழுமையான ஆர்வத்தோடு ஈடுபாடு கொள்ளச் செய்ய வேண்டும் என்ற நோக்கோடு துவக்கப்பட்ட போதிலும்,

அவர்களை திட்டத்தோடு இணைப்பதில் தவறிவிட்டது. மேலும் திட்டங்களை கிராம அளவில் செயல்படுத்துவதிலும் அவர்களை விருப்பமுடையவர்களாக்குவதற்கும் முடியவில்லை. கிராம மக்களின் ஒத்துழைப்பைப் பெறும் நோக்கத்தோடு வட்டார ஆலோசனைக் குழுக்கள் நிறுவப்பட்டன. ஆனால் இவ்வமைப்பு மக்களிடையே எந்தவொரு மாறுபாட்டையும் செய்யவில்லை. சமுதாய வளர்ச்சித் திட்டம் முழுமை பெற வேண்டுமெனில் திட்டம் உருவாக்குவதிலும் மக்கள் முழுமையாகப் பங்கு பெறவேண்டும். சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் செயலை ஆய்வு செய்யும் நோக்கத்தோடு 1957–ஆம் ஆண்டு சமுதாய வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய விஸ்தரிப்பு பணி ஆகியவற்றிற்கான குழுவானது நியமிக்கப்பட்டது. இக்குழு மக்களுடைய அன்றாட வாழ்க்கை சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் அடங்கிய இத்திட்டத்தை அம்மக்களால் தான் செயல்படுத்த முடியும் என்று பரிந்துரை செய்திருந்தது. 1957–ஆம் ஆண்டு இறுதியில் இக்குழு தன்னுடைய அறிக்கையை சமர்ப்பித்தது. அதில் இக்குழு பஞ்சாயத்திராஜ் அமைப்பு அல்லது ஜனநாயகப் பன்முகப்படுத்தல் திட்டம் என்பதனை பரிந்துரை செய்திருந்தது.

சமுதாய வளர்ச்சித் திட்டம் சம்பந்தப்பட்ட பொறுப்புக்கள் பல்வந்தராய் மேத்தா குழுவினரால் பரிந்துரை செய்யப்பட்ட மூன்றடுக்கு நிறுவனமான பஞ்சாயத்திராஜ் அமைப்பிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. சமுதாய வளர்ச்சித் திட்டங்களைத் திறமையான முறையில் செயல்படுத்த பஞ்சாயத்திராஜின் மூன்றடுக்குகளான கிராமப் பஞ்சாயத்து, சமிதி, ஜில்லாபரிஷத் ஆகியவை தங்களுடைய பகுதிகளுக்கு வேண்டிய திட்டங்களைத் தாமே உருவாக்கவேண்டும். பஞ்சாயத்திராஜ் நிறுவனங்களிடத்தில் வளர்ச்சிப்பணிகளை ஒப்படைத்து சமுதாய வளர்ச்சித்திட்டத்தை மக்கள் முயற்சியுடைய மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டியது அவசியமாகும். இதில் அரசாங்கமும், அரசுப் பணியாளர் பிரிவும் இடைநிலை உதவியாளராகப் பணிபுரிய வேண்டும். அதிகாரிகளின் பங்கினை அதிக அளவில் குறைத்து கிராமப்புற மக்களை அதிக அளவில் ஈடுபாடு கொள்ளச் செய்வதே இதனுடைய நோக்கம் என்றும் கூறலாம். எனவே சமுதாய வளர்ச்சித் திட்டம் என்ற இலக்கினை அடைய பஞ்சாயத்திராஜ் நிறுவனம் ஒரு வழிமுறையாக இருக்கின்றது.

## சமுதாய வளர்ச்சி நிர்வாகம்

### மாநில அளவில்

சமுதாய வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டிய பொறுப்பு மாநில அரசாங்கத்தினுடையதாகும். பொதுவாக விரிவாக்கப் பணிகளையும் சமுதாய வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்துவதற்கு ஒவ்வொரு மாநிலத்திலும் அவை ஒரே அதிகாரத்தின் கீழ் கொடுக்கப்பட்டிருகின்றன.

மாநில அளவில் ஒருங்கிணைப்புக்காக இரண்டு அல்லது மூன்று குழுக்கள் இருக்கலாம்.

1. துறைகளிடை அதிகாரிகள் குழு.
2. அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைக் குழு.
3. அமைச்சரவையின் வளர்ச்சிக் குழு.

ஆகிய மூன்றும் தான் அக்குழுக்கள்.

துறைகளிடை அதிகாரிகள் குழுவிற்கு வளர்ச்சி ஆணையாளர் தலைமை தாங்குகிறார். மற்ற குழுக்களுக்கு முதலமைச்சர் தலைமை தாங்குகிறார். இக்குழுக்கள் தவிர சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்கான மாநில சட்டமன்றத்தின் கலந்தாலோசனைக் குழு ஒன்றும் உண்டு.

### மாவட்ட அளவில்

மாவட்ட அளவில் சமுதாய வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு ஜில்லா பரிஷத்தினுடையதாகும். வட்டார அளவிலுள்ள பஞ்சாயத்து சமிதிகளின் தலைவர்களும், அந்த மாவட்டத்திலுள்ள பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் ஜில்லா பரிஷத்தின் உறுப்பினர்களாவர். மாவட்ட ஆட்சியாளர் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுகிறார். ஜில்லா பரிஷத்தின் அமைப்பு, அதிகாரங்கள், பணி மற்றும் மாவட்ட ஆட்சியாளரின் நிலை ஆகியவை மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்டுக் காணப்படுகின்றன.

### வட்டார அளவில்

வட்டார அளவில் சமுதாய வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு பஞ்சாயத்து சமிதியினுடையதாகும். இச்சமிதியில் கிராம பஞ்சாயத்துத் தலைவர்கள், மற்றும் பெண்கள், நசுக்கப்பட்ட பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர்களின் பிரதிநிதிகளாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்களும் இடம் பெறுவர். நிர்வாகப் பணியை வட்டார வளர்ச்சி அதிகாரிகளும் விஸ்தரிப்பு பணி அதிகாரிகளும் செய்கிறார்கள்.

### கிராம அளவில்

கிராம அளவில் சமுதாய வளர்ச்சித் திட்டமானது பஞ்சாயத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. கிராம சேவக் என்று அழைக்கப்படுவர் தான் நிர்வாகத் தொடர்ச்சியின் கடைசி அங்கமாவார். அவருடைய பொறுப்பின் கீழ் ஐந்து கிராமங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கும்.

### சமுதாய வளர்ச்சித் துறை

1956–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அரசாங்கம் சமுதாய வளர்ச்சித் திட்டத் துறையை நிறுவியது. 1958–ஆம் ஆண்டு மார்ச் மாதம் சுகாதாரத் துறையிடமிருந்து கிராமப் பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட பணிகளை இத்துறை ஏற்றுக் கொண்டது. உணவு மற்றும் விவசாயத்துறையிலிருந்து கூட்டுறவானது 1958–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் இந்தத்துறைக்குக் கொடுக்கப்பட்டது. இதற்கேற்ப இத்துறையின் பெயரும் சமுதாய வளர்ச்சி மற்றும் கூட்டுறவுத்துறை என்று மாற்றி அமைக்கப்பட்டது. இதே நேரத்தில் இவ்வமைச்சகமானது இரண்டு துறைகளாக பிரிக்கப்பட்டது.

1962–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இவ்வமைச்சகத்தின் பெயரைச் சமுதாய வளர்ச்சி, பஞ்சாயத்திராஜ் மற்றும் கூட்டுறவுத் துறை என்று மாற்றினார்கள். குறுகிய காலத்திற்கிடையே இதனுடைய பெயர் மீண்டும் சமுதாய வளர்ச்சி மற்றும் கூட்டுறவு அமைச்சகம் என்று மாற்றி அமைக்கப்பட்டது. 1966–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இவ்வமைச்சகத்தை உணவு மற்றும் விவசாய அமைச்சகத்தோடு இணைத்து, உணவு, விவசாயம், சமுதாய வளர்ச்சி மற்றும் கூட்டுறவு அமைச்சகம் என்று பெயரிட்டார்கள்.

நிர்வாகப் பிரிவு, செயல் திட்டப் பிரிவு, பயிற்சிப் பிரிவு, நிர்வாகப் புலனாய்வுப் பிரிவு என்ற நான்கு முக்கிய பிரிவுகள் சமுதாய வளர்ச்சித் துறையில் இருக்கின்றன. இத்துறைக்கென சார்நிலை அலுவலகங்கள் உண்டு. ஆனால் இத்துறைக்கென்று ஆலோசனை நிறுவனம் எதுவுமில்லை.

திட்டக்குழு உறுப்பினர்களையும், உணவு, விவசாயம், சமுதாய வளர்ச்சி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்களையும் கொண்ட தொரு மத்திய குழுவொன்று உண்டு. தலைமை அமைச்சர்தான் இக்குழுவின்

தலைவர். அடிப்படைக் கொள்கைகள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் இக்குழுவிடம் ஒப்படைக்கப்படுகின்றன. சமுதாய வளர்ச்சித்திட்டத்திற்கு இக்குழுவானது ஒரு ஒருங்கிணைப்புக் குழுவாகவும் கொள்கை உருவாக்கும் குழுவாகவும் செயல்படுகின்றது.

## சமுதாய வளர்ச்சித் திட்டத்தை பற்றிய மதிப்பீடு

இத்திட்டத்தை பற்றிய மதிப்பீடுயாதெனில் பல துறைகளிலும் முன்னேற்றம் இருப்பதைக் காட்டுகிறது. உதாரணமாக, தரமான விதைகள், இரசாயண உரங்கள், மருந்துகள் போன்றவைகளில் விநியோகம், வளர்ச்சித்திட்டங்கள் ஆகிய அனைத்தும் சமுதாய வளர்ச்சித் திட்டங்களாகும்.

## மாதிரி வினா

சமுதாய வளர்ச்சித்திட்டம் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

# பாடம் – 13

## உள்ளாட்சியில் குழுக்களின் பங்கு

உள்ளாட்சி நிர்வாகத்தில் குழு முறை என்பது இங்கிலாந்தைப் பின்பற்றி வளர்ந்துள்ளதெனலாம். உள்ளாட்சி மன்றத்தின்வேலைப் பிரிவுகள் தான் குழுக்கள் ஆகும். மூன்று வகையான குழுக்கள் உள்ளன. அவை சட்டபூர்வக் குழுக்கள், சிறப்புக் குழுக்கள் மற்றும் கூட்டுக் குழுக்கள் ஆகியன. இக்குழுக்கள் துணைக் குழுக்கள் ஏற்படுத்திச் செயல்படவல்லவை. உள்ளாட்சி மன்றம் ஒரு குழுவை சட்டபூர்வமாக கட்டாயமாக ஏற்படுத்த வேண்டுமென்பது சட்டபூர்வக்குழு. நிலைக்குழுக்கள் என்பனவற்றை முறையான பணிகள் செய்ய மன்றம் முறையாக நியமிக்கும். சில புதிய பணிகளை மேற்கொள்ள சிறப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்படும்.. கூட்டு குழுக்களென்பது, ஒரு உள்ளாட்சிப் பிரிவு மற்றுமொரு பிரிவோடு சேர்ந்து கூட்டாக ஒரு பொது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஏற்படுத்தப்படக்கூடியதாகும். குழுக்கள்அனைத்திலும் உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள்தான் இடம் பெறுவர். உள்ளாட்சி மன்றப் பணிகளைச் செவ்வனே , திறமையாகச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டவைதான் குழுக்கள் ஆகும். இக்குழுக்களில் திறமை வாய்ந்த நபர்களை மன்ற உறுப்பினர்கள் தேர்ந்து எடுப்பதும் உண்டு. இம்முறை கூட்டு நியமனம் (co-option) என்று பெயர். இம்முறையினால் மன்றத்திற்கு வெளியில் உள்ள திறமையாளர்களின் அறிவை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று வாதிடுவர். ஆனால் உறுப்பினர்கள் அனைவரையும் தேர்ந்தெடுப்பது நலமென உரைப்பவர்களும் உண்டு.

குழுக்களுக்கு பணிகள் தனிப்பட்ட (Vertical) வகையில் முழுமையாகவோ அல்லது பொதுவான (Horizontal) பணி அனைத்திற்குமாகவோ அமைக்கப்படலாம். உதாரணமாக கல்விக்குழு. என்பது முழுமையாக கல்விக்கே தனது நேரத்தைச் செலவிடும். நிதிக்குழு என்பது பொதுவான குழு. இது அனைத்துப் பணிகளையும் சார்ந்து, செயல்படக் கூடியது. குழுவோ அல்லது துணைக்குழுவோ இரண்டு வகையான செயல்களைச் செய்ய வல்லது.

1. குழுவின் பார்வைக்குக் கொண்டு வருகின்ற எல்லா விஷயங்களையும் இது செய்யும்.
2. குழுவிற்கு ஒப்படைக்கப்பட்ட பணிகள் அனைத்தையும் செய்யும்.

### குழுவின் பணிகள் யாதெனில்

1. உள்ளாட்சி மன்றத்தின் சார்பாக அனைத்துத் துறைகளையும் கண்காணிக்கும்.

2. உள்ளாட்சி மன்றத்திற்கு உறுதுணையாக, கொள்கை வகுப்பதற்கு ஆலோசனை வழங்கல், மன்றப் பரிசீலனைக்காக கொள்கை நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் தயாரித்தல்.

நிலைக்குழுக்கள் ஆட்சித்துறை அதிகாரங்களைச் செலுத்தி வருகின்றன. ஆட்சித் துறைத்தலைவரை இது கட்டுப்படுத்துகின்றது. ஆட்சித் துறைத் தலைவரின் பதவிப் பெயர் எதுவாயினும், மேயர், தலைவர், ஆணையாளர் என யாராயினும் அவர்களைக் கட்டுப்படுத்தவல்லது நிலைக்குழு, மொத்தத்தில், மன்றத்தை மக்கள் கட்டுப்படுத்துகின்றனர்; மன்றம் குழுக்களைக் கட்டுப்படுத்துகின்றது; குழுக்கள் நிர்வாகத் துறைகளைக் கட்டுப்படுத்துகின்றது. எனவே குழு ஆட்சித்துறையை முதலில் கட்டுப்படுத்துகின்றது. பின்னர் ஆட்சித்துறையை மன்றம் கட்டுப்படுத்துகின்றது. நிலைக்குழுக்கள் அனைத்தும் சட்டபூர்வமாக ஆகியவற்றை நிறுவப்பட்ட சட்டக் குழுக்கள் ஆகும். இவற்றின் பணிகள் மற்றும் அதிகாரங்கள் ஆகியவற்றை மன்றம் நிர்ணயிக்கின்றது.

முதல் நிலைக்குழு 1878 ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்டது. மன்றம் கீழ்க்கண்ட குழுக்கள் நியமிக்க அதிகாரம் கொண்டுள்ளது.

## அ) நிலைக்குழுக்கள்

ஒவ்வொரு நிலைக் குழுவிலும் ஐந்து உறுப்பினர்கள் இடம் பெறுவர். இவர்களை உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பர். இக்குழுவிற்கு அதிகாரம் மற்றும் கடமைகள் ஆகியவற்றை அரசாங்கத்தின் அனுமதியோடு வரையறுப்பர். இக்குழு பணியாற்றுவதற்குத் தேவையான பணியாளர்களை உள்ளாட்சி மன்றம் நியமனம் செய்ய அனுமதிக்கும்.

## ஆ) கூடுதல் நிலைக் குழுக்கள்

உள்ளாட்சி மன்றம் அரசாங்க அனுமதியுடன் தேவைப்படும் சமயங்களில் கூடுதல் நிலைக்குழுக்களை நியமனம் செய்யலாம்.

## சட்டபூர்வமான குழுக்கள்

சட்ட பூர்வமான குழுக்கள் மாநகராட்சியினால் நியமிக்கப்படுகின்றன; ஒவ்வொரு உள்ளாட்சி தேர்தலுக்குப் பின்னர் கூடுகின்ற முதல் கூட்டத்தில் மாநகராட்சி மன்றத்தின் உறுப்பினர்கள் இக் குழுவின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றார்கள். ஒரே நேரத்தில் ஒரு உறுப்பினர் ஒரு சட்டபூர்வமான குழுவில்தான் உறுப்பினராக இருக்க முடியும். இக்குழுவின் தலைவருடைய பதவிகாலம் முன்னர் ஒரு ஆண்டுதான் இருந்தது. ஆனால் சட்டப்பூர்வமான குழுக்களின் பதவிக் காலம் மாநகராட்சி மன்றத்தின் பதவிக் காலத்திற்கு சமமானதகும்.

உத்திரப்பிரதேசத்திலுள்ள மிக முக்கியமான சட்டபூர்வமான குழு செயலாட்சிக் குழு என்று அழைக்கப்படுகிறது. டெல்லியில் இக்குழு நிலைக்குழு என்று அழைக்கப்படுகின்றது. இது நகராட்சி சபையில் நிரந்தரக் குழுவாகும். இது அமைச்சர் குழுவைப் போல் காணப்படுகிறது. டெல்லியில் இந்த நிலைக் குழுவைத் தவிர இன்னும் மூன்று சட்டப்பூர்வமான குழுக்கள் இருக்கின்றன. அவை டெல்லி மின்சார விநியோகக், டெல்லி போக்குவரத்துக் குழு, டெல்லி குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுப் பொருள் அகற்றும் குழு ஆகியன இம்மூன்று குழுக்கள். சென்னையிலும் கல்கத்தாவிலும் இக்குழுக்கள் நிலைக் குழுக்கள் என்றே அழைக்கப்படுகின்றன. இந்நிலைக் குழுக்கள் கல்வி, சுகாதாரம், வரி விதிப்பு போன்ற விஷயங்களைக் கவனிக்கின்றன. மதுரையில் ஆறு நிலைக் குழுக்கள் உள்ளன. இக்குழுக்கள் கணக்கு, கல்வி, சுகாதாரம், நகர அமைப்புத் திட்டமும் முன்னேற்றமும், பொதுப்பணி மற்றும் வரிவிதிப்பு முறையீடுகள் நீங்கலாக உள்ள விரிவிதிப்பு, நிதி போன்ற விஷயங்களைக் கவனிக்கின்றன. இந்த சட்டபூர்வமான குழுக்களோடு மாநகராட்சி மன்றமானது மேலும் சில குழுக்கள் தேவை என்று எண்ணினால் அத்தகைய குழுக்களை நியமிக்கலாம். தற்போது அவற்றின் பதவிக்காலம் ஐந்தாண்டுகள்.

சட்டபூர்வமான குழுக்களின் நியமனமும், அதிகாரங்களும் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டுக் காணப்படுகின்றன. ஆனால் ஒரு சில அதிகாரங்களும், பொதுவான எல்லா மாநகராட்சி நிலைக் குழுக்களுக்கும் உண்டு. "பல துறைகளிலுள்ள செயலாட்சிப் பிரிவுகளுடன், நிலைக் குழுக்கள் தொடர்பு கொண்டிருக்கின்றன. மேலும் ஆணையாளரையும் கட்டுப்படுத்துகின்றன. ஆணையாளரால் விற்கப்படுகின்ற அல்லது கைமாற்றிக் கொடுக்கப்படுகின்ற நகராட்சி சொத்துக்களுக்கான காலம், தொகை, விலை ஆகியவற்றை இது தீர்மானிக்கின்றது. மேலும் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை மாற்றி அமைக்க அதிகாரம் இது பெற்றிருக்கின்றது. குறிப்பிட்ட தொகைக்கு மேலாக உள்ள ஒப்பந்தங்களை நகராட்சி மன்றத்தின் ஒப்புதலின் பேரில்தான் ஆணையாளர் மேற்கொள்ள முடியும். ஆணையாளரால் செய்யப்பட்ட செலவினங்களில் அறிக்கையை நிலைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். இரண்டு வழிகளில் ஆணையாளரின் அதிகாரங்களை இக்குழு கட்டுப்படுத்துகிறது. முதலாவதாக, குறிப்பிட்டதொரு தொகைக்கு மேலாக உள்ள எல்லா செலவினங்களுக்கான அறிக்கையை ஆணையாளர் நிலைக் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். இரண்டாவதாக, மற்ற ஒரு சில தொகைகள் சம்பந்தமாக இவர் நிலைக் குழுவின் அனுமதியுடன் தான் செலவு செய்ய முடியும்" என்று பேராசிரியர் ந.த. நிகாம் அவர்கள் கூறுகிறார்.

இந்தியாவில் குழுமுறை வளர்ச்சியடையவில்லை என்றே சொல்லலாம். உண்மையான வேலைக்களமாக இங்கிலாந்தில் குழுக்கள் செயல்படுகின்றன. இந்தியாவில் அது மாதிரியாகச் செயல்படவில்லை.

கூட்டுக்குழுக்களை உள்ளாட்சி அமைப்புக்கள் நியமனம் செய்து கொள்ளலாம். இது உள்ளாட்சி அமைப்புக்களின் விருப்பத்திற்கு விடப்பட்டுள்ளது. உத்திரப் பிரதேசம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் கூட்டுக்குழு என்பதைக் கட்டாயமாக ஏற்படுத்த வேண்டுமென சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. ஆனால் எதிர்பார்த்த அளவிற்கு கூட்டுக் குழுக்கள் செயல்படவில்லை. கூட்டுக்குழு முறையில் உள்ளாட்சி மன்றங்களுக்கிடையே ஒத்துழைப்புக் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. வட்டாரத்திட்டமிடல், திட்டங்களைச் செயல்படுத்தல் ஆகியனவற்றிற்கு உள்ளாட்சி மன்றங்கள் ஒத்துழைத்துச் செயல்படுமென எண்ணப்பட்டது. மாறாக, பணி செய்வதில் தாமதம் ஏற்பட்டது. ஏனெனில் குறிப்பிட்ட பணிகளைக் கூட்டுக் குழு செய்ய தனிப் பிரிவு முடிவெடுத்து, பார்வையிட வேண்டும். உள்ளாட்சி மன்றங்கள் அக்குறிப்பிட்ட பணிக்கு தங்களது அதிகாரத்தை ஒப்படைக்கவில்லை. அரசின் தனிப்பிரிவு இதனைக் கண்காணித்தது. உள்ளாட்சி மன்றங்களுக்கிடையே கருத்துவேறுபாடுகளும் அதிகரித்தன. இதனைத் தீர்த்து வைப்பதும், இணக்கத்திற்கு கொண்டு வருவதும் சிக்கல் நிறைந்துள்ளது. இங்கிலாந்து நாட்டின் கூட்டு வாரியம் இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுகின்றது. இந்தியாவில் அது மாதிரியான அமைப்பு கிடையாது.

நிலைக் குழுவும் ஆணையாளரும் உள்ளாட்சி மன்றத் தீர்மானங்களை நிறைவேற்றுகின்றனர். நிலைக் குழு ஆணையாளரைக் கீழ்க்கண்ட செயல்கள் செய்ய வழி (direct) காட்டுகின்றது.

1. ஆணையாளர் கட்டுப்பாட்டில் இருக்கும் திட்டம், செய்தித் தொடர்பு, சாசனம் பிற அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்படிக் கோரலாம்.

2. ஆணையாளரிடமோ, அவருக்குக் கீழ் உள்ள அதிகாரிடமோ ஒரு குறிப்பிட்ட நகராட்சிச் செயல் குறித்து அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி கோரலாம். இச்செயல் பொதுமக்களுக்குப் பங்கம் விளைவிக்காததாக, மாநகராட்சியைப் பாதிக்காததாக இருக்கவேண்டும். ரூ.10,000க்கு மேலான வேலை ஒப்பந்தங்களுக்கு (Contract) நிலைக்குழு ஒப்புதல் வழங்க வேண்டும். ரூ.50,000க்கு மேல் அரசாங்கம் ஒப்புதல் வழங்கும். கணக்குகள் குறித்த நிலைக்குழு மன்றம் வரையறுத்த செயல்கள் மற்றும் கடமைகளுடன் கீழ்க்கண்ட கடமைகளையும் செய்யும். அவை.

1. வரவு செலவுத் திட்ட மானியச் செலவீடுகள் பயன்படுத்தப்பட்டவை குறித்துக் கண்காணிக்கும்.
2. மாநகராட்சி சம்பந்தப்பட்ட அனைத்துக் கணக்குகளையும் நுண்ணாய்வு செய்யும். விவரங்கள் தேவைப்பட்டால், ஆணையாளரிடமிருந்து விளக்கங்களைக் கோரும்.
3. மாநகராட்சி கணக்குகளைத் தணிக்கை செய்யும்.
4. மாநகராட்சியால் வசூல் செய்ய முடியாத தேய்மானம், நஷ்டம் ஆகியவற்றை தள்ளுபடி (Writ off) செய்யும்

நிதி மற்றும் வரிவிதிப்பு நிலைக்குழுவும் மாநகராட்சி கணக்குகள் குறித்து விளக்கங்களைக் கோரும்.

சென்னை மாநகராட்சி 1936ஆம் ஆண்டு சட்டத்தின்படி நிலைக் குழுக்களின் எண்ணிக்கை 4லிருந்து 6ஆக உயர்த்தப்பட்டன. அவை,

1. கணக்குகள்
2. கல்வி
3. நலவாழ்வு

4. நீதிமற்றும் வரிவிதிப்பு (வரிவிதிப்பு முறையீடு இதில் அடங்காது)
5. நகரத்திட்டமிடல் மற்றும் மேம்பாடு
6. வேலை

வரிவிதிப்பு முறையீட்டுக் குழுவில் மூன்று உறுப்பினர்கள் இடம்பெறுவர். இவர்களின் இருவர் மாநகராட்சி மன்றத்தாலும் ஒருவர் அரசாங்கத்தாலும் நியமிக்கப்பட்டனர். மற்ற நிலைக் குழுக்களில் 11 உறுப்பினர்கள் இடம் பெற்றனர். மாநகராட்சி மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதல் கூட்டத் தொடரின் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேயர் எல்லா நிலைக்குழுவிலும் பதவியின் வழியில் உறுப்பினர். வரிவிதிப்பு முறையீட்டுக் குழுவில் மேயர் உறுப்பினர் அல்ல. மேயர் நிலைக் குழுவில் தலைவராக வர முடியாது.

சென்னை மாநகராட்சியில் நிலைக் குழுக்கள் செயல்படும் முறையில் பெரிய மாற்றம் கொண்டுவரப்பட்டது. 1958–ஆம் ஆண்டு உள்ளாட்சி சீர்திருத்த வெள்ளை அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. இது மாநகராட்சி மன்றப் பணி பரவலாகச் செய்ய வழிவகுத்தது. இதனால் மாநகராட்சி திறமையாகச் செயல்பட்டது. இதற்கு நிலைக் குழுக்கள் முறை மாற்றப்பட்டது. மையக்குழு ஒன்றும், வட்டாரக் குழுக்கள் எனப் பகுதிவாரியாக பல வட்டாரக் குழுக்கள் ஏற்படுத்த பரிந்துரைத்தது. ஏற்கனவே ஐந்து நிலைக் குழுக்கள் பணிகள் வாயிலாக செயல்பட்டன. இது மாற்றியமைக்கப்பட்டது. ஒவ்வொரு நிலைக் குழுவும் ஒரு பணியைப் பொறுத்தவரை நகரம் முழுவதிற்கும் பொருந்தும்படியாகச் செய்யப்பட்டது. ஆனால் ஒரு குறிப்பிட்ட பணியை மட்டும்தான் செய்ய வரையறை செய்யப்பட்டது. மேலும் மாநகராட்சியில் பணிகள் வளர்ந்தவண்ணமே இருந்த காரணத்தால், மிகுதியான பணிகளை நிலைக்குழுக்களின் மூலம் செய்ய இயலவில்லை. எனவே புதிய முறையில், நகரம் முழுவதற்குமாக மையக்குழு ஒன்றும், மற்றும் வட்டார அளவில் 10 வட்டாரக் குழுக்களும் அமைக்க பரிந்துரை செய்யப்பட்டது.

1962–ஆம் ஆண்டு வெள்ளை அறிக்கையின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதன்படி, கீழ்க்கண்ட குழுக்கள் அமைக்கப்பட்டன.

அ) மையக்குழு
ஆ) வட்டாரக் குழுக்கள்
இ) மாநகராட்சி கணக்குக் குழு
ஈ) ஒப்பந்தக் குழு
உ) உரிம முறையீட்டுக்குழு

## மையக்குழு

இக்குழு மாநகரம் முழுவதற்குமாகச் செயல்படவல்லது. இக்குழு கூட்டத் தொடரை முறையாக நடத்தும். இது ஒரு கூட்டத் தொடருக்கும் அடுத்த கூட்டத் தொடருக்குத் இடையே ஒரு மாத இடைவெளிக்கு மிகாமல் நடத்தும். இதில் மேயர், துணைமேயர், வட்டாரக் குழுவிலிருந்து ஒவ்வொரு உறுப்பினர்களும் உறுப்பினர் ஆவர். மேயர் பதவி வழியில் உறுப்பினராகும். இக்குழுவிற்குத் தலைவரும் மேயரே, மாநகராட்சி பணியாளர்கள், நிறுவனங்கள், பணிகள் ஆகிய அனைத்தையும் மாநகராட்சிக்காக பராமரிக்கும் பணி கொண்டது இக்குழு. அனைத்து வட்டாரக் குழுக்களின் பணிகளையும் ஒருங்கிணைக்கும் அதிகாரத்தையும் மையக்குழு கொண்டுள்ளது. முன்னர் உள்ள நிலைக்குழு மாதிரியே, மையக்குழுவிற்கும் மாநகராட்சி மன்றத்திற்கு தொடர்பு உண்டு. மன்றக் கட்டுப்பாட்டிற்கேற்ப மையக்குழு செயல்படும்.

## அ) வட்டாரக் குழுக்கள்

ஒவ்வொரு வட்டாரமும் அவ்வட்டாரத்திற்குள் அடங்கிய அனைத்து உறுப்பினர்களும் அந்தந்த வட்டாரக்குழுவில் உறுப்பினர்களாவர். இவர்கள் தவிர சில உறுப்பினர்களை இவர்களே தேர்ந்தெடுப்பர்.

இவ்வுறுப்பினர்கள் அவர்களுக்குள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பர். இக்குழு பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை தனது கூட்டத் தொடரை நடத்தும்.

## ஆ) மாநகராட்சி கணக்குக் குழு

இக்குழுவில் மேயர் மற்றும் 7 உறுப்பினர்கள் இடம் பெறுவர். 7 உறுப்பினர்களை மாநகராட்சி மன்றம் தங்களுக்குள் தேர்ந்தெடுக்கும். இவர் இவர்களது பதவிக்காலம் மன்ற உறுப்பினர்கள் இருக்கும் வரை உள்ள பதவிக்காலமாகும். காலியிடங்கள் ஏற்பட்டால், அவற்றை மாநகராட்சி மன்றம் நிரப்பும். இதன் பணிகள்:

1. வரவு செலவுத் திட்டத் தொகைகள் பயன்படுத்தியதை கண்காணிப்புச் செய்தல்:

2. மாநகராட்சி கணக்குகளைப் பார்வையிடல், கணக்குகள் குறித்து ஆணையாளரிடமிருந்து விளக்கம் கேட்பது, மாநகராட்சி நிதியின் வரவுகள், செலவுகள் ஆகியவற்றை உன்னிப்பாகக் கண்காணித்தல்.

3. மாதாந்திர தணிக்கைகளை நடத்துவது, வரவு செலவுகளைக் கண்காணித்தல்.

4. மாநகராட்சியால் திரும்ப வசூலிக்க முடியாதெனக் கருதும் மாநகராட்சி சொத்தின் தேய்மானம், நஷ்டம் ஆகியவற்றை தள்ளுபடி (writ off) செய்தல்.

## ஒப்பந்தக் குழு

இதில் மேயர், ஆணையாளர் ஆகியோர் உறுப்பினர்கள். மேயர் இக்குழுவின் தலைவர். ஒப்பந்தங்களில் ஏற்படும் சிக்கல்களைப் பரிசீலிப்பது இக்குழு.

## உரிம மேலாண்மைக் குழு

இக்குழுவின் ஐந்து உறுப்பினர்கள் உண்டு. இவர்களை மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் தங்களுக்குள் தேர்ந்தெடுப்பர். மாநகராட்சி மன்றப் பதவிக் காலமே இதன் பதவிக் காலமாகும். பொது மக்களிடமிருந்து உரிமம் தொடர்பான முறையீடுகளைப் பரிசீலிப்பது இதன் பணி.

இம்முறை 1971–ஆம் ஆண்டு வரை செயல்பட்டது. இம்முறை திருப்திகரகமாகச் செயல்படவில்லை. ஏனெனில் மாநகராட்சி முழுவதையும் மொத்தமாகத்தான் இதுவரை பார்த்தோமே தவிர, வட்டார அளவில் பார்க்கவில்லை. பிரச்சனைகளை வட்டார அளவில் கண்ணுற்றதால், பல பிரச்சனைகள் எழுந்தன. வட்டாரங்களுக்கிடையே மோதல்கள் எழுந்தன. எனவே இம்முறை சிக்கல்கள் பலவற்றை உருவாக்கியது. இதன் காரணமாக இம்முறை நீக்கப்பட்டு, பழையநிலைக்குழுக்கள் முறை மீண்டும் கொண்டு வரப்பட்டது. உள்ளாட்சியில் நிலைக்குழு முறைதான் இந்தியா முழுவதும் நடைமுறையில் உள்ளது.

தற்போது 1996 மீண்டும் வட்டாரக் குழுக்கள் முறை தமிழகத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சி நான்கு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்கள், தலைவர் ஆகியோர் மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். வட்டாரப் பணிகளை மேற்கொள்ள உதவி ஆணையாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## மாதிரி வினா:

உள்ளாட்சியில் குழுக்கள் ஆற்றும் பங்கினைத் திறனாய்க.

# பாடம் – 14

## உள்ளாட்சி அரசாங்கத்தில் மாவட்ட ஆட்சித்தலைவரின் பங்கு

மாவட்ட ஆட்சித் தலைவர் 'அரசாங்கத்தின் பிரதிநிதி, 'எல்லா அரசாங்க செயல்களுக்கும் மாவட்ட ரீதியில் பொதுவான மேலாண்மையாளர், 'கண்களையும் காதுகளையும் போன்றவர், மாவட்ட நிர்வாகத்தின் ஜீவநாடி, 'மாவட்டத்தின் முதல் குடிமகன், 'நண்பர், வழிகாட்டி, 'தத்துவமேதை, 'அரசாங்க நிர்வாகத்தில் முக்கியமானவர்' என்று பலவிதமாக விவரிக்கப்பட்டுள்ளார்.

### மாவட்ட ஆட்சித் தலைவரின் நிலை

மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்டத்தின் இயற்கையான தலைவர் என்ற முக்கிய இடத்தைப் பிடித்திருப்பதற்கு பலவிதமான காரணங்களைக் கூறலாம். இதற்கு முக்கிய காரணம் மாவட்ட ஆட்சித் தலைவர் தீர்மானம் செய்வதில் நடுநிலைமை வகிப்பார் என்பதும், மக்களுடைய குறைகளைத் தீர்க்க வல்லவர் என்பதுமாகும். இந்த அபிப்பிராயம் மாவட்ட ஆட்சித் தலைவர் மக்களிடம் தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கிற தொடர்பினாலும் மாவட்ட அளவில் எல்லா நிர்வாகப் பிரிவுகளும் மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டில் பிணைத்திருப்பதினாலும் எழுந்ததாகும்.

### மாவட்ட ஆட்சித் தலைவரின் தன்மை.

மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமை நிர்வாகத் தலைமையாகும். அது மேலாண்மை மற்றும் ஆட்சித் துறைத் தலைமையை விட சிறிது விரிவான பொருளுடையதாகும். தலைமை என்பது பொதுவாக அரசியல் அல்லது அரசியல் கட்சிகளோடு தொடர்புடையதாகும். மக்களின் நம்பிக்கையை எவ்வளவு தூரம் திரட்ட முடியுமென்ற பகுதியைக் குறிப்பதாகும். அரசியலில் தலைமை என்ற சொல் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு மக்களை ஒன்று திரட்டும் திறனைக் குறித்தது. இன்று அரசியலில் தலைமை என்ற சொல் மக்களை ஒன்று திரட்டித் தேர்தலில் வெற்றி பெற வைக்கக் கூடிய திறனைத் குறிக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரின் நிர்வாகத் தலைமை அவர் பெற்றிருக்கும் திறன்களால் அல்ல. அவர் ஏற்றிருக்கும் பொறுப்புக்களை நல்ல முறையில் செயல்படுத்தும் பொறுப்பைப் பெற்றிருப்பவர் என்பதினாலாகும். அரசியல் மற்றும் நிர்வாகத் தலைமைகளில் சில வேறுபாடுகள் காணப்பட்டாலும், இரண்டு தலைமைகளுக்கும் சில திறமைகள் தேவைப்படுகின்றன. அவைகளில் தொடங்கும் ஆற்றலிலுள்ள திறமை, மக்களைச் செயல்படுத்த ஒழுங்கு படுத்தும் திறமை முதலியவைகளை முக்கியமாகக் கூறலாம்.

மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆட்சிபரப்பு அவருடைய அலுவலகத்திற்கும், அவருக்கு கீழ் பணிபுரியும் அதிகாரிகள் என்றளவிற்கு மட்டும் அடங்காது. செயலகம் செயல்படுவது போல மாவட்ட ஆட்சித் தலைவர் சுதந்திரமாக தனித் தன்மையுடன் பெயர் அறியப்படாத அளவில் செயல்படமுடியாது. மாவட்ட ஆட்சித்தலைவருடைய ஆளுமை மாவட்டம் முழுவதும் உணரப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவரிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகள் அவர் சிறப்பம்சங்கள் கொண்ட தலைமையைப் பெற்றிருக்க வேண்டுமென்ற நிலையை உண்டு பண்ணியிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரின் நிலவருவாய்ப் பணிகளின் முக்கியத்துவம் அரசாங்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவு வருவாயை வசூலித்துத் தரவேண்டிய நிலையை மட்டும் ஏற்படுத்தவில்லை. ஆளுபவருக்கும் ஆளப்படுபவருக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்தி மாவட்ட அளவில் விவசாயக் குடும்பங்களின் செல்வ வளங்களை அறிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது. மாவட்ட அளவில் விவசாயிகளின் விவசாய வருமானத்தையும், கடன்பட்டிருக்கும் தன்மையையும் கல்யாண மற்றும் இதர சமூகச் செலவுகளையும் அறிய வாய்ப்பளிக்கிறது. நில உரிமை, மாறுபாடுகள், ஆக்கிரமிப்பு, நிலவிற்பனை போன்ற பிரச்சனைகள் நிலத்தையே மக்களின் பிரச்சனைகளோடு தொடர்பு கொள்ள வாய்ப்பளிக்கிறது.

நெருக்கடி நிலை காலத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமை சிறந்த முறையில் கையாள வேண்டியிருக்கிறது. தீ விபத்து, பற்றாக்குறை, பஞ்சம், பாதுகாப்பின்மை, வெள்ளம், நில அதிர்ச்சி போன்ற சமயங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாவட்ட அளவில் வசதிகள் செய்து தர வேண்டிய நிலையிலிருக்கிறார். இம்மாதிரி சமயங்களில் நல்லமுறையில் செயல்படாவிட்டால் கண்டனத்துக்குள்ளாவார்.

ஒரு தலைவர் என்பவர் கடைசியாக அணுகக் கூடிய நீதிமன்றம் போன்றவர் ஆவார். அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மிஞ்சிய அதிகாரங்கள் மேற்கூறிய நிலையை உண்டு பண்ணியிருக்கின்றன.

மேற்கூறிய பணிகள் மாவட்ட ஆட்சித் தலைவரை மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் ஒரு பாலமாகவும், ஒரு துறைக்கும் இன்னொரு துறைக்கும் இணைப்பு பாலமாகவும் அரசாங்க நிறுவனங்களுக்கும் தன்விருப்ப அமைப்புகளுக்கும் ஒரு பாலமாகவும் செயல்பட வைத்திருக்கின்றன. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் நல்ல செயல்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். அவர் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவராகவும், மாவட்ட மாலுமிகள், இராணுவ வீரர்கள், விமானப்படையைச் சேர்ந்தவர்களின் மன்றங்களுக்குத் தலைவராகவும், ஒழுங்குபடுத்திய சந்தைகளின் தலைவராகவும் இருக்கவேண்டும். அவர் பொது மக்களின் கருத்துக்களை மதித்து அரசாங்கக் கொள்கைகளை மாவட்ட அளவில் நிறைவேற்றுவதற்குப் பொதுமக்களின் ஆதரவைத் திரட்ட வேண்டும். மாவட்டத்திலுள்ள மற்ற எல்லாத் துறைத் தலைவர்களும், தங்களது பணிகளைச் சரியாக செயலாற்றும்படி இயங்க வேண்டும்.

## தலைமைப் பணியில் புதிய ஆட்சிப் பரப்பு

இந்தியா சுதந்திரமடைந்த பிறகு, மக்களாட்சிக் கொள்கைகளை விரிவுப்படுத்தியதின் விளைவாக, அதிகமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு, சட்டம் ஒழுங்கைக் காப்பதும் வரிவசூலிப்பதும் மாவட்ட ஆட்சித் தலைவரின் முக்கிய பணிகளாக இருந்தன. இன்று மாவட்ட நிர்வாகத்தில் தேசிய வளர்ச்சியை உருவாக்குவது (nation [illegible]ng), மாவட்ட ஆட்சித் தலைவரின் முக்கிய பணியாக இருக்கிறது. தேசிய வளர்ச்சியை உருவாக்குவது திட்டமிடுதலின் மூலம்தான் முடியும். திட்டங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக, மாவட்ட அளவில் நிறைவேற்றப்படுகின்றன. இந்நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட அளவில் முக்கிய பங்கு வகிக்க வேண்டியிருக்கிறது. மாவட்ட பல்வேறு துறைகளுக்குப் பணிகளைப் பகிர்ந்தளித்து குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒரே பணியை பல்வேறு நிறுவனங்கள் செய்யும் நிலை இருக்க கூடாது. பல்வேறு அரசு நிறுவனங்களின், நிர்வாக மற்றும் தொழில் நுட்ப ஆதரவைப் பெற வேண்டும். மக்களிடம் பொது ஆர்வத்தை வளர்க்க வேண்டும். மக்களை பொதுப் பணியில் பங்கேற்க வைக்க வேண்டும். ஊராட்சி அரசாங்க நிறுவனங்கள் நல்ல முறையில் செயல் புரிய வழிகாட்ட வேண்டும்.

மாவட்ட நிர்வாகம் சமீப காலத்தில் பல விதமான மாற்றங்களை அடைந்திருக்கின்றது. அரசாங்கப் பணிகள் அதிகரித்ததின் காரணமாக பணித்தனிப்பண்பு வளர்ச்சியும் (functional specialization) தொழில் பங்கீடும் அவசியமளிக்கின்றன. உதாரணமாக தொழிலாளர் துறைக்கும் தொழில் துறைக்கும் மாவட்ட மட்டத்திற்குக் கீழே முன்பு படிநிலை அமைப்பு நிர்வாகம் கிடையாது. இப்பொழுது மேற்கூறிய துறைகளுக்குப் படிநிலை அமைப்பில் மாவட்ட மட்டத்திற்குக் கீழும் நிர்வாக அமைப்பு ஏற்பட்டிருக்கிறது. விவசாயம், கூட்டுறவு போன்ற துறைகளில் தனித்துறைப் பயிற்சி பெற்ற அதிகாரிகள், நில அரிப்பைத் தடுப்பதற்கும், கடன் வசதி செய்து தருவதற்கும் பயிர் பாதுகாப்பிற்கும் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இந்த அதிகாரிகள் ஊராட்சி அரசாங்க நிறுவனங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கட்டுப்பாட்டில் செயல்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பணித்தனிப் பண்பு வளர்ச்சியும் ஊராட்சி அரசாங்க வளர்ச்சியும் ஒருங்கிணைப்புப் பிரச்சனையை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஏற்படுத்தியிருக்கின்றன. இந்த நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையைத் திரும்ப மதிப்பீடு செய்ய வேண்டியிருக்கிறது.

### ஊராட்சி அரசாங்க நிறுவனங்களில் மாவட்ட ஆட்சித்தலைவரின் பங்கு

மாவட்ட ஆட்சித் தலைவரின் பங்கு இந்நிறுவனங்களில் குறைந்து வருகிறது. மாவட்ட அளவில் அரசாங்க மாவட்டத் துறைத் தலைவர்கள் அமர்த்தப்பட்டிருப்பது மாவட்ட ஆட்சித்தலைவரின் பங்குகுறைவதற்கு ஒரு காரணமாகும். உள்ளூர்செல்வாக்குக் குழுக்களும் மாவட்ட அளவில் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. அவைகளால் அரசாங்கக் கொள்கைகளை மிக எளிதாக அணுகமுடிகிறது. சிறிய விஷயங்களில் கூட உள்ளூர் அரசியல் தலைவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை பொருட்படுத்துவதில்லை. குறைகளைத் தீர்ப்பதற்கு உள்ளூர் அரசியல் தலைவர்கள் நேரடியாக மாநில அரசாங்கத்தை அணுகுகிறார்கள். இவ்விதமாக மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்புக்கள் குறைந்து வருகின்றன.

ஊராட்சி அரசாங்க நிறுவனங்களின் அமைப்பில் மாவட்ட ஆட்சித் தலைவரின் பங்கு என்ன என்ற முக்கியமான வினா எழுகிறது. இந்த வினாவிற்கு திருப்தி தரக்கூடிய பதில் இனிமேல்தான் கிடைக்க வேண்டும். பலவிதமான ஊராட்சி அரசாங்க முறையமைவுகள், பல்வேறு மாநிலங்களில் கடைப்பிடிக்கப் படுகின்றன. சில மாநிலங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஊராட்சி அரசாங்க நிறுவனங்களின் எல்லைக்குள் செயல்படுகிறார் இன்றும் சில மாநிலங்களில் ஊராட்சி அரசாங்க நிறுவனங்களின் எல்லைக்குள் செயல்படும் மாநிலங்களில், வாக்குரிமையுடனோ, வாக்குரிமையற்றோ நிலைக்குழுக்களின் தலைவராகவோ அல்லது மாவட்ட மன்றத்தின் தலைவராகவோ செயல்படுகிறார். ஊராட்சி அரசாங்க நிறுவன எல்லைக்கப்பாற்பட்டுச் செயல்படும்பொழுது மேலாண்மைசெய்யும் அதிகாரத்துடனோ அல்லது மேலாண்மை செய்யும் அதிகாரம் இல்லாமலோ செயல்படுகிறார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்ட மன்றத்தின் தலைவராக இருந்தால் மாவட்ட மன்றம் சுயேச்சையான மக்களாட்சி அமைப்பாக செயல்படமுடியாது. அவர் நிலைக் குழுக்களின் தலைவராக இருக்க நேர்ந்தால் அவருக்கும், மாவட்ட மன்றத்தின் தலைவருக்கும் சச்சரவு வளர வாய்ப்பிருக்கிறது. இந்தச் சச்சரவில் மாவட்ட மன்றத் தலைவரின் அதிகாரம் அதிகமானால் மாவட்ட ஆட்சித்தலைவர் செயலற்றவராக ஆகிவிடுவார். மாவட்ட ஆட்சித் தலைவரின் அதிகாரம் மாவட்ட மன்றத் தலைவரின் அதிகாரத்தை விட அதிகமானால் மக்களாட்சி முறை சரியாக வளராது. மாவட்ட ஆட்சித்தலைவருக்கு மாவட்ட மன்றத்தில் வாக்குரிமை இல்லாவிட்டால் அவர் அதில் இடம் பெறுவது கேலிக்கூத்தாக ஆகிவிடும். இந்நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவரை மாவட்ட மன்றத்திற்குத் தலைமை நிர்வாக அதிகாரியாக ஆக்கலாம். இந்நிலையில் மாவட்ட வளர்ச்சி அதிகாரிகளின் தலைவராக விளங்கலாம். அவர் மாவட்ட மன்றத்தின் தலைமை ஆலோசகராகவும் திட்டம் தீட்டும் தலைமை அதிகாரியாகவும் செயல்படலாம். தமிழ் நாட்டில் மாவட்ட ஆட்சித்தலைவர் தான் ஊராட்சி நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவர் ஆவார். இவர்தான் ஊராட்சிகளின் ஆய்விற்குப் பொறுப்பாவார்.

மகராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரின் அந்தஸ்தில் தலைமை நிர்வாக அதிகாரி ஒருவர் அமர்த்தப்பட்டிருக்கிறார். இப்பொழுதும் மாவட்ட ஆட்சித் தலைவர் அரசாங்கத்தின் "கண்களும் காதுகளும்" ஆன நிலையில்தான் செயல்படுகிறார். இந்த மாதிரியான ஏற்பாட்டிற்கு எதிர்ப்புகள் இருக்கலாம். இரண்டு இந்திய அரசுப்பணி அதிகாரிகளை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமர்த்துவது சிக்கனமாக காரியம் என்று கருத முடியாது. தலைமை நிர்வாக அதிகாரி மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணைகளின்படி செயல்பட விரும்பமாட்டார். மாவட்ட ஆட்சித்தலைவருக்கு ஊராட்சி அரசாங்க நிறுவனங்களை ஆய்வு செய்யும் அதிகாரம் தற்போது கொடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில்வளர்ச்சி நிர்வாகமும், நிர்வாக அமைப்பும், மாவட்டமன்றத்தின் தலைமை நிர்வாக அதிகாரியிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன. ஆகையால் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்டமன்றத்தின் உதவியும் அதில் பணிபுரியும் அதிகாரியின் உதவியும் இல்லாமல் ஆதரவற்றுச் செயல்படுகிறார்.

மகாராஷ்டிராவிலும், குஜராத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரை இப்பொழுதும் நீடித்து வைத்து கொண்டிருப்பதற்குக் காரணம், மாநில அரசாங்கத்திற்கு பொறுப்புடையவராகவும் கட்சி சார்பற்றவராகவும்

செயல்பட ஒரு பிரதிநிதி தேவைப்படுவதே ஆகும். தலைமை நிர்வாக அதிகாரி மாவட்ட மன்றத்தின் கட்டுப்பாட்டுக்குள் செயல்படுவதால் அரசியல் ரீதியாக பொதுப்படையாக செயல்படமுடியாது. மேலும் நெருக்கடி காலத்தில் சில அவசர செயல்களைச் செய்ய மாநில அரசாங்கம் தலைமை நிர்வாக அதிகாரியைமட்டும் நம்பியிருக்க முடியாது என்று கருதப்படுகிறது. ஆனால் பழைய அனுபவம் என்னவென்றால் நெருக்கடி நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் சிறந்த முறையில் செயல்படவில்லை என்பதாகும். இம்மாதிரி தருணத்தில் அவருக்குக் கீழ் பணிபுரியும் மாவட்ட வளர்ச்சி அதிகாரிகளின் துணையோடு சிறந்த முறையில் செயல்படுத்த தலைமை நிர்வாக அதிகாரியின் கரங்களை பலப்படுத்த வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரை, மாநில அரசாங்கத்தின் பிரதிநிதியாக இரண்டு மூன்று மாவட்டங்களுக்கு ஒருவராக அமர்த்தலாம். இந்தப்புதிய பகுதியில் மாவட்ட ஆட்சித்தலைவர் உள்ளாட்சி அரசாங்கங்களின் ஆய்வாளராக செயல்படலாம். அவர் மாநிலத் திட்டங்களை மாவட்ட அளவில் நிறைவேற்றும் பொறுப்பை ஏற்பார். அவர் மக்கள் குறையைத் தீர்க்கும் ஆம்புட்ஸ்மேனாக் (Ombudsman) செயல்படுவார். அவருக்கு கீழ் பணிபுரியும் அதிகாரிகளை மேலாண்மை செய்வதோடு வருவாய் அதிகாரி, தொழிலாளர் அதிகாரி போன்ற அதிகாரிகளை மேலாண்மை செய்யும் அதிகாரத்தையும் பெறுவார். இதைத் தவிர கோட்ட அதிகாரிகளுக்குச் சமமானவர்களில் முதன்மையானவராகச் செயல்படுவார். மாவட்ட தலைமைப் பணிகள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் தலைமை நிர்வாக அதிகாரிக்கும் பகிர்ந்தளிக்கப்படும். தலைமை நிர்வாக அதிகாரி மாவட்ட அளவில் செயல்புரியும் வளர்ச்சி அதிகாரிகளின் தலைவராக ஒருங்கிணைக்கும் பணியைச் செய்வார். புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அரசாங்கத்தின் நண்பராகவும், வழிகாட்டியாகவும், தத்துவ மேதையாகவும் மக்கள் குறைகளைத் தீர்க்கும் ஆம்புட்ஸ்மேனாகவும் செயல்பட முடியாவிட்டாலும் மாநில அரசாங்கத்தின் கண்களையும் காதுகளையும் போன்று செயல்பட முடியும்.

**மாதிரிவினா:**

உள்ளாட்சியில் மாவட்ட ஆட்சித் தலைவரின் பங்கினை விளக்கு.

# பாடம் – 15

## உள்ளாட்சித் தேர்தல்கள்

உள்ளாட்சி மன்றங்களின் செயல்முறையை அழிக்கக்கூடிய கட்சிப்பூசலுக்குத் தோற்றுவாயாக தேர்தல் இருக்கின்றன என்ற ஒரு எண்ணம் பரவலாக இருந்து வருகிறது. தேர்தல்கள் தேவையில்லாத ஒரு பரபரப்பை உண்டாக்குவதாகவும், வீணான செலவுக்கும், ஊழல் முறைகளுக்கும் வழி வகுப்பதாகவும் கூறப்படுகிறது. இவ்வகையான தீமைகளை நீக்குவதற்கு உள்ளாட்சி மன்றங்களுக்கு நடைபெறும் தேர்தல்களில் ஒரு மனதான தேர்வுமுறை இருத்தல்வேண்டுமென்று சிலர் கூறுகின்றனர். இதனை வேறு சிலர் பல காரணங்களுக்காக வலுவாக எதிர்க்கின்றனர். பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்குரிய வாய்ப்பை வாக்காளர்களுக்கு அளிக்காவிட்டால் தேர்தல்கள் என்பதற்குப் பொருள் இல்லை. மக்கள் தங்களை ஆளுவோரின் மீது கட்டுப்பாட்டைக் கையாளுவதற்குக் மக்களாட்சி முறையில் இருக்கிற மிக முக்கியமான கருவி தேர்தல்கள் ஆகும்; போட்டி இல்லாத தேர்வுகள் சர்வாதிகார ஆட்சிகளின் இயல்பு ஆகும்; இந்தவகைத் தேர்தல்கள், நாட்டுப்புறங்களில் பழைய ஆளும் குழுவினரே எப்போதும் அதிகாரத்தைத் தங்கள் கையில் வைத்திருப்பதற்கு வழி செய்கிறது.

ஆகையினால், ஊராட்சி சமிதி, மாவட்ட அமைப்பு, நகராட்சி மன்றம் முதலியவை தங்களுடைய உறுப்பினர்களை நேரடியாக தேர்ந்தெடுத்தல் வேண்டும். இம்மன்றங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் அலுவல் காரணமாக வந்த உறுப்பினர்களையும், உறுப்பினர்களால் அமர்த்தப்பட்ட கூட்டு நியமன உறுப்பினர்களையும் விட (Co-opted members) கூடுதல் எண்ணிக்கையினராக இருத்தல் வேண்டும். மாவட்ட அமைப்புக்குப் பொருந்துமாறு பல்வந்தராய் மேத்தா ஆய்வுக்குழு பரிந்துரை செய்தது; இதனைப் பல மாநிலங்கள் சமிதி, ஜில்லா பரிஷத்து நிலைகளில் ஏற்றுச் செயல்படுத்தியுள்ளன.

மாவட்ட அமைப்பை அமைப்பதில், அலுவல் காரணமாக உறுப்பினர்களை அமர்த்துதல் என்ற முறை முழுவதுமாகப் பயன்படுத்தப்படுமானால், அதன் மேல் உள்ள "அதிகாரங்களுக்கும்" அதை அமைக்கும் "தேர்வாளர் ஆதாரத்துக்கும்" இடையே உள்ள இணைப்புக்கு அல்லது தொடர்புக்கு மதிப்பு இல்லாமல் போகிறது. இந்த முறையினால் தேர்தல் பூசல்களை குறைந்து விடுகின்றன என்று ஒரு நியாயம் காட்ட முடியும். ஆனால் இந்த முறையானது வலுவிழந்த, பின்தங்கிய பிரிவினருக்குப் பாதகமாகத் தான் செயல்படுமென்பதையும் நாம் இங்கு சுட்டிக்காட்டுதல் வேண்டும். உள்ளூர்ப் பிரிவுகளிலே சமுதாய, பொருளாதார, அரசியல் உரிமைகளை ஒருவருக்கு வழங்கக்கூடிய முக்கிய மூலதாரமாக இருப்பது நிலவுடைமையே ஆகும். பொதுவாகக்கூறினால், செல்வாக்கு உடைய பிரிவினர்தான் மாவட்ட அளவில் அலுவல் காரணமான உறுப்பினர்களாக வருதல் கூடும். இந்த நிலை தவிர்க்கப்படுவதற்கு மாவட்டத்தில் நேரடியாகப் பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருத்தல் வேண்டுமென்று கூறப்படுகிறது.

நேர்முகத் தேர்தல்களுக்கு ஆதரவாக வேறு பல காரணங்கள் கூறப்படுகின்றன. நேர்முகத் தேர்தல்களில் உள்ளூர்ப்பூசல்களும், பிரிவினை போக்குகளும் மலிந்திருக்குமென்று கூறப்படுகிறது. ஆனால் மறைமுகத் தேர்தல்களோ, தேர்தல்களில் போக்கைத் தவறான முறைகளின் மூலம் மாற்றுவதற்கு மக்களுக்கு நிறைய வாய்ப்பளிக்கின்றன. இதற்கு நேர்மாறாக, மக்களுக்குத் தங்களுடைய நிறுவனங்களை அமைப்பதில் ஒருபங்கு உண்டு என்ற உணர்வைத் தருகின்றன. அவர்களுடைய தலைவருக்கு மிக்க பொறுப்பு உணர்வு உண்டு; அவருக்கு மக்களிடையே ஏனைய வகையில் தலைவராக வருபவருக்கு உள்ள மதிப்பைவிட கூடுதலான மதிப்பு உண்டு.

### உள்ளாட்சி மன்றங்களில் தேர்தல்கள்

கிராம பஞ்சாயத்து (ஊராட்சி மன்றங்கள்): பஞ்சாயத்து இராச்சிய முறை என்பதில் கிராம ஊராட்சிதான் முதல் படி அல்லது அடுக்கு ஆகும். மேகலாயா, நாகலாந்து, சிக்கிம் முதலிய மாநிலங்களைத்

தவிர மற்றெல்லா மாநிலங்களிலும் கிராம ஊராட்சிகள் செயல்படுகின்றன. இவற்றின் உறுப்பினர் எண்ணிக்கை ஐந்திலிருந்து முப்பத்து ஒன்று வரை வேறுபடுகின்றது. ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தைத் தவிர மற்றெல்லா மாநிலங்களிலும் பெருமளவில் ஊராட்சி உறுப்பினர்கள் (பஞ்சாஸ் எனப்படுவர்) இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பீகார், ஒரிசா, உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகியவற்றைத் தவிர மற்றெல்லா மாநிலங்களிலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை இடங்கள் பெண்களுக்காக ஒதுக்கி வைக்கப்படுகின்றன. ஜம்மு–காஷ்மீர், ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகியவை தவிர மற்றெல்லா மாநிலங்களிலும், தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கும், பழங்குடியினருக்கும் இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. பீகாரில் ஊராட்சித் தலைவர் முக்கியமானவர் எனப்படுபவர். ஊராட்சி மன்றத்தில் நான்கு உறுப்பினர்களை அமர்த்துகிறார். இவ்வாறு அவர் அமர்த்தும் போது, அவர் பெண்கள், பின்தங்கியோர், பழங்குடியினர் ஆகியோருக்கு போதிய பிரதிநிதித்துவம் கிடைக்குமாறு அவர் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். ஊராட்சிமன்றத்தின் தலைவர் அசாம், பீகார், ஹரியானா, ஒரிசா, இராஜஸ்தான், பஞ்சாப், தமிழ்நாடு, உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம் முதலிய மாநிலங்களில், அவர் ஊராட்சி மன்றத்தின் உறுப்பினர்களால் அவர்களிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

இரகசிய வாக்கெடுப்பின் மூலமாக ஊராட்சித் தலைவரை நேர்முகத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுத்தல் என்ற இப்போதைய முறையை பஞ்சாயத்து அரசு முறையைப் பற்றி ஆய்வு செய்யும் பல குழுக்கள், மிகச் சிறந்த முறையாகக் கருதுகின்றன. 1965–ஆம் ஆண்டின் பஞ்சாயத்து அரசு தேர்தல்களைப் பற்றி ஆய்வு செய்த சந்தானம் குழு கூறுவதாவது; "பெண்கள், பின்தங்கியோர், பழங்குடியினர் ஆகியோர்களின் பிரதிநிதிகள் உட்பட ஊராட்சி மன்றங்களின் எல்லா உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களோ, அமர்த்தப்பட்டவர்களோ, அலுவல் காரணமான உறுப்பினர்களோ இருத்தல் கூடாது" மாவட்ட ஆட்சி முறையப் பற்றி ஆட்சிச் சீர்திருத்த ஆய்வுக்குழுவும் ஊராட்சி மன்றங்களின் அல்லது கிராமப் பஞ்சாயத்துக்களின் எல்லா உறுப்பினர்களும் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும் என்று கூறிற்று. இராஜஸ்தானில் அமைக்கப்பட்ட வியாஸ் குழு கூறியதாவது: "உறுப்பினர்கள் தலைவரைத் தேர்ந்தெடுத்தல் என்பது உண்மையான மக்களாட்சி முறையை அழிக்கின்ற ஒரு செயலே அன்றி வேறல்ல; தாழ்த்தப்பட்டோர், பழங்குடிகள், பெண்கள் ஆகியோர் ஊராட்சி மன்றங்களிலும் ஊராட்சி சமிதிகளிலும், மாவட்ட அமைப்புக்களிலும் உள்ள உறுப்பினர்களால் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்படுதல் என்பது, இவ்வகை மன்ற உறுப்பினர்களுடைய தயவைப் பொறுத்தே அமைகிறது; ஆகையால் அவர்கள் இம்மன்றங்களில் நடைபெறும் விவாதங்களிலும் விறுவிறுப்பாகவோ அல்லது விஞ்ஞானப் பூர்வமாகவோ பங்கு கொள்ளல் இயலாது." மேலும் இந்த குழு தாழ்த்தப்பட்டோருக்கும் பழங்குடியினருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுவதற்காக அவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ற விகிதத்தில் தொகுதிகள் ஒதுக்கப்படுதல் வேண்டுமென்று பரிந்துரை செய்தது. ஆனால், பெண்களைப் பொறுத்தவகையில், அவர்களுக்கென்று தனித் தொகுதிகளை ஏற்படுத்துவது இயலாது. ஆகையால். அவர்களுடைய பிரதிநிதிகளை இப்போது உள்ள முறையின் படி மன்ற உறுப்பினர்களே தேர்ந்தெடுத்தல் என்ற முறையே தொடர்ந்து இருக்கலாமென்று மேற்படி குழு கருதிற்று. ஆந்திரப் பிரதேசத்திலுள்ள நரசிம்மம் குழு பெண்களுக்கும் இடங்கள் ஒதுக்கப்படுதல் வேண்டுமென்று பரிந்துரை செய்தது.

எந்தெந்த மாநிலங்களில் ஊராட்சி மன்ற உறுப்பினர்களால், அவர்களிடையே இருந்து மன்ற தலைவர் (சார்பாஞ்ச்) மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறாரோ, அங்கெல்லாம் மன்றத் தலைவர் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பது உறுதியாகக் கூறப்பட்டது. இந்த நேர்முகத் தேர்தலுக்கு ஆதரவாகவும், எதிராகவும் பல கருத்துக்கள் கூறப்பட்டாலும், தலைவரை நேர்முகமாகத் தேர்ந்தெடுத்தல் வேண்டுமென்ற கருத்து பரவலாகக் காணப்படுகிறது. அவை நேர்முகமாகத் தேர்ந்தெடுத்தால் அவருக்குப் பெருமளவில் மக்களுடைய ஆதரவும், நம்பிக்கையும் கிடைக்குமென்றும், உறுதியான தலைமைத்தன்மை உருவாகுமென்றும் கருதப்படுகிறது.

**ஊராட்சி சமிதி:**

தமிழ்நாட்டில் இரண்டாவது அடுக்கில் அல்லது படியில் உள்ள மன்றத்துக்கு ஊராட்சி ஒன்றியம் (Panchayat Union Council) என்று பெயர். பல்வேறு மாநிலங்களில் பஞ்சாயத்து இராச்சிய முறையில் இடைநிலையில் உள்ள மன்றத்திற்கு பஞ்சாயத்து சமிதி என்று பெயர். இந்த அடுக்கிற்கு உள்ள பெயரும் பல்வேறு வேறுபாடுகளைக் காட்டுகிறது. சமிதியினுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் ஆந்திரப்பிரதேசம், அசாம், குஜராத், மத்தியப்பிரசேம், கர்நாடகம், மேற்கு வங்காளம் முதலியவற்றில் தலைவர் என்றும், அரியானா, இமாசலப் பிரதேசம், மகாராஷ்டிரம், தமிழ்நாடு, ஒரிசா, பஞ்சாப் முதலிய மாநிலங்களில் 'சேர்மன்' என்று இராஜஸ்தானின் 'பிரதான்' என்றும் பீகார், உத்திரப்பிரதேசம் முதலியவற்றில் 'பிரமுகர்' என்றும் குறிப்பிடப்படுகிறார்.

இந்த இடைநிலை அடுக்கில் உள்ள உறுப்பினர்கள் கீழ்க்காணும் வகைகளைச் சேர்ந்தவர்கள்;

i) ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள் (அலுவல் காரணமாக)

ii) அப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் (இவர்களுக்கு வாக்கு அளிக்கும் உரிமை வழங்கப்பட்டோ அல்லது அல்லாமலோ இருக்கலாம்)

iii) பெண்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், ஆகியோருக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதற்காக, ஒதுக்கீடு செய்தலில் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்.

iv) நகராட்சி மன்றங்கள், கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள்.

சில மாநிலங்களில் அலுவல் காரணமாக உறுப்பினர்களுக்குப் பதிலாக நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். சமிதி உறுப்பினர்கள் பெருமளவில் பொறுப்போடிருக்கும் என்று நாம் பொதுவான ஒரு கருத்தைக் கூறலாம். இந்த முறையில் உள்ள ஒரு குறைபாடு என்னவெனில், இதற்கு உள்ளூர் மட்டத்தில் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுகின்ற கிராமப் பஞ்சாயத்தோடு அல்லது ஊராட்சி மன்றத்தோடு இணைப்பு ஏதும் இல்லாமல் போகிறது என்பதுதான். இதற்கு நேர்மாறாக ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள் அல்லது சார்பாஞ்சக்கள் அலுவல் காரணமாக பஞ்சாயத்து சமிதியில் உறுப்பினர்களாக வரக்கூடிய மறைமுகத் தேர்தலில் ஊராட்சி மன்றத்தோடு இணைப்பு ஏற்படுகிறதாகையால், இரண்டிற்கும் இடையே பயனுள்ள இணைவு தோன்ற வழி ஏற்படுகிறது ஆனால் இந்த முறையானது சார்ப்பாஞ்சுக்களை மிகவும் அதிகாரமுடையவர்களாக ஆக்குகிறது என்று கூறப்படுகிறது. இதைப்பற்றி ஆராய்ந்த பல்வேறு குழுக்களின், ஆய்வுகளும் நேரிடையான தேர்வுகளுக்கு சாதகமான கருத்தையே காட்டுகின்றன. இராஜஸ்தானில் அமைக்கப்பட்ட வியாஸ்குழு கூறியதாவது; "ஒரு கீழ்நிலை மன்றத் தலைவருக்கு அலுவல் காரணமாக ஒரு மேல்நிலை மன்றத்தில் ஒரு இடம் கொடுப்பதன் மூலமாக, அதிகார அமைப்பில் கீழ்நிலை மன்றமானது தன் விருப்பம்போல் நடக்குமாறு மேல்நிலை மன்றத்தைத் தூண்டுகிறது என்பதையும், கீழ்நிலைமன்றமானது மேல்நிலைமன்றத்தின் ஒரஞ்சாராத செயல் முறைக்கு மாறாகப் பெரும்பாலும் செயல்படக்கூடிய நிலையில் உள்ளது என்பதையும் நமக்கு அனுபவம் காட்டுகிறது. பஞ்சாயத்து சமிதியில் உள்ள எல்லா சார்பாஞ்ச்சுகளும் கூட்டாகப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றிருக்கின்ற காரணத்தால், அவர்கள் பஞ்சாயத்து சமிதியின் சிறந்த நோக்கங்களுக்கு எதிராகக்கூட தீர்மானிக்கக் கூடிய நிலையில் இருக்கின்றனர்." ஆகையினல், நேரடியான தேர்தல்கள் மூலம் 7,000 முதல் 10,000 வரை மக்கள் தொகையுள்ள ஒவ்வொரு தொகுதிக்கும் ஒருவர் என்ற அடிப்படையில் குறைந்த அளவு 10 உறுப்பினர்கள் பஞ்சாயத்து சமிதியில் இருத்தல் வேண்டுமென்று மேற்படி குழு கருத்துத் தெரிவித்தது. இதேபோல ஆந்திரப் பிரதேசத்தில் நிறுவப்பட்ட நரசிம்மம் குழுவும் பஞ்சாயத்து சமிதிகளில் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும், ஊராட்சி மன்ற உறுப்பினர்களும், சார்பாஞ்சகசுகளும் இருத்தல் வேண்டுமென்று கருத்துத் தெரிவித்தது. மகாராஷ்டிரத்தில் நிறுவப்பட்ட போன்ஜீவார் குழுவும், குஜராத்தில் நிறுவப்பட்ட சினாபாய் டார்ஜி குழுவும் பஞ்சாயத்து சமிதியில் ஒரு குறிப்பிட்ட விகித உறுப்பினர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்று பரிந்துரை செய்தது.

தாழ்த்தப்பட்டோருக்கும், பழங்குடியினருக்கும் பஞ்சாயத்து சமிதியில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுவதற்காக, உறுப்பினர்களே பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்தல் என்ற பல மாநிலங்களிலுள்ள இப்போதைய முறைக்குப் பதிலாக இட ஒதுக்கீடு செய்தல் சிறந்தது என்று கருதப்படுகிறது. உறுப்பினர்கள், பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்தல் என்ற முறை அரசியல் கட்சிகளால் தவறாகக் கையாளப்படுகிறது.

சமிதியில் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறையைப் பற்றியும் இப்போது மிக்க கவனம் செலுத்தப்படுகிறது. இதன் தலைவர், இதனுடைய உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இந்த மறைமுகத் தேர்தல் முறையானது வெற்றி வாய்ப்பு உடைய வேட்பாளர்கள் முறைகளை மாற்றவும், ஊழ்ல் முறைகளைக் கையாளவும் தூண்டுகிறது. 1973–ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஆட்சி சீர்த்திருத்தக்குழு, ஊராட்சி ஒன்றியக் குழுவின் தலைவர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுதலைப் பரிந்துரை செய்தது. சமிதியின் தலைவர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவாராயின், அவருடைய நிலை மிகவும் வலுவாக ஆகிவிடும் என்றும் கருதப்படுகிறது.

மாவட்டமன்றம் அல்லது ஜில்லா பரிஷத்: பல மாநிலங்களில் மாவட்ட நிலையில் உள்ள மக்கள் மன்றத்தைக் குறிப்பிடுவதற்குக் கையாளப்படும் பெயர் ஜில்லா பரிஷத் என்பதாகும். இதற்கு அசாமில் மகுமா பரிஷத் என்றும், தமிழ்நாட்டிலும், கர்நாடகத்திலும் இதற்கு மாவட்ட வளர்ச்சிக்கழகம் என்றும், குஜராத்தில் இதற்கு மாவட்ட பஞ்சாயத்து என்றும் பெயர். தற்போது இது1 தமிழகத்தில் மாவட்ட ஊராட்சியாகும்.

இந்தக் குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருக்கு, ஆந்திரப் பிரதேசம், மத்தியப்பிரதேசம், பஞ்சாப், மேற்குவங்காளம் முதலிய மாநிலங்களில் 'சேர்மன்' என்றும் அஸ்ஸாம், குஜராத், மகாராஷ்டிராம் முதலிய மாநிலங்களில் தலைவர் (President) என்றும் பெயர். பீகாரிலும், உத்திரப்பிரதேசத்திலும் மாவட்டக் குழுவின் தலைவருக்கு இத்தியாட்சர் என்றும் இராஜஸ்தானின் பிரமுகர் என்றும் பெயர். தமிழ்நாட்டிலும், கர்நாடகத்திலும் மாவட்ட ஆட்சியரே மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக இருக்கிறார்.

பஞ்சாயத்து ஆட்சிமுறையில் மேலே உள்ள இந்த அடுக்கில் கீழ்க்கண்ட வகைப்பட்ட உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

i) பஞ்சாயத்து சமிதிகளின் தலைவர்கள் அலுவல் காரணமான உறுப்பினர்கள்.

ii) மாவட்டத்திலுள்ள பாராளுமன்ற சட்டமன்ற கீழவை, மேலவை, உறுப்பினர்கள் (இவர்களுக்கு வாக்கு அளிக்கும் உரிமை சில மாநிலங்களில் இருக்கிறது. சில மாநிலங்களில் இல்லை)

iii) பெண்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஆகியோருடைய பிரநிதிகள்–இவர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட தொகுதியிலிருந்தோ, அல்லது குழுவின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டோ வந்த உறுப்பினர்கள்.

iv) கூட்டுறவு சங்கங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள்.

அஸ்ஸாம், கர்நாடகம், மேற்குவங்காளம் முதலியவற்றில் மாவட்டக் குழுவின் காலம் நான்காண்டுகள் ஆகும். மற்றவற்றில் 5 ஆண்டுகளும், பீகாரில் 3 ஆண்டுகளும் ஆகும். பல மாநிலங்களில் மாவட்ட பரிஷத்துக்களின் உறுப்பினர்கள் தங்களுடைய இருந்து சேர்மனையும் உதவி சேர்மனையும் தேர்ந்தெடுக்கிறார்கள்.

மகாராஷ்டிராத்திலும், குஜராத்திலும் உள்ள பஞ்சாயத்து ஆட்சி முறையிலே, மாவட்டக் குழுவின் பெரும்பகுதி உறுப்பினர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 1961–ஆம் ஆண்டின் நிறுவப்பட்டதும், மகாராஷ்டிரத்தில் பஞ்சாயத்து ஆட்சி முறையை அமைப்பதற்கு வேண்டிய பரிந்துரைகளை வழங்கியதுமான நாயக் குழு குறிப்பிட்டதாவது; அரசாங்கத்தின் அலுவல்களைச் செய்யும் மாவட்டக் குழு பரந்த அடிப்படையுடன் இருத்தல் வேண்டும் அது மக்களுக்குப் பொறுப்போடு இருத்தல் வேண்டும். அதற்குரிய அரசியல் நிலையை அது பெற்றிருத்தல் வேண்டும்; ஆகையால் அது பெருமளவு தேர்ந்தெடுக்கப்படுதல்

வேண்டும், என்று அது கருதிற்று; பஞ்சாயத்து ஆட்சிமுறையின்மேல் அடுக்கில் உள்ள இந்த மன்றத்துக்கு மறைமுகமான தேர்தல் முறை வழக்கத்தில் உள்ள மாநிலங்களில்' இதற்கு நேரடியாகத் தேர்தல் நடைபெறுதல் வேண்டுமென்ற விருப்பம் காணப்படுகின்றன. ஆந்திரப்பிரதேசத்தில் நரசிம்மம் குழு. சமிதி வளர்ச்சி வட்டாரங்களாகப் பிரித்து (Electoral Circles) அவற்றிலிருந்து ஜில்லா பரிஷத்துக்களுக்கு நேரடித் தேர்தல் நடத்தலாமென்று ஒரு கருத்துத் தெரிவித்தது. இராஜஸ்தானில் அமைக்கப்பட்ட வியாஸ்குழுவும், ஆந்திரப் பிரதேசத்தில் கூறப்பட்டது போல பரிஷத் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர் அல்லது தேர்வாளர் அளவை விரிவுபடுத்த வேண்டியதன் தேவையை வற்புறுத்திற்று.

பல மாநிலங்களில் ஜில்லா பரிஷத்தின் தலைவர் அல்லது சேர்மன் அம்மன்றத்தின் உறுப்பினர்களால் அவர்களிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார். மகாராஷ்டிரத்திலும் குஜராத்திலும் அவர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இதைப்பற்றி ஆட்சி முறை சீர்திருத்தக்குழு தனது கருத்தை தெரிவிக்கும்போது, பரிஷத்தின் அதிகார எல்லைக்குள் அடங்கிய ஊராட்சி மன்றங்களின் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வு கழகத்தினால் பரிஷத்தின் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுதலைப் பரிந்துரை செய்தது. பரிஷத்தின் தலைவருக்குரிய தேர்தலும் பஞ்சாயத்து சமிதியின் பிரதானுக்கு நடைபெறும் தேர்தல் காலத்திலேயே நடைபெறுதல் வேண்டுமென்று மேற்படிகுழு கருத்துத் தெரிவித்தது. 1969–ஆம் ஆண்டின் அசாமில் நிறுவப்பட்ட திரிபாதி ஆய்வுக்குழுவானது தமிழ்நாடு, கர்நாடகம் முதலியவற்றிலுள்ள அமைப்புக்களை ஏற்று, மாவட்டத்தில் உள்ள எல்லாமாகு பரிஷத்துக்களுக்கும் உதவி ஆணையரே (Deputy Commissioner) தலைவராக இருக்கலாமென்று கூறிற்று.

மகாராஷ்டிரத்தைத் தவிர மற்றெல்லா மாநிலங்களிலும் ஜில்லா பரிஷத்துக்களின் பாராளுமன்ற உறுப்பினர்களும், மாநில சட்டமன்ற உறுப்பினர்களும் அலுவல் காரணமாக உறுப்பினராக இருக்கின்றனர். அவர்களுக்கு குஜராத், ஒரிசா, பஞ்சாப் முதலியவைகளைத் தவிர மற்ற மாநிலங்களில் எல்லாம் வாக்கு அளிக்கும் உரிமைகள் உண்டு. அவர்கள் அஸ்ஸாம், இராஜஸ்தானில் ஜில்லா பரிஷத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநிலச் சட்டமன்ற கீழவை, மேலவை உறுப்பினர்கள் உள்ளிட்ட எல்லா அலுவல் காரணமான உறுப்பினர்களுக்கும், உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும், உறுப்பினர்களுக்குரிய எல்லா உரிமைகளும் இருக்கின்றன. அவர்கள் வாக்கெடுப்பு நடைபெறும்போது, வாக்கு அளிக்கலாம், விவாதங்களில் பங்கு கொள்ளலாம். தேர்ந்தெடுக்கப்படுவதற்குரிய அலுவல்களையும் முறையாகப் பெறலாம். ஆட்சி முறை சீர்திருத்தக் குழுவானது, இவ்வகையான அலுவல் காரணமான உறுப்பினர்கள், கிராம பஞ்சாயத்துக்களிலோ பஞ்சாயத்து சமிதிகளிலோ, ஜில்லா பரிஷத்துக்களிலோ, அவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாகவும், தலைவர்களாகவும் வருதல் கூடாது என்று கருத்துத் தெரிவித்தது. ஆனால் அவர்கள் கூட்டு உறுப்பினர்களாக இருக்கலாம். 1976–ஆம் ஆண்டின் ஆந்திரப்பிரதேச பஞ்சாயத்து சமிதி ஜில்லா பரிஷத்துக்கள் திருத்தச் சட்டமானது, பாராளுமன்றத்தின் அல்லது மாநிலச் சட்டமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரியவர் என்று கூறிற்று, அவ்வாறு அவர் தேர்ந்தெடுக்கப்படும்போது, அவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மாநிலச் சட்டமன்றத்திலோ அல்லது பாராளுமன்றத்திலோ தமக்கு உள்ள உறுப்பினர் பதவியை விட்டு விலக வேண்டும்.

## நகராட்சி

நகராட்சியில் நகராட்சிமன்றம், தலைவர் (Chariman) நிர்வாக அதிகாரி என மூன்று உறுப்புகள் அல்லது பிரிவுகள் இருக்கின்றன. நகராண்மைக் கழகத்தில் விவாதிக்கும் அலகாக இருப்பது நகராட்சி மன்றம் ஆகும். அதில், வயது வந்தோருக்கு வாக்குரிமை என்ற அடிப்படையில் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருக்கின்றனர். ஒவ்வொரு மன்றத்திலும் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை மாநில அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படுகிறது. நகராண்மைக்கழகத்தின் தலைவர் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் ஆவார். அவர் மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். தற்போது நகராட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மக்களால் நேடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

### மாநகராட்சி (Municipal Corporation)

மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் வயது வந்தோருக்கு வாக்குரிமை என்ற அடிப்படையில் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மற்ற உறுப்பினர்கள் தங்களிடையே இருந்தும், வெளியிலிருந்தும் ஒரு குறிப்பிட்ட எண் உள்ள உறுப்பினர்களை நியமனமாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். மன்ற உறுப்பினர்களும், நியமன உறுப்பினர்களும், மன்றக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கும் பொருட்டு ஒரு மேயரைத் தேர்ந்தெடுக்கிறார்கள், ஒரு துணை மேயரும், மற்ற உறுப்பினர்களால் அவர்களிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார். தற்போது மேயர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

### நகராட்சி மன்றங்களை நிறுத்தி வைத்தலும் தேர்தல்களை ஒத்தி வைத்தலும்

நகராட்சி அமைப்புக்களையும் தேர்தல்களையும் பற்றிய ஒரு விவாதத்தில் தோன்றுகிற ஒரு முக்கியமான கேள்வி, மாநில அரசாங்கமானது கட்சிக் காரணங்களுக்காக உள்ளாட்சி மன்ற நிறுவனங்களை நிறுத்தி வைத்தல் கூடாது என்பதேயாகும். நிறுத்தி வைத்தல் என்பது தேவையாக இருக்குமேயானால் கலைக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்குப் பதிலாக ஆறு மாத காலத்திற்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்கள் நிறுவப்பட வேண்டும். தற்போது மேயர், நகராட்சித்தலைவர், ஊராட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவர், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆகியோர்களை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள்.

## ஜாதியும் தேர்தல்களும்

உள்ளாட்சித் தேர்தலில் ஜாதியின் செல்வாக்கு உள்ளதாகக் கூறப்படுகிறது. இந்திய சமூகம் பலபடிநிலையாக அமைந்து, ஒவ்வொரு படிநிலையும் பலபிரிவுகளாக அமைந்து உள்ளதென்பதை அறிவோம். இரஜினி கோத்தாரி இந்திய சமூகத்தின் செல்வாக்கு அரசியலில் தொடர்புடையதாக உள்ளது. ஜாதியின் பிரிவுகள் பிரிவதுவும், இணைவதுமாகத் தங்களது சமூக ஆதரவைப் பெறுவது என்பது இயல்பான தன்மை என்கிறார். தவிர ஜாதி அமைப்புக்கள், ஜாதி சங்கங்கள், ஜாதி மாநாடுகள் போன்றவை அனைத்தும் அதிகாரத்தைப் பெறுவதற்காக ஆரம்பிக்கப்படுகின்றன என்கிறார். (Andre Beteille) அண்டோ பெட்டலி என்பார் சமூக அமைப்பில் அடிப்படையாக இந்தியக் கிராமங்களில் ஜாதி வாரியான பிரிவுகள் உள்ளன என்கிறார். இவை சமூகச் செயல்பாடுகளில் அதிகமான பங்கு வகிக்கின்றன என்கிறார். அரசியல் கட்சிகள் இந்த பிரிவுகளை தங்களுக்குச் சாதகமாக அரசியல் அதிகாரத்தைப் பிடிப்பதற்குப் பயன்படுத்துகின்றன. கிராம சமூகம் பிரிவினைப்படாது. ஒற்றுமையுடன் வாழ மக்களாட்சிக் கோட்பாடுகளை மக்களுக்குத் தெளிவுபடுத்துவதோடு, நிர்வாகம் எல்லா மக்களுக்கும் வெளிப்படையாகத் தெரியும் வகையில் நடத்த வேண்டும். இவ்வாறு செய்தால் ஜாதியை உள்ளாட்சித் தேர்தல்களுக்குப் பயன்படுத்த மாட்டார்கள்.

### மாதிரி வினா:

1. உள்ளாட்சித் தேர்தல்களின் முக்கியத்துவத்தை குறிப்பிடுக.

# பாடம் – 16

## உள்ளாட்சியில் அரசியல் கட்சிகள்

அரசியல் கட்சிகள் உள்ளாட்சி நிர்வாகத்தில் மகாத்மா காந்தி நடத்திய ஒத்துழையாமை இயக்கம் காலத்தில் நுழைந்ததெனக் கூறலாம். 1922–ஆம் ஆண்டு உத்திரப் பிரதேச நகராட்சித் தேர்தல்கள் அரசியல் கட்சிகள் ரீதியாக நடத்தப்பட்டன. ஏனெனில் நகராட்சிகளை சுயராஜ்யவாதிகள் தங்கள் வசம் வைத்துக்கொள்ள முடிவு செய்தனர். பின்னர் 1923–ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கவாதிகளும் நுழைந்து, வெற்றி பெற்றனர். இருப்பினும் உள்ளாட்சியில் தனிப்பட்ட நபர்கள் மற்றும் இனவாரியான உணர்வுகள் அதிகமாகத் தலைகாட்டின. 1923–ஆம் ஆண்டு சுயராஜ்யவாதிகள் கல்கத்தா மாநகராட்சியைக் கைப்பற்றினர். அரசியல், அரசியல் கட்சி நோக்கங்களுக்கு முக்கியத்தும் பெற்று உள்ளாட்சி நிர்வாகம் அரசியல் ஆதிக்கத்திற்கு உள்ளாயிற்று.

இன்று உள்ளாட்சித் தேர்தல்களில் அரசியல் கட்சிகள் புகுந்துவிட்டன. மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஆகிய தேர்தல்கள் கட்சி சார்பாகவே நடைபெறுகின்றன. அரசியல் கட்சிகள் உள்ளாட்சித் தேர்தல்களில் பங்குபெறக் கூடாதென்ற பொதுவான கருத்து நிலவினாலும், தேர்தல்கள் முழுமையாக அரசியல் சார்பாகவே நடத்தப்படுகின்றன. கட்சிக் கட்டுப்பாடு என்பது பிற தேர்தல்கள் போல மிகவும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது.

அரசியல் கட்சிகள் உள்ளாட்சி விவகாரங்களில் ஈடுபாடு கொண்டு விட்டால் உள்ளாட்சி அரசாங்கம் மிகவும் பாதிக்கப்படும். ஏனெனில் அரசாங்கத்தைக் காட்டிலும் கட்சி நலமே பெரிதாக எண்ணப்படும். இது மாநில, மத்திய அரசுகளில் இருந்தால், உடனே வெளித் தெரிவதில்லை அவ்வாறு தெரிந்தாலும் மக்களை நேரடியாகப் பாதிப்பதில்லை. ஆனால் உள்ளாட்சியில் நேரடியாக மக்களைப்பாதிக்கும். இதனால் பணியாளர் குழாம் நிர்வாகம், நிதி நிர்வாகம் ஆகியன மிகவும் பாதிக்கும். ஏனெனில் பணியாளர்கள், வரிசெலுத்துவோர் கட்சி கண்ணோட்டத்தோடு செயல்பட ஆரம்பிப்பர். மேலும் பல கட்சிகளின் பணியாளர்களும் நிர்வாகத்தில் பங்கு பெறுவதால் பல, கட்சிகளின் நடவடிக்கைகள் உள்ளாட்சி அரசாங்கத்தில் பிரதிபலிக்கும். இவற்றால் நிர்வாகத்தில் திறமைக் குறைவு மட்டுமின்றி, பணியாளர்களின் ஒழுங்குணர்வும் (morale) பாதிப்பிற்குள்ளாகும்.

இந்திய அரசியலமைப்பானது, வயது வந்தோருக்கு வாக்குரிமை என்பதை தேசிய, மாநில மட்டங்களில் நடைபெறும் தேர்தல்களுக்கும் மட்டுமல்லாமல்' உள்ளாட்சி மன்றங்களுக்கு நடைபெறும் தேர்தல்களுக்கும் ஏற்படுத்தியுள்ளது. இதிலிருந்து, உள்ளூர்ப்பகுதியில் வாழ்பவர்களெல்லோரும் வறியவர், செல்வர் என்ற வேறுபாடோ, சாதி வேறுபாடோ, சமயவேறுபாடோ, ஆண், பெண் என்ற பால் வேறுபாடோ இல்லாமல், தேர்தல்களில் வாக்கு அளிக்கவும், வேட்பாளராகப் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் உரிமை உடையவர் என்பதும் வாக்கு அளிப்பதற்கும் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கும் ஒருவர் வயது வந்தவராக இருந்தால் போதும் என்பதும் தெரியவருகின்றன. உள்ளாட்சி மன்றங்களுக்கு நடைபெறும் தேர்தல்களில் கட்சி அரசியலானது மிகவும் குறைவான அளவில் காணப்படுகிறது.

உள்ளாட்சி முறையில் அரசியல் கட்சிகள் பங்கு என்ன என்பது ஒரு முக்கியமான பிரச்சனை ஆகும். இதில் உள்ளாட்சி மன்றங்கள் வாக்காளர்களைத் திரட்டுதல், வேட்பாளர்களைத் தேர்ந்து எடுத்து அமர்த்துதல். தேர்தல் பிரச்சாரங்களை நடத்துதல் முதலிய அலுவல்களைச் செய்ய வேண்டிய நிலையில் இருக்கின்றன. உள்ளாட்சி மன்றங்கள் வயது வந்தோருக்கு வாக்குரிமை என்ற அடிப்படையில் நேர்முகத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசியல் கட்சிகளின் உதவியை நாடுகின்றன.

### அரசியல் கட்சிகளின் பங்கு

உள்ளாட்சி மன்றங்களைப் பற்றிய பல பிரச்சனைகள் இருக்கின்றன. அவை சர்ச்சைக்குள்ளாகியும்

இருக்கின்றன. அப்பிரச்சனைகளைப் பற்றி ஒருமித்த கருத்து ஏற்படக் கூடுமென்று எண்ணவும் இடம் இல்லை. இத்தகைய பிரச்சனைகளுள் ஒன்றுதான் உள்ளாட்சி முறையில் அரசியல் கட்சிகளின் பங்கைப் பற்றியதாகும். திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணனும் சர்வோதய இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் அரசாங்கத்தின் எல்லா மட்டங்களிலும் கட்சிச் சார்பற்ற மக்களாட்சி முறை வேண்டுமென்று கூறுகின்றனர்; எனவே அவர்கள் ஊராட்சி அரசிலிருந்தும் கட்சிகள் முற்றிலும் நீக்கப்படுதல் வேண்டுமென்று கூறுவதில் வியப்பொன்றும் இல்லை. அதே சமயத்தில் உள்ளூர் நிலையில் மக்களாட்சி செயல்படும்போது அதில் அரசியல் கட்சிகளும் செயல்படுதலில் எந்தத் தவறும் இல்லை என்று வேறு பலரும் கருதுகின்றனர். கட்சிகளே உயர்மட்டத்திலும் கீழ்மட்டத்திலும் மக்களாட்சி செயல்படுத்த வேண்டிய செயல் ஒட்டத்தை அளிக்கின்றன என்று அவர்கள் கருதுகின்றனர். மேலும் அரசியல் கட்சிகள் மாநில, மத்திய அரசாங்கங்களிலே செயல்படுவதற்கு உடன்பாடு இருக்குமானால், அவற்றை உள்ளாட்சி அரசாங்கத்தின் நிலையிலிருந்தும் அகற்றுதல் இயலாது என்றும் அவர்கள் கருதுகின்றனர். எல்லா நிலைகளிலுள்ள அரசாங்கங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. இத்தகைய ஒரு சர்ச்சை மேற்கத்திய நாடுகளிலும் நடந்து வந்துள்ளது. உள்ளாட்சி அரசாங்கத்தில் கட்சிகள் செயல்படுவதனால் கடுமையான தீய விளைவு எதுவும் தோன்றப் போவதில்லை என்று மேற்கத்திய அறிஞர்கள் கருதுகின்றனர்.

இவ்வாறு இந்த விஷயத்தைப்பற்றிய ஒன்றுக்கொன்று மாறுபட்ட இருவகையான கருத்துக்கள் இருக்கின்றன. சர்வோதய இயக்கம், அரசியல் கட்சிகளுக்கு முற்றிலும் எதிர்ப்பாக இருக்கிறது. இந்தியக் குடியாட்சியில் கிராம சமாஜ என்ற அமைப்பை அடித்தளமாகவும், அதற்கு அடுத்த மேலடுக்குகளாக சமிதி, மாவட்டம், மாநிலம், தேசம் முதலிய அடுக்குகளை அமைத்தும், ஒவ்வொன்றும் அதற்குக் கீழான அடுக்கிலிருந்து மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுமாறு வைத்தும், சீரமைப்புச் செய்தல் வேண்டுமென்று அவர்கள் கூறுகின்றனர். இந்த மறைமுகத் தேர்தலின் மூலமாக ஒருமித்த கருத்து என்ற விதி தோன்றாவிடினும், கருத்துத் தோன்றுதல் என்ற விதி ஆட்சியின் எல்லா மட்டங்களிலும் ஏற்படுமென்றும், பாராளுமன்றக் மக்களாட்சி முறையில் நிச்சயமாகக் காணப்படுகின்ற கட்சி அரசியலின் தீய விளைவுகளும் தேர்தல் பிரச்சாரத்தின் தீயவிளைவுகளும் நீக்கப்படுமென்றும், அவர்கள் நம்புகின்றனர். இத்தகைய வாதம் ஒரு சிறந்த ஒழுக்க வகையான கவர்ச்சி உடையது என்பதை எவரும் மறுக்க இயலாது; மேலும் நமது நாட்டுப்புறமக்களுள் பெரும்பாலானோர் எழுத்தறியாமலும் உலகவிவகார மறியாமலும் இருப்பதால் அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக அரசியல் கட்சிகள் நடத்தும் போராட்டத்தில் சூதாட்டக் காய்களாக ஆக்கப்படுதல் கூடாது என்ற கருத்தை எல்லாச் சிறப்பு வாய்ந்த மக்களும் ஆதரிக்கின்றனர்.

மேற்கூறிய கருத்தை பாராளுமன்றக் மக்களாட்சியின் ஆதாரவாளர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர் அதற்கு காரணம் இக்கருத்து ஒரு கற்பனை வகையானது என்பதும், அது ஒரு வகையான எதேச்சதிகாரத்தை ஏற்படுத்துமென்பதும் ஆகும். அவர்கள் நன்கு அமைக்கப்பட்ட பாராளுமன்றக் மக்களாட்சி முறையே திறமான மக்களாட்சி அரசாங்கம் ஏற்படுதற்கு உரிய உறுதியான வழி என்று கருதுகின்றனர்.

பாராளுமன்றத்திற்கும் மாநிலச் சட்டமன்றங்களுக்கும் கட்சி சார்பாகத் தேர்தல்கள் நடைபெறுவதனாலும், நாடு, மாநில அரசாங்கங்கள் அரசியல் கட்சிகளினால் நடத்தப்படுவதனாலும், ஊராட்சி அரசு நிறுவனங்கள் போன்ற உள்ளூர் ஆட்சிக் கழகங்களினின்றும் கட்சி செல்வாக்கை நீக்குதல் இயலாது என்று கட்சி அரசியலின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். இந்த நிறுவனங்கள் பெரும்பாலும் ஆட்சிக்குழுக்களாக இருத்தல் கூடும். ஆயினும் அவை அதிகாரமும் செல்வாக்கும் உடைய மையங்கள் ஆகும். ஆகையால் இந்த நிறுவனங்களை ஆளுவோருக்கு மாநிலச் சட்ட மன்றத்திற்கும், பாராளுமன்றத்திற்கும் நடைபெறுகின்ற தேர்தல்களில் மிகுந்த செல்வாக்கு பெற்று இருக்கிறது. இந்த காரணத்திற்காக, எந்த ஒரு அரசியல் கட்சியும், இந்த உள்ளூர் ஆட்சி நிறுவனங்களை இழக்க விரும்பாது என்றும், அவ்வாறு அது செய்யுமானால் அதற்கே கேடு விளையும் என்றுய அவர்கள் கருதுகின்றனர், மேலும் நமது நாட்டுப் புறங்களில் வலுவான கருவியாக ஆவதற்கு ஊராட்சி அரசு நிறுவனங்களில் அரசியல்

கட்சிகள் தீவிரமாகப் பங்கு கொள்தல் துணை செய்யுமென்றும் அவர்கள் கருதுகின்றனர். இவ்வாறு இந்த இருவகையான கருத்துக்களுக்கும் இடையே எந்தவித ஒற்றுமையும் இருப்பதற்கு வழி ஏற்படுமென்று தோன்றவில்லை.

நமது நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னரும், அடைந்த பின்னரும் அரசியல் கட்சிகள் நகராட்சி மன்றத் தேர்தல்களில் கலந்து கொள்தல் கூடாது என்று பல திட்டங்கள் கூறப்பட்டன என்பதை இங்கு நாம் சுட்டிக்காட்டலாம். சில சமயங்களில் எல்லாக் கட்சிகளும் இத்தகைய தேர்தல்களிலிருந்து தனித்து ஒதுங்கியே இருந்தும் வந்துள்ளன. மேலும் சில குறிப்பிட்ட கட்சிகள், தந்திர நோக்கத்தோடு இத்தகைய தேர்தல் போட்டிகளிலிருந்து ஒதுங்கிக் கொண்டதும், வேறு சில கட்சிகள் இவ்வாறு செய்யாமல் இருந்ததும் உண்டு. ஆனால் கட்சிகள் உள்ளாட்சித் தேர்தல்களிலிருந்து ஒதுங்கி இருத்தல் வேண்டுமென்ற தீர்மானங்கள் எல்லாம் நெடுநாட்களுக்குப் பழக்கத்தில் இருக்கவில்லை.

ஆயினும், எல்லா அரசியல் கட்சிகளும் இதுவரையில் பெரும்பாலும் ஊராட்சிகளுக்கு நடைபெறுகின்ற முதல் நிலைத் தேர்தல்களில் நேரடியாகக் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியே இருந்து வந்துள்ளன என்ற மகிழ்ச்சிக்குரிய உண்மையும் இருக்கிறது. இவ்வாறு அவைகள் இருப்பது தந்திரமான காரணங்களினாலும், தங்களுடைய சொந்த நலத்தின் பொருட்டுமே ஆகும். தேசிய, மாநில அரசியலோடு தொடர்புடைய கட்சித் திட்டங்களையெல்லாம் எடுத்துக் கூற இயலாத சிற்றூர்களிலே, மக்களைக் கட்சி தனக்குச் சார்பாகவும், எதிராகவும் பிரித்தல் நன்மை பயப்பதில்லை. எவ்வாறாயினும் 100–லிருந்து 500–வரை வாக்காளர்களை உடைய சிறிய தொகுதிகளில் உள்ளூரில் செல்வாக்கு உடையவர்கள் பல தொகுதிகளில் வெற்றி பெறுதல் இயலும். இத்தகையோர் கட்சி முத்திரைகளை ஏற்றுக்கொள்வதால் அவர்களுக்கு எந்த நன்மையும் வரப்போதில்லை. ஆகையால் எல்லா அரசியல் கட்சிகளும் தொடக்கநிலை ஊராட்சித் தேர்தல்களில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கியே இருந்துவிட்டன. அவை ஊராட்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைத் தங்களுடைய கட்சியில் சேர்ப்பதற்கு முயற்சி செய்கின்றன. இதற்கு விதி விலக்குகளும் இருக்கின்றன. தமிழ்நாட்டின் சில ஊராட்சித் தேர்தல்களில் காங்கிரஸ், கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கிடையே நேரடிப் போட்டிகள் இருந்துவந்துள்ளன. எனினும் ஆந்திர மாநிலத்தில் 45 சதவிகிதம் ஊராட்சிகளில் ஒருமனதான தேர்தல்கள் நடந்துள்ளன என்பதும், தமிழ்நாட்டில் ஊராட்சித் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் 36.3 சதவிகிதம் பேர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதும், உள்ளூர்க்காரணிகள் வெகுவாக வேலை செய்கின்றன என்பதைக் காட்டுகின்றன.

ஊராட்சித் தேர்தல்களில் அரசியல் கட்சிகள் தங்கள் செல்வாக்கைக் கையாளுதலைச் சட்டவகையாகத் தடுத்தல் வேண்டுமென்ற எந்த நோக்கமும் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதன்று. ஊராட்சி அரசு நிறுவனங்களுக்கு உண்மையான அதிகாரம் இருக்கும் வரையிலும் அவ்வதிகாரத்தைக் கையாளுதலின் மூலமாக மக்களிடையே செல்வாக்கை அடைய முடியும் வரையிலும், இந்நிறுவனங்களில் அதிகாரமுள்ள நிலைகளில் தங்களுடைய ஆட்களை அமர்த்துதற்கு அரசியல் கட்சிகளிடையே நேரடியாகவோ மறைமுகமாகவோ பூசல் தோன்றுவது உறுதியே.

எந்தமாநிலத்திலும் ஊராட்சி தேர்தலில் கட்சிச் சின்னங்கள் பயன்படுத்துவது அனுமதிக்கப் படவில்லை. அரசியல் கட்சிகள் செல்வாக்கை சட்டப்படியாக தடுப்பது என்பது இயலாது என்பது ஒருபுறம் இருக்க, இத்தகைய செல்வாக்கைக் கட்சி சின்னங்கள் மூலமாகப் பரவவிடுதல் தவறும், விரும்பத்தகாததும் ஆகும். ஊராட்சி நிலையில் அரசியல் கட்சிகளுக்கு அதிகாரப்பூர்வமான ஒப்புதல் அளிக்கப்படுதல் கூடாது.

மகாராஷ்டிரத்தைத் தவிர மற்ற மாநிலங்களில் ஊராட்சி சமிதியின் தலைவர் பதவியானது, அரசியல் வாழ்விலேயே யாவராலும் மிகவும் விரும்பப்படுகின்ற பதவிகளுள் ஒன்றாக ஆகிவிட்டது என்பதை பொது அனுபவம் காட்டுகிறது. ஆயினும், அரசியல் கட்சிகள் தங்களுடைய ஆட்களை ஊராட்சி சமிதியின் தலைவராகக் கொண்டு வருவதற்கு ஆர்வத்தோடுயிருக்கின்றன. ஆயினும் ஊராட்சிகளில் பெரும்பாலான உறுப்பினர்கள் எந்த ஒருஅரசியல் கட்சிக்கும் பொறுப்பாளராக இல்லை; ஆகையால் ஊராட்சி சமிதியின்

தலைவர்கள் ஊராட்சி உறுப்பினர்களடங்கிய தேர்வுக்கழகத்தினரால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற காரணத்தால்அவர்களுள் பலரும் தமதுகட்சித் தொடர்புகளுக்காக அல்லாமல், தமது, ஆள்திறமையின் காரணமாகவே தேர்ந்தெடுக்கப்படுன்றனர். இதில் வியப்பொன்றுமில்லை. பரிஷத்தின் தலைவரும் சமிதியின் தலைவரைப் போலவே தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

கட்சிச் சின்னங்கள் வழங்க மறுப்பதன் மூலமாகவோ கட்சிப் பிரதிநிதிகளுக்குஅதிகாரப்பூர்வமாக ஒப்புதலளிக்க மறுப்பதன் மூலமாகவோ கட்சி அரசியலை ஊராட்சி நிலைகளிலிருந்து அகற்றுதல் என்ற இலட்சியவாதிகளின் விருப்பத்தை அடைதல் இயலாது. அதே சமயத்தில் இத்தகையமுறை, ஊராட்சிகள், சமிதிகள். பரிஷத்துகள் முதலியவைகளை ஒன்றுக்கொன்று எதிரான அரசியல் குழுக்களாகப் பிரிக்கப்படுவதை தடுப்பதற்கு உதவி செய்கின்றது. இது மிகவும் முக்கியமானது; எவ்வாறெனில் மேற்கூறப்பட்ட நிர்வாக உறுப்புக்களெல்லாம் ஒரு பெரிய சட்டமன்றத்தில் ஒரு பெரும்பான்மைக் கட்சியினின்று உருவாக்கப்பட்ட அமைப்புக்களைப் போன்று ஒற்றுமைத் தன்மையோ, ஒழுங்கோ உடையவை அல்ல. அவை எல்லாம் வேறுபட்ட கருத்துக்களை உடைய ஆட்களை உடையவை ஆகும். கட்சி அடிப்படையிலே இந்த மன்றங்களில் குழுக்கள் தோன்றுமாறு விட்டுவிட்டாலும், இவற்றின் உறுப்பினர்கள் தங்கள் முன்வரும் ஒவ்வொரு பிரச்சனையையும் அதனதன் சிறப்பை வைத்துத் தீர்க்கமுடியாமல் போய்விட்டாலும், இந்த நிறுவனங்கள் பயன்படாமல் போய்விடும்.

மகாராஷ்டிரத்தில் ஜில்லா பரிஷத்துக்களுக்கு நேரடித் தேர்தல்கள் நடக்கின்றன; எனவே அவைகள் கட்சி அடிப்படையில் செயலாற்றுகின்றன; வேட்பாளர்களுக்குக் கட்சிச் சின்னங்களும் வழங்கப்படுகின்றன.

இந்தியாவின் ஆட்சித்துறைச் சீர்திருத்தக்குழுவில் ஓர் உறுப்பினராக அமர்த்தப்பட்ட திரு. ஹெச்.சி.மாத்தூர் என்பவர், ஊராட்சி சமிதிகளிலிருந்தும், ஜில்லா பரிஷத்துக்களிலிருந்தும் அரசியலை ஒதுக்கிவைப்பது கடினமாகையால், இவை கட்சி அடிப்படையில் செயல்படுமாறு விட்டுவிடலாமென்றும் ஊராட்சிகளிளேனும் அரசியல் இழுத்து விடப்படுதல் கூடாது என்று ஆர்வத்துடன் கூறுகிறார்.

சாதிக்அலி குழு, பரீக்குழு, ஹரித்யாள் குழு முதலியவை கிராம முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ற வகையில், கிராம ஊராட்சிகளிலிருந்து கட்சி அரசியலை ஒதுக்கித் தனியாக வைக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றன. ஆயினும் இந்தக் குழுக்களுள் எதுவும், ஊராட்சி அரசுத் தேர்தல்களில் அரசியல்கட்சிகள், கலந்து கொள்தல் தடை செய்தல் வேண்டுமென்று ஆலோசனைஎதுவும் கூறவில்லை. ஊராட்சி அரசுத் தேர்தல்களில் அரசியல்கட்சிகள் தங்கள் செல்வாக்கைக் கையாளுதலை தடுத்ததற்குச் சட்டப்படியாக வகை செய்தல் வேண்டுமென்று சந்தானம் குழு வெளிப்படையாகப் பரிந்துரைசெய்தது. ஊராட்சித் தேர்தல்கள் சம்பந்தமாக ஒரு ஒழுக்கக் கோட்பாட்டை வகுத்தல்வேண்டுமா என்ற பிரச்சனையை சாதிக் அலி குழுவானது அரசியல் கட்சிகளுக்கேவிட்டு விட்டது. ஊராட்சித்தேர்தல்களில் வேட்பாளர்களை நிறுத்துதல் அவர்களுக்குக் கட்சிகள் சின்னங்களை ஒதுக்குதல் ஆகியவற்றைச் செய்யாமல் அரசியல் கட்சிகள்ஒதுங்கிவிடுமென்று திவாகர் குழு நம்பிக்கை தெரிவித்தது.

**1962**–ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் ஊராட்சி அரசுநிறுவனங்களிலிருந்து கட்சி அரசியலை ஒதுக்கிவிடுதல் என்பது விரும்பத்தக்கதே. ஆயினும் அது நடைமுறையில் செயல்படக்கூடியது அன்று, என்பதாக ஒரு கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ஆகையால் நல்ல வழக்காறுகளைத் தோற்றுவித்தல் வேண்டுமென்று யாவரும் உணர்ந்தனர். இந்த அமைப்புகளுக்கான தேர்தல்களை தேர்தல் குழுவைப்போன்றதொரு சுதந்திரமான குழு வேண்டும் என்றும் மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்கூட்டத்தில் நேரடித்தேர்தல் முறை விரும்பத்தக்கது என்ற ஒரு கருத்தும் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் சில உறுப்பினர்கள் ஊராட்சி சமிதிகளுக்கும் ஜில்லா பரிஷத்துக்களுக்கும் மறைமுகமான தேர்தல்களை உடைய ஒரு விரிவான அடித்தளம் வேண்டுமென்றும் கூறினார்.

**1962**–ஆம் ஆண்டு ஜூனிலேயே கூடிய தேசிய ஒருமைப்பாட்டுக் கழகத்தாலும் மேற்படி

பிரச்சனையைப் பற்றி ஒரு கருத்தை உருவாக்க இயலவில்லை. பொதுவாக அரசியல் கட்சிகளை ஊராட்சிகளிலிருந்து ஒதுக்கி விடுதல் ஒரு நல்ல கருத்தாயினும், அது ஒரு நடைமுறைப்படுத்தப்படக் கூடிய கருத்து அன்று என்று உணரப்பட்டது.

## உள்ளாட்சி மன்றங்களை கட்சி அடிப்படையில் நடத்துவதனால் ஏற்படக்கூடிய நன்மைகள்

உள்ளாட்சி அரசாங்களைக் கட்சி அடிப்படையில் நடத்துதலினால் பல நன்மைகள் இருக்கின்றன. அவை பின்வருமாறு:

(i) அரசியல் கட்சிகள் தேர்தல்கள் நடப்பதற்கு முன்னரே மக்கள் முன்னிலையில் தங்களுடைய திட்டங்களையும், கொள்கைகளையும் அளிக்கின்றன. இவ்வாறு செய்தலினால் வாக்காளர் ஒரு குறிப்பிட்ட திட்டத்தைத் தேர்ந்தெடுக்க முடிகிறது. இதனால் அவர் அத்திட்டத்தைத் தரும் கட்சி வேட்பாளருக்கு வாக்கை அளிக்கிறார். அரசியல் கட்சிகள் இல்லாவிடில், தனிநபரால் எத்திட்டத்தையும் மக்கள் முன்னிலையில் அளிக்க இயலாது. இவ்வாறாக, நகரப்போக்குவரத்துத் தொழிலை தேசியமாக்குதல் போன்ற ஏதேனுமொரு குறிப்பிட்ட கொள்கையை ஆதரிக்கும் பொருட்டு தக்க ஆட்களை வாக்காளர்களால் தேர்ந்தெடுக்க இயலாது.

(ii) பல்வேறு வகைப்பட்ட, சிக்கலான சமுதாயத்திலே, தனி ஆட்கள் ஒரு அமைப்பின் கீழ் வந்தால்தான், தங்களுடைய கருத்துகளைச் செயல்படுத்த இயலும். ஒரு அமைப்பின் மூலம் தான் அவர்களுடைய கோரிக்கையானது பயன் தருமாறு அமையும்.

(iii) ஒரே அரசியல் கட்சியைச் சேர்ந்த மக்கள் ஏறக்குறைய ஒரே கருத்து உடையவர்களாகவே இருப்பார்கள். இந்தக் காரணத்தினால், ஒரு கட்சியானது ஒருமித்த நோக்குடைய ஒரு கூட்டமாகச் செயல்பட வழி ஏற்படுகிறது. அது மோதல்களைத் தவிர்த்து, உள்ளாட்சி அரசாங்கம் சண்டை சச்சரவின்றி செயல்பட உதவுகிறது. இதனால் திறமையும், சிக்கனமும் உண்டாக வழி ஏற்படுகிறது. ஒரு கட்சியிலுள்ளவர் அக்கட்சியின் முடிவுகளில் அடங்கியுள்ள பிரச்சனைகளை ஏற்றுக்கொள்ளாவிடினும், அவர் அம்முடிவுகளுக்காக வாக்களித்து அவற்றை நிறைவேற்றுதல் வேண்டும் என்ற கட்டாயம் தோன்றுமளவுக்குக் கட்சிக் கட்டுப்பாடு அமைந்து இருக்கிறது. இந்த வகையில் தான் வாக்களர்கள் தாங்கள் எந்த வேட்பாளரை ஆதரிக்கின்றார்களோ அந்த வேட்பாளர் ஒரு குறிப்பிட்ட வகையான கோட்பாட்டை செயல்படுத்துவார் என்ற உறுதிப்பாடு தோன்றுகின்றது. சுயேச்சை வேட்பாளர்களைப் பொறுத்தமட்டில் இந்த நிலை உண்மை அன்று. அரசியல் கட்சிகள் இல்லாத நிலையில், ஒருவர் பொது நலனில் ஈடுபாடுடையவர் என்ற காரணத்தினாலோ, அல்லது அவர் ஒரு நிலக்கிழார் அல்லது வணிகர் என்ற வகையில் பெயர் பெற்றிருப்பதனாலோ அவர் தேர்ந்தெடுக்கப்படுதல் கூடும்; ஆனால் அவர் தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் தமது கருத்துக்களை மாற்றிக்கொள்ள முடியுமாகையால், அவர் ஒரு குறிப்பிட்ட கொள்கையை உறுதியாகப் பின்பற்றுவார் என்றோ அல்லது அவரை அவ்வாறு செய்யுமாறு கட்டுப்படுத்த இயலும் என்றோ உறுதியாகக் கூற இயலாது.

## உள்ளாட்சி மன்றங்களைக் கட்சி அடிப்படைகளில் நடத்துதலினால் ஏற்படக்கூடிய குறைபாடுகள்

உள்ளாட்சி அரசாங்கங்களின் கட்சி அரசியலினால் ஏற்படக்கூடிய தீமைகளின் காரணமாக அது கண்டனத்துக்கு உள்ளாகிறது.

1. தேசிய அளவில் அரசியல் கட்சிகள், வங்கிகளைத் தேசியமாக்குதல், அல்லது பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கம் ஆகியவை போன்ற ஏதேனுமொரு தேசியப் பிரச்சனையின் மீதும், சர்வதேசப் பிரச்சனையின் மீதும் அமைக்கப்படுகின்றன. ஆனால் உள்ளாட்சி அரசாங்கத்தின் பிரச்சனைகள் மேற்கூறிய வகைப் பிரச்சனைகளினின்றும் வேறானவை ஆகும். ஆகவே தேர்தல்கள் கட்சி அடையாளச் சீட்டை அடிப்படையாக வைத்து நடைபெறுமானால் அதற்கு எந்தப் பொருளுமில்லை.

2. தேசிய அரசாங்கத்திலோ அல்லது மாநில அரசாங்கத்திலோ இருப்பதுபோல, உள்ளூர் ஆட்சியைப் பொறுத்தவரையில் அமைச்சரவையை அமைப்பது என்ற கேள்வி எழவில்லை. ஆகையால் உள்ளாட்சி அரசாங்கத்தில் அரசியல் கட்சிகளுக்கு மிக்க மதிப்பு இல்லை. உள்ளாட்சி மன்றமானது சட்டமியற்றும் அலகாக மட்டுமின்றி, நிர்வாக உறுப்பாகவும் இருக்கிறது. உண்மையில் அது உள்ளூர் விஷயங்களை ஆட்சி செய்வதைப் பற்றியே தொடர்புடையது; மேலும் ஆட்சி செய்தல் என்பது திறமையாகவும் சிக்கனமாகவும் இருக்க வேண்டுமாயின், அது அரசியலிருந்து பிரிக்கப்பட்டே இருத்தல் வேண்டுமென்பதை நாம் அறிவோம்.

3. இந்தியாவில் அரசியல் கட்சிகளின் முக்கியத்துவம் வெகுவாகக் குறைந்துள்ளது. எவ்வாறெனில் பல நகராட்சி மன்றங்களில் கட்சி அடையாளச் சீட்டுகளைப் பெற்றிருக்கின்றவர்களை விட மிகப்பெரிய எண்ணிக்கையில் சுயேச்சை உறுப்பினர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள், மேலும் இந்தியாவில் நகராட்சி நிலையில் கட்சி ஒற்றுமை மிகவும், தளர்ச்சியான நிலையில் காணப்படுகிறது; மேலும், சாதி, சமயம், ஆள் பற்றுறுதி உணர்வுகள் ஆகியவைகளும் மிகவும் வலுவாக இருக்கின்றன.

4. அரசியல் கட்சிக் கட்டுப்பாட்டினால் உறுப்பினர்களுடைய அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டு, உண்மையான அதிகாரம் ஒருசில அரசியல்வாதிகள் கையில் சென்றுவிடுவதால், உண்மையான உள்ளாட்சி அமைப்பாக இருக்காது.

5. உள்ளாட்சியில் அரசியல் கட்சிகள் தேவையில்லாமல் தலையிடுகின்றன. மாநில அரசாங்கக் கட்டுப்பாட்டுடன் சட்டபூர்வமாகச் செய்யப்பட்டாலும், மாநில ஆளுங்கட்சி நேரத்திற்கு நேரம் கட்சியுணர்வோடு மாற்றங்கள் செய்கின்றது.

6. அரசியல் கட்சிகள் இரண்டாகவோ, பல கூறுகளாகவோ பிரியும் சமயங்களில் அவற்றால் ஏற்படும் சீர்கேடுகள் சொல்ல முடியாத அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

7. அரசியல் கட்சி உள்ளாட்சிப் பதவிகளைக் கட்சி நலனுக்காகச் செய்யும் செயல் அரசியல் கட்சிகள் உள்ளாட்சியில் பங்கு பெற்ற காரணத்தால்தான் ஆகும். ஏனெனில் அரசியல் தனிநபர் எதிர்க்க முடியாத அளவில் உள்ளாட்சியில் வளர்ந்து விடுவதால், அரசியல் கட்சிகள் தங்களது கட்சிக்காரர்களுக்கு சலுகைகள், வேலைகள். வேலை ஒப்பந்தங்கள் (Contracts) போன்றவை வழங்கி, அவர்களை ஆட்சியின் காவலர்களாகவும் அங்கிகரிக்கும் நிலைக்கு சலுகை பெற்றோர் உயர்த்தப்படுகின்றனர்.

முடிவாகக் கூறினால், உள்ளாட்சி அரசாங்கத்தில் கட்சி அரசியலின் சார்பாகவும், எதிராகவும் பல கருத்துக்களைக் கூறுதல் இயலும். உள்ளாட்சி அரசாங்கங்களில் அரசியல் கட்சிகளைத் தீமைகலவாத நன்மைகள் என்று கூறுதல் இயலாது. எனினும் நகராட்சிக் கழகங்களுக்குக் கட்சி அடிப்படையில் தேர்தல்கள் நடைபெற்றாலும், அதனால் எல்லாப் பிரச்சனைகளும் கட்சி அரசியல் அடிப்படையில் தான் தீர்க்கப்படுகின்றன என்று பொருளல்ல. இந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கம் செயல்படும் விதமானது, பல பிரச்சனைகள் அவற்றின் தகுதியினடிப்படையிலேயே தீர்க்கப்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டுகிறது. உள்ளாட்சி அரசாங்கங்களை நடத்துவதில் அரசியல் நோக்கங்கள் முக்கியத்துவம் பெறவில்லை. எவ்வாறாயினும், உள்ளாட்சி அரசாங்கத்திலிருந்து, கட்சி அரசியலை முழுவதும் அகற்றுதல் கடினம் ஆகும். எனினும், கட்சி அடிப்படையில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறுதல் மாநிலம் மற்றும் தேசியக் தேர்தல்களுக்கு ஒரு பயிற்சிக்களமாக ஆகிறது; ஆனால் அவ்வாறு நடைபெறுதலுக்கு, கட்சிக் குறிக்கோள்களை மட்டும் கருத்தில் கொண்டு உள்ளாட்சி அரசாங்கம் நடைபெறுகிறது என்று பொருள் இல்லை.

உள்ளாட்சி விவகாரங்களில் மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும். அதற்குரிய வழிமுறைகளில் சில.

1. உள்ளாட்சி அமைப்புகள் அடிக்கடி கூட்டங்களை நடத்த வேண்டும். உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் மக்களைச் சந்தித்து, அவர்களது குறைகளைக் கேட்டறிந்து, அக்குறைகளை நீக்க வேண்டும்.

2. மக்களுக்கு குடிமை முறையைப் பற்றி மன்ற உறுப்பினர்கள் விளக்க வேண்டும். அதாவது, ஒரு பிரச்சனை உள்ளாட்சியில் இருந்தால், அதை எவ்வாறு மன்ற உறுப்பினர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் தெரிவிக்க வேண்டுமென்பதையும் உறுப்பினர்கள், அதிகாரிகள் ஆகியோர்களின் அதிகாரங்கள் என்னென்ன என்பதையும் விளக்க வேண்டும்.

3. அரசியல் சார்பில்லா சமூக நல அமைப்புகளையும் உள்ளாட்சிப் பணிகளுக்கும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

4. உள்ளாட்சி அமைப்புகள் குறித்த செய்திகள் திரட்டப்பட்டு, (information) செய்தி மையங்கள் உருவாக்க வேண்டும்.

5. உள்ளாட்சி பிரச்சனைகள் குறித்து விளக்கம் பெறும் வகையில் விரிவுரைகள், விவாதங்கள் நடத்தப்பட வேண்டும்.

6. ஒவ்வொரு உள்ளாட்சியும் அவற்றின் சாதனை மற்றும் எதிர்நோக்கும் பிரச்சனைகள் குறித்து அறிக்கைகளை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

7. உள்ளாட்சி அதிகாரிகள் மக்களின் குறைகளை அன்றாடம் அறிய, மக்கள் குறைகளைத் தெரிவித்துக் கொள்ள ஒரு நேரம் நிர்ணயம் செய்ய வேண்டும். காலை 10 முதல் 11 மணி வரை என்பது போல் ஒரு நேரத்தை நிர்ணயிக்க வேண்டும்.

8. உள்ளாட்சி பற்றிய அறிக்கைகள், இதழ்கள் (magazines) ஆகியன தாய்மொழியில் வெளியிட வேண்டும்.

9. குடிமையியல், குடியுரிமை ஆகியன பள்ளியில் பாடத்திட்டங்களாக வைக்க வேண்டும்.

**மாதிரி வினா:**

உள்ளாட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கினை எழுதுக.

# பாடம் – 17

## தமிழக ஊராட்சித் தேர்தல் சீர்திருத்தங்கள்

தமிழகத்தில் கிராமப்புற அரசாங்கங்கள் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வந்துள்ளதென்பதை அறிவோம். தமிழர்களால் உணர்ந்து. அனுபவிக்கப்பட்டு வந்த முறைதான் இந்த கிராமப்புற அரசாங்கங்களாகும். இந்தப்பகுதி தேர்தல் சீர்திருத்தங்களை மட்டும் விளக்க முயற்சிக்கிறது. அதுபற்றிக் காண்போம். ஊராட்சிகளில் நடைபெறும் தேர்தல் முறை குடவோலை சீட்டு முறை என்று கூறலாம். இதன் படி தகுதியுள்ள உறுப்பினர்கள் அனைவரது பெயரையும் ஓலைகளில் எழுதி, மண்பானையில் இட்டு, குலுக்கி, அதில் தேவைப்படுகின்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கைக்கேற்ப, ஓலைகளை எடுத்து, தேர்வு செய்வதாகும். குடத்திலிருந்து ஓலைகளை எடுக்க கள்ளங்கபடமில்லாத சிறுவர்களைப் பயன்படுத்தியுள்ளனர். இந்த முறையானது சீரிய முறையில் சோழர் காலத்திலேயே கடைப்பிடிக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம். இந்த குடவோலைச் சீட்டு முறை படிப்படியாக மாறி, இன்றைய தேர்தல் முறையாக வளர்ந்துள்ளது. ஊராட்சிகளில் பெரும்பான்மையாக வாக்குச் சீட்டு முறையும் சில இடங்களில் நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றது.

இன்றைய மக்களாட்சியை ஏற்படுத்த, செயல்படுத்த தேர்தல்கள் அடிப்படையாக உள்ளன. தேர்தல்களின் மூலம் தான் மக்கள் ஆட்சியை அமைக்கவும், செயல்படுத்தவும் முடியும் என்பதை அறிவோம். கிரேக்க நகர அரசுகளில் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்த முறை மிகவும் விநோதமான ஒன்றாகும். ஊர் மக்கள் அனைவரும் ஓரிடத்தில் கூடி, தங்களது ஓசையினால் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தார்கள் என்கின்றபோது வேடிக்கையாகத்தான் உள்ளது. இதனை நாம் ஓசைத்தேர்வு (acclamation) என்று பெயரிடுவோம். தேர்தலில் நிற்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவை, கைதட்டல்களில் ஒலி, மக்களிடும் ஓசை ஆகியவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது. எந்த உறுப்பினருக்கு அதிகமான ஓசையும் கைதட்டல் அதிர்வும் இருக்கின்றதோ அவர் தேர்ந்தெடுக்கப்படுவார். மக்களாட்சியின் முக்கியம் பெரும்பான்மை ஆதரவு, இந்தப் பெரும்பான்மை ஆதரவைத் தெரிந்து கொள்வதற்கு 'ஓசையை' ஒரு முறையாக அல்லது வழியாகக் கொண்டிருந்தனர் என்பதை அறியும் பொழுது கிரேக்கர்களின் மக்களாட்சித் தன்மை நமக்கு எளிதாக விளங்குகிறது. இன்றைய சூழ்நிலையில் மக்களாட்சியே இரண்டு விதங்களாக உள்ளன. ஒன்று நேரடி மக்களாட்சி, மற்றொன்று மறைமுக மக்களாட்சி. நேரடி மக்களாட்சி முறையில் மக்கள் அனைவரும் அரசாங்கச் செயல்களில் நேரடியாகப் பங்கு பெறுவதற்கு வழி செய்யப்பட்டு உள்ளது. தீர்மானங்கள் அல்லது முடிவுகள் செய்வது, அவற்றிற்குச் செயலாக்கம் கொடுப்பது ஆகிய அனைவற்றிலும் மக்களது நேரடிப் பங்கேற்பு நடைபெறுகின்றன. மறைமுக மக்களாட்சி என்பதில், மக்கள் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் மட்டுமே முடிவுகள் எடுக்கும் உரிமை பெற்றவர்களாக உள்ளனர். மக்கள் நேரடியாகப் பங்கேற்பதில்லை. பூர்வாங்க முயற்சித்தல் (Initiative) மக்கள் வாக்கெடுப்பு, (Referendum) பிரதிநிதிகளைத் திரும்ப அழைத்தல் (Recall) ஆகிய மூன்றும் நேரடி மக்களாட்சியின் வழி முறைகளாக இருக்கின்றன. இம்மூன்று முறைகளைப்பற்றிச் சிறிது தெரிந்து கொள்வோம். மக்கள் விரும்புகின்ற எண்ணங்களைச் செயல்படுத்துவதுதான் அரசாங்கத்தின் கடமையாகும். மக்களது எண்ணங்கள்தான் அரசாங்கக் கொள்கைகள். ஆகவே மக்கள் விரும்புகின்ற செயல்களை, அரசாங்கம் கொள்கையாக ஏற்றுக் கொள்வது பூர்வாங்க முயற்சித்தல் என்று பெயர். மக்கள் தாங்களாகவே இந்த முடிவுகளை எடுப்பது தான் இதன் முக்கிய அம்சம். இரண்டாவதாக, மக்கள் எண்ணங்கள், எல்லோரிடமும் பிரதிபலிக்கின்றதா, பெரும்பான்மையான மக்கள் அந்த எண்ணங்களை எற்றுக் கொள்கின்றனரா என்பதை முடிவு செய்வதே மக்கள் வாக்கெடுப்பு (Referendum) ஆகும். பெரும்பான்மையான ஆதரவு அல்லது பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லையேல், முடிவுகள் எடுக்கப்படுவதில்லை. பெரும்பான்மையான மக்களின் விருப்பத்திற்கிணங்க முடிவுகள் மாற்றத்திற்கு உள்ளாவதுண்டு. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் செம்மையாகச் செயல்படவில்லையேல் பிரதிநிதிகள் தவறுகள் பல செய்கின்றனர் என மக்கள்

உணர்கின்றபொழுது, அப்பிரதிநிதிகளைத் திரும்ப அழைத்துக் கொள்ள மக்களுக்கு உரிமை உண்டு. இது பிரதிநிதிகளைத் திரும்ப அழைத்துக் கொள்ளுதல் என்று சொல்லப்படுகின்றது. இந்த மூன்று முறைகளும் சிறப்பானவைகளாகக் கருதப்படுவதால், நடைமுறையிலும் இருந்து வருகின்றன. இம்முறைகளைச் சிறிய அளவு கொண்ட நாடுகளில் நடைமுறைக்கு கொண்டு வரலாம், சாத்தியப்படும். இந்தியா போன்ற பரந்த, விரிந்த நாடுகளில் இம்முறைகளின் மூலம் இந்தியாவில் ஒருமுடிவும் எடுக்க முடியாது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் நடைபெறுகின்ற இடைத்தேர்தல்களே பெரும்பரபரப்பை உண்டு பண்ணுகின்றன என்பதை அறிவோம். ஆகவே பெரிய நாடுகளில் இம்முறை சாத்தியப்படக்கூடிய ஒன்றாகத் தெரியவில்லை. பெரிய நாடுகளில் மக்கள் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து பிரதிநிதிகளின் மூலமாகத்தான் முடிவுகள் எடுக்க முடியும் என்பதோடு, அதுதான் நடைமுறையில் சாத்தியப்படக் கூடியதென்பதையும் தெரிந்து கொள்வோம். இனி, உள்ளாட்சி முறை பற்றிக் காண்போம்.

உள்ளாட்சி அரசாங்கங்களில் அதிலும் கிராமப்புற மன்றங்களுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது முக்கியமான ஒன்று; தேர்தல்கள் இந்தியாவிற்குப் புதியதல்ல. அதிலும் தமிழ்நாட்டிற்குப் புதியதே இல்லை. தமிழ்நாட்டில் தேர்தல்கள் எல்லாக் காலங்களிலும் நடைபெற்று வந்துள்ள ஒரு நடைமுறைச் செயல் ஆகும். சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான அகநானூறு தேர்தல் முறையைச் சிறப்பாக வருணிக்கிறது.

கயிறு பிணிக் குழிசி ஓலை கொண்மார்

பொறிகண்டழிக்கும் ஆவண மாக்களின்

என்று பாடல் பகர்கின்றது. இதில் தேர்தல் முறை விளக்கப்பட்டுள்ளது. மண்பானையானது கயிற்றால் சுற்றப்பட்டு, முத்திரையிடப்பட்டு, அம்முத்திரையைச் சரிபார்த்து நீக்கிவிட்டு, வாக்குகளை எண்ணி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர் என்று கூறப்பட்டுள்ளது. இது குடவோலைச் சீட்டு முறைதான் என்றாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட விதம் குறித்துத் தெளிவாக விளக்கப்படவில்லை. தகுதி வாய்ந்த உறுப்பினர்கள் அனைவரது பெயரையும் எழுதி, மண்பாண்டத்திலிட்டு, பாதுகாத்துப் பின்னர், தேவைப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஓலைகள் எடுக்கப்பட்டனா? என்பது ஒரு கேள்வி. அடுத்து, தகுதிவாய்ந்த உறுப்பினர்கள் அனைவரும் ஓலைகளில் விரும்பிய நபர்களின் பெயர் எழுதி, அதிகபட்சமாக விரும்பிய நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனரா என்பதும் அடுத்த கேள்வி. தேர்தல் நடைபெற்ற முறையில் வித்தியாசம் இருக்கலாமெனினும், தேர்தல் நடைபெற்றுள்ளது என்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் சங்க இலக்கியத்தில் ஏராளமாக உள்ளன. குடவோலைச் சீட்டு முறை சங்க இலக்கியத்திலிருந்தே தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்துள்ளது. இம்முறை பல்லவர்கள், சாளுக்கியர்கள் ஆகியோர் காலங்களிலும் பின்பற்றப்பட்டு வந்துள்ளது என்பதை இரண்டு கல்வெட்டுக்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. சோழர் காலத்தில் சீராகச் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறை என்பதை உத்தரமள்ளூர் அல்லது உத்தரமேரூர் கல்வெட்டு நமக்கு விளக்குகிறது. உத்தரமள்ளூர் கல்வெட்டின் காலம் கி.பி.920–921 ஆகும். இது முதலாம் பராந்தக மன்னனின் 14–ஆவது ஆண்டில் செதுக்கப்பட்டுள்ளதென ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். உத்தரமள்ளூர் என்ற கிராமம் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மதுராந்தகத்திலிருந்து 10½ மைல் வடமேற்கில் அமைந்துள்ளது. இக்கல்வெட்டுக்களில் கிராமப் பிரிவுகள், வாக்காளர்கள், வேட்பாளர்கள் ஆகியோர் தகுதிகள், தேர்தல் முறை போன்றவை நன்றாக விளக்கப்பட்டுள்ளன. இரண்டு கல்வெட்டுக்களின் பொருள் கீழே தரப்பட்டுள்ளது. அதுபற்றிக் காண்போம்:

பரகேசரிவர்ம அரசனின் 14 ஆண்டு ஆட்சியில், 16 ஆம் நாள் உத்தரமேரூர் சதுர்வேதி மங்கலத்தில் நடைபெற்ற தேர்தல் முறையைப்பற்றி முதலிரண்டு வரிகள் குறிப்பிடுகின்றன. தேர்தலின் போது அரசப்பிரதிநிதி ஒருவர் கூட்டத்தைக் கூட்டுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராமமும் 30 வார்டுகள் கொண்டதாகப் பிரிக்கப்பட்டு இருக்க வேண்டும். ஒவ்வொரு வார்டிலுமுள்ள மக்கள் ஓரிடத்தில் குழுமி, குடவோலைகளைத் தயார் செய்ய வேண்டும். குடவோலையில் பெயர் பொறிக்க வேண்டுமாயின், கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றிருக்க வேண்டும். அவை;

1. கால்வேலி சொந்த நிலம் கொண்டு, வரி செலுத்தக்கூடியவராக இருக்க வேண்டும்.
2. சொந்த இடத்தில் வீடுகட்டி, வசிப்பவராக இருக்க வேண்டும்.
3. 35 வயதிற்கு மேற்பட்டவராகவும் 70வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.
4. கற்றுத் தேர்ந்தவராக, கற்றுத்தரக்கூடியவராக இருக்க வேண்டும்.

இவற்றில் 1/8 வேலி சொந்த நிலம் கொண்டவர்களையும் ஓலையில் பெயர் பொறிக்கலாம். ஆனால் அவர்கள் ஒரு வேதத்தில் கற்றுத்தேர்ந்தவர்களாகவும் அவற்றை பிறருக்கு கற்று தரும் தகுதி கொண்டவர்களாகவும், இருத்தல் வேண்டும். இத்தகுதிகள் பெற்று இருப்பவர்கள் அனைவரும் தகுதிபெற்றவர்களாகி விட மாட்டார்கள். அவர்கள் மேலும் சில தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். அவர்கள் உண்மையான வகையில் சம்பாதிப்பவர்களாகவும், மனச்சுத்தம் கொண்டவர்களாகவும், கடைசி மூன்று வருடங்களாக எந்தக் குழுவிலும் உறுப்பினர்களாக இல்லாதவர்களாகவும் இருகக வேண்டும்.

இது தவிர்த்து, குழுக்களில் இருந்தவர்கள், தங்களது கணக்குகளை ஒப்படைக்காமல் இருந்தாலும், கீழ்க்குறிப்பிட்ட தகுதிகளில் அடங்கப் பெற்றாலும், குடவோலைச் சீட்டில் பெயர் எழுதப்பட மாட்டாது.

1. சின்னம்மா, பெரியம்மா ஆகியோர்களின் மகன்கள்
2. அத்தை, மாமா ஆகியோர்களின் மகன்கள்
3. அம்மாவின் மாற்றாந்தாயின் சகோதரன்
4. அப்பாவின் மாற்றாந்தாயின் சகோதரன்
5. மாற்றாந்தாயின் சகோதரன்
6. அவனுடைய மாமா
7. மனைவியோடு கூடப்பிறந்த சகோதரன்
8. தமக்கையின் கணவர்
9. தமக்கையின் மகன்கள்
10. அவனுடைய மருமகன்
11. அவனுடைய அப்பா
12. அவனுடைய மகன்

இவ்வாறு மேற்குறிப்பிட்ட அவனுடைய உறவினர்கள் பெயர்கள் குடவோலைச் சீட்டில் எழுதப்படமாட்டாது. குடத்திலும் இடவும் மாட்டாது, ஒரு குடும்பத்தில் ஒருவர்தான் தேர்தலில் போட்டியிட முடியும் என்பதற்காக.

சமுதாயத்திலிருந்து விலக்கப்பட்டவர்கள், சமூகத்தில் சேர்க்கப்படவில்லையேல் அவர்களுக்கும் குடவோலையில் பெயர் எழுதப்படமாட்டது.

பிறருடைய சொத்துக்களைக் களவாடியவர்களின் பெயர்கள் குடவோலையில் எழுதப்படமாட்டாது.

இவ்வாறு முன்னர் கூறப்பட்ட அனைவரையும் விலக்கி, மற்றவர்களின் பெயர்கள் எழுதி, குடத்தில் இடப்படும். உத்தரமேரூரில் உள்ள 12 தெருக்களுக்கும் மொத்தமாக, 30 வார்டுகளுக்கும் தனித்தனியாக வகையில் ஓலைகள் கட்டப்பட வேண்டும். இங்ஙனம் கட்டப்பட்ட 30 கட்டுக்களும் குடத்தில் இட வேண்டும்.

குடத்திலிருந்து ஓலைகள் எடுத்துத் தேர்வு செய்கின்ற பொழுது, பெரியவர்களையும், சிறியவர்களையும் கூட்ட வேண்டும். கோவில் குருக்கள் அந்த ஊரில் இருந்தால், அவர்கள் அனைவரையும் அழைக்க வேண்டும். அவர்களுக்கு என்ன வேலை இருந்தாலும், சரி, இதற்குத் தவறாது வருகை தரவேண்டும். கோவில் நடத்தச் சொல்ல வேண்டும். மூத்தவர் ஒருவர், குடத்தைத் தூக்கி அனைவரும் பார்க்கும் வண்ணம் காட்டவேண்டும். குடத்திலிருந்து ஒரு கட்டை எடுக்குமாறு அருகிலுள்ள ஒரு சிறுவனிடம் கூறவேண்டும். குடத்தில் என்ன இருக்கிறது, ஓலையில் என்ன எழுதியிருக்கிறது என்று தெரியாத ஒரு சிறுவனைத்தான் தேர்ந்தெடுக்கவேண்டும். ஒவ்வொரு கட்டும் ஒவ்வொரு வார்டைப் பிரதிபலிக்க வேண்டும். அக்கட்டை மற்றொரு குடத்திற்கு மாற்றி, நன்றாகக் கட்டைக் கலக்கிக் குலுக்கவேண்டும். அக்குடத்திலிருந்து ஓர் ஓலையை அந்தச் சிறுவனை எடுக்கும்படிக் கூற வேண்டும். அவ்வாறு எடுக்கப்பட்ட ஓலையைச் சிறுவன் ஒரு நடுநிலையாளரிடம் கொடுக்க வேண்டும். அந்நடுநிலையாளர் அவ்வோலையைத் தனது ஐந்து விரல்களும் வெளிப்படையாகத் தெரிகின்ற வகையில் பெற்றுக் கொண்டு, அப்பெயரை மற்ற கோவில் குருக்களும் சேர்ந்து படிக்க வேண்டும். அவ்வாறு படித்து முடிக்கப்பட்டதும், அவ்வோலையிலுள்ளவர் தேர்ந்தெடுக்கப்பட்டவராக முடிவு செய்யப்படுவார். இவ்வாறாக 30 வார்டுகளுக்கும் ஓலைகள் எடுக்க வேண்டும்.

கிராம ஊராட்சிகள் செயல்பட்ட விதத்தைக் காண்போம். கிராமங்களைச் சிறிய குடியரசுகள் என ஆங்கிலேயர்கள் விவரித்ததிலிருந்து கிராமங்கள் தன்னிச்சையாகச் செயல்பட்டன என்பதை அறியலாம். சென்னை கிராம ஊராட்சிகளின் 1920ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் சென்னை மாகாணத்தில் ஊராட்சிகள் ஏற்படுத்தப்பட்டன. ஊராட்சிகளுக்கு முக்கியத்துவமும், முன்னுரிமையையும் 1909ஆம் ஆண்டு அதிகாரப்பரவல் அரசுரிமை ஆணையம் வழங்கியது. ஊராட்சி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மக்களுக்கு வழங்கப்பட்டுத்தான் இருந்ததாயினும், அதனைப் பயன்படுத்திச் சிறப்பாக்கும் நிலையில் அப்போது மக்கள் இல்லை. ஒன்றிய ஊராட்சிகளைப் பொறுத்த அளவில், வட்ட வாரியத்தின் தலைவர்கள் ஊராட்சி உறுப்பினர்களாக நியமனம் செய்யும் அதிகாரம் பெற்று இருந்தனர். முதன் முறையாக 1912–ஆம் ஆண்டு ஊராட்சி உறுப்பினர்களை மக்கள் தேர்ந்தெடுத்தனர். பின்னர் இம்முறை நடைமுறைக்கு வரலாயிற்று. சென்னையில் 1951ஆம் ஆண்டு சோதனை அடிப்படையில் முறைமையில்லா ஊராட்சிகள் ஏற்படுத்தப்பட்டன. இம்முறையை ஒவ்வொரு வருவாய் கிராமமும் கடைப்பிடித்தது. இவ்வூராட்சியின் உறுப்பினர்களை மக்கள் தேர்ந்தெடுத்தனர். மக்கள் அனைவரும் ஓரிடத்தில் கூடி, தேர்ந்தெடுக்க விரும்பும் உறுப்பினர்களுக்கு ஆதரவாக தங்களது கைகளை உயர்த்தி, பெரும்பான்மையான எண்ணிக்கைகளுக்கேற்ப உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இம்முறை பின்னர் சட்டத்துவ அந்தஸ்தைப் பெற்று, பின்பற்றப்பட்டது.

தமிழகத்தில் ஊராட்சிகளின் தன்மைக்கேற்ப, தேர்தல் முறையும் வித்தியாசமாக நடைபெற்று வந்துள்ளது. நகர ஊராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் என இருவகை ஊராட்சிகள் உள்ளன. இந்த இருவகை ஊராட்சிகளின் தேர்தல் நமது பொதுத்தேர்தல் மாதிரியாக இரகசிய வாக்குச் சீட்டு மூலம் நடைபெறுகின்றது. எனவே தேர்தல் நடத்துவதற்காக, வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு, வெளியிடப் படுகின்றது. தேர்தல் முறைமைகள் அனைத்தும் எல்லாத் தேர்தல்களைப் போல் பொதுவாகவே நடைபெறுகின்றன. ஆனால் தேர்தல் முறை வித்தியாசமானதாக உள்ளது. வாக்குகளை இடுவது, வாக்குகளைப் பதிவு செய்யும் முறை ஆகியவை நேரத்திற்கு நேரமாக மாறிக்கொண்டே வந்துள்ளன. 1950 ஆம் ஆண்டில், தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் எண்ணிக்கைக்குச் சமமாகத் தேர்தல் வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டன. எனவே ஒவ்வொரு தேர்தல் சாவடியிலும், அனைத்து வேட்பாளர்களின் வாக்குப் பெட்டிகளும் வைக்கப்பட்டன இதன் மூலம் ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஒரு தனித்தேர்தல் பெட்டி ஒதுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பெட்டியிலும் வேட்பாளர்களுக்குச் சின்னமும், வரிசை எண்ணும் இடப்பட்டன. வாக்காளர்களுக்கு அளிக்கப்படும் வாக்குச் சீட்டுக்களிலும் வரிசை எண்கள் இடம்பெற்று இருந்ததோடு, எதிர்ச்சீட்டு (counter foil) முறையும் அமையப்பெற்று இருந்தது. எனவே வாக்காளர்களது

வாக்குகளை மற்றவர்கள் போடமுடியாதபடி தடுக்கப்பட்டு இருந்தது. வாக்காளர்கள் ஒருவருக்குத்தான் வாக்களிக்கும்படி செய்யப்பட்டு இருந்தது. வாக்காளர்கள் வாக்களிக்க விரும்பவில்லையேல், தங்களது வாக்குச்சீட்டைத் திருப்பித்தரவும் வசதி செய்யப்பட்டு இருந்தது. எனவே வாக்காளர்கள் விரும்புகின்ற வேட்பாளர்களுக்கு வாக்களிக்க முடிந்தது. வாக்காளர்கள் அனைத்து வாக்குகளையும் ஒரே வேட்பாளருக்குப் போடமுடியாதபடியும் தடுக்கப்பட்டு இருந்தது. வாக்களித்த பின்னர், பெரும்பான்மையான வாக்குப் பெற்றவர், தேர்ந்தெடுக்கப்பட்டவராக அறிவிக்கப்பட்டார். பொதுத்தேர்தல் முறையில் கூட, முதன்முதலாக கலர் பெட்டிகள் முறைமைதான் நடைமுறையில் இருந்தது. பின்னர்தான் வேட்பாளர்களுக்குச் சின்னங்கள் ஒதுக்கப்பட்டு இன்றைய மாதிரி தேர்தல் நடைபெற்றது.

கிராம ஊராட்சித் தேர்தல் மிகவும் எளிதாக நடைபெறுகின்றது. தேர்தலுக்கு முன்னதாகத் தேர்தல் அறிக்கை ஒன்று வெளியிடப்படுகிறது. இந்த அறிக்கையில் தேர்தல் நடைபெறும் தேதி, நேரம் மற்றும் இடம் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. கிராம ஊராட்சியில் உள்ள மக்கள் அனைவரும் அறிக்கையில் குறிப்பிட்ட தேதி, நேரம் மற்றும் அந்த இடத்தில் கூடுகின்றனர். அக்கூட்டத்தில் தேர்தலுக்கு நிற்கக்கூடியவர்களைப் பரிசீலனை செய்து அவர்களுக்கு ஆதரவு உள்ளதா என்பதை முடிவு செய்கின்றனர். மிகுதியான ஆதரவு உள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக அறிவிக்கப்படுகின்றனர். மக்கள் தங்களது கைகளை உயர்த்தி, வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிக்கவேண்டும். இம்முறையினால் தேர்தல் நடத்துவது எளிது. மக்களுக்கும் வசதியாக இருப்பதோடு, நேரடியாகவே தேர்தல் முறையில் ஈடுபட வழியுண்டு. இது நேரடியாகச் செயல்படக்கூடிய நேரடி மக்களாட்சி முறையில் ஒன்றாகும். இதிலும் பல இடர்ப்பாடுகள் உள்ளன. மக்கள் தேர்தல் முறைக்கு மதிப்பளித்துப் பின்பற்றினால் எத்தேர்தல் முறையும் சிறந்த ஒன்றாகவே இருக்கும். ஆனால் மக்கள் தனிப்பட்டமுறையில் சில நன்மைகளை, ஆதரவுகளைக் குறுக்குவழியே பெறுவதற்கு முயற்சி செய்வதால், தவறுகளைத் தடுக்கின்ற வகையில் தேர்தல் முறையை அமைக்க வேண்டியுள்ளது. கூட்டத்தில் கூடியுள்ளவர்கள் ஒருமுறை, ஒரு வேட்பாளருக்கு மட்டும்தான் ஆதரவு தெரிவிக்கின்றார்களா? இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிக்கின்றனரா என்பதைத் தெரிந்து கொள்வது இம்முறையில் கடினமான ஒன்று. இரண்டாவதாக, தேர்தல் அதிகாரிகள், ஆதரவுகளைப் பாரபட்சமின்றி எண்ணுகின்றார்களா? அவர்கள் எந்த வேட்பாளருக்கு சாதகமாகச் செல்கின்றனரா என்பதைத் தெரிந்து கொள்வதும் சிக்கல்களில் ஒன்றாக உள்ளது. மூன்றாவதாக, தேர்தல் நடைபெறுவதற்குக் குறைந்தது ஒரு நாளாவது ஆகும். எனவே அன்று முழுவதும் மக்கள் ஒரே இடத்தில் கூடி இருப்பதுவும் கடினமான ஒன்றாகும். இதற்கு மேலாக, ஓரிடத்தில் கூடிச்செயல்படுகின்ற பொழுது, அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டால் அதனைத் தவிர்க்கவோ, தடுத்து நிறுத்தவோ முடியாத சூழ்நிலை கூட உருவாகிவிட வாய்ப்புண்டு. எனவே இம்முறை பல்வேறு தவறுகள் நிகழ்வதற்குக் காரணமாக இருக்கவே, நகர ஊராட்சியில் செயல்பட்டு வந்த தேர்தல் முறையைச் சில திருத்தங்களுடன் கிராம ஊராட்சியில் புகுத்தினர். ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஒரு பெட்டி என்ற முறையை மாற்றி, அனைத்து வேட்பாளர்களுக்கும் சின்னங்கள் ஒதுக்கப்பட்டன. வாக்காளர்கள் விரும்புகின்ற வேட்பாளர்களின் சின்னங்களில் குறியிட்டு, தங்களது வாக்குகளைப் பதிவு செய்யலாம். இந்த மாற்றங்கள் அனைத்தும் செய்யப்பட்ட பின்னர், கிராம ஊராட்சி மற்றும் நகர ஊராட்சித் தேர்தல் முறைகள் ஏறக்குறைய ஒரே மாதிரியாக அமைந்தன. இருப்பினும் தேர்தல் அறிக்கை வெளியிடுவது, வேட்பு மனுதாக்கல் செய்வது ஆகியவற்றில் சில வித்தியாசங்கள் உள்ளன. இவ்வாறாகத் தேர்தல் முறையில் ஓர் ஒற்றுமை, ஒருமிப்புத்தன்மை வளரலாயிற்று.

ஊராட்சி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் தான் பலவிதமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று நாம் எண்ணவேண்டாம். ஏனெனில் ஊராட்சித் தலைவர்கள்தேர்ந்தெடுக்கப்படுவதிலும் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டன. இம்முறை நேரத்திற்கு நேரம் சூழ்நிலைக்கேற்ப மாறியுள்ளது. 1951 – ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1–ஆம் தேதிக்கு முன்னர், ஊராட்சித் தலைவர், ஊராட்சி உறுப்பினர்களிடையே, உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஊராட்சி உறுப்பினர்களாக இருக்கவில்லையேல், ஊராட்சித்

தலைவராகவும் வரமுடியாதபடி தடுக்கப்பட்டு இருந்தது. 1950–ஆம் ஆண்டு ஊராட்சிகளின் சட்டத்தில் இது மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்டு இருந்தது. பின்னர் இது முழுமையாக மாற்றப்பட்டது. ஊராட்சி உறுப்பினராக இருக்கக்கூடியவர் ஊராட்சித் தலைவராக வரமுடியாதபடி கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. ஊராட்சித்தலைவர் ஊராட்சியின் மொத்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படும்படியாக மாற்றம்செய்யப்பட்டது. எனவே ஊராட்சிக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றபொழுது ஊராட்சித் தலைவர் தேர்தலும் நடைபெறலாயிற்று. வாக்காளர்கள் ஒரே நேரத்தில் ஊராட்சி உறுப்பினர்களையும் ஊராட்சித்தலைவரையும் தேர்ந்தெடுத்தனர். ஊராட்சித் தலைவரை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுப்பது குறித்த நன்மைகளையும், மறைமுகமாக உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவதால் உள்ள நன்மைகளையும் குறித்துத் தமிழக சட்டமன்றத்தில் அடிக்கடி விவாதம் நடை பெற்றுள்ளது. சூழ்நிலைக்கேற்ப நேரடித்தேர்தல் முறையை அங்கீகரித்துப் பின்னர் அதனையும் மாற்றம் செய்தனர். இதில் நேரடியாகவும், மறைமுகமாகவும் தலைவரைத் தேர்ந்தெடுப்பதால் உள்ள நன்மைகள் மற்றும் அவசியம் குறித்து முதலில் காண்போம். மறைமுகமாக ஊராட்சித் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்குரிய காரணங்கள் பின்வருமாறு :

1. ஊராட்சி ஒட்டுமொத்தமாக, கூட்டாக இயங்கக்கூடிய அமைப்பு. இதில் ஊராட்சித் தலைவர், மற்ற உறுப்பினர்களைப் போல் ஓர்உறுப்பினராவார். இங்ஙனமிருக்க, ஊராட்சித் தலைவரைஒரு விதமாகவும் பிற உறுப்பினர்களை வேறுவிதமாகவும் தேர்ந்தெடுப்பதால், ஊராட்சியில் ஒற்றுமைக்கு வழியில்லை. ஆகவே ஒற்றுமையாக, இணைந்து செயல்பட,ஊராட்சித் தலைவர் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

2. ஊராட்சியில் திறமைமிக்கவர் ஒருவர் மட்டுமே தேர்ந்தெடுத்தால் இவ்விதமாக இரண்டு விதத் தேர்தல் முறைகளினால் பயன் அதிகமாக இருக்காது. ஆனால் அதே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட திறமைமிக்கவர்கள் இருந்தால், ஊராட்சித்தலைவர் தேர்தலில் கடுமையான போட்டி ஏற்படும். இந்த போட்டியில் கட்டாயமாக வாக்காளர்கள் ஏதேனும் ஒரு பிரிவில் சேரவேண்டி ஏற்படும். இதனால் ஊராட்சியில் நிரந்தரமாக இரண்டு பிரிவுகள் ஏற்பட வழியுண்டு. ஊராட்சி சிறிய அளவு நிலப்பரப்பைக் கொண்டு இருப்பதாலும், மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவராக ஒத்துழைத்து ஒன்றாகச் செயல்பட வேண்டுமென்பதாலும் இப்பிரிவினை எராளமான பாதிப்பு உண்டாகும். இதனால் மக்களின் வாழ்க்கை மட்டும் பாதிப்பதில்லை. உடைமைகள் மற்றும் பிற சொத்துக்களுக்கும் பாதிப்பு ஏற்படும். சாதாரணமாக இன்றைய அளவில், கோபங்களை வெளியில் காட்டிக் கொள்ளவும், வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளவும் தேர்தல்களைப் பயன்படுத்துகின்றனர். ஊராட்சித் தேர்தலின் போது கிராமங்களில் பல வீடுகள், எண்ணற்ற வைக்கோல் போர்கள் தீக்கிரையாகிவிடுவதை நாம் அறியலாம். இந்த மாதிரியான அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு உறுப்பினர்களே தங்களுக்குள் ஒரு வரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

3. ஊராட்சி உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் முறை மிகவும் பிரபலமானதாக, அனைத்து நகராட்சிகளிலும் பின்பற்றப்பட்டு வந்ததால், இம்முறை எளிதானதும் ஆகும்.

இருப்பினும் நேரடியாக ஊராட்சித் தலைவரைத் தேர்ந்தெடுப்பதிலும் அதிக நன்மைகள் உள்ளன என்பதைப் பற்றியும் சிறிது காண்போம்.

1. மக்களாட்சி முறையில் நேரடியாக உறுப்பினர்களைப் போல் தலைவரைத் தேர்ந்தெடுப்பது மறைமுகமாகத் தேர்தெடுப்பதைவிடச் சிறப்பு வாய்ந்ததாகும்.

2. ஊராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட மறைமுகத் தேர்தல் மூலமாகயெனில், குறைந்த அளவு உறுப்பினர்களைத் தங்கள் வசப்படுத்திக்த கொண்டால்போதுமானதாகும் . தங்களது

செல்வாக்கின் மூலம் குறைந்த அளவு மக்களைக் கைக்குள் போட்டுக் கொள்ள முடியும். ஆனால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பொழுது, இத்தவறுகள், தில்லுமுல்லுகள் ஆகியவை செல்லுபடியாகாது. ஊராட்சிமக்களின் அனைவரது ஆதரவையும் பெற்றால்தான் தலைவராகத் தேர்ந்தெடுக்க முடியும். அனைவரது ஆதரவோடு தேர்ந்தெடுக்கப்படக்கூடிய ஊராட்சித் தலைவர், எளிதாக அனைவரது ஒத்துழைப்பையும் பெற்று, செயல்களைச் செவ்வனே செய்யமுடியும்.

3. எல்லாச் சமுதாயங்களின் வாக்குகளையும், வேறுபட்ட வருமான விகிதம் கொண்ட மக்களின் வாக்குகளையும் பெற்றால்தான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படமுடியும் என்ற நிலைஉள்ளதால், பாகுபாடின்றி, ஒற்றுமையாகச் செயல்படுகின்ற வகையில் தலைவராக வரக் கூடியவர் அனைவரோடும் பழக அதிகவாய்ப்புக்களை இம்முறை அளிக்கின்றது.

இவ்வாறாக இருவேறு முறைமைகளின் நன்மைகளைஆராய்ந்த பின்னர் 1951–ஆம் ஆண்டு ஏப்ரல் 1–ஆம் தேதியிலிருந்து ஊராட்சித் தலைவரை மக்களே தேர்ந்தெடுக்கும் படியாகச் சட்டமியற்றப்பட்டது. இச்சட்டம் மறுபடியும் 1957ஆம் ஆண்டு திருத்தப்பட்டு முன்னர் மாதிரியே உறுப்பினர்களே தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை கொண்டு வரப்பட்டது. ஆனால் இந்த முறையும் நீண்டநாட்கள் நீடிக்கவில்லை ஊராட்சி உறுப்பினர்கள் செம்மையாகத் தலைவருக்கு ஒத்துழைப்பு நல்கவில்லை. ஊராட்சிச் செயல்கள் செய்வதில் ஒத்துழைப்பு இல்லாததால் செயல்கள் செய்வது தாமதத்திற்குள்ளாகியது. உறுப்பினர்கள் ஒற்றுமையாகச் செயல்படுவதிலிருந்து விலகியதால், ஊராட்சித் தலைவைர நேரடியாகவே மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது அவசியமாயிற்று. இதன் காரணமாகத 1970 ஆம் ஆண்டுசட்டம் திருத்தப் பட்டு நேரடியாகத் தலைவர் தேர்தலுக்கு வசதி செய்யப்பட்டது. தற்போது இந்த முறை செயலில் உள்ளது. ஊராட்சித்தேர்தலில் அரசியல் கட்சிகளின் சின்னங்கள் ஒதுக்கப்படுவதில்லை. இருப்பினும் போட்டிகள் அரசியல் ரீதியாகத்தான் நடைபெறுகின்றன என்பது கண்கூடு. 1970ஆம் ஆண்டு நடந்த ஊராட்சித் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் முடிந்த அளவு தனது சக்தியெல்லாம் பயன்படுத்தி காங்கிரஸை ஆட்சிக்கு வரமுடியாதபடியாக கடுமையான போட்டி, இரண்டு கட்சிகளுக்குமிடையே நடைபெற்றது. இவ்வாறாக அரசியல் ரீதியாகப் போட்டி நடைபெறுவதைத் தடுக்க முடியாதபடி போட்டிகள் நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றன. இருந்த போதிலும் குடவோலைச் சீட்டு முறையில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதும் 1970ஆம் ஆண்டில் சில இடங்களில் நடைபெற்று உள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சக்கர சாமந்தம் என்ற கிராமத்தில், ஊராட்சி உறுப்பினர்களும், அதன் தலைவரும் ஒரு பிள்ளையார் கோவில் முன்பாகக் குடவோலைச் சீட்டு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதை அறியும் போது, மக்கள் தேர்தல்களின் போட்டி வேண்டாம் என்பதை உணர்த்துவதுபோல் உள்ளது. தேர்தலில் ஏற்படுகின்ற போட்டியும், பொறாமையும் ஒற்றுமையைக் குலைக்கக் கூடியன. ஆயினும் மக்களாட்சியின் சாதனமாகத் தேர்தல் இருப்பதால், தேர்தலைப் புறக்கணிப்பதும் நன்று அல்ல.

ஊராட்சித் தேர்தல் முறை பல்வேறு சோதனைகளுக்குட்பட்டு, செம்மையான முறையாகப் பரிணமிக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அரசாங்கங்களின் தேர்தலை நடத்துவது மாநில அரசாங்கத்தின் விருப்ப அதிகாரத்தில் அடங்கியுள்ளது. தற்போது நாம் வாக்குகளை வேண்டுமென்றே வித்தியாசப்படுத்தியுள்ளோம். அதற்கு அடுத்தப்படியாக சட்டமன்ற வாக்குகளுக்கும், பாராளுமன்ற வாக்குகளுக்கும் முன்னுரிமை கொடுத்து கடைசியாக உள்ளாட்சி வாக்குகளுக்கும் என வேறுபடுத்தியுள்ளோம். மக்களாட்சியில் தேர்தல் என்பது பொதுவான செயல் முறையாகும். நிறுவனங்கள் அனைத்தும் சமமானவை என்பதை நாம் அறிய வேண்டும். உள்ளாட்சித் தேர்தலை மத்திய தேர்தல் ஆணையம் நடத்தினால் நலமெனத் தோன்றுகிறது. ஏனெனில் தேர்தல் என்ற செயல்முறையை யார் நடத்தினாலும் பலன் ஒன்றுதான். தேர்தல் ஆணையம் தன்னிச்சையாக இயங்கக் கூடிய காரணத்தால், சிறப்பாகவும், திறமையாகவும் தேர்தலை நடத்தும் பக்குவம் பெற்றுள்ளது. சட்டமன்றத் தேர்தலைநடத்துவதற்கு கூட, அந்த மாநில அரசாங்கத்தின் அனுமதி பெற்று, தேர்தல் ஆணையாளருக்கு

அனுப்பி வைக்க வேண்டும். அதன் பின்னர்தான் தேர்தல் நடத்த வேண்டுமென வரையறுக்கப்பட்டுள்ளது. இம்முறையைத் தேர்தல் ஆணையாளர் கடுமையாக எதிர்த்து உள்ளார். தேர்தலை நடத்துவதற்குச் சட்டம், அமைதியைக் காக்க வேண்டியது மாநில அரசாங்கத்தின் கடமை என்பதில் யாவருக்கும் சந்தேகமில்லை. ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்தல் ஆணையத்தில் பிரதிநிதியாகச் செயல்படும் தலைமைத் தேர்தல் அதிகாரி, மாநிலத்தில் தேர்தல் நடைபெறுகின்ற சூழ்நிலையை அறிந்து, திருப்தி கொண்டால் தேர்தல் நடத்தப்பெறலாம் என்று தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அதிகாரம் வழங்க வேண்டும். ஏனெனில் தேர்தல், ஆளுங்கட்சிக்குச் சாதகமாகவும், வசதியாகவும், நடத்துவதாக, பலத்த குற்றச்சாட்டுகள் உள்ளன என்பதால் இங்ஙனம் செய்ய வேண்டும். மேலும் தேர்தல்கள் அனைத்தும் தேர்தல் ஆணையத்தின் கண்காணிப்பிற்கும், கட்டுப்பாட்டிற்குள்ளமாக நடத்த வேண்டும். ஊராட்சி அரசு நிறுவனங்கள் மீதாக வெளியிடப்பட்ட திரு. அசோக் மேத்தா குழுவின் அறிக்கையும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளது. ஊராட்சி அரசு நிறுவனங்களின் தேர்தலை மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரிதலைமைத் தேர்தல் நடத்த வேண்டுமெனக் குழு அறிக்கை கூறுகிறது. ஆனால் தலைமைத் தேர்தல் ஆணையாளர் வெறுமனே ஆலோசனை பெற்று, கலந்தாலோசிப்பதால் மட்டும் பயன் ஏற்படுமெனக் கூற முடியாது என்கிறார். ஆகவே வாக்காளர் பட்டியல் தயாரிப்பது மற்றும் பிற செயல்களை ஆணையம் மேற்கொண்டு தேர்தலை நடத்தினால் தான் பலன் ஏற்படுமெனவும் கூறுகிறார். பாராளுமன்றம், சட்டமன்றம் ஆகியவற்றிற்குத் தேர்தல் நடத்துவது போல், இதற்கும் தேர்தல் நடத்த வேண்டுமெனக் கூறுகிறார். இவ்வாறு செய்தால் குறித்த காலத்தில் தேர்தலை நடத்த முடியும் என்பதை அறியலாம். ஐந்துவருடங்களுக்கெனத் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள், ஐந்து வருடங்களுக்கும் மேலாகப் பதவியில் இருப்பதை அறிவுடையவர் எவரும் அனுமதிப்பது இல்லை. மாநில அரசாங்கங்கள் தேர்தலைத் தொடர்ந்து தள்ளிப்போட்டுக் கொண்டே வருகின்றன. கேரளா அரசாங்கம் 22 தடவை தேர்தலைத் தள்ளிப்போட்டுள்ளது. 1963ஆம் ஆண்டிற்குப் பிறகு 1978 வரை தேர்தல் நடத்தவே இல்லை. இதே மாதிரியாகத்தான் மற்ற மாநிலங்களும், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலும், பல ஆண்டுகள் தேர்தல் நடக்கவில்லை. எனவே தேர்தலைக் குறிப்பிட்ட நேரத்தில் நடத்துவதற்கு, தேர்தல் ஆணையத்திடம் விடவேண்டும் என்பது சிறந்த ஒன்றாகும். இதனால் மாநில அதிகாரம் பாதிக்கப்படலாம். எல்லா மாநில அரசாங்கங்களும் ஒன்று கூடி உள்ளாட்சித் தேர்தலை ஐந்தாண்டிற்கு ஒரு முறை நடத்த வேண்டுமென முடிவு செய்ய வேண்டும். மாநில அரசாங்கங்களே தேர்தலை நடத்தத் தேர்தல் ஆணையத்தை அணுகினால், மாநில அதிகாரம் பாதிக்காது. ஏனெனில் தேர்தலைப் பாரபட்சமின்றி, நியாயமாகவும், உண்மையாகவும், திறமையுடனும் நடத்த வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் உள்ளாட்சியை நிருவகிக்க வேண்டும். இவர்கள் மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் தான் செயல்பட முடியும், பின்னர் யார் தேர்தலை நடத்தினால் என்ன? தற்போது தேர்தல் நடத்துவதற்கு தனியாக மாநிலத் தேர்தல் ஆணையம், 74வது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலமாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையம்தான் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தி வருகின்றது.

### மாதிரி வினா:

தமிழக ஊராட்சியில் செய்யப்பட்டுள்ள தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

# பாடம் – 18

## உள்ளாட்சிப் பணியாளர் குழாம் நிர்வாகம்

ஊராட்சிச் செயலாக்க அதிகாரிகள் நியமிக்கப்படுவதற்கு முன்னர், ஊராட்சியின் ஏனைய பணியாளர் குழாமை நியமிக்கும் பொறுப்பினை ஊராட்சித் தலைவரும், உறுப்பினர்களும் கொண்டிருந்தனர். செயலாக்க அதிகாரி நியமிக்கப்பட்ட பின்னர், பணியாளர் குழாமை நியமிக்கும் பொறுப்பினை இவரே செய்ய வேண்டியதாயிற்று. இவர் துறைகளின் தலைவர்களைத் கலந்தாலோசித்து பணியாளர்களை நியமித்து வந்தார். ஊராட்சியின் பணியாளர்களை ஊராட்சி உறுப்பினர்களும் தலைவரும். நியமித்தால், பணியாளர்களுக்கு பணிப்பாதுகாப்பு இருப்பது அரிது. ஊராட்சி உறுப்பினர்களின் தயவும், கருணையும் தான் பணியாளர்களைக் காப்பாற்றும், அங்ஙனம் பணியாளர்கள் இரக்கத்திற்கே உரியவர்களாகவே இருந்தால், எங்ஙனம் அவர்கள் தங்களது கடமைகளை ஒழுங்காகச் செய்ய முடியும்? ஆகவே தான் பணியாளர்களை நியமிக்கும் பொறுப்பினைச் செயலாக்க அதிகாரி பெற்றார். தற்போது ஊராட்சிப் பணியாளர்கள் ஓர் ஊராட்சியிலிருந்து மற்றொரு ஊராட்சிக்கு மாறுதல் (transfer) செய்யக் கூடிய வகையில் ஊராட்சிப் பணி அமைக்கப்பட்டுள்ளது.

இன்றைய சட்டத்தின்படி, ஒவ்வொரு நகர ஊராட்சிக்கும் ஒரு நிருவாக அதிகாரி நியமிக்கப்படுகிறார். இவர் முழுநேரப் பணியாளராக இருந்து வருகிறார். கிராம ஊராட்சிகளைப் பொறுத்தவரை நிருவாக அதிகாரி செய்கின்ற பணிகளை அந்தந்த ஊராட்சித் தலைவர்களே செய்து வருகின்றனர். அரசாங்கத்தால் அவ்வப்போது நிருணயிக்கப்படுகின்ற சம்பளம், செலவுத் தொகைகள் நிருவாக அதிகாரிக்கு வழங்கப்படுகின்றன. நிருவாக அதிகாரி அரசாங்கப்பணியில் இருந்தால், அவருடைய விடுப்புக் காலப் படிகள், ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி ஆகியவற்றிற்கான உதவித் தொகையை அவருக்காவது, அவர் சார்பிலாவது ஊராட்சி செலுத்தி வருகிறது. நிருவாக அதிகாரி அரசாங்கப் பணியில் இல்லாதவர் என்றால் அவரது விடுப்புக் காலப்படிகள், ஓய்வூதியம், வருங்கால வைப்புநிதி ஆகியவற்றிற்கான உதவித் தொகையையும் ஊராட்சி செலுத்தி வருகிறது. நிருவாக அதிகாரிகளின் பதவித் தரங்களைப் பிரித்தல், நியமன முறைகள், பணிக்கட்டுப்பாடுகள், சம்பளம், படிகள், ஒழுங்கு, நடத்தை ஆகியவற்றை ஒழுங்குபடுத்த அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு.

நிர்வாக அதிகாரி ஊராட்சி மன்றம், அதன் குழுக்கள் ஆகியவற்றின் கூட்டங்களில் கலந்து கொள்கிறார்; விவாதங்களில் பங்கு கொள்கிறார். ஆனால் தீர்மானம் கொண்டுவருவதற்கும், வாக்களிப்பதற்கும் அவருக்கு உரிமை இல்லை. மேலும் அவரைக் கூட்டங்களில் கலந்து கொள்ளும்படி தலைவர் கேட்டுக் கொண்டால் கலந்து கொள்கிறார். நிருவாக அதிகாரியின் கடமைகள், நிருவாக அதிகாரி செய்ய இயலாத போது ஊராட்சித் தலைவரே இப்பணிகளை மேற்கொள்கிறார். நிருவாக அதிகாரி ஊராட்சியின் தீர்மானங்களைச் செயல்படுத்தி வருகிறார். தீர்மானம் சட்டப்படியாகத் தீர்மானிக்கப்படாமல் இருக்கின்றதென எண்ணினால், சட்டம் வழங்கியுள்ள அதிகாரத்திற்கு மேலாக இருக்கிறதென்றோ, மக்களின் பொது நலனிற்கோ, பொது மக்கள் பாதுகாப்பிற்கோ ஆபத்து விளைவிக்கும் என்று ஊராட்சித் தலைவர் கருதினால் நிருவாக அதிகாரி தீர்மானங்களை அரசாங்கத்தின் அனுமதிக்காக அனுப்பி வைக்கிறார். அரசாங்கம் செய்யும் முடிவே இறுதியானதாகும். ஊராட்சியின் எல்லா அலுவலர்களும் பணியாளர்களும் நிருவாக அதிகாரியின் கட்டுப்பாட்டுக்கு அடங்கியவராவர். நிருவாக அதிகாரி சட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள அனைத்துச் செயல்களையும் செய்து வரக்கூடியவராவார்.

### ஊராட்சி ஒன்றிய நிர்வாக அமைப்பு முறை

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ன் படி கிராம அளவில் கிராம ஊராட்சிகள், இடை நிலையில் ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட அளவில் மாவட்ட ஊராட்சிகள் என மூன்று அடுக்கு ஊராட்சி நிர்வாக

முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, ஒவ்வொரு நிலையில் உள்ள ஊராட்சிகளும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டவையும், தனித்தனியே இயங்குபவையும் ஆகும். ஒவ்வொரு நிலைக்கும் தனித்தனி கடமைகளும் பொறுப்புகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. எனவே, புதிய சட்டத்திற்கேற்ப ஊராட்சி ஒன்றிய அளவில் இருக்கும் பணி அமைப்பை மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் எழுந்த தன் காரணமாக பணி அமைப்பு மாற்றப்பட்டுள்ளது.

## அமைச்சுப் பணியாளர்கள்

ஊர்நல அலுவலர் பணியிடங்கள் விரிவாக்கப் பணிகளுக்காக பல ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தப்பட்டவை. தற்போது ஒரு பணிவிதிகளின்படி இப்பணியிடங்களில் பணியாற்றுபவர்களும், இளநிலை உதவியாளர்களும், உதவியாளர்களும் ஒருவருக்கு ஒருவர் பணி மாறுதல் செய்து பணி அமர்த்தப்படுகின்றனர். ஊர்நல அலுவலர் பணியிடத்திற்கென தற்சமயம் நபர்கள் தேர்வு செய்யப்படுவதில்லை. எனவே, தற்போது ஊர்நல அலுவலர் பணியிடங்களை சம ஊதியவிகிதம் பெறும் "உதவியாளர்/இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்" என்றும் பெயர் மாற்றம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

இளநிலை உதவியாளர் பணியிடங்களில் அரசுப் பணியில் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் என்று ஏற்கனவே பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களில் ஏற்கனவே இருக்கும் இளநிலை உதவியாளர் பணியிடங்கள் 1.4.74 முதல் அரசுப் பணியிடங்களாக மாற்றப்பட்டவையாகும்.

## பணியமைப்பு

சமூக நல விரிவாக்க அலுவலர், கால்நடை வளர்ச்சி விரிவாக்க அலுவலர், கூட்டுறவு விரிவாக்க அலுவலர், சத்துணவு விரிவாக்க அலுவலர், ஊர்நல அலுவலர் (மகளிர்) போன்ற பணியிடங்களைத் தவிர ஊராட்சி ஒன்றிய அளவில் தற்போது இருக்கும் பொதுவான நிர்வாகப் பணியமைப்பு பின்வருமாறு.

| வ.எண் | பணியிட வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) | 1 |
| 2. | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) | 1 |
| 3. | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 1 |
| 4. | விரிவாக்க அலுவலர் (நிர்வாகம்) | 1 |
| 5. | விரிவாக்க அலுவலர் (ஊராட்சிகள்) | 1 |
| 6. | விரிவாக்க அலுவலர் (சிறுசேமிப்பு மற்றும் மக்கள் தொடர்பு) | 1 |
| 7. | விரிவாக்க அலுவலர் (ஆதிதிராவிடர் நலம்) | 1 |
| 8. | விரிவாக்க அலுவலர் (ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்) | 1 |
| 9. | உதவியாளர்கள் | 2 |
| 10. | முதல் நிலை ஊர்நல அலுவலர்கள் | 5 |
| 11. | இளநிலை உதவியாளர்கள் | 4 |
| 12. | இரண்டாம் நிலை ஊர்நல அலுவலர்கள் | 5 |
| 13. | கணக்கர்கள் | 2 |
| 14. | காசாளர் | 1 |
| 15. | தட்டச்சர் | 1 |
| 16. | ஆவண எழுத்தர் | 1 |
| 17. | அலுவலக உதவியாளர் | 4 |
| 18. | ஊர்தி ஓட்டுநர் | 1 |

ஊராட்சி ஒன்றிய அளவில் ஏற்கனவே இருக்கின்ற பொதுவான பணி அமைப்பை, தற்போது

1. ஊராட்சி ஒன்றியம் தொடர்பான பணிகளைச் செய்ய வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஆணையாளர் தலைமையிலும்.

2. கிராம ஊராட்சிகள் தொடர்பான பணிகளை கண்காணிக்கவும், தணிக்கை செய்யவும் வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) தலைமையிலும், இரு பிரிவுகளாக கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

**ஊராட்சி ஒன்றியப் பிரிவு**

| வ.எண் | பணியிடவகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும்ஆணையாளர் | 1 |
| 2. | விரிவாக்க அலுவலர் (நிர்வாகம்) | 1 |
| 3. | விரிவாக்க அலுவலர் (சிறுசேமிப்பு மற்றும் மக்கள் தொடர்பு) | 1 |
| 4. | விரிவாக்க அலுவலர் (ஆதிதிராவிடர் நலம்) | 1 |
| 5. | உதவியாளர்கள் | 4 |
| 6. | இளநிலை உதவியாளர்கள் | 3 |
| 7. | கணக்கர் | 1 |
| 8. | காசாளர் | 1 |
| 9. | இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் | 1 |
| 10. | தட்டச்சர் | 1 |
| 11. | ஆவண எழுத்தர் | 1 |
| 12. | அலுவலக உதவியாளர் | 2 |
| 13. | ஊர்தி ஓட்டுநர் | 1 |

**கிராம ஊராட்சி பிரிவு**

| | |
|---|---|
| வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) | 1 |
| துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 1 |
| விரிவாக்க அலுவலர் (ஊராட்சிகள்) | 1 |
| விரிவாக்க அலுவலர் (ஜவஹர் வேலை வாய்ப்புத்திட்டம்) | 1 |
| கணக்கர் | 1 |
| உதவியாளர்கள் | 2 |
| இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் | 1 |
| இளநிலை உதவியாளர் | 1 |
| அலுவலக உதவியாளர்கள் | 2 |

கூடுதலான எண்ணிக்கையுடைய கிராம ஊராட்சிகள் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில், ஏற்கனவே இருக்கும் கூடுதல் விரிவாக்க அலுவலர் (ஊராட்சிகள்) பணியிடம் தொடர்ந்து, வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) நிர்வாகக் கட்டுப்பாட்டில் இருக்கும்.

ஊராட்சி ஒன்றியப் பணி அமைப்பில் ஏற்கனவே இருக்கும் பணியிடங்களான விரிவாக்க அலுவலர் (கால்நடை வளர்ச்சி), விரிவாக்க அலுவலர் (கூட்டுறவு) விரிவாக்க அலுவலர் (சத்துணவு), விரிவாக்க அலுவலர் (சமூகநலம்), ஊர்நல அலுவலர் (மகளிர்) ஆகியவையும் மேற்கண்ட விரிவாக்க அலுவலர்களுக்கு உதவியாக வேறு பணியிடங்கள் இருந்தால் அவைகளும் ஊரக குடிநீர் திட்ட பராமரிப்பு தொடர்பான பொருத்துநர், மின்பணியாளர், தையல் ஆசிரியைகள், பள்ளி நடத்தாட்டிகள், போன்ற பணியிடங்களும்

இதைத் தவிர ஒன்றியப் பொது நிதியிலிருந்து ஊதியம் வழங்கப்படும் வேறு ஏதேனும் பணியிடங்கள் இருந்தால் அவகைளும் வட்டார அலுவலர் கட்டுப்பாட்டில் இருக்கும்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள இரு ஒன்றியப் பொறியாளர் மற்றும் இரு பணி மேற்பார்வையாளரும், தலைமையிலான ஊராட்சி ஒன்றியப் (வட்டார ஊராட்சி) பிரிவிலும் செயலாற்றுவார்கள். மேற்கண்டவாறு பணி அமைப்பை மாற்றி அமைத்து, புதிய நடைமுறை 1.7.97 முதல் செயல்பட்டு வருகிறது.

## ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கும் ஓர் ஆணையாளரை அரசாங்கம் நியமனம் செய்து வருகிறது. இவர் சாதாரணமாக சமுதாய வளர்ச்சிக்கான தேசிய விரிவாக்கப்பணித் திட்டத்தின்படி அந்த ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திற்கு நியமிக்கப்படும் வளர்ச்சி அதிகாரியாகவும் இருக்கிறார். ஆணையாளருக்கு வழங்கப்படும் சம்பளம், செலவுத் தொகைகள், அவரது விடுப்புப்படிகள், ஓய்வுச்சம்பளம், வருங்கால வைப்புநிதி மற்றும் யாதொரு பணமும் ஊராட்சி ஒன்றிய மன்றத்திடமிருந்து வசூல் செய்யக்கூடாது. ஆணையாளர்களைத் தரம் பிரிப்பது, தேர்ந்து எடுத்து நியமிக்கும் முறைகள், பணி விதிகள், சம்பளம், செலவுத் தொகைகள், ஒழுங்குமுறை, நடத்தை போன்றவற்றை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் அரசாங்கத்திற்கு உண்டு.

ஆணையாளர் ஊராட்சி ஒன்றிய மன்றக்கூட்டங்களிலும், அதன் குழுக்களின் கூட்டங்களிலும் கலந்து கொண்டு, விவாதங்களில் பங்குபெற உரிமையுண்டு, வாக்களிக்க அவருக்கு உரிமை கிடையாது. ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டங்களிலும், குழுக்களிலும் கூட்டங்களிலும் கலந்து கொள்ளும்படி ஊராட்சி ஒன்றியத் தலைவர் கேட்டுக் கொண்டால், அவர் கலந்து கொள்கிறார். ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தீர்மானங்களைச் செயல்படுத்த வேண்டியது அவரது முக்கிய கடமையாகும். ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தீர்மானங்களைச் செயல்படுத்துவதையும் வரிவசூப்பதிலும் அதில் உள்ள முன்னேற்றத்தைப் பற்றியும் நேரத்திற்கு நேரம் அறிக்கைகளை, மன்றம் கட்டளையிடும் போது அவர் அனுப்பி வைக்கின்றார். ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் எல்லா அலுவலர்களும், பணியாளர்களும் ஆணையாளரின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கியவர்களாவர். ஊராட்சி ஒன்றிய மன்றம் தனக்குத் தக்கதெனத் தோன்றும் கடமைகளை ஆணையாளரிடம் ஒப்படைக்க அதிகாரம் பெற்றுள்ளது. அவர் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்துக் கடமைகளையும் செய்யக் கூடியவராவார்.

ஆனாலும், சமுதாய வளர்ச்சிக்கான தேசீய வளர்ச்சித் திட்டத்திற்கு அல்லது அரசாங்கத்தால் அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குத் தனியாக ஒப்படைக்கப்பட்ட திட்டத்திற்கு, மன்றத்தால் இடப்படும் கட்டளைகள் எவையேனும் தொடர்பானவையாக இருந்தால், அக்கட்டளைகள் ஒப்படைப்புக்குக் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் பொருந்தும் படியாக இருக்க வேண்டும். ஆணையாளர் தமது அதிகாரங்களை எழுத்துமூலமான தம் உத்தரவால், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் எந்த அதிகாரியிடமாவது, பணியாளரிடமாவது, அரசாங்கத்தின் எந்தப் பணியாளரிடமாவது ஒப்படைக்கலாம். அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட எந்தக் கடமையாற்றலும், ஆணையாளரால் வகுக்கப்படும் வரையறைகள், வரம்புகள், கட்டுப்பாடுகளுக்கு உட்படுவதுடன் அவருடைய கட்டுப்பாட்டிற்கும் மாற்றுதலுக்கும் உட்பட்டதாகும்.

ஒரு வேலையை நிறைவேற்றுவதற்கு ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அனுமதி பெறவேண்டியிருப்பினும், அவசரச் சந்தர்ப்பங்களில் அந்த வேலையை உடனே நிறைவேற்றுவது பொதுமக்கள் நலனிற்கும், பாதுகாப்பிற்கும் அவசியமென்று தொடர்புடைய நிருவாக அதிகாரி மற்றும் ஆணையாளர் கருதினால், அப்பட்டிப்பட்ட பணிகளை நிறைவேற்றும்படி கட்டளையிடுகின்றனர். மேலும் அப்பணிகளைச் செய்வதற்கு ஏற்படும் செலவை தொடர்புடைய ஊராட்சி நிதியிலிருந்தோ, ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்தோ கொடுக்கும்படியாகக் கட்டளையிடுகின்றார். ஆனால் ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் குறிப்பிட்ட பணியைச் செய்யக் கூடாது என்றால் அப்பணியை ஆணையாளர் செய்யக் கூடாது, பணிகளை

நிறைவேற்றிய பின்னர், பணியைச் செய்ததற்குரிய காரணங்களை விளக்கித் தொடர்புடைய ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அடுத்த கூட்டத்தில் அனுமதி பெற வேண்டும்.

## வட்டார வளர்ச்சி அதிகாரி

இவர் ஊராட்சி வளர்ச்சித்தலைமை எழுத்தர்கள் (Panchayat Development Head Clerks) களின் பதவி உயர்வின் மூலமும், கீழ்க்கண்ட பணிகளிலிருந்து பணிமாற்றம் செய்யப்படுவதன் மூலமாகவும் நியமிக்கப்படுகிறார். சென்னை வருவாய்ப் பணியிலுள்ள வட்டாட்சித் தலைவர்கள், வேளாண்மைப் பணியின் உயர் சார்நிலைப் பணியாளர்கள் (Upper Subordinates), கூட்டுறவு துணைப் பதிவாளர்கள் (Co-operative Sub-Reistrars), செயலகப்பணி போன்றவர்கள் தங்களது பதவிமாற்றத்தால் வட்டார வளர்ச்சி அதிகாரியாகப் பணியாற்றலாம். ஆகவே பதவி உயர்வு, பணிமாற்றம் ஆகியவற்றின் மூலம் வட்டார வளர்ச்சி அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர். இவர்களை இணை வளர்ச்சி ஆணையாளர் (Joint Developement Commissioner) நியமனம் செய்கிறார். பணிமாற்றத்தால் வட்டார வளர்ச்சி அதிகாரிகளாக வருபவர்கள் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாது பணிசார் (tenure) முறையில் பணியாற்றி வருகிறார்கள். வட்டார வளர்ச்சி அதிகாரிகளை மாவட்டத்திற்குள்ளாக எந்த இடத்திலும் பணியமர்த்த பணிமாற்றம் செய்ய அந்தந்த மாவட்ட ஆட்சி தலைவர் அதிகாரம் பெற்றுள்ளனர். மாவட்டத்தை அடுத்து பிற மாவட்டங்களுக்கு மாற்றம் செய்ய இணை வளர்ச்சி ஆணையாளர் அதிகாரம் கொண்டுள்ளார்.

தமிழ்நாடு ஊராட்சிகளின் 1958—ஆம் ஆண்டுச் சட்டத்தின் படி அமைக்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைமை எழுத்தர்கள் கீழ்கண்ட மூன்று வகைப் பணியாளர்களுள் ஒருவகையில் இடம் பெறுவர். அவை,

1. முந்தைய மாவட்ட வாரியங்களின் பணியாளர்கள்.
2. ஊராட்சி ஒன்றிய மன்றங்களில் எழுத்தர்களாக இருந்து பதவி உயர்வு பெற்றவர்கள்.
3. மற்ற அலுவலகங்களிலிருந்து வந்தவர்கள்.

ஊராட்சி ஒன்றியங்கள் மூன்று தடவைகளாக அமைக்கப்பட்டன. 1960—ஆம் ஆண்டு அக்டோபர் 2ந் தேதி, 1961—ஆம் ஆண்டு ஏப்ரல் 13—ஆந் தேதி மற்றும் அக்டோபர் 1—ஆந் தேதி ஆகிய மூன்று தேதிகளில், ஒவ்வொரு தடவையாக அமையப்பெற்றன. இவ்வாறு ஒவ்வொரு தேதியிலும் அமையப் பெற்ற ஊராட்சி ஒன்றியங்களின் தலைமை எழுத்தர்கள், அன்றைய தேதியிலிருந்து ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் பணியாளரமைப்பு உறுப்பினர்களாக மாற்றப்பட்டனர்.

ஊராட்சி வளர்ச்சித் தலைமை எழுத்தர்கள் ஊராட்சி விரிவாக்கப் பணியாளர்களின் பதவி உயர்வினாலும் கீழ்க்கண்ட பணியாளர்களின் பதவிமாற்றங்களினாலும் நியமிக்கப்படுகிறார்கள். ஊராட்சி ஒன்றிய மேலாளர்கள், வருவாய்க் கோட்டம், ஊராட்சி வளர்ச்சி அலுவலகக் கணக்கர்கள், கல்வித்துறை விரிவாக்க அதிகாரிகள் ஆகியோர்களின் பதவி மாற்றங்களாலும் நிரப்பப்படுகின்றனர்.

## ஊராட்சி விரிவாக்க அதிகாரிகள்

இவர்கள் நேரடியாகவும் சில பணிகளின் பணியாளர்களது பதவிமாற்றங்களாலும் நியமிக்கப்படுகின்றனர். கிராம சேவகர் (ஊர் நல அலுவலர்) முதல்நிலை, நகர ஊராட்சிகளின் நிருவாக அதிகாரிகள், இணை வளர்ச்சி ஆணையாளர் அலுவலக உதவியாளர்கள் போன்றோர் பதவிமாற்றங்களால் ஊராட்சி விரிவாக்க அதிகாரிகளாக நியமிக்கப்படுகின்றனர். நேரடியாக நியமனம் செய்யப்படுவர்கள் 25 வயது நிறைந்தவர்களாகவும் பல்கலைக்கழக பட்டதாரிகளாகவும் இருக்க வேண்டும்.

## கிராம சேவகர் (ஊர்நல அலுவலர்) முதல் நிலை

இப்பதவிகள் இரண்டாம் நிலை கிராம சேகர்களின் பதவி உயர்வால் நிரப்பப்படுகின்றன. இவர்கள் பள்ளியிறுதிப் படிப்பு முடித்திருக்க வேண்டும்.

### கிராம சேவகர் (ஊர்நல அலுவலர்) இரண்டாம் நிலை

இவர்கள் நேரடி நியமனம் பெறுகிறார்கள், இவர்கள் பள்ளியிறுதிப்படிப்பு முடித்திருக்க வேண்டும்.

பதவி மாற்றங்கள் ஒரு வட்டாரத்திலிருந்து அடுத்த வட்டாரத்திற்கு வட்டார வளர்ச்சி அதிகாரியும், ஒரு கோட்டத்திலிருந்து அடுத்த கோட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவரும், ஒரு மாவட்டத்திலிருந்து அடுத்த மாவட்டத்திற்கு வட்டார வளர்ச்சி இயக்குநரும் பொறுப்புக் கொண்டுள்ளனர்.

## நகராட்சிப் பணியாளர் குழாம்

நகராட்சி ஏராளமான வகைப் பணிகளைக் கொண்டு இயங்கி வருகின்றது. உடல் உழைப்புத் தொழிலாளர்கள் முதல், தொழில் நுணுக்க வல்லுநர்களான மருத்துவ அதிகாரிகள், பொறியியலர்கள் மற்றும் பிறரைக் கொண்டுள்ளது. நகராட்சி மன்றங்கள், தொழில் நுட்பப் பதவிகள் மற்றும் தொழில் நுட்ப மற்ற பதவிகள் போன்றவற்றை உருவாக்க நகராட்சி ஆய்வாளரிடமும், அரசாங்கத்திடமும் அனுமதியைப் பெறவேண்டுமென ஒழுங்கு விதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. பொதுச் சுகாதாரப் பணியாளர்களைப் பொறுத்தவரையிலும், சுகாதாரப் பணிகள் மற்றும் குடும்ப நலத்திட்ட கூடுதல் இயக்குநரின் அனுமதியுடன் பதவிகள் ஏற்படுத்தப்படுகின்றன. ஆனால் பதவிகளை உருவாக்க, குறிப்பிட்ட அடிப்படை நியதிகள் வரையறுக்கப்படமால் இருக்கின்ற காரணத்தால், நகராட்சிகள் நேரத்திற்கேற்பப் பதவிகளை உருவாக்கிக் கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. இதனால் சில நகராட்சிகளில் பணியாளர்கள் தேவைக்கு மேல் மிகுதியாகவும், சில நகராட்சிகளில் குறைந்த எண்ணிக்கையுடன் பற்றாக் குறையாகவும் செயல்பட்டு வருகின்றனர். சில அடிப்படை நியதிகள் பொதுவாக வரையறுக்கப்பட்டு இருந்தாலுமே, அவை பல்லாண்டுகளுக்கு முன்பாக வரையறுக்கப்பட்டனவாகும். அவை இன்று பொருத்தமாகவும், செயல்படக் கூடிய வகையில் இல்லாமலும் உள்ளன. எனவே காலத்திற்கேற்ற மாற்றங்களுக்கு ஏற்றவயில், நகராட்சிகள் பொருத்தமாகவும், திறமையாகவும் செயல்படும் வகையில் அடிப்படை நியதிகள் வரையறுக்கப்பட வேண்டும்.

மக்கள் மத்தியிலும், நகராட்சி மன்றத்திலும் ஓர் அதிருப்தி நிலவுகின்றது. மக்களின் வரிப்பணங்களில் பெரும்பான்மை பணியாளர்களின் சம்பளத் தொகைக்கே செல்வது என்பது தான் அந்த அதிருப்தியாகும். ஆகவே பணியாளர்கள் மிகவும் அதிகரிக்காத அளவில், புதிய பதவிகள் முன் அனுமதியுடன், சீரிய பரிசீலனைக்குப் பிறகு தான் அனுமதிக்கப்படவேண்டும்.

நகராட்சியின் செய்கின்ற வேலைகளை அரசுத் துறையிலுள்ள அலுவலகத்தில் நடைபெறுகின்ற வேலைகளோடு ஒப்பீடு செய்ய முடியாது. ஓர் எழுத்தர், கணக்குகள் மற்றும் கடிதத்தொடர்பு போன்ற வேலைகளைச் செய்ய வேண்டியது இருக்கின்றது. அடிப்படை நியதிகள் நகராட்சிக்குப் பொருந்தும்படியாக அமைக்கப்படுகின்றன. வேலைகளின் தன்மை, வேலைகளின் அளவு போன்றவற்றைக் கணக்கிட்டு இவை முடிவு செய்யப்படுகின்றன.

இன்று ஏராளமான தேவையில்லாத செயல்முறைகள், காலத்திற்கு ஒவ்வாத வகையில் பின்பற்றப்பட்டு வருகின்றன. இதனால் எழுத்துவேலை மிகுதியாக உள்ளது. எனவே வேலையை எளிதாகச் செய்யவும், சிறப்பாகவும், சிக்கனமாகவும் செய்யவும் செயல்முறைகளை எளிதாக்க வேண்டும். வருவாய்ப்பிரிவு, கணக்கு, பொறியியல் போன்ற பிரிவுகளில் ஏராளமான மாற்றங்கள் செய்யப்படவேண்டும். வருவாயில் ஒவ்வொரு பிரிவு வருவாய் இனத்தையும் பல்வேறு பதிவுகளின் பதிவு செய்யவேண்டி உள்ளது. பதவு செய்யப்பட்டதும், பராமரிக்கப்பட பல்வேறு பதிவுகளில் மறுபடியும் பதிவு செய்யப்படுகின்றது. இதனால் ஏராளமான பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். இச் செயல்முறைகளை எளிதாக்கினால், பணியாளர்களையும் குறைக்க வழியுண்டு. இது குறித்து ஆராய, ஒரு வல்லுநர் குழு அமைக்க வேண்டுமென்பது அனைவரின் விருப்பமாகும்.

## ஆணையாளர் பதவி உருவாக்கப்படுதல்

சென்னை மாகாணத்தில், 1933–ஆம் ஆண்டு சட்டத் திருத்தத்திற்கு உண்டான நோக்கங்கள் மற்றும் காரணங்களாவன; நகராட்சித் தலைவர், நகராட்சி மன்றத்தின் முன்னர்வைக்கப்படுகின்ற ஆவணங்களைப் படித்து, முடிவு எடுக்க மிகுதியான நேரம் தேவைப்படுகின்றது. இவர் நகராட்சியில் தீர்மானம் கொண்டுவர பிரச்சனைகளை அறியவும், பிரச்சனை குறித்துப் பிற உறுப்பினர்களோடு கலந்து பேசி, விவாதித்து முடிவிற்கு வந்து தீர்மானம் நிறைவேற்றவும் அதிகமான நேரம் ஆகிறது. இச் சூழ்நிலையில் நகராட்சித் தலைவரால் தமக்குள்ள பல்வேறு அலுவல்களின் காரணமாகத் தமது முழு நேரத்தையும் நகராட்சிக்குச் செலவழிக்க முடியவில்லை. நகராட்சிகளில் வரி ஒழுங்காக வசூலிக்கப்படாமல் ஒவ்வோர் ஆண்டும் ஏராளமான பாக்கித் தொகை உள்ளது. வரிவிதங்களை மாற்றுவதற்கு உண்டான கோரிக்கை விண்ணப்பங்கள் ஏராளமாகக் குவிந்து, அவற்றின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் தேங்கியுள்ளன. நிருவாகச் செலவுகள் வீணாக செலவிடப்பட்டுள்ளதாக தணிக்கை ஏராளமான குற்றச்சாட்டுக்களைப் பணியாளர்கள் மீது சுமத்தியுள்ளது. எனவே இந்தக் குறைகளைப் போக்குகின்ற வகையில் நடவடிக்கை அவசியம். ஆணையாளர் தவிர மாநகராட்சி உறுப்பினர்களை, பணியாளர்களைத் தேர்வு செய்ய வேண்டும். நகராட்சித் தலைவர், தாம் தலைவராக வருவதற்கு உறுப்பினர்களையே சார்ந்திருக்க வேண்டும், வரிமதிப்பீடு, வரி வசூல், உரிமம் வழங்கல் ஆகியவற்றில் ஒரு சார்பாகவும் செயல்பட்டு, பல தவறுகளுக்கு இலக்காகியுள்ளார். இத்தவறுகள் விளைவது செயலாக்க அதிகாரம் நகராட்சித் தலைவரிடம் இருக்கின்ற காரணத்தினால் தான் ஆகும்.

எனவே செயலாக்க அதிகாரத்தை வெளியிலுள்ள அதிகாரியிடம் கொடுப்பது விரும்பத்தக்கது என்று அரசாங்கம் முடிவு செய்தது. இவ்வாறு செய்தால், நகராட்சி மன்றங்களைக் கலைப்பது, தள்ளுபடி செய்வது போன்ற செயல்கள் தவிர்க்கப்படும். ஏனெனில் நகராட்சி மன்றங்கள் சரியாக நிருவாகம் செய்யாததாலும் தவறுதலாக நிர்வகிக்கப்பட்டதாலும், திறமைக் குறைவாக இயங்கியதாலும் புறக்கணிக்கப்பட்டன. இவற்றிற்கு மூலகாரணம் நகராட்சித் தலைவர் ஆவார். இதனால் 1933–ஆம் ஆண்டுச் சட்டம் திருத்தப்பட்டது.

நகராட்சித் தலைவர் செயலாக்க அதிகாரியாக இருப்பதால் சில நன்மைகள் உண்டென்றும் விளக்கப்பட்டன. நகராட்சித் தலைவர் செயலாக்க அதிகாரியாக இல்லாவிட்டால், மக்களது குறைகளை நேரடியாகக் கவனிக்க முடியாது. நகராட்சித் தலைவரும் மற்ற உறுப்பினர்களும் நேரடியாக நிருவாகத்தில் பங்கு பெறுகின்ற காரணத்தினால் தான், நிருவாக விஷயங்களில் அக்கறை எடுக்கின்றனர், ஊதியமில்லாமல் கௌரவமாகச் செயல்படுவதில் பெருமை கொள்கின்றனர். அப்படியிருக்க அந்த அதிகாரத்தையும் பறித்துக் கொள்வதால், உறுப்பினர்களிடையே எந்தவித ஆர்வமும் இருக்காது. மக்களது குறைகளை கேட்டு பின்னர் அவற்றை அதிகாரிகளிடம் கூறி, களைய வேண்டும். அதிகாரிகள் இச்செயல்களைச் செய்யத் தவறினால், குற்றச் சாட்டுக்கள் முழுவதும் மக்கள் பிரதிநிதிகளிடமே வந்து சேரும். மக்களாட்சியில் மக்கள் பிரதிநிதியிடம் அதிகாரமில்லாமல், அதிகார வர்க்கத்தை நம்புவதில் பயனில்லை என்பதும் விளக்கப்பட்டது.

மேலும் நகராட்சி அனுபவமே இல்லாத அதிகாரிகளை நகராட்சி ஆணையாளர்களாக நியமிக்கின்றனர் என்பது மற்றொரு குற்றச்சாட்டு. ஏனென்றால் இவர்கள் வெளியிலிருந்து வரக்கூடியவர்கள்; நகரத்தில் எழுகின்ற பிரச்சனைகளைப்பற்றியும் நகராட்சி நிருவாக அனுபம் இல்லாதவர்களாவர் இவர்கள். மக்களின் பிரச்சனைகளையும், நகரப் பிரச்சனைகளையும் நன்கு தெரிந்தவர் நகராட்சித் தலைவரும் மற்ற உறுப்பினர்களும் ஆவர். எனவே இவர்கள் பிரச்சனைக்கேற்ப தீர்வு காணும் பக்குவம் பெற்றவர்களாவர். மேலும் ஆணையாளர்கள் தொடர்ந்து ஒரே நகராட்சியில் இருக்கக் கூடியவர்கள் அல்ல. அவர்கள் மாறுதலாகிக் கொண்டே இருப்பார்கள். எனவே இவர்கள் பிரச்சனைகளில் அதிக ஆர்வமெடுத்து முடிவெடுக்க எண்ணமாட்டார்கள். நல்ல திட்டங்களை நகராட்சித் தலைவரும். உறுப்பினர்களும் கொண்டுவந்தால், நடைமுறைப்படுத்த இயலாத திட்டம் என்றும், நிதி வசதி

போதுமானதாக இல்லையென்றும் காரணங்கள் கூறி ஆணையாளர்கள் தள்ளுபடி செய்ய முயலலாம். இதனால் நகராட்சித் தலைவருக்கும் பிற உறுப்பினர்களுக்கும் ஆர்வம் குன்றத் தொடங்கிவிடும். ஆணையாளர்கள் கோட்பாட்டளவில் நகராட்சியின் பணியாளர்களாக விளங்குகின்றனர். அவர்கள் நகராட்சிக்கு வந்ததும், அங்ஙனம் நினைப்பதில்லை. ஏனெனில் அரசாங்கம் தான் அவர்களை நியமனம் செய்கிறது. பதவி உயர்வுகள் அளிக்கிறது. நகராட்சிகள் எந்த விதத்திலும் பங்கு பெறுவது கிடையாது. எனவே இயற்கையாகவே பணியாளர் என்ற தலைமை மாறிவிடுவதுண்டு. மொத்தத்தில் நகராட்சியின் பார்வையில், ஆணையாளர்களை அரசாங்கம் நியமிப்பது மக்களாட்சிக்குப் புறம்பானதென்றும், நகராட்சித்தலைவர் வெறுமனே கூட்டங்களுக்குத் தலைமை தாங்கும் நபராக, அதிகாரமில்லாதவர்களாகச் செய்யப்பட்டால், மக்களது குறைகள் எளிதில் தீராது என்று எதிர்த்தபோதிலும் 1933–ஆம் ஆண்டுச் சட்டம் நிறைவேறியது.

ஆணையாளர்களைச் செயலாக்க அதிகாரிகளாக நியமித்த பின்னர் நகராட்சிகளின் அன்றாடச் செயல்முறைகள் முன்னைக் காட்டிலும் மிக நன்றாகச் செயல்பட்டன. ஆணையாளர் நிருவாகத்தின் கண்காணிப்பாளராக இருந்ததால் வரிவசூல் ஒழுங்காகச் செய்யப்பட்டது. பிற வருமானங்கள் அதிகரித்தன. வரி மாற்றங்கள் குறித்த கோரிக்கை விண்ணப்பங்கள் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வீண் செலவுகள், அதிகாரமற்ற செலவுகள் அனைத்தும் குறைந்தன. தணிக்கை எதிர்ப்புகள் குறைந்தன. பணியாளர்கள் மீது தனிக் கவனம் செலுத்தப்பட்டு, கண்காணிப்பு செம்மையாக்கப்பட்டது. எனவே புதிய முறைக்கு எதிர்ப்புக்கள் இருந்த போதிலும், சிறப்பான முறையென்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆணையாளர்களைச் செயலாக்கத் தலைமை அதிகாரியாக நியமித்ததால் நகராட்சி நிருவாகம் செம்மைப்பட்டதென முழுமையாகக் கூற முடியாது. ஏனெனில் பணிகள் அனைத்தும் மாநிலப் பணிகளாக மாற்றப்பட்டன. முதன்முதலாக சுகாதாரப் பணிகள் மாநிலப் பணியாக்கப்பட்டன. பின்னர் பொறியியல் பணியை மாநிலப் பணியாக்கியது. நகராண்மைப் பொறியலர்கள் மற்றும் நகராட்சி மின்பொறியாளர்கள் போன்றோர் இதில் அடங்கக் கூடியவர்களாவர். இப்பணிக்குக் குறைந்தப்பட்ச கல்வித் தகுதி, தேர்வு முறை, தண்டனை மற்றும் பிற பணிக் கட்டுப்பாடுகள் போன்றவை ஒழுங்கு முறைகளினால் நிருணயம் செய்யப்பட்டன. நகராட்சிப் பணியாளர்களுக்கு இந்த மாதிரியான கட்டுப்பாடுகள் விதித்த காரணத்தால், பொது நிருவாகம் சீரடைந்தது. இவ்வாறு மாநில அளவில் பணிகள் அமையப் பெறுகின்ற முறை தொடர வேண்டுமென ஆதரவும் வழங்கப்பட்டது. இருப்பினும் மாநில அரசாங்கம் நகராட்சி மன்றத்தின் அதிகாரத்தைப் பறிப்பது மக்களாட்சிக்கு விரோதமான ஒன்று என்பதில் சந்தேகமே இல்லை. ஏனெனில் இங்கிலாந்து போன்ற நாடுகளில், நகராட்சி மன்றம் தான் பொறியியலர்களை நியமிக்கும் அதிகாரம் கொண்டுள்ளது. நகராட்சி மன்றம் விளம்பரம் செய்து, பணிக்கு ஆள்சேர்க்கிறது. ஆனால் இந்தியாவில் அந்த மாதிரியாகச் செய்யவாய்ப்பு குறைவு. ஏனெனில் மாநில அரசாங்கத்தில் கூட சில பதவிகள் திறமையான பணியாளர்கள் கிடைக்கவில்லை என்ற வகையில் காலியாக உள்ளன என்கின்ற பொழுது, உள்ளாட்சிகள் எங்ஙனம் திறமையான பணியாளர்களை நியமிக்க முடியும்? மேலும் மாநிலங்களின் மூலமாக இப் பணிகளைக் கண்காணிப்புச் செய்தால், பணிகளும் வளர்ச்சியடையும், நகராட்சிகளும் பயனடையும். எனவே இப்படிப்பட்ட தொழில் நுணுக்கப் பணிகளைக் கண்காணிப்பதும், கட்டுப்படுத்துவதும் சாதாரண மக்களிடம் அதாவது தேர்ந்தெடுக்கப்படுகின்ற நகராட்சித் தலைவரிடம் விடப்படாமல், ஆணையாளரிடம் அமையும்படி செய்தல் வேண்டும். எனவே ஆணையாளரின் பணி அனைவரையும் ஒருங்கிணைத்து, ஒத்துழைப்பாகச் செயல்பட வைக்க வேண்டும்.

## நகராட்சி ஆணையாளர்

ஒவ்வொரு நகராட்சியிலும் ஓர் ஆணையாளர் இருக்கின்றார். அரசாங்கம் இவர்களை நியமிக்கின்றது. இவர்கள் முழுநேரப் பணியாளர்களாகப் பணிபுரிகின்றனர். இவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மற்றும் பிற செலவுத் தொகைகளை நகராட்சிகளிடமிருந்து முழுவதுமோ பகுதியையோ அரசாங்கம் பெற்றுக் கொள்கின்றது. நகராட்சி மன்றத்தின் தீர்மானங்களுக்குச் செயலாக்கம் கொடுக்க வேண்டியது

ஆணையாளரின் முக்கிய கடமையாகும். நகராட்சி மன்றத் தீர்மானம், சட்டத்திற்குப் புறம்பாகவோ, விதிகள், குறிப்பீடு, துணைச்சட்டங்கள் மற்றும் பிற அரசாங்க விதிகளுக்குப் புறம்பாக இருக்கிறதென ஆணையாளர் எண்ணினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட ஏழு தினங்களுக்குள் அரசாங்கத்தின் பார்வைக்குக் கொண்டு வர வேண்டும். தீர்மானங்கள் செயலாக்கப்படுவது குறித்த முன்னேற்றங்களையும், வரி வசூல் செய்வது வரவினங்கள் பற்றியும் நேரத்திற்கு நேரம் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். அரசாங்கம், நகராட்சி மன்றம் ஆகியன வேண்டுகின்ற பொழுதும் அறிக்கைகள் தயாரித்துக் கொடுக்கவும் வேண்டும்.

நகராட்சியின் அவசர வேலைகளைச் செய்ய, தடுத்துநிறுத்த ஆணையாளர் அதிகாரம் பெற்று உள்ளார். இவ்வேலைகளுக்கு நகராட்சி நிதியிலிருந்தே ஊதியம் வழங்கவும் வசதி செய்யப்பட்டு உள்ளது. ஆனால் அவசர வேலைகள், நகராட்சி மன்றம் தள்ளுபடி செய்த வேலைகளைச் செய்யக் கூடாது. நிருவாகத்திற்கு ஏற்படும் சிறிய செலவுகளை அனுமதிக்கவும் ஆணையாளர் அதிகாரம் பெற்று உள்ளனர்.

ஆணையாளர் நகராட்சி மன்றத்தின் கூட்டங்களிலும், குழுக் கூட்டங்களிலும் கலந்து கொள்கிறார், விவாதங்களிலும் பங்கு பெறலாம். ஆனால் தீர்மானம் கொண்டு வரவும், வாக்களிக்கவும் உரிமை பெற்றவரல்ல, நகராட்சித்தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க, அவர் கூறுகின்ற நகராட்சி மன்ற, குழுக் கூட்டங்களில் கலந்து கொள்கிறார். நகராட்சியின் பணியாளர்கள் அனைத்தும் அவருக்குக் கீழ் பணிபுரியக் கூடியவர்களாவர், அவர் தமது கடமைகளை எழுத்து மூல உத்தரவின் மூலமாக நகராட்சியின் ஒரு பணியாளரிடமோ அல்லது அரசாங்கப் பணியாளரிடமோ ஒப்படைப்புச் செய்யலாம்.

## நகராட்சி ஆணையாளர் நியமிக்கப்படும் முறை:

நகராட்சி ஆணையாளரின் பதவி நேரடி நியமனத்தின் மூலமும், பதவி மாற்ற நியமனங்களின் மூலமாகவும் நிரப்பப்படுகின்றன. நேரடி நியமனத்தின் இரண்டு வகையான நியமன வகைகள் உள்ளன. ஒன்று திறந்த வெளித் தேர்வு, மற்றொன்று நகராட்சி அலுவலகங்களின் மூன்று வருடங்களுக்குக் குறையாமல் பணிபுரிந்தோர் நியமனம் பெறுவது, நகராட்சி அலுவலக மேலாளர்கள், முதல் நிலை வகுப்பு கணக்கர் மற்றும் வருவாய் அதிகாரிகள், நகரிய மேலாளார்கள் ஆகியோர்கள் மூன்று ஆண்டுகள் பணிபுரிந்த பின்னர், நகராட்சி ஆணையாளர்களாக நியமிக்கத் தகுதிபெற்றவர்கள். திறந்தவெளி நியமனத்தில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்களும், 30க்கு மிகாத வயதுடையவர்களும் தேர்தெடுக்கப்படத் தகுதி பெற்றவர்கள். மேலும் நகராட்சி அலுவலர்களும் ஆணையாளர்களும் நியமிக்கப்படுவதற்குப் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றிருப்பதோடு, 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். இந்த இருமுறையைத் தவிர்த்து பதவி மாற்ற நியமனங்களும் உண்டு. இதில் ஊராட்சிகளின் விரிவாக்க அதிகாரிகள் செயலகப் பணியில் அதாவது கிராமப்புற வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிருவாகத் துறையில் உதவியாளர்களாக இரண்டு வருடங்கள் பணியாற்றியவர்கள், நகராட்சி நிருவாக இயக்குநர் அலுவலத்தில் கண்காணிப்பாளர்களாகப் பணியாற்றியவர்கள் போன்றோர் ஆணையாளர்களாக நியமிக்கப்படுவதற்குத் தகுதி பெற்றவர்களாவர். மேலும் பதவி மாற்ற நியமனத்தவர்கள், கணக்குத் தேர்வின் முதல் பாகத்திலோ அல்லது ஊராட்சி வளர்ச்சி கணக்குத் தேர்விலோ வெற்றி பெற்றவர்களாக இருக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணையாளரின் பதவியானது காலியிடங்களைப் பொறுத்து 20க்கு ஒன்றாக நிரப்பப்பட்டு வருகிறது. இந்த வரிசையின் படியாகத்தான் நியமனம் நடைபெற்று வருகிறது. அந்த வரிசையைக் காண்போம்.

1. நகராட்சி மேலாளர்கள், நகரிய மேலாளர்கள், கணக்கு, வருவாய் அதிகாரிகள் (முதல் நிலை நகராட்சி)
2. திறந்தவெளித் தேர்வில் பட்டதாரிகள்
3. விரிவாக்க அதிகாரி (ஊராட்சி)

4. செயலகப் பணி உதவியாளர்
5. நகராட்சி நிருவாக இயக்குநர் அலுவலக் கண்காணிப்பாளர்
6. நகராட்சி, நகர்ப்பிரிவு மேலாளர்கள், கணக்கு வருவாய் அதிகாரிகள் (முதல் நிலை)
7. திறந்த வெளி – பட்டதாரிகள்
8. விரிவாக்க அதிகாரி (ஊராட்சி)
9. செயலகப் பணி உதவியாளர்
10. நகராட்சி நிருவாக இயக்குநர் அலுவலகக் கண்காணிப்பாளர்கள்
11. நகராட்சி, நகரிய மேலாளர், மற்றும் பிறர்
12. பட்டதாரி
13. விரிவாக்க அதிகாரி
14. செயலகப் பணி உதவியாளர்
15. மேலாளர்
16. பட்டதாரி
17. விரிவாக்க அதிகாரி
18. செயலகப்பணி உதவியாளர்
19. திறந்தவெளி பட்டதாரி
20. விரிவாக்க அதிகாரி

இந்த வரிசைப் படிதான் நியமனம் செய்யப்பட்டு வருகின்றன.

நகராட்சி ஆணையாளர்களைத் தவிர்த்து, சுகாதார அதிகாரி, பொறியியலர்கள் முறையே நகராண்மை மற்றும் மின்சாரம் ஆகிய பதவிகள் அரசாங்கத்தில் நியமனம் செய்யப்படுகிறது. இவர்களின் ஊதியம் மற்றும் பிற செலவுகளில் முழுத் தொகையையோ ஒரு பகுதியையோ மாநில அரசாங்கம் பெற்று வருகின்றது. நகராட்சி ஆணையாளர்களின் முழு ஊதியத் தொகையையும், விடுப்பு ஊதியம், ஓய்வு ஊதியம், ஆகிய அனைத்துத் தொகையையும் நகராட்சியிடமிருந்து அரசாங்கம் பெறுகிறது. நகராட்சி பொறியியலருக்கு வழங்கப்பட்ட ஊதியத் தொகையில் 50 விழுக்காட்டையும், விடுப்பு ஊதியம் மற்றும் ஓய்வு ஊதியத் தொகைகளையும் பெறுகிறது. சுகாதார அதிகாரியைப் பொறுத்த அளவில், விடுப்பு ஊதியத்தையும், ஓய்வு ஊதியத்தை மட்டும் தான் பெற்று வருகிறது.

**நகராட்சிக்கெனக் கீழ்க்கண்ட ஆறுபணிகளை அரசு அமைத்துள்ளது:**

1. தமிழ்நாடு நகராட்சிப் பொதுப்பணி
2. தமிழ்நாடு நகராட்சிப் பொறியில் மற்றும் குடிநீர்ப் பணி
3. தமிழ்நாடு நகராட்சி நகர்த்திட்டமிடல் பணி
4. தமிழ்நாடு நகராட்சி மருத்துவப் பணி
5. தமிழ்நாடு நகராட்சிக் கல்விப் பணி
6. தமிழ்நாடு நகராட்சிப் பொதுச் சுகாதாரப் பணி

நகராட்சிகளின் ஆய்வாளர், நகராட்சித் தலைவர்களின் பிரதிநிதி மற்றும் பணித் துறைத் தலைவர்கள் அடங்கிய மாநில மாவட்டக் குழு, ஐந்து பணிகளுக்கு உள்ள உயர் அதிகாரிகளை நியமனம் செய்கின்றது. பிற பணியாளர்களைத் தேர்ந்தெடுக்க அந்தந்த நகராட்சி மன்றங்கள் நியமிக்கும் நியமனக் குழுக்கள் தேர்வு செய்கின்றன. நகராட்சி ஆய்வாளர் தேர்வுக் குழுவால் நியமனம் செய்யப்படுகிறார். மற்ற

நியமனங்களை, ஆணையாளர்கள் செய்ய அதிகாரம் கொண்டுள்ளனர். தமிழ்நாடு நகராண்மை பொதுச் சுகாதாரப் பணியைப் பொறுத்தவரை, கூடுதல் சுகாதரப் பணிகளில் இயக்குநரும், நகராண்மை சுகாதார அதிகாரிகளும் நியமனம் செய்யும் அதிகாரம் கொண்டவர்களாக உள்ளனர்.

செயலாக்கத் தலைமை அதிகாரியாக யாரை நியமிக்கலாம் என்பது ஒரு கேள்வி. நகராட்சித் தலைவரை செயலாக்கத் தலைமை அதிகாரியாக நியமித்தால், மக்களாட்சியில் உண்மையான நோக்கம் நிறைவேறியது போல் இருக்கும். அதிகாரிகளும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றவகையில் செயல்படுவர் என்பதும் உண்மைதான். ஆனாலும் செயலாக்கத் தலைமையாளருக்கு உதவி செய்யக் கூடிய பணியாளர்கள் நகராட்சி மன்றத்தின் வெளிக் கட்டுப்பாடுக் கண்காணிப்பால் தான் திறமையாகச் செயல்பட முடியும். பணியாளர்களின் நியமனம், பதவிக்காலம், பதவி உயர்வுகள், மாற்றங்கள் போன்றவற்றில் நகராட்சித்தலைவர் தொடர்பில்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும் நகராட்சித் தலைவர் நடைமுறையில் செயலாக்கத் தலைமையாளராக இருப்பதும் கடினமாகும்.

நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை, பதவித்தரங்கள், படிநிலை வரிசைகள் போன்றவற்றை அமைப்பது, அதற்குரிய ஊதியங்கள், கட்டணங்கள் மற்றும் செலவுத் தொகைகள் ஆகியவற்றிற்கு அனுமதி அளிக்கும் அதிகாரம் நகாரட்சி மன்றத்திடம் உள்ளது. இச்செயலை ஆணையாளர் செய்கிறார். ஆணையாளர் தயாரித்ததை நகராட்சி மன்றம் ஏற்றுக் கொள்கிறது.

மின்சார உற்பத்தி, விநியோகம் ஆகியவற்றை நகராட்சி மன்றம் மேற்கொண்டால், அரசாங்க அனுமதியுடன் மின்சாரப் பொறியியலர் பதவியை நகராட்சி மன்றம் உருவாக்கும். பின்னர் தனித்தீர்மானம் மூலம் உதவி மின்சார பொறியியலர் பதவிகளையும் உருவாக்கலாம்.

ஆணையாளர், ஆணையாளரின் தனி உதவியாளர். சுகாதார அதிகாரி, பொறியியலர், மின்சாரப் பொறியியலர், உதவிப் பொறியியலர்கள் ஆகிய பதவி நியமனங்களைத் தவிர்த்து, பிற நியமனங்களை எல்லாம் நகராட்சி மன்றம் நியமிக்கும் அதிகாரம் கொண்டுள்ளது. உயர்ந்த பட்சம் வரையறுக்கப்பட்ட வரையிலும் மாதச்சம்பளம் உள்ள பதவிகளை நகராட்சி மன்றம் நியமிக்கின்றது. ஆனால இப்பதவிகள் தமிழ்நாடு அரசுப்பணி ஆணையத்துடன் கலந்து தான் நிரப்பப்படுகின்றன. நகராட்சிகள் அத்தியாவசிய, அவசர நியமனங்களைச் செய்யவும் வழி செய்யப்பட்டுள்ளது. தற்காலிகமாக மூன்று மாதங்கள் மட்டுமே இருக்கக் கூடிய பதவிகள் நிரப்பப்படுவதற்கு அரசுப்பணி ஆணையத்துடன் ஆலோசிக்க வேண்டியதில்லை.

ஆணையத்திற்கும் நகராட்சி மன்றத்திற்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால், அவற்றை ஒழுங்கு படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அரசாங்கம் கீழ்க்கண்ட ஒழுங்குமுறைகளை சில குறிப்பிட்ட செயல்களுக்காக நிருணயித்துள்ளது. அவை:

1. ஆணையம் பின்பற்றுகின்ற பணியாளர்குழாம் விதிகளை அரசாங்கம் நிருணயித்துள்ளது. பதவிகளுக்கு விளம்பரம் செய்தல், விண்ணப்பங்களைப் பெறுதல், விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்தல், நேர்முகத் தேர்விற்கு விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவை குறித்த செயல்முறைகளை அரசாங்கம் வரையறுத்துள்ளது. இவற்றை ஆணையம் பின்பற்றி வருகின்றது.

2. நியமனங்களுக்கு விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுக்கும் செயல்முறையை ஆணையத்திற்கும், மன்றமானது ஆணையத்தோடு கலந்து கொள்ளும் செயல்முறை ஆகியவற்றையும் நிருணயித்துள்ளது.

3. அவசியமாகத் தேவைப்படுகின்ற காரியங்களுக்கு, ஆணையத்துடன் கலந்து கொள்ளும் செயல்முறை ஆகியவற்றையும் நிருணயித்துள்ளது.

ஆணையத்திற்கும் மன்றத்திற்கும் ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் கருத்து வேறுபாடுகள் இருந்தால், அவ்விஷயம் அரசாங்கத்தின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. அரசாங்கம் செய்யும் முடிவே இறுதியானதாகும்.

நகராட்சி மன்றம் பணியாளர்களுக்குரிய ஒழுங்கு முறைகளை ஏற்படுத்த அதிகார கொண்டுள்ளது. அவற்றில் சில:

1. கல்வி மற்றும் பிற தகுதிகள்

2. விடுப்பு வழங்கல், விடுப்புப் படிகள், பொறுப்புப் படிகள், பிரயாணப் படிகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துதல்.

3. ஓய்வூதியம் வழங்குதல், பணிக்கொடைகள்

4. வருங்கால வைப்புநிதிகள் நிறுவுவது, நடத்துவது அதற்கு உதவித் தொகையைக் கட்டாயமாக்குவது.

5. நடத்தையை ஒழுங்குபடுத்துதல்.

6. பொதுவான பணிக்கட்டுப்பாடுகள் செய்தல்.

நிர்வாகத்தில் மனித ஆற்றல் மிகவும் தவிர்க்க முடியாத ஒன்றாகும். இது மத்திய, மாநில, உள்ளாட்சி ஆகிய அனைத்து அரசாங்கங்களுக்கம் பொருந்தும். உள்ளாட்சி நிர்வாகத் திறமை உள்ளாட்சியில் பணியமர்த்தும் நிர்வாகிகளைப் பொறுத்து அமையும். எனவே தான் பணியாளர் குழாமிற்கு மிக முக்கியத்துவம் கொடுப்படுகின்றது. தகுதி வாய்ந்த பணியாளர்கள், முறையான பயிற்சிக்குப் பின்னர் பணியமர்த்தப்பட்டால் சீராக உள்ளாட்சியை நடத்துவர். உள்ளாட்சி முறையை அந்தஸ்தை பணியாளர்களுக்கு வழங்கினால், உள்ளாட்சியில் பணியுரிய பணியாளர்கள் ஆர்வமெடுப்பர். ஊதியம், பணிக்கட்டுப்பாடுகள், பதவி உயர்வு ஆகியவற்றுடன் பணியில் திருப்தியும் கொள்ள வேண்டும். எனவே உள்ளாட்சியானது திறமையான பணியாளர்களை ஊக்கத்தோடும், பணித்திருப்தியுடனும் செயல்பட வழி வகை செய்யவேண்டும்.

அதிகார வர்க்கத்திற்கு உள்ளாட்சி நிர்வாகம் ஒரு புதிய சவாலாக அமைந்திருக்கிறது டக்லஸ் என்ஸ்மிங்கர் கூறியது போல வளர்ச்சி நிர்வாகம் ஒரு விழிப்பினை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. உள்ளாட்சி நிர்வாக அதிகாரிகளிடையே ஒரு புதிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது உள்ளாட்சி நிறுவனங்களில் திறமையுள்ள அதிகாரிகளை அமர்த்தினால் ஒழிய எதுவும் செய்ய முடியாது. ஆனால் திறமை மிக்க அதிகாரிகளை உள்ளாட்சி அரசாங்கம் பெறமுடிவதில்லை.

உள்ளாட்சி அரசாங்கங்களில் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை அதிகாரிகளை மாநில அரசாங்கம் நியமிக்கும் உள்ளாட்சி அரசாங்கங்கள் இவ்வதிகாரிகளை கட்டுப்பாடு செய்ய முடியாததால் சிறந்த முறையில் செயல்படவில்லை. அரசாங்க உள்ளாட்சி நிறுவனங்களுக்கு இவ்வதிகாரிகளின் அந்தரங்க அறிக்கையை எழுதும் அதிகாரம் மட்டும் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களின் மேல் எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கை அதிகாரம் மாநில அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இவ்வதிகாரிகளின் மாநில துறைகளுக்குத்தான் அதிகப் பொறுப்புடையவர்களாக காணப்படுகிறார்கள். மாவட்ட மன்றத்திற்கும் சமிதிகளுக்கும் முக்கிய பதவிகளுக்கு பிரதிநிதியாக அனுப்பும் முறையிலுள்ள ஆட்சேர்ப்பு முறையினால் ஊராட்சி அரசாங்க நிறுவனங்கள் சிறந்த முறையில் செயல்பட முடியவில்லை.

ஊராட்சி அரசாங்க நிறுவனங்களில் கிராமசேகவர் பதவிக்குக் கூட தகுதிபெற்ற ஆட்களைச் சேர்க்க முடியாததற்குக் காரணம் பதவி உயர்வு வாய்ப்பின்மை ஆகும். ஊராட்சி நிறுவனங்களில் அதிகாரிகள் அல்லாதோரின் கட்டுப்பாடும் அவர்கள் தவறாக அதிகாரத்தைப் பயன்படுத்தினால் ஊராட்சி அரசாங்கப்பணியாளர்களுக்கு போதுமான பாதுகாப்பின்மையும், ஊராட்சி நிறுவனங்களின் தகுதிபடைத்த பணியாளர்கள் கிடைக்காததற்குக் காரணங்களாகும்.

இந்தியாவில் நகராட்சி அரசாங்கம் ஊழல் நிறைந்ததாகவும் திறமையற்றதாகவும் கருதப்படுகிறது. இதற்கு பல்வேறு காரணங்களைக் கூறலாம். முதலாவதாக மத்திய மாநிலப் பணியாளர்களை ஒப்பிடும் போது ஊதியம், வேலைப் பாதுகாப்பு முதலியவை உள்ளாட்சி அரசாங்கப் பணியாளர்களுக்கில்லை. இது உள்ளாட்சி அரசாங்க பணியாளர்களின், கௌரவத்தை பாதிக்கும் வகையில் இருக்கிறது. ஒருவருக்கு மத்திய அரசாங்கத்திலோ, மாநில அரசாங்கத்திலோ பணிகிடைக்காத பொழுதுதான் உள்ளாட்சி அரசாங்கத்தில் பணியாளராகச் சேர விரும்புகிறார். இரண்டாவதாக உள்ளாட்சி அரசாங்கத்தில் பணிபுரியும் பணியாளர்கள் பொது மக்களோடு நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது. இவ்வாய்ப்பு மிகக் குறைந்த சம்பளத்தில் பணிபுரியும் பணியாளர்கள், பொதுமக்களின் பணியைச் செய்வதற்கு பணத்தைப் பெறும் நிலையை ஏற்படுத்துகிறது. ஆகையால் உள்ளாட்சி அரசாங்கப் பணியாளர்களின் தரம் மிகக் குறைந்துவிடும்.

உள்ளாட்சி அரசாங்க நிறுவனங்களில் மூன்று வகையான பணியாளர் குழாம் முறை இருக்கின்றன.

1. ஒரே மாதிரியாக பணிகளைச் செய்யும் பணியாளர் குழாம் அமைப்பு (Uniform)
2. ஒருங்கிணைந்த பணிகளைச் செய்யும் பணியாளர் குழாம் அமைப்பு (Integrated)
3. தனியான பணியாளர் குழாம் அமைப்பு (Separate)

ஒரே மாதிரியான பணிகளைச் செய்யும் பணியாளர் குழாம் அமைப்பிலுள்ள பணியாளர்கள் மாநில அரசாங்கத்திலும், உள்ளாட்சி அரசாங்கத்திலும் பணிபுரிவர்கள் ஆவார்கள். மாநில அரசாங்கத்திலுள்ள இந்திய அரசுப்பணி அதிகாரிகள் உள்ளாட்சி அரசாங்கத்தில் மாநகராட்சி ஆணையாளராக அமர்த்தப் படுகிறார்கள். இவ்வதிகாரிகளை மாநில அராசங்கம், வேறு மாநகராட்சி ஆணையாளராகவோ அல்லது மாநிலப்பணிக்கு திரும்ப அழைத்துக்கொள்ளவோ கூடும்.

ஒருங்கிணைந்த பணிகளைச் செய்யும் பணியாளர் குழாம் அமைப்பில் உள்ளாட்சி அரசாங்க நிர்வாக அதிகாரிகளும் பொறியியல் வல்லுநர்களும் அடங்குவர். அப்பணியாளர்களை மாநில அரசாங்கம் மாநிலப் பொதுப்பணி தேர்வு ஆணையத்தின் மூலமாக தேர்ந்தெடுத்து உள்ளாட்சி அரசாங்க நிறுவனங்களில் அமர்த்துகிறது. இவ்வதிகாரிகளை உள்ளாட்சி அரசாங்களுக்கிடையே இடமாற்றம் செய்யலாம்.

தனியான பணியாளர் குழாம் அமைப்பிலுள்ள பணியாளர்கள் உள்ளாட்சி அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களை ஒரு உள்ளாட்சி நிறுவனத்திலிருந்து மற்றொரு உள்ளாட்சி நிறுவனத்திற்கு இடமாற்றீடு செய்ய முடியாது. பொதுவாக கீழ்நிலைப் பணியாளர்கள் இவ்வகையைச் சேர்ந்தவர்கள்.

எல்லா உள்ளாட்சி அரசாங்கங்களும் மேலே கூறிய மூன்று வகையான பணியாளர் குழாம் அமைப்பைப் பெற்றிருக்கின்றன.

உள்ளாட்சி அரசாங்கப் பணியாளர் குழாம் சிறந்த முறையில் அமைய உள்ளாட்சி அரசாங்கப் பணியாளர்களை முதல் வகுப்பு பணியாளர்கள், இரண்டாம் வகுப்புப் பணியாளர்கள், மூன்றாம் வகுப்பு பணியாளர்கள், நான்காம் வகுப்புப் பணியாளர்கள், என்று நான்கு வகுப்பாக வகைப்படுத்தலாம். முதல் வகுப்புப் பணியாாளர்களில், நிர்வாக மற்றும் தொழில் நுட்பப் பணியில் கொள்கைகளை வகுப்பவர்களை உள்ளடக்கலாம். இரண்டாம் வகுப்புப் பணியாளர்களில் நிர்வாகம் மற்றும் குறைந்த அளவில் கொள்கைகளை வகுப்பவர்களை உள்ளடக்கலாம். மூன்றாம் வகுப்புப் பணியாளர்களில் ஆய்வாளர், எழுத்தர் போன்றவர்களை உள்ளடக்கலாம். நான்காம் வகுப்புப் பணியாளர்களில் சேவகர்களை (Peons), உள்ளடக்கலாம். சம்பளத்தையும் மற்ற சலுகைகளையும் திருத்தியமைத்து சிறந்த பணியாளர்களை சேர்க்க உள்ளாட்சி அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். இதனால் உள்ளாட்சி அரசாங்கத்தில் இருக்கும் ஊழல் குறையலாம்.

## உள்ளாட்சி அரசாங்க நிறுவனங்களில் ஆட்சேர்ப்பு

ஆளுமை, திறமை, முதலிய தகுதிகளையுடைய பணியாளர்கள் சமுதாய வளர்ச்சிப் பணிகளுக்குத் தேவைப்படுகிறார்கள். ஆனால் மேலே கூறிய தகுதிகளையுடைய பணியாளர்கள் கிடைப்பது மிகக் கடினமாகும். இருந்தபோதிலும் சிறந்த ஆட்சேர்ப்பு முறையினால் சிறந்த பணியாளர்களைப் பெறலாம். ஊராட்சி அரசாங்கப் பணியாளர்கள் நேரடி ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு மற்றும் பணிகள் பிரதிநிதியாக அனுப்பும் முறை ஆகியவற்றின் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

சென்னை மாநகராட்சி 1919ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, மாநில அரசாங்கம் புதிதாக பணியாளர் பிரிவுகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். அதற்குரிய நியமன முறைகள், பணிக்கட்டுப்பாடுகள், ஊதியம் போன்ற பணியாளர் குழாம் பிரச்சனைகளை முடிவு செய்ய மாநில அரசாங்கம் அதிகாரம் கொண்டுள்ளது. இது ஒருங்கிணைக்கப்பட்ட (Integrated) பணியாளர்கள் குழாம் முறைமையில் அடங்கும். தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் 1920ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி மாநரகரப்பணியாளர் எவரையும் நகராட்சிகளுக்கு மாற்றம் செய்ய மாநில அரசாங்கம் அதிகாரம் கொண்டு உள்ளது. இது ஒருங்கிணைந்த முறை (unified)க்கு உதாரணமாகும். தனியான பணியாளர் இந்தியாவில் செயல்படவில்லை. இங்கிலாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளில் வெற்றிகரமாக இம்முறை செயல்பட்டுள்ளது.

ஆட்சேர்ப்பு, பயிற்சி, பதவி, உயர்வு, பணியாளர் தொடர்புகள், பணிக்கட்டுப்பாடுகள், ஒழுங்கு ஆகிய அனைத்தும் பணியாளர் குழாம் நிர்வாகத்தில் இடம்பெறும். பொதுவாக பதவிகளுக்கு விண்ணப்பிக்க பணியாளர்களை ஈர்ப்பதை ஆட்சேர்ப்பு என்பர். அதன் பின்னர் எவ்வாறு நியமனம் செய்யலாம் என்பது தொடங்கும் உள்ளாட்சியில் பணியிடங்களுக்கு பணியாளர்கள் விண்ணப்பிப்பது மிகவும் குறைவாக உள்ளது. ஏனெனில் அவர்களது பதவி உயர்வு கட்டுப்படுத்தப்பட்ட அளவில் குறைவாகவே உள்ளது. வாழ்வுப் பணியாக உள்ளாட்சிப் பணியை ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றனர். ஏனெனில் பதவி உத்தரவாதம் கூட இல்லை. ஆகவே திறமையான, தகுதி படைத்தவர்கள் உள்ளாட்சிப் பணிகளைப் புறக்கணிக்கின்றனர். ஊதியமும் ஒப்பிடுங்கால் குறைவாகவே உள்ளது. மாநில, மத்திய அரசாங்கங்களில் அதே பணிக்கு அதிகமான ஊதியம் வழங்கப்படுகின்றது.

மாநில அரசாங்கம் உள்ளாட்சிப் பணிகளை மாநில அரசின் பணிகளுக்கு இணையாகக் கொண்டு வர வேண்டும். அதே மாதிரியான ஊதிய முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வாறு செய்தால், உள்ளாட்சிப் பணிகளின் பதவிகளுக்கு தகுதியுடையோர், திறமையானவர்கள் விண்ணப்பிப்பர். இதனால் தகுதியுடையோர் உள்ளாட்சிப் பதவித் தரங்களில் இடம் பெறுவர். உள்ளாட்சியும் மேம்பாட்டையும் பணியாளர்களுக்கு பதவி உயர்வுகளும் கிடைக்கும். பணியாளர் பிரச்சனைகளைத் தெளிவாகத் தெரிந்து தமிழ்நாடு அரசாங்கம் உள்ளாட்சியில் பணியாளர்களில் சிலபிரிவினரை அரசாங்கப் பணியாளர்களாக மாற்றியுள்ளது.

நகராட்சி நிர்வாகத்தில் கீழ்க்கண்ட குறைகள் உள்ளன. அவை,

1. நகராட்சி நிர்வாகத்தில் நகராட்சி உறுப்பினர்கள் தலையிடுவதால் ஊழல், இலஞ்சம் மற்றும் பிற செல்வாக்குகள் தலைதூக்குகின்றன.
2. பயிற்சி பெற்ற நிர்வாகிகள் கிடைப்பது அரிதாக உள்ளது.
3. பணியாளர்களுக்குப் போதுமான பயிற்சிகள் வழங்கப்படவில்லை.
4. குறைந்த ஊதியம் பணியாளர்களை ஈர்க்கவில்லை.

5. நியமன அதிகாரத்தில் மன்றம், தலைவர், நிர்வாகி என மூவரும் கொண்டிருப்பதால் கட்டுப்பாடு அதிகமாக உள்ளது.
6. வேலை மதிப்பீடு, பராமரிப்பு முறையாக அமைக்கப்படவில்லை.
7. பணிப் பாதுகாப்பு பணியாளர்களுக்கு கொடுக்கப்படவில்லை.
8. ஒரே மாதிரியான நடத்தை விதிகள் உள்ளாட்சி அரசாங்கப் பணியில் இல்லை.
9. ஊதிய விகிதங்களும் ஒரே மாதிரியாக இல்லை.
10. ஓய்வூதிய விகிதங்களும் ஒரே மாதிரியாக இல்லை.

ஊராட்சி நிர்வாகப் பணியாளர் குழாம் நகராட்சி மாதிரிதான் எனினும், கிராமப்புறங்களில் பணிபுரியத் தயங்குகின்றனர். எனவே கிராமப்புற நிர்வாகம் கிராமப்புற நிர்வாகத்தின் கட்டுப்பாடில்லாமல் கிராமத்திற்கு மேலாக உள்ள ஊராட்சி ஒன்றியத்தின் வாயிலாக நிர்வகிக்கப் படுகின்றன. இரண்டு முறையான பணியாளர் குழாம் நிர்வாகம் நடைபெற்று வருகின்றது. உள்ளாட்சியில் பணிபுரிபவர்கள் மாநில அரசின் மேற்பார்வையின் கீழ், ஊராட்சி அமைப்புக்களின் வாயிலாக நிர்வகிக்கப்படுகின்றனர். ஆனால் முடிவான கட்டுப்பாட்டு அதிகாரம் மாநில அரசாங்கத்தைச் சார்ந்தது. தமிழ்நாடு இம்முறை கடைப்பிடிக்கப்படுகின்றது. மாநில அரசாங்கம் பதிவு பெற்ற, பதிவு பெறா அதிகாரிகளை உள்ளாட்சிகளுக்குப் அனுப்பி வைக்கின்றது. நேரடி நியமனம், பதவி உயர்வு மற்றும் பணிசார் முறை (deputation) ஆகிய முறைகளில் ஊராட்சியில் பதவித் தரங்கள் நிரப்பப்படுகின்றன. கீழ்மட்டப் பதவிகளை ஊராட்சிகளும், அதற்கு மேல் உள்ள பதவிகளை தேர்வு வாரியங்களும், பதவிகளை மாநில அரசாங்கத்தாலும் நிரப்பப்படுகின்றன.

## பயிற்சி

உள்ளாட்சி அரசாங்கம் திறமையற்று செயல்படுவதற்குக் காரணம் நல்ல கல்வி முறையும் பயிற்சியும் இல்லாமையாகும். சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் வெற்றி ஊரக மக்கள் உள்ளாட்சி அரசாங்கத்தில் பங்கேற்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. சமுதாய வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்தும் பணியாளர்கள் ஆர்வமும் மக்களிடம் மதிப்பும், சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் நம்பிக்கையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். பேட்டன் கூறியது போல சமுதாய வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்த பணியாளர்கள் மக்களுக்கு சமுதாய வளர்ச்சித் திட்டத்தைப் பற்றி கல்வி புகட்ட வேண்டும். இதற்கு உள்ளாட்சி அரசாங்க தலைவர்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும். மக்களிடமுள்ள வேறுபாடுகளை அகற்றி எல்லோரையும் பொது நன்மைக்காக பணிகளைச் செய்யத் தூண்ட வேண்டும். இத்தகுதிகளை சமுதாய வளர்ச்சித் திட்டம் பணியாளர்கள் பெற பயிற்சி அவசியம்.

பயிற்சியின் முக்கியத்துவம் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் வெகு காலத்திற்கு முன்பே உணரப்பட்டது. உள்ளாட்சி அரசாங்க நிர்வாகம் பற்றி படிப்பதற்கு பல்கலைக்கழகங்கள் புதிய பாடங்களை அறிமுகப்படுத்தின. மேலும் உள்ளாட்சி அரசாங்க அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்க உள்ளாட்சி அரசாங்கத்தால் நிறுவப்பட்ட பல பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. தேசிய அளவில் பன்னாட்டு நகர மேலாளர் பேரவை சிகாகோவிலும் தேசிய நகராட்சிப் பேரவை நியூயார்க்கிலும், கவுண்டிப் பேரவைகள் இங்கிலாந்திலும் செயல்பட்டு வருகின்றன. இப்பேரவை உறுப்பினர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தடவை வீதம் கூடி தங்களது அனுபவங்களை பரிமாறி உள்ளாட்சி அரசாங்க நிறுவனங்கள் சிறந்த முறையில் செயல்பட பரிந்துரை வழங்குகின்றனர்.

பணியாளர்கள் பணியில் சேருவதற்கு முன் அளிக்கப்படும் பயிற்சி நுழை முன் பயிற்சி எனப்படும். இப்பயிற்சி இந்திய பல்கலைக்கழகங்களில் உள்ளாட்சி அரசாங்கத்தைப் பற்றிய பாடத்தை பல்கலைக்கழகப்

பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்படுகிறது. உதாரணமாக சண்டிகாரிலுள்ள பஞ்சாப் பல்கலைக் கழகம் அமிர்தரசிலுள்ள குருநானக் பல்கழைக்கழகம் பாடியாலாவிலுள்ள பஞ்சாபி பல்கலைக்கழகம் மதுரையிலுள்ள மதுரை காமராசர் பல்கலைக்கழகம் முதுநிலை பட்டத்தில் உள்ளாட்சி அரசாங்கப் பாடத்தை அறிமுகப்படுத்தியிருக்கின்றன. இந்தியாவிலுள்ள மற்ற சில பல்கலைக்கழகங்களும் உள்ளாட்சி அரசாங்க பாடத்தை அறிமுகப்படுத்தியிருக்கின்றன. பம்பாயிலுள்ள அகில இந்திய உள்ளாட்சி அரசாங்க நிறுவனம் ஒரு தனியார் நிறுவனமாகும். இந்நிறுவனம், உள்ளாட்சி அரசாங்கத்தைப் பற்றிய ஒரு பத்திரிகையை வெளியிட்டு உள்ளாட்சி அரசாங்கப் பணியாளர்களுக்கு பயிற்சியும் அளித்து வருகிறது. உள்ளாட்சி அரசாங்க பாடத்தை நல்ல முறையில் கற்பிக்க உள்ளாட்சி அரசாங்க நிர்வாகத்தைப் படிப்பிக்கும் ஆசிரியர்கள் உள்ளாட்சி அரசாங்க நிறுவனங்களில் பணிபுரியவும் உள்ளாட்சி அரசாங்க அதிகாரிகள் பிரதிநிதியை அனுப்பும் முறையில் பல்கலைக் கழகங்களில் ஆசிரியர்களாக அமர்த்தப்பட்டு உள்ளாட்சி அரசாங்க நிர்வாக பாடத்தை நடத்துவதற்கு வகை செய்ய வேண்டும். இம்முறையினால் அரசாங்கம் பாடத்தை பயனுள்ள வகையில் மாணவர்களுக்குக் கற்பிக்க வழி வகுக்கலாம். அடுத்தபடியாக உள்ளாட்சி அரசாங்கத்தைப் பற்றிய ஆய்வுகளை நடத்த ஆர்வப்படுத்த வேண்டும். இவ்வாய்வுகள் உள்ளாட்சி அரசாங்கத்தின் பிரச்சனைகளை பகுப்பாய்வு செய்து அப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண வழிமுறைகளைக் கூறவேண்டும். உள்ளாட்சி அரசாங்கத்தை ஒரு பாடமாக எடுத்து படித்த மாணவர்களுக்கு உள்ளாட்சி அரசாங்க நிறுவனங்களில் பணியாளர்களாக நுழைய முன்னுரிமை வழங்குவதின் மூலம் இளைஞர்கள் உள்ளாட்சி அரசாங்கப் பாடத்தை எடுத்துபடிப்பதற்கு ஆர்வம் உண்டாக்கலாம்.

அடுத்தபடியாக உள்ளாட்சி அரசாங்கப்பணியார்களுக்கு பணியில் சேர்ந்தவுடன் கிடைக்கக் கூடிய பயிற்சியைப்பற்றி விவாதிக்கலாம். முதலாவதாக நகர உள்ளாட்சி பணியாளர்களுக்குக் கிடைக்ககூடிய பயிற்சி வசதிகளைப் பற்றி பார்க்கலாம். மத்திய அரசாங்கம் 1963–ஆம் ஆண்டு நகராட்சி பணியாளர்களுக்கு பணியில் சேர்ந்தவுடன் கிடைக்கக்கூடிய பயிற்சி வசதிகளைப் பற்றி ஆய்வு செய்ய ஒரு குழுவை அமைத்தது. அக்குழு நகாராட்சி நிர்வாக பயிற்சி மற்றும் ஆய்வு நிலையத்தை ஏற்படுத்தவும். வட்டார அளவில் நகராட்சிப் பணியாளர்களுக்கு பயிற்சியளிக்க கல்கத்தா, பம்பாய், லக்னோ மற்றும் ஹைதராபாத் நகரங்களில் வட்டார பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தவும் பரிந்துரை செய்தது. இப்பயிற்சி நிலையங்கள் கீழ்க்கண்ட பணிகளைச் செய்யவேண்டுமென்று பரிந்துரை செய்தது.

1. நகராட்சி நிர்வாக மற்றும் நகர வளர்ச்சிப் பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கும்;
2. நகர பிரச்சனைகளைப் பற்றிய கருத்தரங்குகளை ஏற்பாடு செய்யவும்.
3. நகரப்பிரச்சனைகளைப் பற்றி ஆய்ந்து சீர்படுத்த பரிந்துரை செய்யவும்.
4. பல்கலைக் கழகங்களோடு இணைந்து நகர நிறுவனங்களின் மேம்பாட்டிற்கு ஆய்வுகளை மேற்கொள்ளுதலும் ஆகும்.

இப்பொழுது ஊரக உள்ளாட்சி அரசாங்கப் பணியாளர்களுக்கு கிடைக்கக்கூடிய பயிற்சிகளைப் பற்றி விவாதிக்கலாம். ஊரக அரசாங்கப் பணியாளர்களுக்கு வளர்ச்சித்திட்டங்களை நிறைவேற்றுவதற்கான பொறுப்பு இருப்பதால் அவர்களுக்கு பயிற்சி மிக அவசியமாகிறது. மேலும் கிராமப் புறங்களில் இன்னும் படிப்பறிவில்லாத மக்கள் மிக அதிகமாக வாழ்கிறார்கள். அவர்களை வளர்ச்சிப்பணியில் ஈடுபடுத்த ஊரக உள்ளாட்சி பணியாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக இந்தியா முழுவதும் பல்வேறு பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்பயிற்சி நிலையங்கள் நிரந்தர உள்ளாட்சி நிறுவன பிரதிநிதிகளுக்கும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி நிறுவனப் பிரதிநிதிகளுக்கும், பயிற்சி அளிக்கின்றன. த்மிழ்நாட்டில் கோயம்புத்தூரிலும், பவானிசகாரிலும் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தை 1952–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டபொழுது குறுகிய கால முறைப்பட்ட பயிற்சி திட்டத்திற்கு வழிவகை செய்யப்பட்டது.

1956–ஆம் ஆண்டு கூடிய சமுதாய வளர்ச்சிக் கூட்டம் பயிற்சித் திட்டத்தில் மாற்றம கொண்டுவர வேண்டுமென்பதில் அவசியத்தை வலியுறுத்தியது. பயிற்சித் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பை மாநில அரசாங்களுக்கு மாற்றீடு செய்ய வேண்டும் என்று பரிந்துரை செய்தது. பயிற்சிகளைத் தேவைகளுக்குத் தகுந்தபடி அமைத்தல் வேண்டுமென்றும் பரிந்துரை செய்தது.

களத் தேவைகளுக்குகந்தபடி பயிற்சி அமைய வேண்டுமென்றால் பயிற்சி பெறுபவர்கள் களத்திற்கு சென்று பயிற்சி பெற வேண்டும். ஐந்து கிராமத்திட்டம் 1961–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு பயிற்சி நிறுவனமும் தீவிர வளர்ச்சிப் பணிகளை அதற்குப்பக்கத்திலுள்ள ஐந்து கிராமங்களை எடுத்துக் கொண்டு பயிற்சியளிக்க வேண்டுமென்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1955–ஆம் ஆண்டும் நடந்த வருடாந்திர சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் ஊராட்சிப் பணியாளர்களுக்கு கள ஆற்றுப் பயிற்சி வழங்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது ஆனால் இதுவரை கள ஆற்றுப் பயிற்சி அளிக்கப்படாததற்குக் காரணம் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களைக் களத்திற்கு அனுப்பி பயிற்சியளிப்பதிலுள்ள சிரமமேயாகும்.

பயிற்சி அளித்ததற்குப் பிறகு பயிற்சி பெற்ற பணியாளர்கள் எவ்விதம் செயல் புரிகிறார்கள் என்றறிந்து பயிற்சி சீரமைப்பு செய்யப் போதுமான நிதிவசதியும், பயிற்சி நிலையங்களில் போதுமான பணியாளர்களும் இல்லாதது ஒரு குறையாகும்.

ஊரகப் பகுதிகளில் தேவைகளுக்குத் தகுந்தபடி ஊராட்சி அரசாங்க பணியாளர்களின் பயிற்சித் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டிருகின்றன தேவையான மாற்றங்கள் பயிற்சித் திட்டங்களில் செய்யப்பட்டிருப்பதனால் ஊக்கப் பயிற்சியளிக்கவும், ஊராட்சி அரசாங்க நிறுவனங்களை ஒருங்கிணைந்து விவசாய உற்பத்தியைப் பெருக்கவும் வழிவகை செய்யப்பட்டிருக்கின்றன.

ஊராட்சி அரசாங்க நிறுவனங்களை மாநிலங்களில் அறிமுகப்படுத்தியதன் காரணமாக ஊராட்சி அரசாங்க பணியாளர்களிடமும் பணியாளர் அல்லாதவர்களிடமும் நல்ல மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக வட்டார வளர்ச்சி அதிகாரி சமிதிகளின் தலைமை நிர்வாகி அதிகாரியாகவும் செயல்புரிகிறார், ஊராட்சி அரசாங்க பணியாளர்கள் ஒரு புதிய அணுகுமுறையைக் கையாள வேண்டியிருப்பதால் அதற்குத் தகுந்த திறமைக்கான ஆற்றுப் பயிற்சியை வழங்க வேண்டும். மகாராஷ்டிராவில் 1971–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட போனிங்கவார் குழு மாநில அளவில் ஊராட்சி அரசாங்கப் பணியாளர்களுக்கு பயிற்சியளிக்க தனிப்பயிற்சி நிறுவனங்களை ஏற்படுத்த வேண்டுமென்றும் ஊராட்சி அரசாங்கத்தால் ஏற்படக்கூடிய பிரச்சனைகளை தீர்க்கவல்லதாக பயிற்சி நிறுவனம் அமைய வேண்டுமென்றும் பரிந்துரை செய்தது. 1973–ஆம் ஆண்டு ராஜஸ்தானில் ஏற்படுத்தப்பட்ட வியாஸ்குழு பயிற்சித் திட்டங்கள் சிறப்பாக அமைய பல பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. பயிற்சி எல்லாப் பணியாளர்களுக்கும் கட்டாயமாக்கப்படல் வேண்டுமென்றும் பயிற்சி பெற்றவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டுமென்றும் பயிற்சி பெறாதவர்களுக்கு ஊதிய உயர்வை நிறுத்திவைக்க வேண்டுமென்றும் பரிந்துரை செய்திருக்கிறது. ஆந்திரப்பிரதேசத்தில் 1972–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட நரசிம்மன் குழு, ஊராட்சி அரசாங்கப் பணியாளர்கள் எல்லோருக்கும் பயிற்சியளிக்க வேண்டுமென்றும், வட்டார வளர்ச்சி அதிகாரிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சியில் மாற்றம் கொண்டு வரவேண்டுமென்றும் பரிந்துரை செய்திருக்கிறது. இதேபோல் அஸ்ஸாமில் 1965–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட திருப்பாத்திக்குழுவும், குஜராத்தில் 1973–ஆம் ஆண்டு

ஏற்படுத்தப்பட்ட ஜூனாயாய், டார்ஜி குழுவும், உத்திரபிரதேசத்தில் 1964–ஆம் ஆண்டு ராமமூர்த்தி குழுவும் பயிற்சி முறைகளை செம்மைபப்படுத்த பரிந்துரை செய்திருக்கின்றன.

உள்ளாட்சி அரசாங்க நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியத்தைக் கூட்டி, நல்ல கல்வித் தகுதியுடைய பணியாளர்களைச் சேர்க்க வழி வகுக்க வேண்டும். அப்படிக் கல்வித் தகுதியுடைய பணியாளர்களைச் சேர்த்தால், பணிகளைச் சிறந்த முறையில் செய்யவும், ஊராட்சி அரசாங்கத்தில் ஊழல் குறைவதற்கும் வாய்ப்பு ஏற்படும். மேல்நிலைப் பணியாளர்களுக்கு நீண்ட காலப்பயிற்சியும் கீழ்நிலைப் பணியாளர்களுக்கு குறைந்த காலப்பயிற்சியும் அளிக்க வழிவகை செய்யப்படவேண்டும். உள்ளாட்சி அரசாங்க நிறுவனங்கள் சிறந்த முறையில் ஆய்வுகள் நடத்தவும் அரசாங்கம் ஊக்கமளிக்க வேண்டும். மேற்கூறிய பரிந்துரைகளை செயல்படுத்தினால் உள்ளாட்சி அரசாங்க நிறுவனங்கள் சிறந்த முறையில் செயல்பட முடியும் என்பதில் ஐயமில்லை.

**மாதிரி வினா**

**உள்ளாட்சி பணியாளர் குழாம் பிரச்சனைகள் யாவை?**

# பாடம் – 19

## உள்ளாட்சி நிதி நிர்வாகம்

உள்ளாட்சிகளின் நிதியானது வரிகள், பணி (Service) மற்றும் அரசாங்க மானியங்கள், கடன்கள் ஆகியவற்றைச் சார்ந்தது. வரிவீதங்களின் உயர்ந்த அளவு அரசாங்கத்தால் நிர்ணயம் செய்யப்படுகின்றது. எனவே வரிகள் மூலம் திரட்டும் அளவு வரையறைக்குட்பட்டது. நினைத்த வண்ணம் சுதந்திரமாக வரிவிதிக்கும் அதிகாரம் உள்ளாட்சிகளுக்குக் கிடையாது. உள்ளாட்சிகளின் வகைகளுக்கேற்ப வரிவீதங்கள் வித்தியாசமாக இருக்கும். நகராட்சிகள் ஊராட்சிகளைக் காட்டிலும் நிதிநிர்வாகத்தில் சுதந்திரமானதாகச் செயல்பட்டு வந்துள்ளது.

உள்ளாட்சிகளின் செலவினங்கள் பற்றி ஆய்ந்தால், நகராட்சிகள் பொது சுகாதரத்திற்கு அதிகமான செலவு செய்கின்றன. மக்கள் தொகைக்கேற்ப செலவுகள் செய்யப்படுகின்றன. மேலைநாட்டோடு ஒப்பிடுங்கால், செலவுகள் மிகவும் குறைவு.

### நிதி ஆதராங்கள்

உள்ளாட்சி ஒவ்வொன்றிற்கும் நிதி ஆதாரங்களை உள்ளாட்சிச் சட்டம் தெளிவாக வரையறுத்துள்ளது. எனவே வரையறுக்கப்பட்ட நிதி ஆதாரங்களை முறையாகத் திரட்ட உள்ளாட்சிகள் முயல வேண்டும்.

உள்ளாட்சிகள் வரிவிதிப்பின் மூலமாகமும், வரிவிதிப்பில்லா வரிகள் முறையே உள்ளாட்சிக் கட்டிடங்களிலிருந்து பெறும் வாடகை, வணிக முதலீடுகள், வணிக அங்காடிகள் (Commercial Complex) அபராதம் போன்றவை மூலமும் சில வரிகள் கட்டாய வரிகளாகவும், சில வரிகள் விருப்ப வரிகளாக, சில பணி வீதங்களாகத் (Service), திரட்டப்படுகின்றன. இவை தவிர, அரசாங்கத்திடமிருந்து மானியங்களைப் பெறுகின்றன. மானியங்கள் குடிநீர் வசதி, கழிவு நீரகற்றல், வீட்டு வசதி போன்றவற்றிற்கு ஒரே தடவையாகக் கொடுக்கும் மானியம் உண்டு. ஆராம்பப்பள்ளிகள் நடத்த தொடர்ந்து மானியங்களை அரசாங்கம் கொடுக்கும் பணியாளர் பஞ்சப்படி செலவுகளுக்கு உள்ள மானியம், உயர் பதவிகளுக்குரிய மானியமென பலவகை மானியங்களை அரசாங்கம் நேரத்திற்கு நேரம் வழங்கி வருகின்றது. வாகன வரியிலிருந்து அரசாங்கம் உள்ளாட்சிக்கென ஒரு தொகையை (Compensation) ஈடுகட்டும் அளவில் கொடுத்து வருகின்றது. மாநில அரசாங்கத்தின் ஒப்புதலோடு இக்கடன்கள் திரட்டப்படுகின்றன. ஒரு பெரிய வேலையைச் செய்ய, நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள, நோய் பரவாமல் தடுக்க, முன்னர் திரட்டிய கடன்களைக் கட்டுவதற்கென பலவகைளில் பொதுமக்களிடமிருந்து வாயிலாக உள்ளாட்சிகள் நிதி பெறுகின்றன.

## கிராம ஊராட்சி நிதி நிர்வாகம்

### வருவாய் ஆதாரங்கள்

1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளிலும், கிராம ஊராட்சி நிர்வாகம் திறம்பட இயங்கப் போதிய நிதி வசதி தொடர்ந்து கிடைப்பதற்கு வரிகளை விதித்து வசூலிக்கவும் பல்வேறு முறைகளில் கட்டணங்கள் வசூலிக்கவும், அவ்வப்போது அரசு அளிக்கும் மானியங்களைப் பற்றியும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

**கிராம ஊராட்சியின் வருவாய்களை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.**

அ வரி வருவாய்

ஆ. ஒப்படைக்கப்பட்ட வருவாய்

இ. கட்டணங்கள்
ஈ. பல்வகை வருவாய்
உ. அரசு மானியங்கள்
ஊ. திட்ட மானியங்கள்

## அ. வரிவருவாய்

ஒவ்வொரு கிராம ஊராட்சியும், அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்காணும் வரிகளை விதித்து வசூலிக்கலாம்.

1. வீட்டுவரி
2. நூலக வரி
3. தொழில் வரி
4. வேளாண்மை நிலங்களின் மீதான வரி
5. விளம்பர வரி
6. தொலைக்காட்சி (கேபிள் டி.வி.) வரி
7. குடிநீர் வரி

## 1. வீட்டுவரி

கிராம ஊராட்சிப் பகுதியில் கட்டப்பட்டிருக்கும் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் (விலக்கு அளிக்கப்பட்டவை தவிர) வீட்டு வரி விதிக்கப்படவேண்டும்.

இவ்வரியை சொந்தக்காரரிடமிருந்தோ அல்லது வீட்டில் குடியிருப்பவரிடமிருந்தோ வசூலிக்கலாம். குடியிருப்பவர் வீட்டு வரியைச் செலுத்தினால், வீட்டின் சொந்தக்காரருக்கு கொடுக்கவேண்டிய வாடகைத் தொகையில், தான் செலுத்திய வீட்டு வரியைத் கழித்து விட்டு மீதியைக் கொடுக்கலாம். வீட்டுவரி விலக்கு அளிக்கப்பட்ட கட்டிடங்கள் விபரம் பொதுமக்கள் தொழும் இடங்கள் – கோவில், மசூதி, மாதா கோவில், மடங்கள் முதலியன.

நிதி ஆணைய மானியத்தைக் கொண்டு கிராம பகுதிகளில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளலாம்.

## ஈ. வரியில்லா வரவினங்கள்

- அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கு உரிமக் கட்டணம்
- தொழிற்சாலைகளுக்கும் பட்டரைகளுக்குமான உரிமக் கட்டணம்
- வீட்டு குடிநீர் இணைப்புக்கான கட்டணத் தொகை
- தெருக்களுக்கான மற்றும் கிராம ஊராட்சி சாலைகள் ஓரத்தில் தற்காலிகமான ஆக்கிரமப்பு கட்டணம்.
- சரள், களிமண், மணல் இவற்றைத் தோண்டி எடுக்க உரிமக் கட்டணம்
- தனியார் சந்தைகள் உரிமக் கட்டணம்
- வேடிக்கை (கேளிக்கை)களுக்கு உரிமக் கட்டணம்
- தனியார் சந்தைகள் உரிமக் கட்டணம்
- நாய்கள் மற்றும் பன்றிகளுக்கு உரிமக் கட்டணம்

- ❖ பொதுச் சந்தைகளுக்கான கட்டணம்
- ❖ வண்டிப்பேட்டை, பேருந்து நிலையக் கட்டணம்
- ❖ பொதுச் சந்தைகளுக்கான கட்டணம்
- ❖ ஆடு, மாடு, அடிக்கும் (கசாப்பு) தொட்டி கட்டணம்
- ❖ விழாச் சந்தைகள் திருவிழாக் கடைகள் கட்டணம்
- ❖ தோணித்துறை படகுத்துறை, அல்லது பரிசல் துறைக்கட்டணம்
- ❖ கட்டிடங்கள் கட்டும் வகைக்கு உரிமக் கட்டணம், மனை வரைபடம் ஏற்பளிப்புக் கட்டணம்
- ❖ தனியார் கழிவு நீர்க்குழிக் கட்டணங்கள்
- ❖ பொது மக்கள் கூடுமிடம் (சினிமா தவிர்த்த) கேளிக்கைகளுக்கான உரிமக் கட்டணங்கள்
- ❖ கிராம ஊராட்சியில் அல்லது அதன் சார்பில் விதிக்கப்படும் அபராதங்களும் தண்டத் தீர்வைகளும்.

## 1. அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கு உரிமக் கட்டணம்.

கிராம ஊராட்சிப் பகுதியில் நடைபெறும் அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமக் கட்டணம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் இதுவரை வசூலிக்கப்பட்டு கிராம ஊராட்சிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் வரவு வைக்கப்பட்டது. 1999–2000 ஆண்டு முதல் கிராம ஊராட்சிகளே இக்கட்டணத்தை விதித்து வசூலிக்க சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

## 2. தொழிற்சாலைகளுக்கும் இயந்திரங்கள் நிறுவி இயக்குவதற்குமான கட்டணம்.

கிராம ஊராட்சிப் பகுதிகளில் தொழிற் சாலைகளுக்கான கட்டணமும் பட்டறைகளுக்கான கட்டணமும், இயந்திரங்கள் நிறுவி இயக்குவதற்கான கட்டணமும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் வசூலிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு வரவு வைக்கப்படுகிறது.

## 3. மரவரி

கிராம ஊராட்சிப் பகுதிகளில் வசூலிக்கப்படும் மரவரி கிராம நிர்வாக அலுவலரால் கிராம ஊராட்சி கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

## 4. நீதிமன்ற அபராதங்கள்

நீதி மன்ற அபராதங்கள் ஆண்டுக்கொரு முறை நீதித்துறை அதிகாரியால் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு வரவு வைக்கப்படுகிறது.

## இ. அரசு மானியங்கள்

### மாநில நிதி ஆணைய மானியம்

ஒவ்வொரு ஆண்டும் அரசு ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை மேம்படுத்தும் பொருட்டு மாநில நிதி ஆணைய மானியம் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படுகின்றது. மாநிலத்தின் மொத்த வரி வருவாயில் (கேளிக்கை வரி தவிர்த்து) 8சதவிகிதம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படுகின்றது. இந்த 8 சதவிகிதம் நிதியில் 15 சதவிகிதம் ஊக்குவிப்பு சமன்பாட்டு நிதியாக நலிவடைந்த உள்ளாட்சி

அமைப்புகளுக்கு பிரித்து வழங்கப்படுகின்றது. எஞ்சியுள்ள 85 சதவிகித நிதியில் 55 சதவிகிதம் நிதி மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கும் பிரித்து வழங்கப்படுகின்றது. இந்நிதியை கிராம ஊராட்சிக் கணக்கில் வரவுவைத்து, நிர்வாக செலவுகள் மற்றும் மூலதனப்பணிகளை மேற்கொள்ள வேண்டும். தற்போதுள்ள கல் சாலையை தார் சாலையாக மாற்றுதல், சிறிய பாலங்கள் கட்டுதல், தெரு விளக்குகளை விரிவாக்குதல், கைப்பம்பு, விசைப்பம்பு அமைத்தல், மக்கள் பயன்பெறும் வகையில் கட்டிடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளலாம்.

## சமன்பாடு மற்றும் ஊக்க நிதி மானியம்

நிதி நிலை குறைவாக உள்ள நலிவடைந்த கிராம ஊராட்சிகளுக்கும், இயற்கையின் சீற்றத்தால் பாதிப்புக்குள்ளாகும் கிராம ஊராட்சிகளுக்கும், மற்ற கிராம ஊராட்சிகளைப்போன்று சமமான வளர்ச்சி அடையும் பொருட்டு, மாநில நிதி ஆணைய மானியத்தில் 15 சதவிகிதம் நிதியில் குறிப்பிட்ட ஒரு சதவிகித நிதி நலிவடைந்த கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படுகின்றது. இந்நிதியை எந்த வகைக்காக எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டுமென்று அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

## மத்திய நிதி ஆணைய மானியம்

ஒவ்வொரு ஆண்டும் மத்திய நிதி ஆணைய மானியம், அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும், மக்கள் தொகை அடிப்படையிலும் தாழ்த்தப்பட்டவர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை அடிப்படையிலும், பிரித்து வழங்கப்படுகின்றது.

# ஊராட்சி ஒன்றிய நிதி நிர்வாகம்

1994ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றும் பொருட்டு சில வரிகளை அரசே விதித்து, வசூலித்து வழங்கவும், சில வரிகளை ஊராட்சி ஒன்றியம் விதிக்க வகை செய்து அவைகளை அரசு வசூலித்து தரவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவை தவிர அரசினால் ஒப்படைக்கப்பட்ட பல்வேறு பணிகளைச் செய்யவும், கடமைகளை நிறைவேற்றவும் பல்வேறு மானியங்களும் ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. ஊராட்சி ஒன்றியங்களுக்குரிய வரவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## அ. வரவினங்கள்

### அ. வரிகள்

தல வரி மேல் வரி

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய மன்றமும் ஊராட்சி ஒன்றிய மன்றப் பகுதியிலுள்ள நிலத் தீர்வை செலுத்தக் கடமைப்பட்டுள்ள ஒவ்வொரு நபரிடமிருந்தும் ஒரு தொகையை தலவரியில் மேல் வரியாக விதிக்கலாம். இந்த தலவரியின் மேல் வரி அந்த நிலம் குறித்துச் செலுத்தத்தக்க நிலவரியின் ஒவ்வொரு ரூபாயின் மீதும் குறைந்தது ரூ.5ம் கூடுதலாக ரூபாய் 10.00 வரையிலும் விதிக்கப்படலாம்.

ஒரு ஊராட்சி ஒன்றியத்தின் ஓர் ஆண்டில் இவ்வளவு தொகை வசூல் ஆகலாம் என்ற உத்தேச மதிப்பின் பேரில் முன்பணமாக மாவட்ட ஆட்சித் தலைவர் ஒவ்வொரு மாதமும் உத்தேசத் தொகையை ஊராட்சி ஒன்றிய கணக்கிற்கு ஈடு செய்வார். ஐமாபந்தி முடிந்தவுடன் வசூல் கணக்கைப் பார்த்து இறுதியாக மீதமுள்ள தொகையும் ஈடு செய்யப்படும்.

## கேளிக்கை வரி

ஒரு ஊராட்சி ஒன்றியப் பகுதியில் நடைபெறுகிற சினிமா தியேட்டர்களில் ஒவ்வொரு ஆண்டும்

வசூலிக்கப்படுகிற கேளிக்கை வரியின் மொத்த தொகையில் கீழ்க்கண்ட சதவீதத்தில் கிராம ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் இடையே பிரித்து வரவு வைக்கப்படுகிறது.

1. ஊராட்சி ஒன்றியம் 30 %
2. சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி 70 %

சம்பந்தப்பட்ட வணிகவரித்துறை அதிகாரியால் ஒவ்வொரு காலாண்டும் ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உரிய பங்குத் தொகையைப் பிரித்து ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கும் கிராம ஊராட்சி நிர்வாக அலுவலருக்கும் உதவி இயக்குநரால் (ஊராட்சிகள்) வழங்கப்படுகிறது.

## ஆ. கட்டணங்கள்

- ❖ தொழிற்சலைகளுக்கான அனுமதிக் கட்டணம்
- ❖ சந்தை உரிமைக் கட்டணம்
- ❖ தற்காலிக ஆக்கிரமிப்புக் கட்டணம்

கிராமங்களில் தொழிற்சாலை அமைக்கவும், அத்தொழிற்சாலையில் இயந்திரங்களை நிறுவி, இயக்கவும் அனுமதி வழங்கும் அதிகாரம் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு உள்ளது. விதிகளின்படி வசூலிக்கப்படலாம். ஊராட்சி ஒன்றியம் சந்தை நடத்தி வந்தால், வியாபாரிகளிடம் உரிமம் கட்டணம் நிர்ணயித்து வசூலிக்கலாம். ஊராட்சி ஒன்றியச் சாலை ஓரங்களிலும், ஒன்றியத்திற்கு சொந்தமான இடங்களிலும் ஆக்கிரமிப்பு கண்டுபிடிக்கப்பட்டு அத்தகைய ஆக்கிரமிப்பு ஆட்சேபணைக்குரியதல்ல என்று தீர்மானிக்கப்பட்டால் ஊராட்சி ஒன்றியம் தீர்மானிக்கும் விதத்தில் தற்காலிக ஆக்கிரமிப்பு கட்டணம் விதித்து வசூலிக்கப்படலாம்.

## இ. அரசு மானியங்கள்

### 1. சட்டப்படி அல்லாத அரசு மானியங்கள்

1. சமூகக் கல்வி மானியம்
2. மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்திட்ட மானியம்
3. கால்நடை பராமரிப்பு திட்ட மானியம்
4. கிராமத் தன்னிறைவு திட்டம்
5. சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்
6. பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம்
7. மறுவடிவமைக்கப்பட்ட மத்திய ஊரக சுகாதாரத்திட்டம்

### 2. சட்டப்படியான மானியங்கள்

1. மகப்பேறு மற்றும தாய் சேய் நல மையங்கள் பராமரிப்பு மானியம்
2. ஊரக மருந்தகங்களுக்கான பராமரிப்பு மானியங்கள்
3. தல பாசன மானியம்
4. மத்திய நிதி ஆணைய மானியம்
5. மாநில நிதி ஆணைய மானியம்
6. சமன்பாடு ஊக்கத் தொகை

### 1. ஊரக மருந்தகங்களுக்கான பராமரிப்பு மானியங்கள்

ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் இருக்கும் ஊரக மருந்தகங்களுக்கு ஆகும் செலவினத்தில்

50 சதவிகிதத்தை (ரூ. 5400க்கு மேற்படாமல்) அரசு மானியமாக அளித்து வருகிறது. இந்த நிதி உதவி அங்கரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள ஏற்கனவே இயங்கி வரும் மருந்தகங்களுக்கு மட்டுமே பொருந்தும். புதிதாகத் துவக்கப்படும் ஊரக மருந்தகங்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தின் நிதி நிலைமைக்கேற்ப 100 சதவீதம் வரை அரசு உதவி அளிக்கப்படலாம்.

## 2. தல பாசன மானியம்

3,28,076 எக்டேர் ஆயக் கட்டுள்ள 23761 சிறுபாசன ஏரிகளை ஊராட்சி ஒன்றியங்கள் பராமரித்து வருகின்றன. முறைப்படுத்திய பாசன வசதியில்லாத 100 ஏக்கருக்கு குறைவான ஆயக்கட்டுள்ள குளங்கள் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ளன. ஐந்து வருட சுழற்சி முறையில் ஒப்படைக்கப்பட்ட சிறிய நீர்ப்பாசன ஆதாரங்களான குளங்களையும் ஏரிகளையும் பராமரிக்கும் பொருட்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு தல பாசன மானியம் வழங்கி வருகிறது. இம்மானியத்தின் கீழ் சாதாரணப் பராமரிப்புப் பணிகளை எடுத்துச் செய்யலாம்.

## 3. மையநிதி ஆணைய மானியம்

இந்திய அரசியலமைப்பு 73வது மற்றும் 74வது திருத்தச் சட்டங்களின்படி மைய நிதி ஆணையம் நிதி உதவிக்கான ஆதாரங்களை பற்றி பரிந்துரைக்க வேண்டும். பல்வேறு மாநிலங்களின் நிதி ஆணையங்கள் மற்றும் பத்தாவது நிதி ஆணையம் ஆகியவற்றின் பரிந்துரைகளை ஆய்ந்து மத்திய அரசு பத்தாவது நிதி ஆணையம் பரிந்துரைப்படி நான்காண்டு காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடைக்கால நிதி ஒதுக்கீடு அனுமதித்துள்ளது.

மத்திய நிதி ஆணைய மானியமாக 1996–97ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ரூ.7183 கோடி மூன்று நிலை ஊராட்சிகளுக்கும் மூலதன பணிகளை எடுத்துச் செல்வதற்காக வழங்கப்பட்டது. இத்தொகை கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் எனப் பிரித்து வழங்கப்பட்டது.

## 4. மாநில நிதி ஆணைய மானியம்

தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில நிதி ஆணையத்தால் கொடுக்கப்பட்ட நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்காக பரிந்துரைகள் 01.04.97 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு பொருந்தும். இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் நிதி ஆதாரங்கள் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. அதன் விபரம் காணலாம்.

**சேர்மம் "அ" விலிருந்து ஒதுக்கப்பட்ட வருவாயக**

- உள்ளூர் வரி.
- முத்திரைக் கட்டண மேல்வரி.
- சிறு கனிமங்களின் மீதான உரிமைக்கட்டணம் ஆகியவை கிராம ஊராட்சிகளுக்கு முழுமையாக வழங்கப்படுகின்றன.
- உள்ளூர் தல மேல்வரி முழுமையாக ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்கப்படுகிறது.
- கேளிக்கை வரி கிராம ஊராட்சிக்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் 70:30 என்ற விகிதத்தில் பிரித்து வழங்கப்படுகின்றன.

**சேர்மம் "ஆ"ன் கீழ்**

அரசினால் நியமிக்கப்பட்ட மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி ஊராட்சிகளுக்கு கேளிக்கை வரியைத் தவிர இதர அனைத்து வரிகளில் 8 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒதுக்கீடு 1997–98ம் ஆண்டில், கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 47: 45:8 என்ற விகிதத்தில் பிரித்து வழங்கப்பட்டது.

1998–99ம் ஆண்ட இந்த விகிதாச்சாரம் 47: 45: 8 என்ற மாற்றப்பட்டது. மாநில நிதிக்குழுவின் ஒப்படைப்பு மானியங்கள் கீழ்க்கண்ட நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

❖ ஒப்புதல் அளிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுடைய சம்பளம் மற்றும் கூலி

❖ ஊராட்சி ஒன்றிய பணியாளர்களுடைய ஓய்வூதியம் மற்றும் சேமநல நிதி, பயணப்படி, தினப்படி மற்றும் இதர செலவினங்கள்

❖ அலுவலக பராமரிப்பு மற்றும் எழுது பொருட்கள், மின் கட்டணம், தொலைபேசிக் கட்டணம் முதலிய செலவினங்கள்

❖ அனைத்து ஊராட்சி ஒன்றியக் கட்டிடங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்ட கட்டிடங்கள் பராமரிப்பு

❖ ஊராட்சி ஒன்றியச் சாலைகள் பராமரிப்பு

❖ ஊராட்சி ஒன்றியங்கள் பொறுப்பில் உள்ள சிறிய நீர்ப்பாசன குளங்கள் பராமரிப்பு

கீழ்க்கண்ட அறிவுரைகளை அனைத்து உள்ளாட்சி மன்றங்களும் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

1. பணியாளர் ஊதியம், ஓய்வூதியம் மற்றும் சேமநல நிதிக்கான தொகை வழங்குதல், அலுவலக செலவினங்கள் முதலியவைகள் இம்மானியங்களின் முதல் செலவினமாகும்.

2. ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரை அனைத்து கட்டிடங்களைப் பராமரித்தல், அடுத்து முன்னுரிமை தர வேண்டியவையாகும்.

3. மேற்கூறிய இனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்த பின்னரே சாலை பராமரிப்பு சிறிய நீர்ப்பாசன குளங்கள் முதலியவைகளுக்காக செலவிடலாம்.

## 6. சமன்பாடு மற்றும் ஊக்க நிதி

❖ மாநில நிதி ஆணையப் பரிந்துரைக்கேற்ப மாநில அரசின் நிதி பகிர்ந்தளிப்பில் 15 சதவீதம் சமன்பாடு மற்றும் ஊக்க நிதியாக ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இவை ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கும் பொருந்தும்.
தாழ்த்தப்பட்டோா

## நகராட்சி நிதி

எல்லா இடங்களிலும் உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி வசதி மிகவும் குறைவாகத்தான் உள்ளது. அன்றாடம் எழுகின்ற பல வகைப்பட்ட புதிய பிரச்சனைகள் உள்ளாட்சி நிறுவனங்களைத் தங்களிடத்தில் உள்ள குறைவான நிதிவசதியில் பல கட்டாயப் பணிகளைச் செய்யக்கூடிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

நாட்டின் பொது வருவாய் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. ஒன்று மத்திய அரசாங்கத்திற்கும், மற்றொன்று மாநில அரசாங்கத்திற்கும் உரியதாகும். மாநில அரசாங்கங்கள் தங்களுடைய வருவாயில் தங்கள் விருப்பம் போல உள்ளாட்சி நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய உரிமை பெற்றுள்ளன.

சட்டத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ள வரிகள், கட்டணங்கள் ஆகியவற்றிலிருந்துதான் நகராட்சிகளுக்கு முக்கிய வருவாய் கிடைக்கின்றது. மாநில அரசாங்கத்திற்கு வரிகள் மூலம் வருகின்ற வருவாயில் ஒரு பங்கு, ஒரு சில பொதுக் காரியங்கள், சிறப்புக் காரியங்கள் ஆகியவற்றிற்காக மாநில அரசாங்கம் கொடுக்கின்ற மானியத்தொகையும் நகராட்சியினுடைய வருவாயாகும்.

உள்ளாட்சி நிறுவனங்களுக்கெனத் தனியானதொரு வருவாய்ப் பட்டியல் அரசியல் அமைப்பில் இல்லை. மேலும், மாநில அரசாங்கம் தன்னுடைய வருவாயில் ஏதேனும் ஒரு பகுதியை நகராட்சி நிறுவனங்களுக்குக் கட்டாயம் கொடுக்க வேண்டும் என்றும் அரசியலமைப்பு கூறவில்லை. 1919–ஆம் ஆண்டைய இந்திய அரசுச் சட்டத்தில் அட்டவணைப்படுத்தப்பட்ட வரிகளுக்குரிய விதிகள் (Scheduled Taxes Rules) ஒரு சில வரிகள் முழுமையாக உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மட்டும் உரியது என்று குறிப்பிட்டிருந்தது. இச்சட்டத்தினால் கீழ்க்கண்ட வரிகள் நகராட்சி நிறுவனங்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்தது.

1) பாதை வரி Toll

2) நிலம் அல்லது நிலமதிப்பின் மேல் வரி

3) கட்டிட வரி

4) வண்டி வாகன வரி

5) மிருகங்கள் மீதான வரி

6) பொருட்கள், வேலையாட்கள் மீதான வரி

7) வியாபாரம், தொழில் வரி

8) தனியார் சந்தைகள் மீதான வரி

9) குடிநீர், விளக்கு, சுகாதாரப் பணிகளுக்குரிய வரி மற்றும் சந்தைகள், பொது வசதிகளுக்குரிய கட்டணங்கள்.

1935–ஆம் ஆண்டைய இந்திய அரசுச் சட்டத்தின் அடிப்படையில் மாகாண சுயாட்சி அறிவிக்கப்பட்டபொழுது, மாகாணப் பட்டியலில் மேலே குறிக்கப்பட்டுள்ள வரிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

நகராட்சி நிறுவனங்களின் வருவாய் இரண்டு வகைப்படும். 1) வரிகளிலிருந்து கிடைக்கும் வருவாய் 2) வரிகள் இல்லாமல் கிடைக்கின்ற வருவாய்.

வரிகள் மூலம் கிடைக்கும் வருவாய் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1) சொத்துக்கள் மீதான வரி.

2) வியாபாரம், தொழில் வரி.

3) பொருட்கள் மற்றும் நுகர்வு ஆகியவற்றின் மீதான வரி.

4) மிருகங்கள் மற்றும் மோட்டார் வாகனங்களைத் தவிர, பிற வண்டி வாகனங்கள் மீது உண்டான வரி.

5) பிற வகையான வரிகள்.

நகர சபை வரிவிதிப்பு தீர்மானங்களை முன் மொழிதல் வேண்டும். குறிப்பிட்ட ஒரு படிவத்தில் அது மக்களுடைய பார்வைக்காக பிரசுரிக்கப்படுகிறது. பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள்ளாக வரிவிதிப்பு தீர்மானங்களில் எதற்கேனும் எதிப்பு இருந்தால் அதனை தெரிவிக்க வேண்டும். எதிர்ப்புக்களை சரியான முறையில் விவாதித்து நகரசபை ஒரு முடிவு எடுத்தவுடன் வரிவிதிப்புத் தீர்மானங்களை மாநில அரசாங்கத்தினுடைய முடிவிற்கு அனுப்பி வைக்கின்றது.

வரி இல்லாத வருவாய் என்பது அரசாங்கத்திலிருந்து கிடைக்கின்ற மானியத்தொகை, நகராட்சி உடைமைகளிலிருந்து வருகின்ற வாடகை, நகராட்சிப் பணிகளைப் பயன்படுத்துவதில் கிடைக்கின்ற கட்டணங்கள் மற்றும் நகராட்சி கொடுக்கின்ற உரிமை, அனுமதித்தொகை மற்றும் அபராதத் தொகை ஆகியவை அடங்கும்.

1951–ஆம் ஆண்டைய உள்ளாட்சி நிதி விசாரணைக் குழுவும், 1954–ஆம் ஆண்டைய வரிவிதிப்பு விசாரணைக் குழுவும், உள்ளாட்சி நிறுவனங்களின் நிதிநிலையை சட்டரீதியாக அதிகரிப்பதற்கான வழிகளை ஆராய்ந்தன. வரிவிதிப்பு விசாரணைக்குழு கீழே கொடுக்கப்பட்டுள்ள வரிகள், கட்டணங்கள் ஆகியவை முழுமையாக உள்ளாட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இதனை மாநில அரசுகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தன்னுடைய அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது.

1) நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் மீதான வரி.

2) பொருள் மீதான நகர் சுங்கவரி.

3) மோட்டார் வாகனங்கள் தவிர, மற்ற வண்டி வாகனங்கள் மீதான வரி.

4) மிருகங்கள் மீதான வரி.

5) உத்தியோகம், வேலை, தொழில் ஆகியவற்றின் மீதான வரிகள்.

6) பத்திரிகைகளில் வந்துள்ளவை நீங்கலாக உள்ள பிற விளம்பரங்கள் மீதான வரி.

பொழுதுபோக்கு மீது வரிவிதிக்க நகராட்சிகளுக்கு உரிமை வழங்கப்பட வேண்டுமென்றும், சொத்துக்களை மாற்றுவதற்குரிய கட்டணத்தை மாநில அரசாங்கமும், பத்திரங்களுக்குரிய கட்டணத்தை நகராட்சிகளும், எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் வரிவிதிப்பு விசாரணைக்குழு பரிந்துரை செய்திருந்தது. வரிகளின் மூலம் வருகின்ற மொத்த வருவாயை மத்திய, மாநில அரசாங்களுக்கிடையே பகிர்ந்து கொடுக்க வேண்டிய நகராட்சி நிதிக்குழு ஒன்று நியமனம் செய்வது சம்பந்தமாக – அரசியல் அமைப்பின் 280–வது விதி குறிப்பிடுகிறது. மேலும், இவ்விதியில் இந்திய தொகுதியினின்று மாநிலங்களுக்கு மானியம் வழங்கக்கூடிய கோட்பாடுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

நகராட்சி அரசாங்க நிர்வாகத்தைப் பற்றி ஆய்வு நடத்திய ஒவ்வொரு குழுவும், நகராட்சிகளுடைய நிதி நிலைமை பற்றாக்குறையாகத் தான் இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளன. நிதி சம்பந்தப்பட்ட வரையில் உள்ளாட்சி அரசாங்கங்கள் தாமாகவே இயங்கக்கூடிய வழியில் அவைகளுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அவைகள் தாமாகவே இயங்கக்கூடிய நிலையில் இருந்தால்தான் தங்களுக்கென உள்ள வருவாய்களை வசூல் செய்து தமக்குரிய கட்டாயப் பணிகளை செம்மையாகச் செய்ய முடியும். மேலும், ஒவ்வொரு பணியை நிறைவேற்றுவதற்கும் மாநில அரசை எதிர்பார்த்திருக்க வேண்டியதில்லை. நகராட்சி நிறுவனங்கள் நிதி சம்பந்தமாகத் தாமாக இயங்கக்கூடிய நிலை இருப்பின், அது மாநில அரசாங்கத்திற்கும், நகராட்சி அரசாங்கத்திற்கும் நன்மை பயக்கும்.

மாநகராட்சி நிதி நிர்வாகம் மாநகராட்சி பாடத்தில் விளக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சிகளில் வரவுசெலவுத் திட்டமுறையில் கீழ்க்கண்ட குறைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அவை,

1. வரவு செலவுத் திட்டம் உருவாக்கும் முறையே குறையுள்ளதாக உள்ளது.
2. நிதிக் கொள்கைகள் தெளிவுபட விளக்கப்படாமல் வரவு செலவுத் திட்டம் உள்ளாட்சிகளில் உள்ளது.
3. வேலைத்திட்டங்கள் தெளிவாக வரையறுக்கப்படவில்லை.

4. வரவு, செலவுகள் பொதுவாக கூட்டியும் குறைத்தும் தான் உள்ளன.
5. வரவு செலவுத்திட்ட வகைப்பாடுகள் குழப்பமாகவே உள்ளது.
6. வருவாய் செலவினங்கள், முதலீட்டுச் செலவினங்கள் ஆகியன தெளிவாக்கப்படவில்லை.

எனவே உள்ளாட்சிகள் வரவு செலவுத்திட்டத்தில் முறையான கவனம் செலுத்த வேண்டும்.

பல்வேறு வகைப்பட்ட வரிகள் பல்வேறு கட்டணங்கள், சொத்துக்கள் மூலம் கிடைக்கக்கூடிய வருமானம், அரசாங்க நிறுவனம் மூலமாக கிடைக்கக்கூடிய வருமானம், அரசாங்க மானியங்கள் ஆகியவைகள் மூலமாக உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு வருமானம் கிடைக்கிறது. நகராட்சிகள் பல்வேறு வகைப்பட்ட வரிகள், விதிப்பதன் மூலம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்கின்றன. நகராட்சிகள் செயல்படுவதற்கு அரசாங்க மானியங்களை பெருமளவு நம்பியிருப்பதில்லை. ஆகையால் நகராட்சிகள் நிதிநிலை விசயத்தில் அதிக சுதந்திரத்துடன் செயல்படுகின்றன. நகராட்சிகளை ஊராட்சிகளோடு ஒப்பிடுகையில், வருமானம் மற்றும் செலவினம் ஆகிய விசயங்களில் பெருமளவு வித்தியாசம் இருக்கிறது. நகரங்களில் வசிக்கக்கூடிய மக்களுக்கு நகராட்சிகள் செய்து கொடுக்கின்ற பொது வசதிகளில் ஒன்பதில் ஒரு பங்கு கூட கிராமத்தில் வசிக்ககூடிய மக்களுக்கு ஊராட்சி அரசாங்கம் செய்து கொடுப்பதில்லை. நகராட்சிகளின் செலவினங்களில் பெரும்பகுதி சுகாதாரத்திற்காகச் செலவிடப்படுகிறது மேற்கத்திய நாடுகளிலுள்ள உள்ளாட்சி அரசாங்களின் வருமானம் மற்றும் செலவினங்களை, நமது நாட்டின் உள்ளாட்சி அரசாங்க வருமானம் மற்றும் செலவினங்களோடு ஒப்பிடும் போது நமது உள்ளாட்சி அரசாங்கத்தின் வருமானம் மற்றும் செலவினங்கள் மிகக் குறைவாக இருப்பதைக் காணலாம்.

## இந்திய உள்ளாட்சி அரசாங்கங்களின் குறைந்த வருமானம் மற்றும் செலவுக்கான காரணங்கள்

இந்திய உள்ளாட்சி அரசாங்கங்களின் குறைந்த வருமானம் மற்றும் செலவுக்கான முக்கிய காரணம் நாட்டின் ஏழ்மை நிலையாகும். மேற்கத்திய நாடுகளை ஒப்பிடும்பொழுது இந்தியா ஒரு ஏழை நாடாகும். மக்கள் ஏழ்மை நிலையிலிருப்பதால் அவர்களுக்கு வரி கொடுக்கும் திறன் இல்லை. மக்களின் பொருளாதார நிலை மேம்படும் வரையில் மக்களின் வரிகொடுக்கும் திறனும் உயராது.

இரண்டாவதாக, மைய, மாநில மற்றும் உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு வருமான இனங்கள் பங்கீடு செய்யப்பட்டுள்ளதில், பெருவாரியான வருமான இனங்கள் மத்தியமாநில அரசாங்கங்களுக்கும், மிகக் குறைவான வருவாய் இனங்கள் உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. மற்ற நாடுகளில் உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வருமான இனங்கள் நமது நாட்டில் உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக நிலவரி மற்ற நாடுகளில் உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வருமான இனங்கள்; நமது நாட்டில் உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக நிலவரி மற்ற நாடுகளில் உள்ளாட்சி அரசாங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அது இந்தியாவில் மாநில அரசாங்கத்தின் இனமாக ஆக்கப்பட்டுள்ளது.

மூன்றாவதாக, உள்ளாட்சி அரசாங்கங்கள் வரியை அதிகப்படுத்துவதற்கு தயக்கம் காட்டுவதும் ஒரு காரணமாகும். உதாரணமாக வீடு மற்றும் நிலங்களின் மதிப்பு, அவற்றின் மீதான வரிவிதிப்பு ஆகியவை உண்மையான மதிப்பைவிடக் குறைவாகவே மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் மதிப்பை நிர்ணயிக்கின்ற பணியாளர்களின் திறமையின்மையும் நேர்மையின்மையும் ஆகும். இவை உள்ளாட்சி அரசாங்கங்கள் தங்களுடைய வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியாததற்குக் காரணம். வரிவிதிப்பு அதிகாரங்களை முறையாகவும் முழுமையாகவும் செயல்படுத்தாததே காரணம் ஆகும்.

இந்தியாவில் உள்ள உள்ளாட்சி அரசாங்கங்கள் கடன்கள் மூலம் தங்கள் வருமானத்தைப்பெருக்கிக் கொள்வதற்கு வாய்ப்பு இல்லாமை ஒரு குறைபாடாகும். 1914–ஆம் ஆண்டின் உள்ளாட்சி அரசாங்கக் கடன்

திட்டத்தின் படி, அவை 30 ஆண்டுகளுக்குள் செலுத்தப்படவேண்டிய கடனைத்தான் பெற இயலும். அந்தக் கால அளவிற்கு மேற்படின் மத்திய அரசாங்கத்தின் சிறப்பு அனுமதியைப் பெற வேண்டும். இதைப் போன்று 5 லட்சத்திற்கு மேல் கடன் தொகையை பெருக்க வேண்டுமென்றாலும் மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெறவேண்டும். நம் நாட்டில் இக்கடன் தொகைகள் குடிநீர், வடிகால், சாலைகள், அங்காடிகள் மற்றும் வீடுகள் அமைக்கும் பொருட்டு எழுப்படுகின்றன. மத்திய அரசாங்க மானியங்கள் உள்ளாட்சி அரசாங்கங்களின் செலவினங்கள் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன.

## உள்ளாட்சி அரசாங்கத்தின் வருமானத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்

பல்வேறு ஆணையங்கள் உள்ளாட்சி அரசாங்களின் வருமானம் சம்பந்தமான பிரச்சனைகளை ஆய்ந்து வருமானத்தைப் பெருக்குவதற்கு பரிந்துரை செய்ய நியமிக்கப்பட்டிருக்கின்றன. வரிவிதிப்பு ஆய்வுக்குழு (1925), உள்ளாட்சி அரசாங்கத்தில் வருமானத்தைப் பெருக்குவதற்குக் கீழ்க்கண்ட பரிந்துரைகளை அளித்திருக்கின்றது.

1. மாநில அரசாங்கங்கள் தங்களுடைய நிலவருமானத்தை 20லிருந்து 65 சதவிகிதமாக நிலைப்படுத்திக் கொண்டால், உள்ளாட்சி அரசாங்கங்கள் அதற்கு சமமான நிலத்தீர்வையை அதிகரித்து அதன் மூலமாக உள்ளாட்சி அரசாங்கங்கள் தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும்.

2. மாநில அரசாங்கம் வீட்டு மனைகள் மூலம்கிடைக்கும் வருவாயின் பெரும் பகுதியை நகராட்சிகளுக்குக் கொடுக்க வேண்டும்.

3. விளம்பரத்திற்கு வரிவிதிக்கின்ற அதிகாரம் நகராண்மைக் கழகங்களுக்குக் கொடுக்க வேண்டும்.

4. நிதி வளர்ச்சித் திட்டங்கள் குறித்துச் சிறப்பு மதிப்பீட்டு அதிகாரங்கள் ஊரக மற்றும் நகர அரசாங்க அமைப்புகளுக்கு வழங்கவேண்டும்.

5. கேளிக்கை மற்றும் பந்தயங்கள் மீதான வரிவிதிப்பை அதிகரித்து அது சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் உள்ளாட்சி அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும்.

6. சொத்துவரி, வணிகவரி, தொழில்வரி ஆகியவற்றை அதிகரிக்க வேண்டும். குறிப்பாக வரி மதிப்பீடு மற்றும் வரிவசூல் ஆகிய பணிகளை செம்மைப்படுத்த வேண்டும்.

7. மாநில அரசாங்கம் போக்குவரத்து வாகனங்கள் மீதான வரியைத் தானே வதித்து அதன் மூலம் கிட்டுகின்ற வருமானத்தை உள்ளாட்சி அரசாங்க நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும்.

8. குறிப்பிட்ட இடங்களில் உள்ளாட்சி அரசாங்க நிறுவனங்கள் வருமானப் பதிவுகளுக்கென ஒரு கட்டணம் வசூலிக்கலாம்.

9. அரசாங்கத்தின் உதவி மானியங்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பணிகளுக்கு விஸ்தரிக்க வேண்டும். அம்மானியங்கள் மிகச் சுலபமான எளிய அடிப்படைகளின் கீழ் வழங்கப்படவேண்டும்.

10. ஆக்ட்ராய் எனும் சுங்கவரியை எங்கெங்கு நீக்குவதற்கு இயலுமோ அங்கெல்லாம் நீக்க வேண்டும். பதிலாக நிலவரி, மனைவரி, தொழில் வரி, விற்பனை வரி ஆகியவற்றின் மூலம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம்.

உத்திரப்பிரதேச உள்ளாட்சி அரசாங்கக் குழு (1938) கீழ்க்காணும் பரிந்துரைகளை வழங்கியது.

1. நிலத் தீர்வையை அதிகரிப்பதன் மூலம் உள்ளாட்சி அரசாங்க வருவாயைப் பெருக்கலாம். மேலும் சட்டப்பூர்வமாக உயர்ந்த பட்சநிலத்தீர்வை விதிப்பதன் மூலமும் வருவாயைப் பெருக்கலாம்.

2. கிராமப்புறங்களில் வீட்டுவரி, நிலவரி, விதிப்பதன் மூலமும் (விவசாய நிலங்களைத் தவிர) வருவாயை அதிகரிக்கலாம். இவ்வரி விதிப்பு நடவடிக்கைகளை ஊராட்சிகளிடமும் பேரூராட்சிகளிடமும் ஒப்படைக்கலாம்.

3. கிராமங்கள் மற்றும் நகரங்களில், வட்டிக் கடைக்காரர்கள் மீதும் வரி விதிக்கலாம்.

4. நகராட்சிகளில் கேளிக்கைகள், பந்தயப் போட்டிகள், விற்பனைப் பொருட்கள், வாணிப விளம்பரங்கள் ஆகிய இனங்களின் மீது வரி விதிப்பைக் கொணரலாம்.

**5. மேலும் உள்ளாட்சி அரசாங்கம் உள்ளாட்சி ஆட்சி நிறுவனங்களுக்குக் கீழ்க்காணும் வழிகளில் நிதி உதவி செய்யலாம்.**

(i) வாகனவரி, எரிபொருள் தீர்வைமூலம் கிட்டுகின்ற வருமானத்தில் ஒரு பகுதியையும்

(ii) நீதிமன்ற கட்டணங்கள் மூலம் பெறும் வருவாயில் ஒருபகுதியையும்

(iii) ஆவணங்கள் மீது சிறிதளவு வரியை, உயர்த்தி அதன் மூலம் பெறுகின்ற மொத்த வருவாயின் 1/10 பங்குப் பகுதியும் தரலாம்.

## உள்ளாட்சி நிதி விசாரணைக் குழு (1950)

உள்ளாட்சி நிதி சம்பந்தப்பட்ட விசயங்களில் பரிந்துரைகள் வழங்கும் பொருட்டு இந்திய அரசாங்கத்தால் இக்குழு ஏற்படுத்தப்பட்டது. மிகத் தீவிரமான ஆய்வுக்குப் பின்னர் இக்குழு கீழ்க்காணும் முக்கியமான பரிந்துரைகளை வழங்கியது.

1. மத்திய பட்டியலில் காணப்படும் ஆண்டுப் பருவவரிகள் மற்றும் மாநிலப் பட்டியலில் காணப்படும் பல வரி இனங்கள் ஆகியவை முழுவதும் உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும். மேலும், தாதுவளங்கள் உரிமைகள் மீதான பலவரிகள், மின்சார விநியோகம் மீதான வரிகள் மற்றும் விளம்பரங்கள், சாலை மற்றும் நீர்வழியாகக் கொண்டு செல்லப்படும் பயணிகள், பொருட்கள் மீதான வரிகள், கேளிக்கை வரிகள் ஆகியவை ஊரக உள்ளாட்சி நிறுவங்களுக்கு மாற்றப்பட வேண்டும்.

2. சொத்து வரிகளை அதிகரிப்பதோடு, அவற்றின் மீது குறைந்த பட்ச கட்டாய வரி நிர்ணயம் வகுக்கப்படுதல் அவசியம். மாநில அரசாங்கம் இத்துறைகளிலிருந்து முழுவதுமாக விலகிக் கொள்ள வேண்டும். வரி மதிப்பீட்டிற்கான அமைப்பு முறைகளைச் சீர்திருத்தி அமைக்க வேண்டும். மாநில அரசாங்கத்தின் சொத்துக்கள் உள்ளாட்சி வரிவிலக்கு ஏற்படும் இழப்பை மாநில அரசாங்கம் ஈடு செய்ய வேண்டும்.

3. ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டு விட்டதால், கிராமங்களிலுள்ள உள்ளாட்சி நிர்வாகத்தின் நில வருவாய் இழப்பைச் சரி செய்வதற்கு அரசாங்கம் உதவ வேண்டும்.

4. மத்திய அரசாங்கத்திடம் உள்ள ஆண்டுப் பருவ வரிகள் மாநில அரசாங்கத்திற்கு மாற்றப்பட வேண்டும். மேலும், இப்பருவ வரிகள் உள்ளாட்சி நிர்வாகங்களே மேற்கொண்டு செயல்படுவதற்கான திட்டங்களை இந்திய அரசாங்கம் அனுகூலத்தோடு ஆலோசிக்க வேண்டும்.

5. உள்ளாட்சி அரசாங்கம், தொழில் வரிகளை ரூ. 250லிருந்து ரூ.1000 ஆக உயர்த்த வேண்டும்.

6. உற்பத்தி அளவிற்கு ஏற்ப சுரங்கங்கள் மீது வரி விதிப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும்.

7. உள்ளாட்சி வரிகளை வசூலிக்கும் பணியாளர் அமைப்புகள் சிறப்பாக அமைக்கபட வேண்டும்.

8. வருவாய் ஏற்படும் மூலங்களில் ஏற்றத்தாழ்வுகளைச் சரி செய்யும் பொருட்டே உதவி மானியங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

## வரிவிதிப்பு ஆய்வு ஆணையத்தின் அறிக்கை

இந்த ஆணையச் சமர்ப்பித்த அறிக்கையின் மூன்றாம் தொகுதியில் உள்ளாட்சி வருவாய் சம்பந்தப்பட்ட கீழ்க்கண்ட பரிந்துரைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

1. உறுதியான, சிறப்பான உள்ளாட்சி வரிவிதிப்பின் அடிப்படையில் தான் சிறப்பான உள்ளாட்சி வருவாய் அமைப்பு ஏற்பட முடியும்.

2. அரசியலமைப்பில் மாநிலப்பட்டியலில் சம்பிரதாயமாகக் காணப்படும் சில குறிப்பிட்ட வரிகள் உள்ளாட்சி அரசாங்களுக்கு மட்டும் உரியனவாக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். நிலங்கள், கட்டிடங்கள், மிருகங்கள், வாகனங்கள், தொழில் மற்றும் வணிக வரிகள் ஆகியவையும் பத்திரிக்கை விளம்பரங்கள் நீங்கலாக ஏனைய விளம்பர வரிகள் அனைத்தும் இவற்றுள் அடங்கும்.

3. உள்ளாட்சி அரசாங்கங்கள் தங்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ளும் பொருட்டு வாணிப ரீதியான பொது நிறுவனங்களை மேற்கொள்ளும்படி அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும்.

4. நிதி உதவி மானியங்களில், அம்மானியங்களின் நிதி நிலைமைக்கேற்ப, உள்ளாட்சி அரசாங்கங்கள் மேற்கொள்ளும் பணிகளை நிறைவேற்ற அடிப்படை நிதியாக ஒருபகுதியும் இருத்தல் அவசியம். தரம் வாய்ந்த குறிப்பிட்ட சில பணிகளை நிறைவேற்ற சிறப்பாக ஒரு பகுதி மானியம் ஒதுக்கீடு செய்தல் அவசியம்.

5. நகராட்சிகளுக்குக் கடனுதவி திட்டமும், எளிதான திட்டத்தின் பேரில் அரசாங்க உதவியும் அவசியம்.

6. நிலவரியும் சொத்துரிமை மாற்றுதல் மீதான வரியும் உள்ளாட்சி அரசாங்கங்களுக்குப் பொருந்தக்கூடிய வரிகளாகும். இவை தவிர அதிகமாகத் தேவைப்படும் நிதிகள், உதவி மானியங்களாக வழங்கப்பட வேண்டும்.

7. உள்ளாட்சி அரசாங்க நிறுவனங்களின் வரி நிர்வாக அமைப்புகளும் நிர்வாகமும் சிறப்பானதாக ஆக்கப்படவேண்டும். இதற்கு ஒவ்வொரு நகராட்சியிலும் சிறப்பு நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும்.

## பல்வந்தராய் மேத்தா குழு திட்டத்தின் கீழ் உள்ளாட்சி அரசாங்க நிதி

1. பஞ்சாயத்து சமிதியின் எல்லைப் பரப்பிற்குள் வசூலிக்கப்படும் நில வருவாயில் ஒரு குறிப்பிட் தொகை;
2. நிலவருவாய் மீதான வரிகள்
3. தொழில் வரிகள், வாணிப வரிகள்
4. நிலையான சொத்துக்களை மாற்றும் பொழுது விதிக்கப்படும் வரியின் மீதான கூடுதல் வரிகள்
5. குத்தகை வருமானம்
6. பிரயாண வரி, கேளிக்கை வரி, ஆரம்பக்கல்வி மீதான வரி, சந்தைகள் மீதான வரி மற்றும் தண்டனைகள் மூலம் கிட்டும் வருமானம்
7. வாகன வரிகளின் பங்கு
8. பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் மூலம் கிட்டுகின்ற வருமானம்
9. அரசாங்க மானியங்கள், உதவித் தொகைகள்
10. சொத்துக்களின் மூலம் கிட்டுகின்ற வாடகை மற்றும் வரிகள்.

இவற்றைத் தவிர ஒரு பஞ்சாயத்து சமிதியின் எல்லைப்பரப்பிற்கு மத்திய, மாநில அரசுகள் வழங்கும் உதவித் தொகைகள் அனைத்தும் பஞ்சாயத்து சமிதியில் மூலமாக செலவழிக்கப்பட வேண்டும்.

## ஊராட்சிகளின் நிதிநிலைமை

ஊராட்சிகள் பல்வேறு பணிகளைச் செய்ய வேண்டியுள்ளன. இதற்கு அதிகமான நிதி தேவைப்படுகிறது. கிராமசபை வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுகிறது. ஊராட்சி வருமானம் கிராமசபை நிதியில் சேர்க்கப்படுகிறது. உதாரணமாக வரிவிதிப்பு நடவடிக்கை மூலமும் விற்பனை நடவடிக்கை மூலமும் கிடைக்கக்கூடிய வருமானம். இயற்கை உரம் மூலம் கிடைக்கக்கூடிய வருமானம், இறந்த மிருகங்களை அப்புறப்படுத்துதல் மூலமாகக் கிடைக்ககூடிய வருமானம், மாநில அரசாங்கத்திலிருந்து கிடைக்கக்கூடிய மானியம் முதலியவை கிராமசபை நிதியில் சேர்க்கப்படுகிறது. வீட்டுவரி, தொழில்வரி, சொத்துவரி, வாகனவரி முதலான வரிகளை விதித்து வருமானம் பெற ஊராட்சிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற வருமானங்களில் அங்காடிகள் மூலமாக கிடைக்கும் வருமானமும் அடங்கும். பொதுவாக ஊராட்சிகளுக்குக் கிடைக்கும் வருவாய் அவைகளின் பணியை நிறைவேற்றுவதற்குப் போதுமானதாக இல்லை என்று கருதப்படுகிறது. ஊராட்சிகளிள் வருவாயைப் பெருக்குவதற்கு மாநில மற்றும் மத்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆணையங்களும், குழுக்களும் ஏராளமான பரிந்துரைகளை வழங்கியிருக்கின்றன.

## பஞ்சாயத்து சமிதிகளின் நிதிநிலைமை

பஞ்சாயத்து சமிதிகளுக்கு வளர்ச்சிப்பணிகளை நிறைவேற்றுவதற்கான பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பக் கல்வி, சுகாதாரம் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்புக்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பல மாநிலங்களின் சமிதிகள், ஊராட்சிகளின் வரவு செலவுத்திட்டத்தை ஏற்கின்றன. நிதிக்குழு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கிறது. நிதியாண்டு மார்ச்சு மாதம் 31ல் முடிந்து, ஏப்ரல் 1ஆம் தேதி ஆரம்பமாகிறது. பஞ்சாயத்து சமிதிகள், வரிகளையும், கட்டணங்களையும் விதிக்கின்றன. பஞ்சாயத்து சமிதிகள், பள்ளியில் படிப்பதற்கும் உரிமங்கள் வழங்குவதற்கும் கட்டணங்களை விதிக்கின்றன. மேல்மட்ட நிர்வாக அதிகாரிகளின் ஒப்புதலோடு கடன் எழுப்பலாம். உதவிமானியங்களும் சமிதிகளுக்கும் கிடைக்கின்றன. சமிதிகளின் வருவாயைப் பெருக்குவதற்கு மாநில மற்றும் மத்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட குழுக்களும் ஆணையங்களும் பரிந்துரைகள் செய்திருக்கின்றன.

## மாவட்ட மன்றங்களின் நிதிநிலைமை

மாவட்ட மன்றங்களுக்கும் தங்களது பணிகளைச் செய்வதற்கு நிதி தேவைப்படுகிறது. ஆகையால் மாவட்ட மன்றத்தின் நிதிக்குழு, வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கிறது. இக்குழு தயாரித்த வரவு செலவுத் திட்டம் மாவட்ட மன்றத்தின் பரிசீலைக்கு வைக்கப்படுகிறது. மாவட்ட மன்ற வரவு செலவுத் திட்டத்தை ஏற்றுக்கொண்ட பிறகு மாவட்ட மன்ற ஆணையாளரின், பார்வைக்கு அனுப்பி வைக்கிறது, மாவட்ட மன்ற ஆணையாளர் தனக்குச் சரியென்று பட்ட மாற்றங்களைச் செய்யலாம். வரவு செலவுத் திட்டத்தினை ஏற்றுக் கொண்ட பின்பு, மாவட்ட மன்றம் வரிகளை வசூலிக்க ஆரம்பிக்கிறது. மாவட்ட மன்றத்தின் முக்கிய வருவாய் வரிகள் ஆகும். மாவட்ட மன்றம் சொத்துக்களின் மீது வரியைத் தான் விதிக்கலாம். இதைத்தவிர ஒரு குறிப்பிட்ட பொருளுக்கு உரிமம் கொடுப்பதன் மூலமும் சாராயம் போன்ற மதுப்பொருள்களை விற்பதற்கு வசூலிக்கப்படும் வரி மூலமும், பள்ளிக்கூடங்களில், நூல்களை பயன்படுத்துவதற்கு வசூலிக்கப்படும் வருவாய்மூலமும், மாவட்ட மன்றங்கள் தங்களது வருவாயைப் பெருக்கிக் கொள்கின்றன. இருந்த போதிலும் மாவட்ட மன்றத்தின் முக்கிய வருவாய் மாநிலங்களிடமிருந்து பெறுகின்ற மானியங்களாகும். மாநிலங்களின் மானியங்களும், உதவிகளும் இல்லாமல் மாவட்ட மன்றங்கள் செயல்பட முடியாது. கடைசியாக மாவட்ட மன்றங்கள் கடன்களை எழுப்பியும் வருமானத்தைப் பெருக்கிக் கொள்கின்றன.

## உள்ளாட்சி அரசாங்க நிதிநிலைமைகளின் திறனாய்வு

உள்ளாட்சி அரசாங்கள் நிதி நிலைமைகளைச் சீர்படுத்த மத்திய மற்றும் மாநில அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட ஆணையங்கள் மற்றும் குழுக்களின் பரிந்துரைகளை ஏற்க வேண்டும். உள்ளாட்சி அரசாங்கங்களை தனித்தியங்கக்கூடிய விதத்தில் நிதி வசதிகள் பெருக வேண்டும். இதற்குக் கீழ்க்கண்ட பரிந்துரைகளை உள்ளாட்சி அரசாங்கங்கள் பரிசீலனை செய்ய வேண்டும்.

முதலாவதாக மறைமுகவரியான ஆக்ட்ராய் என்ற சுங்க வரியை அகற்றவேண்டும். நில மற்றும் வீட்டு வரிகளை அதிகப்படுத்தி ஆக்ட்ராய் மூலம் கிடைக்கும் வருவாயை ஈடு செய்யலாம்.

இரண்டாவதாக, தற்போதைய நில மற்றும் வீட்டு வரிகள் உண்மையான நில மற்றும் வீட்டு மதிப்பீட்டில் அமையவில்லை. நில மற்றும் வீட்டு மதிப்பீட்டைத் திருத்தியமைத்து வரிவிதித்தால், உள்ளாட்சி அரசாங்கங்களின் வருவாய் பெருகும்.

மூன்றாவதாக, உள்ளாட்சி அரசாங்கங்கள் பொதுவாக வரிகளை அதிகமாயிருக்கின்றன. உள்ளாட்சி அரசாங்கங்களும், அவைகளுடைய எல்லைப் பரப்புக்கும் வசிக்கும் மக்களுக்கு வசதிகளைப் பெருக்கியிருப்பதால் அவ்வுயர்வான வரிவிதிப்புகள் சரியானதே.

நான்காவதாக, ஊரக உள்ளாட்சிகள், நிலத்தின் மீது வரிவிதித்து வருமானம் பெருகுவதற்கு வழி வகை செய்ய வேண்டும்.

தரிசு நிலங்களை உள்ளாட்சி அரசாங்கங்கள் எடுத்துக் கொள்வதற்கு வகை செய்தால் அதன் மூலமாகக் கிடைக்கும் வருமானத்தில் நல்ல பல பணிகளைச் செய்யலாம்.

உள்ளாட்சி அரசாங்கங்கள் கடன்களைப் பெறுவதற்கும் மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் அதிக வசதிகள் செய்துதர வேண்டும்.

இவ்விதமாக, உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு அதிகமாக வருவாய் இருந்தால் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றமுடியும். இதனால் உள்ளாட்சி அரசாங்கங்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைமை உயரும்.

## மாநில நிதி ஆணையம்

பாராளுமன்ற 73வது அரசியலமைப்புத் திருத்தத்தின் கீழ் 1994, ஏப்ரல் 23 ஆம் நாளன்று மாநில நிதி ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. கிராமப்புற நிதி நிர்வாகத்தை மேம்படுத்த, வழி வகைகளை ஆராயும் பொருட்டு இந்த ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. பின்னர் 74வது அரசியலமைப்புத் திருத்தத்தின் படி இந்த ஆணையத்தின் பணி நகரப் புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்தும் படி செய்யப்பட்டது. மாநில நிதி ஆணையம் ஏற்படுத்தும் பொறுப்பு மாநில அரசாங்கத்தின் விருப்பத்திற்குட்டபட்டது. உள்ளாட்சித் தேர்தலுக்குப் பின்னர் ஒவ்வொரு முறையும் நிதி ஆணையம் ஏற்படுத்தி, உள்ளாட்சி நிதிநிலையை, மேம்படுத்தும் வழிமுறைகளை ஆராய்ந்து, ஆளுநரிடம் அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டும் பின்னர். இந்த அறிக்கை மாநிலச் சட்டமன்றத்தில் வைக்கப்படும். இந்த ஆணையம் இரண்டு ஆண்டிற்கொரு முறை நியமனம் செய்யப்பட வேண்டும்.

தமிழகத்தில் முதலாவது நிதி ஆணையம் திரு. ஆறுமுகம் என்பவர் தலைமையில் அமைக்கப்பட்டது. நகராட்சி இயக்குநர், ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் குழ செல்லையா என்ற அதிகாரியல்லாத உறுப்பினர் ஆகியோர் இடம் பெற்றனர். இது தனது அறிக்கையை 29.11.96ல் சமர்ப்பித்தது. இதனுடைய பரிந்துரைகள் 1997–98 முதல் 2001–2002 வரையிலுமாக 5 ஆண்டுகளுக்கு பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டது.

முதலாவது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளை பொதுவான பரிந்துரைகள் பேரூராட்சிகளுக்குப் பொருந்தும்படியான பரிந்துரைகள் என இருவகைகளாகப் பிரிக்கலாம். பொதுவான பரிந்துரைகள் 13,மாநகராட்சிகள் பற்றி 136, நகராட்சிகள் பற்றி 117 மற்றும் பேரூராட்சிகள் தொடர்பாக 38 ஆக, மொத்தம் 291 பரிந்துரைகளைக் கொண்டதாக அமைந்தது. 28.4.97 அன்று இதன் பரிந்துரைகள், மாநில அரசாங்கம் ஏற்றுக்கொண்ட பரிந்துரைகள் ஆகியன பற்றி மாநிலச்சட்ட மன்றத்தின அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

நிதி ஆணையம் பரிந்துரைத்த பொதுவான தன்மைப்பற்றி, மாநில அரசாங்கம் உள்ளாட்சிகளுக்கு 8% விழுக்காடு வரி வருவாயைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்டது. இரண்டாவதாக, ஊக்குவிப்பு மானியம், சமன்பாடு மானியம் ஆகியவற்றை ஏற்கச் செய்தது. மூன்றாவதாக ஊராட்சி – நகராட்சி வரிப்பங்கீடு 60:40 என்ற விழுக்காட்டை மாநில அரசாங்கம் 55:45 என்ற அளவில் ஏற்றுக் கொண்டது. மானியப் பகிர்வு ஆண்டிற்கு 4 தடவைகளாகச் செய்யவேண்டுமென்பதையும், உள்ளாட்சிகளுக்கு கேளிக்கை வரியையும் ஒப்படைத்தது.

மத்திய நிதி ஆணையம் நிதியை மத்திய–மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்பதுடன், கிராமப்புற – நகராட்சிகளை மேம்படுத்தும் வகையில் தனி நிதியை மத்திய நிதி ஆணையம் உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்து வருகின்றது. இதில் நகராட்சிகளுக்கு எவ்வளவு என்பதையும் கிராமப்புறங்களுக்கு எவ்வளவு என்பதையும் தெளிவாக வரையறை செய்யும். தவிர, மாநில நிதி ஆணையம் மானியங்கள் வழங்கும் பிரிவுகளை ஆராய்ந்து, பரிந்துரை செய்துள்ளது. மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்த 291 பரிந்துரைகளில் 107 பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டது, 4 பரிந்துரைகளை நிராகரித்தது.

இரண்டாவது மாநில நிதி ஆணையம் 2003ல் ஏற்படுத்தப்பட்டு, தனது பணியைச் செய்து வருகின்றது.

## மாதிரி வினா

உள்ளாட்சி நிதி நிலையை மேம்படுத்தும் கருத்துறைகளை எழுதுக.

# பாடம் – 20

## உள்ளாட்சிகள் மீதான மாநில அரசாங்கக் கட்டுப்பாடுகள்

மத்திய அல்லது மத்தியக் கட்டுப்பாடு என்ற தொடருக்கு உள்ளாட்சி நிறுவனத்தின் மீது மத்திய அல்லது மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாடு என்பதே பொருள் ஆகும். உள்ளாட்சி நிறுவனத்தைப் பாராளுமன்றச் சட்டமானது தோற்றுவித்து இருக்குமானால் அதன் மீது மத்திய அரசாங்கம் கட்டுப்பாட்டை உள்ளாட்சி அரசாங்கம் மீது செலுத்துகிறது. எடுத்துக்காட்டாக, இந்திய அரசாங்கமானது டில்லி மாநகராட்சிக் கழகத்தின் மீதும், புதுடில்லி நகராட்சிக் குழுவின் மீதும் கட்டுப்பாட்டைக் கையாளுகிறது. இதற்கு மாறாக, மாநிலச் சட்டமன்றத்தின் சட்டங்களால் தோற்றுவிக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்களின் மீது மாநில அரசாங்கம் கட்டுப்பாட்டைச் செலுத்துகிறது.

### மாநிலக்கட்டுப்பாடு இருக்க வேண்டியதன் தேவை

உள்ளாட்சி அரசாங்க அமைப்பானது உலகமெங்கிலும் காணப்படுகிறது. ஆயினும் எந்த இடத்திலும் உள்ளாட்சி நிறுவனங்களுக்குச் சுதந்திரமாக இருத்தல் இயலாது. ஆகையால் கட்டுப்பாட்டைக் கையாளும் முறையால் உள்ளாட்சிக் கூறுகளுக்கும் அல்லது அலகுகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

மாநிலக் கட்டுப்பாடு இருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக மாநில அரசாங்கத்தோடு ஒப்பிடும்போது உள்ளாட்சி நிறுவனம் சிறிய நிலப்பரப்பை ஆளுகின்ற காரணத்தால், அதற்கு முழுமையான செய்திகள் தெரிந்திருக்க இயலாது. செயலறிவு, செய்தி முதலியவற்றில் எந்த ஒரு உள்ளாட்சி அதிகாரியும் மாநில அரசாங்கத்துக்கு ஒப்பாகமாட்டார். இரண்டாவதாக திறனற்ற வகையில் உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்படுமாயின், அதனால் ஒரு உள்ளாட்சி அதிகாரி சோர்வும், சோம்பலும் அடைதல் கூடும். இதனால் தான் அதிகார எல்லைக்குள் இருப்பவர்களுடைய அமைதி, வளம், உடல்நலம் முதலியவை பாதிக்கப்படுதல் கூடும். உள்ளாட்சி முறையில் ஓரளவேனும் திறமையான தரம் இருந்ததற்கு கட்டுப்பாடு இருத்தல் இன்றியமையாதது. உள்ளூர்ச் சமூகத்திலும் கூட சில வலுவான தன்னலக்குழுக்கள் அச்சமுதாய நலனுக்கெதிராக வேலை செய்தல் கூடும். ஆகையால் தீய சக்திகளுக்கெதிராகச் சமுதாயத்தைக் காத்தல் இன்றியமையாததாகிறது. உள்ளூர்ப் பகுதியில் பல்வேறு வகைப்பட்ட நலக்குழுக்களுக்கிடையே நடைபெறும் பூசலுக்கு அப்பாற்பட்டதாக மாநில அதிகாரி இருக்கிறார். இவ்வாறிருப்பதானால் அவர் ஒரு நீதிபதியாகச் செயல்படும் நிலையில் இருக்கிறார். நான்காவதாக, மனித இயல்பானது தனக்குத்தானே வரிவித்துக் கொள்ளும் இயல்புடையதன்று. சமுதாய நலனுக்காகப் பல திட்டங்களை நிறைவேற்றுமாறு மேலதிகாரி கட்டாயமாகக் கூறினாலல்லாமல், உள்ளாட்சி மன்றங்கள் அவற்றை ஏற்று செயல்படுத்தமாட்டாது. ஐந்தாவதாக சில இடங்கள் வறிய நிலையிலிருக்கின்றன. ஆகையால் அவை மற்ற இடங்களுக்குக் கிடைக்கக்கூடிய வசதிகளைப் பெற இயலாமல் இருக்கின்றன. நாடு முழுவதும் நலனையும் பற்றி ஈடுபாடுடைய நடு அரசாங்கமானது நாட்டின் எல்லாப்பகுதிகளிலும் சமமாகப் பணிகள் கிடைக்கும் பொருட்டு, வறிய பகுதிகளுக்கு மற்றவைகளைவிடக் கூடுதலான அளவில் உதவிமானியத் தொகை வழங்குவது உள்ளாட்சி பணியில் ஓரளவெனும் ஒரே சீரான நிலையை ஏற்படுத்துதல் திறனாகச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசாங்கம் தேவைப்படுகிறது.

எல்லாவகைப்பட்ட உள்ளாட்சி அரசாங்கங்களும், அதிகாரங்களையும் அலுவல்களையும் பொறுத்தவரையிலும் வேறுபடுகின்ற காரணத்தினாலும் அவைகளுக்குப் பல்வேறு வகையான தேவைகளும் பிரச்சனைகளும் இருக்கின்ற காரணத்தாலும் அவைகள் எல்லாவற்றின் மீதும் ஒரே சீரான தரத்தில் கட்டுப்பாட்டை நிறுவுதல் இயலாது என்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகின்றது பொதுவாகக் கையாளப்படும் விதி என்னவென்றால், கட்டுப்பாட்டிற்குள்ளாகும். உள்ளாட்சி நிர்வாகக்கூறு உயர்ந்த வகைகயைச் சேர்ந்த கூறாக இருக்குமானால், அதன்மீது கையாளப்படும் கட்டுப்பாட்டு அதிகாரம்

குறைவாக இருக்கும். எடுத்துக்காட்டாக இந்தியாவில் நகராட்சிகளின் மீது கையாளப்படும் கட்டுப்பாட்டை விட மாநகராட்சிகளின் மீது கையாளப்படும் கட்டுப்பாடு அதிகாரம் குறைவாகவே இருக்கிறது. சில தனிப்பட்ட சூழ்நிலைகளில் சில தனிப்பட்ட கட்டுப்பாட்டு முறை தேவைப்படுகிறது.

## கட்டுப்பாடுகளின் வகைகள்

உள்ளாட்சி நிர்வாகங்களின் மீது கையாளப்படும் கட்டுப்பாடு சட்டமன்ற இயல்புடைய கட்டுப்பாடு, ஆட்சித்துறை இயல்புடைய கட்டுப்பாடு, நீதிமன்ற இயல்புடைய கட்டுப்பாடு என்று மூன்று வகைப்படும்.

முதலாவதாக சட்டமன்ற இயல்புடைய கட்டுப்பாட்டைப் பற்றி ஆராய்வோம். மத்திய அரசாங்கமானது, நடுவண அல்லது யூனியன் மாநிலங்களில் எவ்வகைப்பட்ட ஒரு உள்ளாட்சி அரசாங்கத்தையும் நிறுவுதல் கூடும் இதேபோல மாநிலங்கள் தங்களுடைய நிலப்பரப்பில் எவ்வகைப்பட்ட ஒரு உள்ளாட்சி அரசாங்கத்தையும் நிறுவுதல் கூடும்.

ஒரு உள்ளாட்சியை நிறுவும் சட்டமானது அவ்வாட்சியின் அமைப்பு, அலுவலர்கள் ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. எடுத்துக்காட்டாக, அது மன்ற உறுப்பினர்களின் தேர்தல் முறை அவர்களுடைய பதவிக்காலம். மேயர் அல்லது சேர்மன் அல்லது தலைவர் என்ற அலுவலரை அமர்த்தும் முறை அவருடைய அதிகாரங்கள் முதலியவற்றை வரையறுக்கும். உள்ளூர் ஆட்சியின் கட்டாயப் பணிகளையும், விருப்பப்பணிகளையும், அது குறிப்பிடுகிறது. உள்ளூர் ஆட்சி மன்றமானது சட்டத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளுக்குட்பட்டே இயங்குதல் வேண்டும்.

மேற்கூறிய கருத்துக்களை ஒட்டி உள்ளூர் ஆட்சிகளின் மீது பாராளுமன்றத்துக்கு உரிய கட்டுப்பாட்டை நாம் ஆய்வு செய்கிறோம். உள்ளூர் ஆட்சிகளின் மீது நிறுவப்படும் ஆட்சித்துறைக்கு கட்டுப்பாடு கீழ்வருவனவாகும். இந்தியாவில் பல மாநிலங்களின் உள்ளாட்சிச் சுய அரசாங்க அமைச்சரகமே தனது எல்லையில் உள்ள எல்லா வகைப்பட்ட உள்ளாட்சி மன்றங்களின் மீது கட்டுப்பாடு செலுத்துகிறது சில இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட அமைச்சரவை உள்ளாட்சி அரசாங்கக் கூறுகளைக் கண்காணிக்கிறது. இத்தகைய சூழ்நிலைகளில் ஊராட்சி மன்றங்கள் போன்ற வேறு ஒரு அமைச்சரவையின் கீழ் வைக்கப் படுகின்றன. கட்டுப்பாடும் பல்வேறு வடிவங்களில் அமைக்கப்படுகிறது.

1. சட்டமன்றங்களுக்கு வெகுவான வேலைப்பளு இருக்கின்ற படியால் சட்டமன்றங்களால் விவரங்களடங்கிய முறையில் சட்டங்களை இயற்ற முடியவில்லை. ஆகையால் அவை சட்டமுன்வரைவுகளை பொதுவான வகையில் நிறைவேற்றி விடுகின்றன. அவை விவரங்களை ஆட்சித் துறைகள் நிரப்புமாறு அவற்றிற்கு விட்டுவிடுகின்றன. சட்டங்களுக்கு விவரமான விதிகளையும் ஒழுங்குகளையும் ஆட்சித்துறைகள் அளித்து அவற்றைச் செயல்படுத்துகின்றன. சுருங்கக் கூறின் உள்ளூர் ஆட்சிகளின் மீது விதிக்கப்படும் சட்டமானது ஆட்சித் துறைகளினால் செய்யப்பட்ட சட்டமே ஆகும்.

2. வேறுவகையான கட்டுப்பாடானது உள்ளாட்சி மன்றங்களினால் செய்யப்படும் துணைச் சட்டங்கள், திட்டங்கள், நகராட்சி மன்றத்தில் மேல்நிலை அலுவலர் நியமனம், வேலை நீக்கம் முதலியவற்றை ஒப்புக் கொள்ளுதல் அல்லது தள்ளுபடி செய்தல் என்பதில் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக நகராட்சிகளினால் செய்யப்படும் துணை விதிகள், திட்டங்கள், தீர்மானங்கள் முதலியவை மாநில அரசாங்கத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டே இருக்கின்றன. நகராட்சிகளின் வரவு செலவுத் திட்டங்களும் மாநில அரசாங்கத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டவையே. நகராட்சி மன்றத்தின் அதிகாரிகளான செயலாளர், சுகாதார அதிகாரி, குடிநீர்த் திட்டப் பொறியாளர் முதலியோரின் நியமனம், நீக்கம் முதலியவை மாநில அரசாங்கத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டவை.

3. அரசாங்கத் துறைகளின் அதிகாரிகள் உள்ளாட்சி அதிகாரிகளை விடக் கூடுதல் அனுபவம் மற்றும் செயலறிவு உடைய வல்லுநர் ஆவர். ஆகையால் அரசாங்கத்தின் ஆட்சித்துறைகள் உள்ளாட்சி

மன்றங்களுக்கு ஆலோசனை கூறவும், வழிகாட்டவும் கூடிய நிலையிலிருக்கின்றன. இத்தகைய ஆலோசானையும் பலநிலைகளில் ஒரு ஆணையாக இருக்கிறது.

4. உள்ளூர் ஆட்சிமன்றங்களைக் கண்காணித்தல் (inspection) என்பது இன்னொரு வகையான கட்டுப்பாடு ஆகும். அறிவுணர்வுடன் கூடிய மாநில ஆட்சியின் கட்டுப்பாட்டு அதிகாரமானது உள்ளூர்ச் சூழ்நிலைகளை நன்கு அறிந்து இருத்தல் வேண்டும் என்பது ஒரு அடிப்படை ஆகும். உயர்தர ஆட்சியானது கண்காணிப்பாளர்களை அமர்த்துகிறது. கண்காணிப்பாளர்கள் உள்ளாட்சி அரசாங்கக் கூறுகளுக்குச் சென்று அவற்றின் திறமையைப் பற்றி அறிக்கை செய்கின்றனர்.

5. ஒரு உள்ளாட்சி மன்றம் தான் செய்ய வேண்டிய கட்டாயப் பணியைச் செய்யத் தவறுமாயின், மாநில அரசாங்கம் அவற்றைச் செயல்படுத்தி அதற்காகும் செலவைத் தவறும் அதிகாரி செலுத்துமாறு கூறுதற்கும் மாநில அரசாங்கம் அதிகாரம் உடையது.

6. அரசாங்கக் கட்டுப்பாட்டு அதிகாரத்துள்ளே மிகவும் திறயைானது மானிய உதவி அளித்தல் ஆகும். உயர் அதிகாரி பல்வேறு வகையான உள்ளாட்சி அரசாங்கக் கூறுகளுக்கு ஒவ்வோராண்டிலும் ஒரு குறிப்பிட்ட பணத் தொகையை வழங்குகிறது. அல்லது அத்தொகை சூழ்நிலைக்கும் காலத்துக்கும் ஏற்றவாறு மாறுபடும். ஒரு நகராட்சியானது ஒரு மின்சார நிலையத்தை நிறுவுதல் வேண்டும். என்று ஏதேனுமொரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக நிதி உதவி அளிக்கப்படுகிறது. இவ்வாறு நிதி உதவி கொடுக்கப்படும்போது அதனோடு சில கட்டுப்பாடுகளும் சேர்க்கப்படுகின்றன. இதுவே கண்காணிப்புக்குத் தேவையை ஏற்படுத்துகிறது. மாநில ஆட்சியால் குறிக்கப்பட்ட பணிகளை உள்ளாட்சி செய்யத் தவறுமேயானால் மேற்படி மானியம் நிறுத்தப்படவோ அல்லது குறைக்கப்படவோ செய்யலாம். பணி நிறைவேறியவுடன், கணக்குகள் தணிக்கை செய்யப்படுதல் கூடும்.

7. இறுதியாக மாநில அரசாங்கத்துக்கு எந்த ஒரு உள்ளாட்சி அதிகாரிக்கும் சட்டத்தினால் விதிக்கப்பட்ட பணிகளைச் செய்யமுடியாமலோ அல்லது செய்யும் தகுதி இல்லாமலோ போய்விடுமானால் அவ்வதிகாரியை வேலை செய்யாமல் தடுத்து நிறுத்தி வைப்பதற்கு அதிகாரம் இருக்கிறது.

## ஆட்சித்துறையின் கட்டுப்பாடு

ஒரு மாநகாரட்சிக் குழுவுக்குப் பெருமளவு சுய ஆட்சி அதிகாரம் இருக்கிறது. ஆனால் மாநில அரசாங்கத்துக்கு அதன் மீது ஓரளவு கட்டுப்பாடு செய்யும் அதிகாரம் இருக்கிறது. அது மாநகராட்சிக் குழுவின் கூட்டங்களின் நடவடிக்கை அறிக்கைகளை அல்லது அதன் நிலைக்குழுக்களின் அறிக்கைகளை அல்லது வேறெந்தப் பதிவேடுகளைத் தனக்கு அனுப்புமாறு கேட்டு வாங்கலாம். அது மாநகராட்சியின் பணியைத் தனது அதிகாரியின் மூலம் கண்காணிக்கக் கூடும். அது மாநகராட்சிக்கு ஒரு பணியைச் செய்யுமாறு ஆணை விடுக்கலாம் அல்லது அதனுடைய வரவு செலவுத் திட்டத்தில் அந்தப் பணி செய்யப்படுவதற்கு வகை செய்யுமாறு கூறலாம். இத்தகைய ஆணையை மாநகராட்சி செயல்படுத்தத் தவறுமேயனால் மேற்படி பணியை அது தனது அதிகாரிகளைக் கொண்டு செய்வித்து அதற்காகும் செலவுப் பணத்தை மாநகராட்சியின் நிதியிலிருந்து எடுத்துக் கொள்ளுதல் கூடும். அது மக்களை நெருக்கடி நிலையினின்றும் மீட்டுப் பாதுகாக்கும் பொருட்டு ஒரு பணியைச் செய்து, அதற்காகும் பணத்தை மாநகராட்சி யிடமிருந்து மீட்டுதல் செய்யலாம் மாநகராட்சியின் ஏதேனுமொரு தீர்மானம் பொதுநலனுக்கு உகந்ததாக இல்லை எனில், அந்தத் தீர்மானத்தை அது நிறுத்துதல் கூடும், அது மாநகராட்சியைக் கலைத்துவிடவும், மறுதேர்தல் நடைபெறுமாறு ஆணைவிடுத்தாலும் கூடும், இறுதியாக அது மாநகராட்சி அரசாங்கம் திறமையாகச் செயல்படவில்லை எனில், அதனை அது செயல்படாமல் நிறுத்தி வைக்கவும் (Supersede) மாநகராட்சி அலுவல்களைச் செய்வதற்காக ஒரு ஆட்சியாளரை அமர்த்தவும் செய்யலாம்.

மேற்கூறியவைகளைவிட, நகராட்சிகள் போன்ற ஏனைய நகர அதிகாரிகளின் மீது கூடுதலான அதிகாரங்களை மாநில அரசாங்கம் கையாளுகிறது. அதன் கண்காணிப்பாளர்கள் நகராட்சிக்குச்

சொந்தமான எந்தச் சொத்தையும், நடைபெற்றுவரக்கூடிய எந்தப் பணியையும் கண்காணித்தல் கூடும். அது எந்தப் பதிவேடுகளையும், பட்டியல்களையும் அறிக்கைகளையும் தனக்கு அனுப்புமாறு ஆணை விடுக்கலாம். நகராட்சி அதிகாரி செய்யும் ஏதேனும் ஒரு செயல் மக்களுக்கு தீங்கு அல்லது இடையூறு விளைவிக்குமாயினும், அல்லது அமைதியை அழிக்குமாயினும் அதனைச் செய்யாதவாறு நகராட்சியை மாநில அரசாங்கம் தடை செய்யலாம். ஒரு பணி பொதுமக்களுடைய சுகாதாரத்துக்கும் பாதுகாப்புக்கும் இன்றியமையாதது என்று மாநில அரசாங்கம் கருதுமானால் அந்தப்பணி ஒரு நெருக்கடியான சமயத்தில் செய்யப்படுமாறு ஏற்பாடு செய்து, அந்தப்பணிக்கு ஆகும் செலவைச் செலுத்துமாறு அது நகராட்சிக்கு ஆணைவிடுத்தல் கூடும். நகராட்சி செய்யத்தவறிய அலுவல்களை மாநில அரசாங்கம் செய்து, அதற்காகும் செலவை நகராட்சி நிதியிலிருந்து எடுத்துக்கொள்ளும் நகராட்சி மன்றத்தைக் கலைத்துவிட்டு மறு தேர்தல் நடைபெறுவதற்கு ஆணை இடலாம். இறுதியான அது வேறு வழி இல்லையானால் நகராட்சியைச் செயல்படாமல் நிறுத்தி வைத்து, நகராட்சி மன்ற அலுவல்களைச் செய்வதற்காக ஓர் ஆட்சியாளரை அமர்த்துதல் கூடும். இவ்வாறு உயர் ஆட்சி உள்ளாட்சியைச் செயல்படாமல் நிறுத்தி வைத்தல் என்பது இந்தியாவில் அடிக்கடி நடைபெறுகிறது. ஆனால் இங்கிலாந்தில் இத்தகைய நிகழ்ச்சிகள் காணப்படவில்லை.

நாட்டுப்புற உள்ளாட்சி அரசாங்கங்களைப் பொறுத்தவரையில் மேல் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு அதிகமானது. இவைகளின் மீதான, கட்டுப்பாட்டு அதிகாரமானது ஆட்சிப்பிரிவின் ஆணையாளராலோ அல்லது மாவட்டத்தின் துணை ஆணையாளராலோ கையாளப்படுகிறது. இவ்வதிகாரிகள் மாவட்டத்தில் வேலை செய்கிறபடியால், அவர்கள் திறமையாக உள்ளாட்சி மன்றங்களைக் கண்காணித்தல் கூடும். உண்மையில் அவர்கள் அரசாங்கத்தின் காதாகவும், கண்ணாகவும், வாயாகவும் செயல்படுகிறார்கள்.

## உள்ளாட்சிகள் மீதான நிர்வாகக் கட்டுப்பாடு

உள்ளாட்சிகளை வழிநடத்த, கண்காணிக்க, கட்டுப்படுத்த மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் உள்ளது. கீழ்க்கண்ட வகைகளில் இக்கட்டுப்பாட்டு முறை உள்ளது.

1. உள்ளாட்சிகளை உருவாக்கவும், அமைக்க, கண்காணிக்க, நீக்கவும் உள்ள அதிகாரங்கள்.

2. உள்ளாட்சி உறுப்பினர்கள், பதவி வகிப்போர்கள் ஆகியோர்களைக் கண்காணிக்கும் அதிகாரம், உள்ளாட்சிப் பணியாளர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம்.

3. நிதி அதிகாரங்கள்

அ) வரி விதிப்பு

ஆ) வரவு செலவுத் திட்டத்தை அங்கிகரித்தல்

இ) தணிக்கை செய்தல்

ஈ) கடன் திரட்டல்

உ) மானியங்கள்

ஊ) பிறவகைகளான நிதிக் கட்டுப்பாடு, நகராட்சி முதலீடு போன்றவற்றை நிர்வகிப்பது.

4. நேரடி நடவடிக்கை அதிகாரங்கள்: உள்ளாட்சிகளிடமிருந்து அறிக்கை பெறுதல், கணக்குகள் போன்றவற்றைக் கேட்பது, சில செயல்களைச் செய்யவிடாது நிறுத்தி வைத்தல், துணை விதிகளை அங்கிகரித்தல், திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல் ஆகியவையும், மீறும் சமயங்களில் உள்ளாட்சியைத் தானே மாநில அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்.

நிர்வாகக் கட்டுப்பாட்டில் கீழ்க்கண்ட குறைகள் உள்ளன. அவை.

1. இன்றைய நிர்வாகக் கட்டுப்பாடுகள் பெயரளவில் (formal) உளளதே தவிர, வளர்ச்சியையோ முன்னேற்றத்தையோ ஊக்குவிக்கும் அளவில் இல்லை (Constructive and Positive)

2. உள்ளாட்சித் துறைகளுக்கு பகுதி வாரியான துணை (field) அலுவலகங்கள் இல்லாததால், தொடர்ந்து சீராக வழிகாட்ட இயலவில்லை.

3. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் முழுமையாகத் தங்களை ஆட்படுத்தி செயல்பட இயலாதவாறு பல்வேறு கட்டுப்பாடுகள் உள்ளன.

4. உள்ளாட்சிகளின் சுதந்திரம், தன்னம்பிக்கை ஆகியனவற்றைப் பாதிக்கும்வகையில் ஏராளமான நிர்வாகக் கட்டுப்பாடுகள் உள்ளன. விரிவாகச் சில அறிக்கைகளை மாநில அரசாங்கங்கள் கோருகின்றது.

5. உள்ளாட்சிகளைக் கலைக்கும் வகையில் அதிகப் பட்சமான தண்டனை அதிகாரம் இருக்கிறதே தவிர, கடமையாற்றாத பணியாளர்களை, அதிகாரத்துஷ்பிரயோகம் செய்பக்கூடியவர்களைத் தண்டிக்கும் வகையில் இன்றைய சட்டங்களில் வழியில்லை.

6. மாநில ஆய்வு செய்யும் முறை சீராக அமைக்கப்படவில்லை.

## இயக்குநரகம் கையாளும் கட்டுப்பாடு அதிகாரம்

மாநகராட்சிகள் அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றன. அவை நகராட்சிகளின் இயக்குநருடைய கட்டுப்பாட்டில் கூட இல்லை. உள்ளாட்சி அரசாங்க ஊராட்சிகள் ஊரக இயக்குநர் மேற்பார்வை செய்யும் பொருட்டு அமைந்துள்ளது. தமிழ்நாடு அரசாங்கம் நகராட்சிகளின் இயக்குநர் அமைப்பை நிறுவியுள்ளது. நகராட்சிகளைப் பொறுத்தவரையில் கீழ்க்கண்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

i) நகராட்சிக்கு சொந்தமான அசையும் சொத்துக்களைக் கண்காணித்தலும், நடைபெற்றுவரும் அதனுடைய பணி எதனையும் கண்காணித்தலும்.

ii) நகாரட்சி கூட்ட அறிக்கைகளையோ, அல்லது அதனுடைய நிலைக்குழுக்களின் கூட்ட அறிக்கைகளையோ அல்லது அதன் கைவசமுள்ள பதிவேடு எதனையுமோ வரவழைத்தல்

iii) சட்டத்துக்கு மாறாக செயல்படுத்தப்பட்டால் மக்களுடைய மனதைப் புண்படுத்தக்கூடிய, அமைதியை அழிக்ககூடிய உள்ளாட்சி மன்றத்தின் தீர்மானத்தை, அல்லது ஆணையை செயல்படுத்தாமல் நிறுத்தி வைப்பதற்குரிய அதிகாரம்.

iv) நகராட்சி மன்றம் செய்வதற்கு அதிகாரம் பெற்றுள்ள எந்தப் பணியையும், அது தேவைப்படுமாயின் செயதல்;

v) நகராட்சிக்குச் தலைவரை தேர்ந்தெடுத்தற்காகவோ, அல்லது தலைவர் அல்லது துணைத் தலைவர் ஆகியோர் மீது கொண்டுவரப்பட்டு உள்ள நம்பிக்கை இல்லாத தீர்மானத்தைப் பரிசீலனை செய்யவோ மன்றத்தின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டுதல்.

vi) நகராட்சிக்குச் சொந்தமான எந்த அசையாப் பொருளையும் வேறொருவருக்கு மாற்றுதற்கு முன் இசைவு பெறுதல்

vii) முக்கியமானவர்களுடைய வரவேற்பு விழாக்களுக்கான செலவகளுக்கு வேண்டிய பணத்தை ஒப்புதலின் பேரில் தான் ஒரு நகாரட்சி கேட்டுப் பெறுதல்;

viii) நகராட்சியின் ஆண்டு அறிக்கையானது அரசாங்கத்துக்கு இயக்குநரகம் மூலம் தான் அனுப்பப்படுதல் இது மாதிரியாக ஊராட்சிகள் மீது மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக ஊராட்சி இயக்குநரகம் கட்டுப்பாடு செய்கிறது.

உள்ளாட்சி மன்றங்களின் மீது உள்ள நீதிமன்றக் கட்டுப்பாடு திறமையானதாக இல்லை. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

i) மக்கள் நீதி மன்றம் பற்றி அறியாதவர்களாக இருத்தல் கூடும்; எனவே அவர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்லும் இயல்பினராக இருக்கமாட்டார்கள்.

ii) நீதிமன்றத்தின் மூலம் பெறக்கூடிய நிவாரணம் செலவுமிக்கது மட்டுமின்றி, இது கால நீடிப்பும் உடையது.

iii) மேலும் ஒரு குற்றம் செய்யப்பட்ட பொழுதுதான் நடவடிக்கை எடுத்தல் இயலும்.

iv) குற்றம் செய்தலைத் தடுப்பதற்கு எந்த ஏற்பாடும் இல்லை; மேலும் அதனைத் தொடர்ந்து தடுப்பதற்கும் எந்தவித ஏற்பாடும் இல்லை.

முடிவாகக் கூறினால், அதிகாரக் குவிப்பை நோக்கிய இயல்புதான் படிப்படியாகக் காணப்படுகிறது. இவ்வியல்புக்குப் பல காரணிகள் இருக்கின்றன. அவை பின்வருமாறு;

i) செய்தித் தொடர்பு போக்குவரத்து சாதனங்களில் ஏற்பட்டுள்ள பல முன்னேற்றங்கள் வெகு தொலைவிலிருந்து மக்களையும், நிறுவனங்களையும் கட்டுப்படுத்துவற்கு உதவி செய்கிறது.

ii) ஆட்சி அலுவலை எளிதாக்கும் பொருட்டு, அவற்றை ஒரே சீராக ஆக்குவதற்கான முயற்சி நடைபெறுகிறது.

iii) கூடுதலான அதிகாரத்தைக் கையாளுதல் வேண்டுமென்ற விருப்பம் மக்களிடத்தும், நிறுவனங்களிடத்தும் எல்லா நிலைகளிலும் காணப்படுகிறது.

iv) உள்ளாட்சியில் திறமையும், சிக்கனமும், ஏற்படுதற்கு மாநில அரசாங்கக் கட்டுப்பாடு இன்றியமையாதது.

## மாதிரி வினா

உள்ளாட்சி மீதாக மாநில அரசாங்கம் செலுத்தும் கட்டுப்பாடுகளை விவரி.

## மதுரை காமராசர் பல்கலைக்கழக
## முன்னைய ஆண்டுத் தேர்வு வினாத்தாட்களின் மாதிரி

## Model Questions - I

1. உள்ளாட்சி அமைப்பின் முக்கியத்துவத்தையும் குறிக்கோளையும் விவரி.
2. பல்வேறு வகையான நகர, கிராம உள்ளாட்சி அமைப்புகள் குறித்து விவரி.
3. பல்வந்தராய் மேத்தா கமிட்டியின் அறிக்கையை விளக்குக.
4. தமிழக மாநகராட்சி அமைப்பை விவரி.
5. உள்ளாட்சி தேர்தலில் ''ஜாதி'' வகிக்கும் பங்கு குறித்து விவரி?
6. உள்ளாட்சி அமைப்பில் மாவட்ட ஆட்சித் தலைவரின் பங்கினை விவரி.
7. நகராட்சி ஆணையர் பற்றி ஒரு கட்டுரை வரைக.
8. உள்ளாட்சி அமைப்பில் அரசு அதிகாரிகளுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் உள்ள உறவினை எடுத்துக்கூறு.
9. உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிர்வாகம் குறித்து ஆராய்க.
10. உள்ளாட்சி மீது மாநில அரசாங்கக் கட்டுப்பாடுகளை எழுது.

## Model Questions - II

1. தமிழக உள்ளாட்சி வரலாற்றை எழுது.
2. தமிழக பல்வேறு வகைப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் குறித்து வரைக.
3. உள்ளாட்சி அமைப்புகளின் அரசியல் கட்சிகளின் பங்கு என்ன?
4. மாநகராட்சியை, கிராம பஞ்சாயத்து, நகராட்சி இவைகளின்று வேறுபடுத்திக் காட்டுக.
5. புதிய பஞ்சாயத்துராஜ் அமைப்புகள் செயல்படும் விதம் குறித்து ஒரு கட்டுரை எழுது.
6. இந்தியாவில் ''கிராமப் பஞ்சாயத்தும் ஜாதியும்'' என்பது குறித்து ஒரு கட்டுரை வரைக.
7. ஊராட்சி ஒன்றிய அமைப்பில் வட்டார வளர்ச்சி அதிகாரி மற்றும் விரிவாக்க அதிகாரிகளின் பணிகள் குறித்து விளக்கு.
8. கிராம பஞ்சாயத்து தலைவர் கிராம முன்னேற்றத்துக்கு ஆற்றும் பணிகள் குறித்து எடுத்துக் கூறு.
9. உள்ளாட்சி அமைப்புகளின் மீது மாநில அரசு செலுத்தும் கட்டுப்பாடு குறித்து விளக்குக.
10. உள்ளாட்சி அமைப்பில் மக்கள் ஏற்கும் பங்கு குறித்து விவாதி.